# சக்தி வைத்தியம்

(இந்திய அரசாங்கத்தின்
சாகித்திய அகாதமி பரிசு பெற்றது)

தி. ஜானகிராமன்

ஐந்திணைப் பதிப்பகம்

தொலைபேசி : 8 54 9410

279, பாரதி (பைகிராப்ட்ஸ்) சாலை
திருவல்லிக்கேணி
சென்னை—600 005

முதற் பதிப்பு : ஜூலை - 1978
நான்காம் பதிப்பு : ஆகஸ்டு 1997

உரிமை பதிவு

339066
4101009

O31,3JAN,S
N7;3

விலை : ரூ. 40-00

Published by :
KUZHA. KATHIRESAN

Phone : 8 54 9410
AINTHINAI PATHIPPAGAM
279, Pycrofts Road
Triplicane, Madras - 5

அச்சிட்டோர் :
M.S. Printing, Chennai - 14

## பதிப்புரை

இன்றைய சிறுகதை, நாவல் உலகில் தனக்கென்று ஓர் ஒப்பற்ற இடத்தைப் பெற்றுள்ள சிறந்த எழுத்தாளர் திரு. தி. ஜானகிராமன். கலைமகள், கல்கி, ஆனந்தவிகடன், சுதேசமித்திரன் முதலிய தீபாவளி மலர்களில் வெளிவந்துள்ள அவரது சில சிறுகதைகளைத் தொகுத்து ''சக்தி வைத்தியம்'' என்னும் இந்நூலை உங்கள் முன் படைப்பதிலே மிக்க மகிழ்ச்சி அடைகிறோம்.

எங்கள்பால் அன்புகொண்டு, தம் நூற்களைத் தொடர்ந்து வெளியிடும் வாய்ப்பை எங்களுக்கு அளித்து வரும் திருமதி ஜானகிராமன் அவர்களுக்கும், பத்திரிகாசிரியர்களுக்கும், வாசகப் பெருமக்களுக்கும் நன்றி.

ஐந்திணைப் பதிப்பகத்தார்

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1 | கங்கா ஸ்நானம் | ... | 1 |
| 2 | தீர்மானம் | ... | 14 |
| 3 | முள் முடி | ... | 25 |
| 4 | அட்சராப்பியாசம் | ... | 37 |
| 5 | நாய்க்கர் திருப்பணி | ... | 50 |
| 6 | கோதாவரிக் குண்டு | ... | 63 |
| 7 | வெங்கிடிசார் ஏன் ஓடினார் | ... | 76 |
| 8 | சக்தி வைத்தியம் | ... | 89 |
| 9 | வீடு | ... | 105 |
| 10 | ஒரு சின்ன வாக்குவாதம் | ... | 160 |
| 11 | இசைப் பயிற்சி | ... | 171 |
| 12 | விளையாட்டுப் பொம்மை | ... | 187 |


# கங்கா ஸ்நானம்

கங்கா நதி சுழித்து ஓடுவதைப் பார்த்துக்கொண்டு நின்றார் சின்னசாமி. முக்கால் தென்னை உயரம் இருக்கும் போலிருந்தது கரை. அங்கு உள்ள மாடி வீட்டு விளக்கின் நீலவொளி மங்கலாக நீர் மீது விழுந்திருந்தது. நீருக்கும் ஊருக்குமாக அலைந்தது நினைவு. காசி, கங்கை என்ற பிரக்ஞை இல்லை அவருக்கு.

என்னமோ கேட்டாள் அவர் மனைவி.

''—''

''ஏன்னா?''

''ம்?''

''ரண்டு கும்மாணம் காவேரி இருக்குமாங்கறேன் அகலம்?''

''ம்ம், இருக்கும்.''

யாரோ சிரிப்பது போலிருந்தது அவருக்கு. ஒரு தடவை முதுகு உதறிற்று.

''இன்னும் அதையே நினைச்சிண்டிருக்காப் போலிருக்கு?'' என்று நீரில் கால் அலம்பிக் கொண்டே அவர் முகத்தைப் பார்த்தாள் அவள்.

''ம்?''

''ஸ்நானம் பண்ணலியா? எத்தனை நாழி நிக்கறது?''

''ம்ம்'' என்று படி இறங்கினார் அவர். ''காசிக்குப் போனாலும் கர்மம் விடாதும்பா. இவன் நமக்கு முன்னாடியே வந்து நிக்கறானே!''

''வரட்டும், வரட்டும். நேத்திக்கே கங்கையிலே முழுக்குப் போட்டிருப்பார் அவர். என் தாய் அவர் பாவத்தைக் கூட அடிச்சிண்டு போயிருப்பாள். அதெல்லாம் இப்ப நினைப்பானேன்? ஸ்நானம் பண்ணட்டும்... அப்பாடா, தாயே, கங்கா மாதா!'' என்று நிறைந்து வழிந்த நெஞ்சுடன் கங்கை நீரில் திளைத்தாள் அவள்.

''நீ சொல்றே அதெல்லாம் நினைப்பானேன்னு. இன்னும் கொஞ்ச நேரத்திலே அவன் மூஞ்சியிலே முழிச்சு ஆகணுமே...அவனைப் பார்த்துப் பேசும்படியா ஆயிடுத்துன்னா என்ன பண்றது? நினைக்க நினைக்க ஆச்சர்யமாயிருக்கு. அந்த மூவாயிரம் போக, மிச்சம் ஆயிர ரூபா தானே இங்கே நம்மைக் கொண்டுவந்திருக்கு. அக்காவுக்காக நாம இங்கு வரவாவது? அவன் முன்னாடியே வந்திருக்கவாவது? தெய்வம்தான் என்ன பண்ணப் போறார், பார்ப்போம்னு விளையாடறதா?''

''எனக்கும் ஒண்ணும் புரியத்தான் இல்லை. ஸ்நானத்தைப் பண்ணிப்பிட்டு யோசிச்சுக்கலாமே. ஜாகைக்காரர் கிட்ட சொல்லிட்டு, சாமானை எடுத்திண்டு, வேறு இடம் பார்த்துண்டு போயிட்டாப் போறது. முன்னாடி ஸ்நானத்தைப் பண்ணட்டும். கங்கா மாதா ஏதாவது வழி கொடுப்ப.''

லடக் லடக்கென்று ஒரு படகு ஓசையிட்டுக்கொண்டே கடந்து போயிற்று.

மறுபடியும் யாரோ சிரிப்பது போல் இருந்தது சின்னசாமிக்கு. அவருக்கும் சிரிப்பு வந்தது. இறங்கி முழுகினார்.

''அப்பாடா, ஸ்படிகம் மாதிரி இருக்கு ஜலம்,'' என்று நீரைக் கையில் எடுத்து விட்டார். உடம்பு புல்லரித்தது.



நீரின் தட்பம், சந்தர்ப்பங்கள் கேலி செய்கிற விசித்திரம்—இரண்டும்தான்.

யாராவது நம்புவார்களா?

இரவு எட்டரை மணிக்குத்தான் ரயில் காசிக்கு வந்தது. ரயிலில் நெருக்கடி, கரி, தூசி, மூன்று நாள் அழுக்கு, நாகபுரியிலிருந்தே ஆரம்பித்த சக பிரயாணிகளின் பழைய வெண்ணெய் நாற்றம், சிலைப்பேன் ஓடுகிற சட்டையும் வேஷ்டியும் அணிந்த ரயில் கூட்டம்—காசி ஸ்டேஷனில் கால் வைத்ததும் இவ்வளவையும் அமுக்கி விட்டு ஒரு நிம்மதியும், கங்கையைக் காண்கிற ஆவலும் உள்ளத்தின் மேல் மிகுந்து படர்ந்தன. சில தலைமுறைகளுக்கு முன் காசியில் குடியேறியிருந்த தமிழ்ப் புரோகிதரிடமிருந்து அழைத்துப் போக ஆள் வந்திருந்தார்.

சாமான்களை வண்டியிலிருந்து உள்ளே கொண்டு வைத்து 'அப்பாடா' என்று உட்கார்ந்ததும் ஜாகைக்காரர் வந்து பேச்சுக் கொடுத்தார்.

''எந்த ஊர் உங்களுக்கு?''

''சவுக்கநத்தம்.''

''தஞ்சாவூர் ஜில்லாவா?''

''ஆமாம்!''

''எங்களுக்கும் தஞ்சாவூர் ஜில்லாத்தான், ஸ்வாமி, சொல்லிக்கிறதுக்கு இப்ப ஒண்ணுமில்லை.— தாத்தா நாள்ளேருந்து காசி மனுஷாளாப் போயிட்டோம்...''

''போன வருஷம் கூட இரண்டாவது குழந்தைக்கு முடியிறக்குவதற்காக வைதீச்வரன் கோயிலுக்கு வந்திருந்தாராம் அவர்.''

''காசியிலேருந்தா வந்தீர்கள் முடியிறக்க!''

''வராமல்? சப்தலோகம் போனாலும் குலதெய்வம் போயிடுமோ? காசிக்ஷேத்ரம்தான். இப்ப காசிதான் ஊரு. அதுக்காக?...குடும்ப தெய்வம் வைத்யநாதன் இல்லியோ?''

மூன்று நாள் அழுக்கை உடம்பிலிருந்து தேய்த்துக் கொண்டிருக்க சின்னசாமிக்குச் சிரிப்பு வந்தது. மூன்று தலைமுறைகளுக்கு முன்னால் மடியில் வளர்த்த ஊரை நினைத்து நினைத்து ஜாகைக்காரர் மாய்ந்து போனதும் ஏங்கியதும்......

''போன தடவை வைதீச்வரன் கோயில், சீயாழி, மாயவரம், கும்பகோணம், திருவாரூர்...ஒரு ஊர் விடலை. ...திருவாரூருக்குப் பக்கம் தானேய்யா...நேத்திக்கு வந்திருக்காரே, அவர் ஊரு?'' என்று பக்கத்தில் நின்று கொண்டிருந்த உதவிக்காரரைக் கேட்டார்.

''ஆமாம்......விளாஞ்சேரியாமே...உங்களுக்குத் தெரியுமோ'' என்று சோடா பாட்டில் மூக்குக் கண்ணாடியை நிமிர்த்திக்கொண்டே திரும்பினார் உதவிக்காரர்.

''விளாஞ்சேரியா? என் அக்காவை அந்த ஊரில்தான் கொடுத்திருந்தது. அவ பணத்திலேதான் சுவாமி நாங்கள் காசிக்கு வந்திருக்கோம்...''

''அப்பன்னா இவரையும் தெரிஞ்சிருக்கும்...''

''யாரு?''

''நேத்திக்குக் காலமே வந்தார், பிரயாகையிலிருந்து. துரையப்பான்னு பேராம். கோயிலுக்குப் போயிருக்கார், பூஜை பார்க்க.''

''துரையப்பாவா?''—தலையில் இடியைத் தள்ளினாற் போலிருந்தது சின்னசாமிக்கு.

''ம்''

''கறுப்பா, ரெட்டை நாடியா?''

''ம்.''

''நெத்தியிலே,வலது நெத்தியிலே தழும்பு இருக்கோ!''

''அவரேதான்! ஸ்வாமி விச்வேச்வரருக்கு ராத்திரி பூஜை பார்த்து விட்டு வந்துடுவர்.''



''ஹ்ம.''

சின்னசாமிக்கு ஒன்றும் ஓடவில்லை. யாரோ சிரிப்பது போலிருந்தது. துரையப்பாவே சிரிப்பதுபோல்தான் இருந்தது. பேய் மாதிரி சிரிப்பு. ''இவன் எங்கே வந்தான்? இங்கு வரவேண்டும் என்று எப்படித் தோன்றிற்று...அதுவும் நான் வரும்போதா?... அதே ஜாகையா?'' என்று மனம் கேள்வி கேள்வியாகக் கேட்டுக் கலங்கிற்று. சற்று நடுங்கிற்று. ''இவனா...! இப்போதா?... இதே இடத்திலா...?''

கரையேறித் தலையைத் துவட்டிக் கொண்டு, பையிலிருந்து பட்டை எடுத்து உடுத்திக் கொண்டு, மீண்டும் இறங்கிக் காலை அலம்பி விபூதியைப் பூசிக்கொண்டு, ஜபத்திற்கு உட்கார்ந்தார். அவர் மனைவி புடவை மாற்றிக்கொண்டிருந்தாள்.

இவன் முகத்திலா முழிக்கவேண்டும்?... இது யார் விஷமம்...?

அக்கா காசி காசி என்று புலம்பிக் கொண்டிருந்தாள். விளாஞ்சேரியில் அவன் புருஷனுடன் வாழ்ந்து மூன்று வருஷம் குடித்தனம் நடத்திவிட்டு, நாலாவது வருஷம் பிறந்த வீட்டுக்குத் திரும்பி விட்டாள். நல்ல வேளையாக அப்பா, அம்மா இல்லை, இந்த வேஷத்தைப் பார்க்க. எண்ணி ஏழுநாள் படுக்கையில் கிடந்தார் அவள் புருஷன். எட்டாம் நாள்...

காட்டு வழியில் அலைகிற புது ஆளைப்போல, புறப்பட்ட இடத்திற்கே திரும்பி வந்தாள் அவள். மூன்று வருஷம் வீட்டோடு முடங்கிக் கிடந்தவளை, துடைகாலி துடைகாலி என்ற அவமானத்தில் குன்றிக் கொண்டிருந்தவளை, ஏக்கமும் நோயும் தின்று வந்த சுருக்கு...

அவள் புருஷனுக்கு இருந்த நிலத்தை விற்கச்சொன்னாள். அது நாலாயிரம் ரூபாயாக மாறி வந்தது.

முதல் நாள் வரையில் பிரக்ஞை இருந்தது.

"சின்னசாமி, நான் இப்படிக் கிடக்கிறது துரையப்பாவுக்குத் தெரியாது. தெரிஞ்சிருந்தா வந்திருப்பர். அவருக்கு என்ன பாக்கி இவர் கொடுக்க வேண்டியது?"

கணக்குப் பார்த்ததில் மூவாயிரத்து நாற்பத்தேழு ரூபாய் என்று வந்தது.

"அவர் கிட்டப்போய் தள்ளிக்கிள்ளிக் கேட்டு மன்றாட வாண்டாம். பைசா மாறா ஜாடாக் கொடுத்துவிடனும், தெரிஞ்சுதா?"

உடம்பு தேறி வரட்டும், அக்கா. இப்ப என்ன அந்தக் கவலை?"

"உடம்பு தேறாதுடா, சின்னசாமி எனக்குத் தெரியாதா? இந்தக் கடனைத் தீர்த்துக் கண்ணாலே பாத்துட்டுப் போயிடலாம்னு நெனச்சேன். நடக்கலே. கொண்டு கொடுத்துடு."

"சரி."

"அப்பறம் மிச்சம் ஆயிரத்து சொச்சம் இருக்கு. காசி காசின்னு கோட்டை கட்டிண்டேயிருந்தேன். அதுவும் நடக்கலே. நீயும் அவளுமாப் போய் கங்கா ஸ்நானம் பண்ணிப்பிட்டு, என்னையும் நினைச்சிண்டு—ஆமாம்... ரயில் சார்ஜ், க்ஷேத்ரச் செலவு எல்லாம் இதிலேருந்து எடுத்துக்க வேண்டியது. நீ ஒரு பைசா உன் கையிலேருந்து போடப்படாது..."

மறுநாள் வீட்டில் ஒரு நபர் குறைந்து விட்டது. அர்த்தமில்லாமல் பிறந்து, வாழ்ந்து, மடிந்து...புருஷன் வாங்கின இந்தக் கடனைத் தீர்க்கத்தான் பிறந்தாயா?

ஒரு மாதம் கழித்து சின்னசாமி மூவாயிரத்துச் சொச்சத்தை எடுத்துக் கொண்டு கிளம்பினார்.

விளாஞ்சேரிக்குப் போகும்போது அஸ்தமித்துவிட்டது. குளுகுளுவென்று காற்று. துரையப்பா வீட்டுத்திண்ணையை



யும் வாசலையும் பார்த்துக்கொண்டே இருக்க வேண்டும்—நிதிநிதியென்று, வழவழாவென்று...சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டிருந்தார் துரையப்பா.

"என்ன மாமா?"

"யாரு?"

"நான்தான்."

ஆளோடிக்குமேல் அரிக்கேன் விளக்குத் தொங்கிற்று.

"நான்தான்னா?"

"சின்னசாமி."

"அட, சின்னசாமியா?"

"ஆமாம், மாமா."

"வா, வா, எப்ப வந்தே?"

"இப்பதான்."

"என்னடாது?...சுந்தராம்பா..."

"ஆமான்னா...அவ்வளவுதான் பிராப்தம்."

"என்ன உடம்பு?".

"உடம்பு என்ன? ஏக்கம்தான்."

"த்ஸ... என்னமோ போ! அவனும் கொடுத்து வைக்கல்லே. நீயும் கொடுத்து வைக்கல்லே." அரைமணி ஊர்ப் பேச்செல்லாம் பேசினார்கள்.

"எங்கே இப்படி இவ்வளவு தூரம்?"

"கணக்குத் தீர்க்கலாம்னு வந்தேன், மாமா."

"ஆமாம், பிரமாதக் கணக்கு"

"மூத நாளைக்குக் கூப்பிட்டு கணக்கெல்லாம் பார்க்கச் சொன்னா அக்கா. கடனோட போறமேன்னு அவளுக்குக் குறைதான்."

"த்ஸ...கடன்! பிரமாதம்...! பிரமாதக் கடன் பாரு!"

"மூவாயிரத்து நாற்பத்தேழு ஆயிருந்தது அப்ப."

"ம்."

''அப்புறம் ஒரு மாசம் ஆயிருக்கே.''

''ஆமாண்டா, ஒரு மாச வட்டியிலே இன்னொரு கிராமம் வாங்கப் போறேன். அசடு!''

''பார்க்கலாமா இப்ப? தயாராத்தான் வந்திருக்கேன்.''

''பணம் கொண்டு வந்திருக்கியா என்ன?''

''ஜாடா கொண்டு வந்திருக்கேன், மாமா.''

''இப்ப என்னடா? சிரமமாயிருக்கு. களத்திலே காலமே புடிச்சி நின்னிருக்கேன். பசிக்கிறது. தூக்கம் தூக்கமா வேற வரது. காலமே வரவு வச்சிண்டாப் போறது...''

''சரி.''

''இதுக்காகவா வந்தே இவ்வளவு தூரம்? ரயில்லியும் பஸ்லியும், வெயில்லியும்!''

''வரத்தானே வேணும்?''

''போடா, அசடு! ஒரு லெட்டர் போட்டா நான் வந்து வாங்கிண்டு போக மாட்டேனா...நன்னா அலைஞ்சே, போ!''

''அழகாயிருக்கே. நான் வந்து கொடுக்கிறது, மரி யாதையா?''

''சரிடா சரி, காலமே வரவு வச்சிக்கலாம். போ.''

''அப்ப பணத்தை வாங்கி வெச்சுக்குங்கோ. காலமே வரவு வச்சுக்கலாம். நானே இங்கேதான் படுத்துக்கப் போறேன். காத்து கொட்றது இங்கே.''

''இப்ப என்னைக் கிளப்பணும் உனக்கு...ம்...சரி... கொடு.''

சின்னசாமி பணத்தைக் கொடுத்ததும் உள்ளே போய்ப் பூட்டி வைத்துவிட்டு வந்தார் துரையப்பா.

''சரி, உள்ளே வாயேன். கால் அலம்பிட்டு சாப்பிட் டுடலாம்.''

சாப்பிட்டுவிட்டு, மறுபடியும் நடுநிசி வரையில் பேசிக் கொண்டிருந்தார்கள், ஊர் ஆறரை மணிக்கே தூங்கி



விடுகிற வழக்கம். சலசலப்புக்கூட நின்றுவிட்டது. சுவர்க் கோழி மட்டும் கத்திற்று. மாட்டு மணி எங்கோ ஒலித் தது. எங்கோ குழந்தை ஒன்று அழுதது.

திண்ணையில் படுக்க ஒரு ஜமக்காளத்தையும் தலை யணையையும் கொடுத்துவிட்டு, கதவைத் தாழிட்டுக் கொண்டு போனார் துரையப்பா. சின்னசாமி படுத்துக் கொண்டார். நினைவு கலைந்தது. துரையப்பா பெரிய மனுஷன். பெரிய மனுஷ்யன்தான்...எவ்வளவு மரியாதை... விட்டுக் கொடுக்கிற தன்மை. சாயங்காலம் சின்னசாமி பஸ் ஸிலிருந்து விளாஞ்சேரி முக்கில் இறங்கி வந்தபோது துரை யப்பாவின் அன்னதானத்தைப் பற்றித்தான் யாரோ பேசிக் கொண்டிருந்தார்கள். யார் எப்போது போனாலும் துரையப்பா வீட்டில் சாப்பாடு கிடைக்கும். 'அன்னதாதா, அன்னதாதா' என்று அவர் பெயர் ஜில்லா முழுவதும், சுற்றம் முழுவதும் முழங்கிக் கொண்டிருந்தது. எப்போது ரயிலில் போனாலும் அதைப்பற்றிப் பேசுகிற ஒரு பிரயாணி யையாவது பார்க்க முடியும்...என்ன அடக்கம்! பெரிய மனிதர்களுக்கென்று அடக்கம் அமைகிற அழகும்...

ஜிலுஜிலு வென்று வீசின காற்றுகூட நின்றுவிட்டிருந் தது. சின்னசாமி அயர்ந்து விட்டார்.

காலையில் மூறுக முறுக வார்த்துப்போட்ட தோசை நாலு கடைசி தோசைக்குத் தயிர். ஏன் என்று கேட்கிற காப்பி. எல்லாம் முடித்து கூடத்திற்கு வந்தால் வெயில் தெரியாத ஜிலுஜிலுப்பு. வெயில் தெரியாத தரை. சின்ன சாமிக்கு நெஞ்சு குளுகுளுவென்றது.

துரையப்பா உள்ளேயிருந்து பத்திரத்தை எடுத்துக் கொண்டு வந்து எதிரே உட்கார்ந்து மூக்குக் கண்ணாடியை மாட்டிக்கொண்டார். பத்திரத்தைப் பார்த்தார். கணக்குப் போட்டுவிட்டு நிமிர்ந்தார்.

''வரவு வச்சுப்பிடலாமா?''

''ம்'' என்றார் சின்னசாமி.

''பணத்தை எடு.''

''நீங்கதானே வச்சிருக்கேள்?'' என்று அவர் எங்கோ நினைத்துக்கொண்டு பேசுகிறதைப் பார்த்துப் புன்னகை புரிந்தார் சின்னசாமி.

''நான் வச்சிருக்கேனா?''

''ஆமாம், மாமா. ராத்திரி வாங்கி வச்சேளே?''

''என்ன வாங்கி வச்சேன்?''

''என்ன மாமா இது? மூவாயிரத்து நாற்பத்தேழு கொடுத்தேனே. சேப்புக் கடுதாசியிலே, கன கடுதாசியிலே பொட்டணமா கட்டியிருந்துதே?''

''என்னடா சின்னசாமி விளையாடறே, பச்சைக் குழந்தை மாதிரி!''

''விளையாடறேனா? என்ன மாமா இது?''

''மாமாவாது மருமானாவது? எடுடா, நாழியாச்சு! நான் களத்துக்குப் போகணும்.''

''பீரோவைத் திறந்து பாருங்கோ, மாமா.''

''என்னடா இது, பணம் கொண்டு வரலையா நீ?''

சின்னசாமிக்கு வயிற்றைக் கலக்கிற்று. மாமா சும்மாவாவது விளையாடுகிறார் என்ற நினைவும் போகவில்லை.

''எடுத்திண்டு வாங்கோ, மாமா.''

''என்னடா, எடுத்திண்டு வாங்கோ, எடுத்திண்டு வாங்கோங்கிறியே. விளையாட்டு வேடிக்கைக்கா இது நேரம்?''

''மாமா, நிஜமாவா சொல்றேள்?''

''சரி, நான் எழுந்து போகட்டுமா? எனக்கு வேலை இருக்கு.''

''மாமா...மாமா!''

''நல்ல மாமா, போ!''

''சேப்புப் பொட்டணம், மாமா...''



சின்னசாமிக்கு பகீர் என்றது. வயிறு கல் விழுந்தாற் போல் கனத்தது.

''சரிடா, ரயில்லே வந்தியோ, பஸ்ஸிலே வந்தியோ?''

''பஸ்ஸிலே!''

''எங்க வச்சிண்டிருந்தே?''

''பையிலே...ஜாக்ரதையா வச்சுண்டு உங்ககிட்டே கொடுத்தேனே. காலமே வரவு வச்சுக்கலாம்னு சொல்லி நீங்க கூட 'என்னைக் கிளப்பணும் உனக்கு'ன்னு சொல்லிண்டே வாங்கி உள்ளே கொண்டு பூட்டிவச்சேளே?''

''அடப்பாவி! நெஜம் மாதிரி சொல்றயே!'' என்றார் துரையப்பா. பேயறைந்தாற் போலிருந்தது அவர் முகம். ''இங்க வந்து பார்டா பாரு...உடம்பெல்லாம் கூசறதே எனக்கு...'' என்று உள்ளே போய் பீரோவைத் திறந்து போட்டார். இரும்புப் பெட்டியைத் திறந்து போட்டார். பெட்டிகளைத் திறந்து போட்டார். ''பார்றா, பாரு...உன் கண்ணாலெ பாரு.''

மண்டையில் ஓங்கி அடித்தாற்போல நின்றார் சின்னசாமி. அம்மாமியிடம் சொன்னார். வெளியே ஓடினார். கணக்குப் பிள்ளை, பட்டாமணியத்திடம் முறையிட்டார். நாக்கு உலர, உதடு துடிக்க, உடல் நடுங்கிற்று. ஊரிலிருக்கிற ஏழு ஆண்களும் வந்தார்கள். துரையப்பா பைத்தியம் பிடித்தாற்போல உட்கார்ந்திருந்தார் சாய்வு நாற்காலியில். கூடத்திலுள்ள அலமாரிகளும் திறந்து கிடந்தன. துணிகளும் பாத்திரங்களும் வெளியே கிடந்தன.

ஒன்றும் புரியாமல் விழித்தார்கள்.

''என்ன மாமா? என்னமோ சொல்றானே இவன்!'' என்றார் பட்டாமணி.

''என்னமோ விளையாடறான்னு நெனச்சேன் முதல்லே. நிஜம் நிஜம்னு சத்யம் பண்றான். எனக்கு இடி விழுந்தாப்பல ஆயிடுத்து. உக்காந்துட்டேன். நீங்க வீடு முழுக்கச் சோதனை போட்டுடுங்கோ.''

கர்ணமும் பட்டாமணியமும் எல்லாவற்றையும் மீண்டும் விசாரித்தார்கள். சின்னசாமி வாய்விட்டு அழுதுவிட்டார். மறுபடியும் தேடினார்கள்.

"நீங்க இப்படி மோசம் பண்ணிவிடுவேள்னு நினைக்கலே மாமா" என்று குரல் கம்மி தழுதழுத்தார் சின்னசாமி.

"அடபாவி! வாய் அழுகிப் போயிடும்டா. அன்ன தாதாடா! மகான்டா! மலை மலையா அன்னத்தைக் கொட்டியிருக்கார் மனுஷன். சொல்லாதேடா!" என்றார் கணக்குப்பிள்ளை. தொலைவில் இருளில் கங்கைப் பாலத்தில் ரயில் ஆற்றைக் கடந்து கொண்டிருந்தது. அயலூரிலிருந்து வந்து விளாஞ்சேரியில் இப்படி மாட்டிக் கொண்டு......யார் யாரிடமோ முறையிட்டதும், அழுததும், கெஞ்சினதும், பிரமித்ததும்...எது பலித்தது? துரையப்பா கோர்ட் ஏறிவிட்டார்...ஜட்ஜ் தீர்ப்பு செய்த லக்ஷணம்...வட்டியில்லாமல் முதலாவது கொடுத்து விடுவது என்று ராஜியாகப் போகச் சொல்லி...அதற்கு மாட்டேன் என்று சொன்னபோது முழுவதற்கும் செலவு உள்பட தீர்ப்புக் கூறி விடுவதாக அவர் பயமுறுத்தி...கடைசியில் ராஜிக்கு ஒப்புக்கொண்டு, தம் சொந்தப் பணத்தைக் கொடுத்து...

"நாலு வருஷமாகி விட்டது இந்த நாடகம் எல்லாம் நடந்து. அக்காவின் இரண்டாவது ஆசையை நிறைவேற்றி விடவேண்டும் என்று வந்தால், தெய்வம் முதல் நாளே, அதுவும் அதே ஜாகையில் இவனை இறக்கிச் சிரிக்கிறதே......" என்று சிந்தனையில் லயித்தார் சின்னசாமி.

சின்னசாமியின் மனைவி இன்னும் ஜபம் செய்து கொண்டிருந்தாள். யாராவது நம்ப முடியுமா? அன்று நடந்தது போகட்டும். இன்று நடக்கிறதைத்தான் நம்ப முடியுமா?

"போகலாமா?" என்று எழுந்தாள் மனைவி.

"ம்."



சின்னசாமி எழுந்தார். இரண்டு படி ஏறியதும், "இரு, நான் ஜபமே பண்ணவில்லை. துரையப்பாவை நினைத்து நினைத்து குரோதப் பட்டுண்டே இருந்தேன்" என்று மீண்டும் இறங்கி ஸ்நானம் செய்தார்.

"அவன் பாவத்துக்கும் சேர்த்து முழுக்குப் போடுங்கோ" என்றாள் அவள்.

கரையேறி வரும்போது, "அவரைப் பார்த்து பழசெல்லாம் கிளற வாண்டாம். இத்தனை நாழி வந்திருந்தார்னா 'உன் பாவத்துக்கும் முழுக்குப் போட்டுட்டேண்டா'ன்னு நினைச்சுண்டு சாதாரணமாப் பேசுங்கள். அவர் இன்னும் கோயில்லேருந்து வரலேன்னா, மூஞ்சியிலே முழிக்கறதுக்கு முன்னாடி வேற ஜாகைக்குப் போயிடுவோம்" என்றாள் அவள்.

"எப்படியிருக்கோ, வா பார்க்கலாம்" என்று வடக்கே கண்ணைத் திருப்பி ஒளி வீசும் ஸ்நான கட்டங்களைப் பார்த்துக்கொண்டு படியேறினார் சின்னசாமி.

(1956)

——

# தீர்மானம்

திண்ணையில் படிந்து கிடந்த தெருத் தூசியைப் பாவாடை முந்தியால் தட்டிவிட்டு சட்டைத் தலைப்பைச் சரிய விட்டுக் கொண்டே உட்கார்ந்தது அந்தப்பெண். சோழிகள் கலகலவென்று கீழே இறைந்தன. குவித்துவிட்டு அந்தப் பெண் தெருவைப் பார்த்தது. தோழி ராதை இன்னும் வரவில்லை.

எதிரே குளத்தின்மேல் கொக்ுக் கூட்டம் வட்டமிட்டுக் கொண்டிருந்தது. டொப்பு டொப்பென்று படிக்கட்டில் துணி தோய்க்கும் ஓசைகள். வாசலோடு ரயிலடியிலிருந்து வாடிக்கையில்லாமல் திரும்பிய ஒற்றை மாட்டு வண்டி மெதுவாக ஊர்ந்து கடந்தது.

''சனியம் புடிச்சவ. போனா எத்தனை நாழி?'' என்று முகத்தைச் சுளித்துக் கொண்டாள் பெண். வெயில் பட்டு ஜொரனாப்பட்டை போடும் சிற்றலைகளைப் பார்த்தாள். சட்டைக்குள் தொங்கிய தாலிக்கயிற்றை எடுத்து ஒரு திருமங்கல்யத்தைப் பல்லிடுக்கில் கடித்துக் கொண்டே ஜொலிக்கும் அலையைப் பார்த்தாள். பார்க்க முடியவில்லை. கண்ணைக் கூசியது.

''இன்னும் இந்த ராதை வரவில்லை. குளிக்க நாலு நாழி. சாப்பிட பத்து நாழி—''

''எட்டி, திருமங்கல்யத்தைக் கடிக்காதடீ. பத்து முடியப் போறதடி வயசு. சிரிக்கப்போறா யாராவது பாத்து!'' என்று கேட்டது, வாசலில் குப்பை கொட்ட



வந்த அத்தையின் குரல். அதைக் கேட்டதும் அவள் பல்லிலிருந்து திருமாங்கல்யம் நழுவிற்று.

''உங்க ஆம்படையான் கோச்சுக்கப் போறாண்டி. ஏற்கனவே கோபமாயிருக்கான், கொண்டு விடல்லே கொண்டு விடலேனு காயறான். திருமங்கல்யத்தை நசிக்கிண்டு வேற போகாதே.''

''போ அத்தை.''

''நான் எங்கே போறது? ஆச்சு, இன்னும் நாலு வருஷம். நீலகண்டன் எத்தனை வருஷம் பொறுத்திண்டுருப்பான்?!'

''வ...வ்...வ...வ்...வ...நீதான் போயேன்.''

''சீ!'' அத்தை போய் விட்டாள். விசாலியின் கையிலிருந்து சோழிகள் துள்ளித் துள்ளி எழுந்தன. திருப்பிய புறங்கையில் விழுந்து சிதறின. விழி துள்ளித் துள்ளி மேலும் கீழும் சோழிகளோடு பாய்ந்தது. கை அள்ளி அள்ளிப் பிடித்தது. ஏந்திற்று கண்ணாடி வளை மணிக்கட்டு சரக் சரக்கென்று மடங்கிற்று. வலது காலை நீட்டி, இடது காலை மடக்கி சரசரவென்று சோழிகளை அள்ளி அள்ளிப் பாவாடைப் பரப்பில் போட்டுக் கொண்டிருந்தாள்; அவள். எல்லாச் சோழிகளும் வந்து விட்டன. ஆட்டம் முடிந்துவிட்டது.

தெருவைப் பார்த்தாள். இன்னும் ராதையைக் காணோம். போய்ப் பார்த்துவிட்டு வரலாமா? ''மகா சண்டி இந்த ராதை. தூங்கித் தூங்கிப் போயிட்டாளா? பார்த்துட்டுத்தான் வருவமே!''

விசாலி எழுந்தாள். சோழிகள் மறுபடி கீழே இறைந்தன.

சலங் சலங் என்று வண்டிச் சத்தம். சட்டென்று நிற்பது போலிருந்தது. சோழியை உள்ளங்கையில் மடக்கிக் கொண்டே திரும்பினாள் விசாலி. ஆமாம் வண்டி வாசலில்

தான் நின்று விட்டது. முரட்டுக் காலாக இரண்டு இறங்கிற்று. முகம் தெரிந்தது. அச்சச்சோ...பின்பு...இன்னும் இரண்டு பேர் அடடே...!

விசாலி முகம் சிவக்க உள்ளே ஓடினாள்.

''அத்தே, அவாள்ளாம் வந்திருக்கா.''

அத்தை அகப்பைக் கூட்டில், தேய்த்த கரண்டிகளைச் செருகிக் கொண்டிருந்தாள்.

''யாரு?''

''அவாள்ளாந்தான், அத்தை.''

''யாருடி?''

''அதான் அத்தை. அவாதான் அத்தை. நடையிலே வந்தாச்சு.''

''யாருடி?''

அத்தை அடுக்களையிலிருந்து வெளியே வந்து நடையைப் பார்த்தாள். வந்தவர்கள் நடையில் செருப்பைக் கழற்றிக் கொண்டிருந்தார்கள்.

''ஏண்டி, பெரிய மச்சினன் மாமனார்கள்னு சொல்றதுக்குக்கூட வெக்கமாயிருக்கா...? சரி போய்க் கூடத்திலே கோரப்பாயைப் போடு.''

விசாலி ஓடினாள். தலையைக் குனிந்து கொண்டே கோரைப்பாயை விரித்தாள்.

மூன்று பேரும் இடைகழியிலிருந்து உள்ளே வந்து நின்றார்கள். பெரிய மாமனார் உண்மையாகவே பெரியவர்தான். ஆறடிஉயரம். பலகை மார்பு. கண்டு கண்டாக சதை மார்பிலும் கையிலும். முறம் அகலம் முகம். சின்ன மாமனாரும், ஒன்றுவிட்ட பெரிய மைத்துனனும் கிட்டத்தட்ட இந்த ஜாதிதான்.

உட்காராமலே பெரிய மாமனார் பேசினார்.



''குழந்தே, உட்கார்றதுக்கு நேரமில்லே, அவசரமாகப் புறப்பட்டு வந்திருக்கோம்...''

''வாங்கோ...உட்காரணும்'' என்றாள் அத்தை.

''வந்தோம்! குழந்தை விசாலி, கோரைப்பாயெல்லாம் வாண்டாம். இப்படி வா சொல்றேன்.''—சின்ன மாமனார் குரல்.

''இப்படி வா குழந்தே! பாதகமில்லே; பயப்படாதே, மூழுங்கிவிடமாட்டோம்.''

''உட்காந்துங்கோ''—அத்தை.

''உட்காரவில்லையம்மா! குழந்தே...குழந்தே...இப்படி வா...சித்தே வரச் சொல்லுங்கோ குழந்தையை.''

''போயேண்டி, கூப்பிடறாளே...என்ன இப்படி வந்ததும் வராததுமா உக்காந்து ஒருவாய் காப்பியைச் சாப்பிட்டுப்பிட்டுப் போப்படாதா...?'' அத்தை. அத்தை குரலில்ஒரு பயம். ஒரு அலட்சியம். கல்யாணத்திலே ஏதோ சண்டை. நாலு வருஷமாகிவிட்டது. அதை அப்படியே பச்சை மாறாமல் நினைத்துக்கொண்டு இப்படி நின்று கொண்டே பறக்கணுமா? அத்தை இப்படி நினைக்கிறாள் என்றுதான் அந்தக் குரல் சொல்லிற்று.

''போயேண்டி, கூப்பிடறாளே...?''

விசாலி அருகிலும் எட்டவும் இல்லாத தூரத்தில் வந்து நின்றாள்.

''குழந்தே...நிலகண்டன் இப்ப கையோடு உன்னை அழைச்சிண்டு வரச் சொன்னான். கிளம்பி வந்திருக்கோம்...என்ன சொல்றே? லெட்டர் எழுதி எழுதி உங்கப்பா பதில் போடலியாம்...சரி, அப்பா எங்கே?''

''அவ அப்பா கடைத் தெருவுக்குப் போயிருக்கான். சித்தெ உட்காருங்கோ. இன்னும் ரண்டு நாழியிலே வந்துடுவான்.''

''ஒகோ...ஏம்மா குழந்தே! நீலகண்டன் கொண்டு விடுன்னு கடுதாசி போட்டானாம். பதிலே போடலியாமே உங்கப்பா?... கலியாணத்திலேதான் உங்கப்பா நன்னாச் செய்யலே...

இளையாளா கொடுக்கிறதுக்கு இது போறும்னு நெனச்சிப்பிட்டார் போலிருக்கு. இளையாள்னா கிழவனா அவன்? வயது இருபத்தாறுதானே ஆறது! அந்தப் பொண்ணு திடீர்னு பறக்கவிட்டுட்டு வயத்திலே இருந்த குழந்தையோடேயே கண்ணை மூடிப்பிட்டா. அவன் ஸ்வீகாரப் பிள்ளை. தாயார் தோப்பனாரும் இல்லை. ஒண்டிக்காரன். நாங்கதான் மாட்டேன் மாட்டேன்னவனைப் பிடிவாதம் பண்ணி, கல்யாணம் பண்ணிக்க வச்சோம். எதிலே குறைந்து போயிட்டான் அவன்? நிலம் இல்லையா, வீடு இல்லையா? உங்கப்பா சாதாரண மரியாதைகூட காண்பிக்க மாட்டேங்கறாரே...''

''இதெல்லாம் எதுக்காகக் குழந்தைகிட்ட பேசறேள்? அது என்னத்தைக் கண்டுது, பாவம்...உட்கார்ந்து எங்கிட்டே சொல்லுங்கோ.''

''சரி, அதெல்லாம் எதுக்கு இப்ப? வந்த விஷயத்தைச் சொல்லு. குழந்தை என்ன பண்ணும் அவ அப்பாவுக்கு மரியாதை தெரியாட்டா?''—சின்ன மாமனார்.

''அதுவும் சரிதான். குழந்தே, அவன் ஒண்டிக்காரன். வீட்டைப் பாத்துக்க நாதியில்லே. எங்க குடும்பமா, அது ஒரு சமுத்ரம்! உன்னைப் போய் 'வரயா இல்லையா'ன்னு கேளுங்கோ. வந்தா அழச்சுண்டு வந்துடுங்கோன்னான்...''

''வராட்டா?''—அத்தை.

''அதைப் பற்றி யோசிக்கலைன்னும்.''

''இப்படிக் கூடத்திலே கூண்டிலே நிறுத்தறாப்போல நிக்கவச்சு, இப்படிக் கேட்டா...குழந்தை என்ன பண்ணும்? கலங்க அடிக்கிறேளே? அதுக்கு என்ன தெரியும்? பச்சைக்



குழந்தை அவ! அவனும் கடைக்குப் போயிருக்கான்''—அத்தையின் குரல் வெறுப்பாக புதைந்தது.

''என்னமோம்மா, அவன் சொன்னான். அனுப்பிச்சான். வந்தோம். அவனே வருவான். மரியாதையா இருக்க மாட்டாரோன்னு சந்தேகமோ என்னமோ? எங்களைப் போகச் சொன்னான்.''

''சரி, காலையலம்பிவிட்டு உக்காருங்கோ; சித்தை நாழியிலே இலை போட்டாயிடும் சாப்பிட்டுடலாம்.''

''சாப்பிட நேரமில்லை.''

''இப்பவே வரணும்கிறேளா அவளை? அவளுக்கு அம்மா இல்லாவிட்டாலும் அப்பா இருக்கான். அத்தைன்னு நான் ஒருத்தி இருக்கேன்—''

''அத்தை!'' என்று நிமிர்ந்தது பெண். உள்ளே போயிற்று. அத்தை அதோடு அடுக்களைக்குள் சென்றாள்.

''நான் போயிட்டு வரேன் அத்தை!''

''போயிட்டு வரியா! எங்கே?''

''அவரோட!''

''என்னடீது?''

''ஆமாம் அத்தை'' என்று சொல்லிக்கொண்டே கொடியில் தொங்கிய இரண்டு பாவாடைகளையும் சட்டைகளையும் எடுத்து மூட்டையாகக் கட்டிக்கொண்டது பெண். ஜாடியிலிருந்து ஒரு முட்டைத் தேங்காயெண்ணெயை எடுத்துத் தலையில் தடவி மரக்கட்டைச் சீப்பால் வாரிப் பின்னிக் கொண்டது—ஒரு நிமிஷத்துக்குள். மாடத்திலிருந்து மரச் செப்பைத் திறந்து ஒரு குங்குமப் பொட்டு. மூட்டை இடுப்பில் ஏறிற்று.

''போயிட்டு வரேன் அத்தை!''

''நிஜமாத்தானா?''

''—''

''ஏண்டி, உங்கப்பன் கிட்டக்கூட சொல்லிக்க வாண்டாமா? பத்து வயசு முடியலே. அங்கே போய் என்னடி பண்ணப் போறே...?

'உங்கப்பா இன்னும் வரலியே?''

''நாழியாச்சு அத்தே. அப்பா கிட்டச் சொல்லிண்டு போகணும்னு நெனச்சா. ஆனா அவசரமாயிருந்ததுனாலே போயிட்டான்னு சொல்லு. நான் சொன்னேன்னு சொல்லு.''

''கிங்கரன் மாதிரி வந்து மூணுபேர் கூப்பிடறான்னு உடனே கிளம்பிடறதா?''—அத்தை மெதுவாகச் சொன்னாள். பெண் கூடத்திற்கு வந்துவிட்டது.

''கிளம்பிட்டியா, அடீ!''—சின்ன மாமனார்.

''குழந்தை சாப்பிடக்கூட இல்லியே. இப்படி அழைச்சுண்டு போறேளே?''—அத்தைக்குத் தொண்டை கரகரத்தது.

''போறபோது வலங்கிமான்லெ சாப்பாடு பண்ணி வச்சுடறோம்.''

''அப்படி ஒரு அவசரமா? இப்படிப் பண்றேளே, அவன் வந்தா நான் என்ன சொல்லுவேன்?''

''நான் சொல்லிண்டேன்னு சொல்லு அத்தை!''—பெண். வழிக்காக நிற்பதைப் பார்த்து மூவரும் சற்று விலகிக் கொண்டார்கள். பின் தொடர்ந்தார்கள். ''ஏறு குழந்தே!'' பெண் ஏறிக் கொண்டது.

வண்டி கிளம்பி விட்டது. ராதை ஓடி வந்தாள்.

''ஏண்டி விசாலம், ஊருக்கா போறே?'' புன் சிரிப்பு ஒன்று பதிலாக வந்தது.

''எங்கிட்ட சொல்லவே இல்லியேடி?''

வழக்கம் போல் திண்ணையில் ஸ்திரீகள் வேடிக்கை பார்த்தார்கள். வண்டி குளத் தெரு முனை திரும்பிவிட்டது.



அத்தை குறட்டில் நின்று அதுவரையில் பார்த்தாள். திரும்பித் திண்ணையிலிருந்து சோழிகளை வாரி முந்தானையில் போட்டுக் கொண்டாள். உள்ளே போகக் கால் வரவில்லை. இமையை விழித்துக் கொண்டாள்.

''என்ன மாமி, விசாலம் எங்கே போறாள்—'' ராதையின் அம்மா.

'அவ ஆம்படையான் அழச்சிண்டு வரச் சொன்னானாம். கிளம்பிடுத்து. அவ அப்பாகூட இன்னும் வல்லை. கடைக்குப் போனவன்...சொல்லிக்கோன்னு கிளம்பிடுத்து, ரண்டு பாவாடையை மூட்டைக் கட்டிண்டு.''

''அ!'' ராதையின் அம்மாவின் கண்ணில் நீர் முட்டிக் கொண்டு நின்றது. ''என்ன தீர்மானம் இதுக்கு! அவா தான் தம் மனுஷான்னு யார் சொல்லிக் கொடுத்தா இதுக்கு?''.

''அவா வந்து இன்னும் பத்து நிமிஷம் ஆகலை.''

''என்ன திர்மானம்! என்ன தீர்மானம்!'' ராதையின் அம்மாவுக்கு வேறு ஒன்றும் சொல்லத் தெரியவில்லை. சொல்லவும் முடியவில்லை. தழதழப்பு சொல்ல விடவில்லை.

''அப்பா வந்தா அனுப்பமாட்டான்னு இதுக்குத் தெரிஞ்சுடுத்து. அதுக்குத்தான் அவசர அவசரமாகக் கிளம்பிடுத்து போயிருக்கு. அதுக்கிருக்கிற...என்னத்தை சொல்றது...சாப்பிடக்கூட இல்லை...'' இருவரும் பிரமித்து நின்று கொண்டிருந்தார்கள். அத்தைக்கு நினைத்து நினைத்து கண்ணில் நீர் பெருகிற்று.

அவன் தம்பி முரடுதான். சொத்து அதிகமில்லாதவர்கள் என்று சம்பந்திகள். மாப்பிள்ளையைக் கூட கலியாணத்தின்போது அலட்சியமாகத்தான் நடத்தி விட்டான். மாப்பிள்ளையின் கடிதத்திற்குப் பதில்கூட போடுவதுகிடையாது.

''உங்க தம்பி வராப்பல இருக்கே?'' என்று மேலக்கரையைப் பார்த்தாள் ராதையின் அம்மா.

''நான் எப்படிச் சொல்றது? நீயும் கூட இருடி!''

''இருக்கேன், மாமி. நடந்ததைச் சொல்றது.''

தம்பி வந்துவிட்டார்.

''பாலு, விசாலி ஊருக்குப் போறாடா!''

''என்ன?''

''ஆமாம், பெரிய மாமனார் ரண்டு பேரும் வந்தான். பெரிய மச்சினன் வந்திருந்தான். இது வாசல்லே சோழி ஆடிண்டிருந்தது. உள்ளே வந்துசொல்லித்து. பாத்தா, மூணு பேரும் இங்கரன் மாதிரி ரேழிலே வந்து நின்னா. உட்காருங்கோன்னேன். கேக்கலே. உங்க ஆமடியான் அழைச்சுண்டு வரச் சொன்னான். வரப்போறியா இல்லை யான்னா மூணுபேரும். நறுக்குன்னு வந்தது இது. கொடி யிலே பாவாடை ரண்டை உருவிண்டுது. தலை தோட்டிக் கிற சவுக்கத்தாலே மூட்டைக் கட்டிண்டுது. கிளம்பிடுத்து. சாப்பிட்டுப் போடீன்னேன் கேக்கலை.''

தம்பி திகைத்து நின்றார். செய்தியை நம்பவே நாலு நிமிஷம் ஆயிற்று. பின்பு, எப்பொழுது வந்தார்கள், எங்கே நின்றார்கள்? எப்படி நின்றார்கள்? முகம் எப்படி யிருந்தது? என்ன சொன்னார்கள்? என்று கேட்டுக் கொண்டே யிருந்தார். அக்காவின் குரலில் ஆற்றாமையும், தோல்வியும் புகைந்தன.

"சாப்பிட்டுட்டுப் போன்னேன். குழந்தை வாண் டாம்னா, போயிட்டா...'' என்று கடைசி வார்த்தையை நீரில் கரைத்து விட்டாள் அத்தை.

"அ! சாப்பிடலையா?''

''கேக்க மாட்டேன்னுட்டுதே?''

''சரி, சாதத்தைப் பிசைஞ்சுவை. நான் கொண்டு கொடுக்கிறேன்.''

அக்கா விறுவிறுவென்று குழம்பு சாதமும், மோர் சாதமும் கட்டிக்கொண்டு வைத்தாள். ''நாலு பேருக்குக் காணும் படியா வச்சிருக்கேன். சட்டுன்னு ஒரு ஜட்காவைப் புடிச்சிண்டு போ.''



முக்கில் ஒரு ஜட்கா நின்று கொண்டிருந்தது. பேசி ஏறிக் கொண்டார் அவர்.

வலங்கிமான் ரோட்டில் ஜட்கா பறந்தது. ஒருகல், இரண்டுகல், மூன்றுகல், நாலாவது கல்...குதிரை அடி அடியாக வாங்கிற்று. உயிரைக் கொடுக்கிறாப் போல ஓடிற்று.

முடிகொண்டான் ஆற்றுப் பாலத்துக்கு முன் அந்த வண்டியைப் பிடித்து விட்டது அந்த வண்டி நின்றும் விட்டது.

மூவரும் விழித்தார்கள். விசாலி விழித்தாள்.

''விசாலி, சித்தே இறங்கு. சாப்பிட்டு விட்டுப் போகா லாம்.''

அப்பா அவர்களோடு பேசவில்லை.

''போய்ச் சாப்பிட்டுவிட்டு வாம்மா'' என்றார் பெரிய மாமனார்.

விசாலி இறங்கினாள். ஆற்றில் இறங்கிக் கால் கையை அலம்பிக் கொண்டாள். அப்பா சாதத்தை உருண்டை உருண்டையாக உருட்டிக் கையில் கொடுத்தார். வாங்கிச் சாப்பிட்டாள். அவரும் சாப்பிட்டார். அப்பா ஏன் பேச வில்லை?

மிச்சம் இரண்டு பேருக்குச் சாதம் இருந்தது. அதை அப்படியே தூக்கி ஆற்றோடு எறிந்தார் அப்பா!

''அப்பா, அவா சாப்பிடலையே!''

''போனாப் போறது. உனக்கு வயிறு நெறஞ்சுதோல் லியோ!...ஏன் சரியா சாப்பிடலியா...சரி போய் வண்டி யிலே உட்கார்ந்துக்கோ...சமத்தா இரு. போய்ச் சேர்ந் தேன்னு லெட்டர் போடச்சொல்லு.''

''சரிப்பா!''

வண்டியில் ஏறிக் கொண்டாள் விசாலி. மூவரும் ஏறினர். விசாலி திரும்பிப் பார்த்தாள்.

''இந்தா'' என்று வண்டிக்கு முன்னால் வந்தார் அப்பா.

''என்னப்பா!''

''சோழிப் பெட்டி? ஆனா இதே வேலையா யிருக்காதே!''

''சரிப்பா.''

''சமத்தா இரு, குழந்தே.''

''எப்பப்பா வரேன்?''

''நான் என்னத்துக்கு வரணும்?''

''அப்பா!''

''இதபாரு, அப்பாவைப் பர்க்கணும்னா நீ வந்து பார்த்துக்கோ. நீ வர வாண்டாம்னு நான் சொல்லலை.''

''அப்பா!''

''நான் வரேன். குழந்தையை ஜாக்ரதையாப் பார்த்துக்கட்டும்'' என்று அவர்களைப் பார்க்காமலேயே அவர்கள் பக்கம் திரும்பாமலேயே சொன்னார் அப்பா.

வண்டி நகர்ந்தது.

தன் வண்டியில் ஏறிக்கொண்ட அப்பா அந்தண்டைப் பக்கமே முகத்தைத் திருப்பிக் கொண்டிருந்தார். அப்பாவுக்கு வருத்தமா?...இராது...கோபமா? அப்பாவின் வண்டியைப் பார்த்துக்கொண்டேயிருந்தாள் விசாலி. அந்த வண்டி சாலைத் திருப்பத்தில் மறைந்து விட்டது. அப்பா திரும்புவார் என்று பார்த்தால்...ஹூம் நல்ல அப்பா இது!... புன்னகை அரும்பிற்று அவள் முகத்தில்.

மூன்று பேரும் பேசவில்லை. உலகத்தாயைக் கண்ட மோனத்தில் அந்த உள்ளங்கள் ஒடுங்கிக் கிடந்தன.

பெரியமாமனார் உதட்டைக் கடித்து உணர்ச்சியை விழுங்கிக் கொண்டிருந்தார்.

.........

(1957)

# முள் முடி

''அப்ப, எங்களுக்கு உத்தரவு கொடுக்கிறீங்களா?'' என்று கண்ணுசாமி எழுந்ததும் கூடத்தை அடைத்து உட்கார்ந்திருந்த கூட்டமும் எழுந்து கொண்டது.

''நான் வரேன் சார்!''

''நான் வரேன் சார்!''

''சார்! போய்ட்டு வரேன் சார்!''

நடுவில் ஒரு பையன் அவர் காலைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொண்டான். சட்டென்று காலை இழுத்துக் கொண்டார் அனுகூலசாமி.

''அட, இதென்னடா தம்பி!''

''செய்யட்டும் சார்—இந்த மாதிரி யார் கிடைக்கப் போறாங்க அவங்களுக்கு?—நல்லாயிருக்கணும்னு உங்க வாயாலே சொல்லுங்க, நடக்கும்'' என்றார் கண்ணுசாமி.

அந்தப் பையனைப் பார்த்து மற்றப் பையன்கள் அத்தனை பேரும் அவர் காலைத் தொட்டுத் தொட்டு ஒற்றிக் கொண்டார்கள்.

அனுகூலசாமி குன்றிப்போய் நின்றார்.

''இதெல்லாம்...?'' என்று அவர் இழுப்பதற்குள் கண்ணுசாமி இடைமறித்தார்: ''அனுகூலசாமி, நீங்க நிஜமான கிறிஸ்தவர். முகத்துக்குச் சொல்லலே. முப்பத்தாறு வருஷம் பிரம்பைத் தொடாம, அதிர்ந்து ஒரு

வார்த்தை சொல்லாம, வாத்தியாராய் இருக்கிறதுன்னா, அந்தத் தெய்வத்தை விழுந்து கும்பிட்டாத்தான் என்ன?''

''அதெல்லாம் சொல்லாதிங்க.''

''நான் சொல்லலே, ஊர் முழுக்கச் சொல்லுது. கடைத் தெருவிலே உக்காந்து நானும் விசாரிக்கிறேனா? வயத்திலே பொறந்த பிள்ளையைக்கூட ஒரு அடியாவது எப்பவாவது அடிக்காம இருக்கமாட்டாங்க. ஒரு வெசவாவது வெய் வாங்க. அதுகூட இங்கே பேசப்படாது! இந்த மாதிரி யாரால் இருக்கமுடியும்? குழந்தையும் தெய்வமும் கொண் டாடற இடத்திலே. இந்தக் குழந்தைகளை, இன்னும் எத் தனையோ புள்ளைங்களை மனுஷப் பிறவிக்குக் கொடுக்கிற மரியாதை கொடுத்து மதிச்சிங்க...';

கண்ணுசாமி பேசும்போது பையன்கள் குனிந்து கும்பிட் டுக் கொண்டிருந்தார்கள். அனுகூலசாமிக்கு வாயைத் திறக் கவே முடியவில்லை. வாயைத் திறந்தால் குரல் உடைந்து நாக்குப் புரளும் போலிருந்தது.

''நான் வரட்டுமா...அப்பா?''

''செய்யுங்க'' என்று சிரமப்பட்டு வாயைத் திறந்து உடனே மூடிக்கொண்டார் அவர்.

''எங்களுக்கும் உத்தரவு கொடுக்கணும்'' என்று முற் றத்தில் நாயனக்காரர் கும்பிட்டார். அதற்கும் அவரால் தலையசைக்கத்தான் முடிந்தது.

கூடத்துக் கூட்டம் முழுவதும் வாசற்படி வழியாக வெளியேற இரண்டு நிமிஷமாயிற்று.

இரண்டு மூன்று பையன்கள் கிசுகிசுவென்று பேசி விட்டு, ''சார், விளக்கு ரண்டும் இங்கியே இருக்கட்டும்; காலமே வந்து எடுத்துக்கறோம்'' என்று சொல்லிவிட்டு நகர்ந்தார்கள்.



வாசல்வரை கொண்டு விட்டுத் திரும்பி வந்தபோது கூடம் வெறிச்சிட்டுக் கிடந்தது. அந்தச் சூன்யமும் நெஞ்சைப் பிடுங்குகிற ஏக்கமும் முன்னே ஒரு தடவை வந்ததுண்டு. பத்து வருடம் முன்னால் ஊயிசாவை மாப் பிள்ளை வீட்டில் கொண்டு விட்டுவிட்டு வரும்போது வந்த அதே சூன்யம்; அதே ஏக்கம்

'புஸ்ஸ்' என்று பெட்ரோமாக்ஸ் இரண்டும் சூன்யத்தை நிரப்பிக் கொண்டிருந்தன.

தனியாக விட்டுவிட்டுப் போய்விட்டார்கள். நாளைக் குப் புதன்கிழமை. ஆனால் அவருக்கு சனி, ஞாயிறு, நாளை, மறுநாள்; அதற்கும் மறுநாள்—இனிமேல் எப் போதுமே சனி, ஞாயிறுதான். பள்ளிக்கூடத்துக்கு இனி மேல் போக முடியாது. அவருக்கு வயது அறுபதாகி விட் டது. ஓய்வு கிடைத்து விட்டது.

ஊஞ்சல் மீது உட்கார்ந்து கொண்டார் அவர். பக்கத் தில் ப்ரேம் போட்ட ஏழெட்டு உபசார பத்திரங்கள். ஒரு வெள்ளித் தட்டு, ஒரு பேனா. கடையில் நாலு ரூபாய் விலை. ஆனால் இங்கு இந்தப் பேனாவுக்கு விலை கிடை யாது. நாலு லட்சம், நாலுகோடி பெறும் என்று சொன் னால் வீண்வார்த்தை—ஏதோ இரண்டும் சமம் என்று ஆகிவிடும்.

கொர்னாப் பட்டையும் வெள்ளி நாலுமாக நாலைந்து ரோஜா மாலைகள் சுருண்டு கிடந்தன.

ஊஞ்சல் சங்கிலி இரண்டையும் பிடித்துக் கொண்டு நின்றாள் மகிமை. பேசவில்லை; அவரையே பார்த்துக் கொண்டு நின்றாள். இத்தனை மேளதாளங்களும் தழ தழப்பும் தனக்குக் கிடைத்தாற்போல ஒரு பார்வை. ஒரு நிமிஷம். அவரைப் பருகிக்கொண்டு நின்றவள், சட் டென்று வாசலுக்குப் போய்க் கதவைத் தாழிட்டு வந்து, மாலைகளை ஒவ்வொன்றாக அவர் கழுத்தில் போட்டு, தோள்களைப் பற்றி முகத்தைப் பார்த்துக்கொண்டே நின்றாள்.

''என்னைக் கூடத்தான் நீங்க அடிச்சதில்லே. அதிர்ந்து சொன்னதில்லே'' என்று மார்பில் தலையைச் சாத்திக் கொண்டாள்.

''உலகத்திலே வந்து இருக்கிறது கொஞ்ச காலம், ஈசல் மழைக்கு வந்து மடியறாப்பல. அந்தப் பொழுதை அடிச்சுக் கோச்சுகிட்டுப் போக்கணுமா? அடிச்சு யாரைத் திருத்த முடியும்?''

''ராட்சசன் மாதிரி கோச்சுக்க வாணாம். ஆம்பிளையா இருக்கறதுக்காவது ஒரு தடவை கோபம் வர வேணாம்?''

''வராமயா இருக்கும்?''

''வெளியிலே காமிக்கணும்.''

''அதுக்குத்தான் பால்காரி, வேலைக்காரி எல்லாம் இருக்கறாங்க உனக்கு. நான் வேற கோச்சுக்கணுமா?''

''பள்ளிக்கூடத்திலே அடிக்காம அதட்டாம இருக்க முடியுமா?''

''இருக்க முடிஞ்சுதே!''

பரவசமாகப் பார்த்துவிட்டு, அவர் மீசையை இழுத்துவிட்டு, ''காபி சாப்பிடறீங்களா?'' என்று நகர்ந்து நின்றாள் மகிமை.

அவள் உள்ளே விரைந்தபோது தன் பிராணனே இன்னொரு உடம்பு எடுத்து விரைவது போலிருந்தது. மேலே சுவரைப் பார்த்தார். முன் முடியுடன் அந்த முகம் கருணை வெள்ளமாகப் பொழிந்து கொண்டிருந்தது. நாலைந்து படம் தள்ளி இன்னொரு படத்தில் அதே முகம் ஒரு ஆட்டுச்சிசுவை அணைத்துக் கொண்டிருந்தது.

கண்ணுசாமி சொன்னது அப்படியே உண்மைதான். முப்பத்தாறு வருஷ உத்தியோகத்தில் ஒரு பையனைக்கூட அடிக்கவில்லை; அதட்டிப் பேசவில்லை அவர்.

சுபாவமே அப்படி. ஓயிசா பிறந்து, பள்ளிக்கூடம் சேர்ந்து, ஆறு வயதில் ஏதோ விஷமம் பண்ணியதற்காக



வாத்தியாரிடம் அடிவாங்கிவிட்டது. அந்த வாத்தியார் ஸ்கேலால் அடித்தபோது சட்டைக்குள் இருந்த கோடைக் கட்டியின்மீது பட்டு...அப்பப்பா!—அன்று துடித்த துடி! அதைப் பார்த்ததும் சுபாவத்தை சங்கல்பமாகச் செய்து கொண்டார் அனுகூலசாமி. எல்லோரும் செய்த பாவங்களுக்குத் தன் உயிரை விலை கொடுத்தானே, அவன் எல்லாத் தலைமுறைகளுக்கும் சேர்த்துத்தான கொடுத்தான்.

அந்த உறுதி முப்பத்தாறு வருஷமும் ஒரு மூளி விழாமல் பிழைத்துவிட்டது. இல்லாவிட்டால் பதவியைவிட்டு ஓய்வு எடுக்கிற எந்த வாத்தியாரை மேளதாளத்துடன் வீடுவரை கொண்டுவிட்டுப் போயிருக்கிறார்கள்?

பள்ளிக்கூடத்தில் நேற்று நடந்த பாராட்டுக்கள் போதாதென்று, அவர் வகுப்பு என்று நாற்பது பையன்கள் இருக்கிறார்களே அவர்கள் நினைத்திருக்கவேண்டும். இன்று நடந்தது அந்தக் கூட்டம்தான். மாலை மாலையாகப் போட்டார்கள். மடல் மடலாக வாசித்துக்கொடுத்தார்கள். இருந்தாற் போலிருந்து வராந்தாவில் ''உம்'' என்ற ஒத்தும், தொடர்ந்து தவுலும் ஒலித்தன.

''என்ன தம்பி, இதெல்லாம்?''

''வேற யாருக்கு சார் செய்யப் போறோம்? வாங்க சார்'' என்று நாட்டாண்மை மாதிரி நின்ற பெரிய பையன் அவரை அழைத்தான். அந்த ஆறுமுகத்துக்கு வயது இருபத்து மூன்று. இன்னும் பள்ளிக்கூடப் படிப்பு முடியவில்லை. வெகுகாலமாக வாசிக்கிறான். மற்றபடி உலக ஞானம் அதிகம். அனுகூலசாமி பதில் சொல்லாமல் அவன் வேண்டுகோளுக்குக் கட்டுப்பட்டு விட்டார். இல்லாவிட்டால் மற்ற வாத்தியார்களைப் பற்றி ஆரம்பித்துவிடுவான். நாலு வார்த்தை சொல்லிக்கூட விட்டான்.

''எங்களுக்குத் தெரியாதா சார்? 'நான் ரிடயராகப் போறேன்; நிதி திரட்டுங்க'ன்னு நீங்க சொல்லலே; வீட்டு நகையை வச்சுக் கடன் வாங்கல்லே; கடுதாசைச்

காட்டிக் கடன் வாங்கி ஊர்ப் பாவத்தைக் கொட்டிக் கலே—''

''சரி—கொஞ்சம் தண்ணி கொண்டுவா'' என்று என்னமோ சொல்லி அவனை அனுப்பிப் பேச்சை மாற்ற வேண்டியிருந்தது.

அவன் வாயை அடைக்க வேண்டியிருந்ததே தவிர, சொன்னது என்னமோ தப்பில்லை. ஊர்பாவத்தைக் கொட்டிக் கொண்டதில்லை. ஓங்கி ஒருவனை அறைந்தால் என்ன, கடனை நாமம் சாத்தினால் என்ன?—எல்லாம் ஒன்றுதான். அந்த ஹிம்சையும் அவர் கொடுத்ததில்லை.

நாரணப்பய்யரும் அவர் மாதிரிதான். சம்சாரம் அதிகம் இல்லை. ஒரு பிள்ளை, ஒரு பெண். ஆனால் மனுஷனுக்கு நவத்துவாரமும் கடன். ஜவுளிக் கடையிலிருந்து கொத்த மல்லிக்காரி வரை காலணாவுக்கு மதிக்க முடியாத நிலை வந்து விட்டது. இந்த நிலையிலும் நாரணப்பய்யர் சும்மா இருக்கவில்லை. பட்டணத்தில் கல்வி டைரக்டர் ஆபீஸிலே வேலை செய்கிற யாரோ உறவுக்காரன், ''உங்களை இந்த வருஷம் பரீட்சை அதிகாரிகளில் ஒருவராகத் தேர்ந்தெடுத் திருக்கிறார்கள். உத்தியோக பூர்வமாக இன்னும் இரண்டு வாரத்தில் கடிதம் வரும்'' என்று ஒரு கடிதம் எழுதி யிருந்தான். அந்தக் கடிதத்தைக் காட்டியே, ஐம்பது எழுபத்தைந்து என்று இருபது பேரிடம் கடன் வாங்கி விட்டார். அந்த வேலைக்குக் கிடைக்கப் போகிற கூலி என்னமோ இருநூற்றுச் சொச்சம்தான். கடைசியில் கடிதம் பொய்த்துவிட்டது. அவ்வளவுதான்; ஷராப் கடை நாயுடு நாரணப்பய்யரை வளைத்துக்கொண்டு சைக்கிளைப் பிடுங்கிக் கொண்டுவிட்டார். ஏமாந்த கோபம். பிடுங் கினதா பெரிது? சைக்கிளை ஓட்டுகிறது யார்? வாத்தியா ராயிற்றே! நாரணப்பய்யரே, உம்மால் இந்த இனத்துக்கே அவமானம்!

பாங்க் ஏஜெண்ட் அய்யங்காரை யாராவது ஏமாற்ற முடியுமோ? கடைந்த மோரில் வெண்ணெய் எடுக்கிறவர்!



அவரிடம் இந்த சாமிநாதன் கைவரிசையைக் காட்டி னாரே! வாத்தியார் என்று நம்பி சாமிநாதன் கொடுத்த சங்கிலியை எடைபோட்டு ஒன்பது பவுனுக்கு முன்னூறு ரூபாய் கடன் கொடுத்தார் அய்யங்கார். சாமிநாதன் பேசாமலிருந்திருக்கலாம். பதினைந்தாம் நாள் இன்னொரு சங்கிலியைக் கொண்டுபோனால் அதையுமா உரைத்துப் பார்க்காமல் பணத்தைத் தூக்கிக் கொடுப்பார்கள்? சங்கிலியை உரைத்துக் கொண்டே புன்சிரிப்புடன், ''என்ன அய்யர்வாள்! பள்ளிக்கூடத்திலே பையன் சந்தேகம் கேட்டால், 'சீ' அதிகப் பிரசங்கி உட்காரு'ன்னு அதட்டி, நம்ம அஞ்ஞானத்தை மறைச்சுக்கலாம். ஆனால் கடைத் தெருவிலே அது செல்லுமோ என்னமோ? எனக்குத்தான் சரியாகத் தெரியலையோ என்னமோ? சித்தே இருங்கோ, பத்தரை அழைச்சிண்டு வரேன்'' என்று வெளியே எழுந்து போனாராம் அய்யங்கார். சாமிநாதய்யருக்கு வயிற்றைப் புரட்டியது. பத்தரைக் கூப்பிட ஆள் இல்லையா? என்ன சமாதானம் சொல்லலாம் என்று அவர் தேடுவதற்குள் பத்தர் வந்துவிட்டார். ''ஏட்டு''ம் வந்துவிட்டார். அந்த சாட்சிகளோடு கஜானா அறையைத் திறந்து பார்த்த போது, போன தடவை கொடுத்த சங்கிலியும் 'நான் பித்தளை' என்று பல்லை இளித்துக் கொண்டிருந்தது. அந்தச் சமயத்திலேகூட அய்யங்கார் வாத்தியார் குலத் துக்கு மதிப்புக் கொடுத்துவிட்டார். மூன்றாம் பேருக்குத் தெரியாமல் சாமிநாதய்யரின் அப்பத குழித் தோட் டத்தை எழுதி வாங்கிக்கொண்டு ஆளை விட்டுவிட்டார். நல்ல வேளை, ''ஏட்டு''ம் உடையில் வராமல் வேட்டி சட்டையோடு போயிருந்தார். கூட்டமில்லை; ஊர் சிரிக் காமல் போயிற்று.

இன்னும் நாலைந்துபேரின் நினைவு வந்தது. ''ஏண்டலெ! ரிடையராயாச்சு; இன்னமே கால் வயிறு சாப்பாடுதான். அந்த நாள்ளெ எங்க வாத்யாருக்கு நிதி திரட்டிக் கொடுத்தோம் நாங்க—'' என்று ஒரு பையனைக் குழையடித்து வகுலுக்குக் கிளப்பிவிட்டார் ராமலிங்கம்,

காப்பியை எடுத்துக்கொண்டு வந்தாள் மகிமை.

"என்ன யோசனை? சாப்பிடுங்க, சூடு சரியாயிருக்கு" என்று உபசாரப் பத்திரங்களை ஒவ்வொன்றாக வாசித்துக் கொண்டிருந்தாள். நடுநடுவே பெருமையுடன் அவரை நிமிர்ந்து பார்த்துக்கொண்டாள்.

"அதெல்லாம் நெசம்னு நெனைச்சுக்காதே. இனிமே வேலைக்கு வரமுடியாதுன்னா அளப்போறானேன்னு உளு வாக் காட்டியிருக்காங்க... சக்கரை முட்டாயி."

"தெரியும். ஆனால் நெசத்தை மட்டும் எல்லாரும் சொல்லியிருக்காங்க" என்றாள் மகிமை. "உங்கள் கை நீளாம, குரல் வெடுவெடுக்காம இருந்தது நெசம்."

"த்ஸ—பெரிய நெசத்தைக் கண்டுபிட்டாங்க."

"திறமைன்னு சொல்றதும் நெசந்தான்" என்றாள் மகிமை. "தடியெடுக்காம, அதட்டாம, அப்படியே கெட்டிக் காரன்னு பேர் எடுக்கறதும் கஷ்டம்தானே?"

அனுகூலசாமி யோசித்துப் பார்த்தார். அதுவும் உண்மைதான் என்று பட்டது. அவருக்குக் கர்வப்படக்கூட உரிமை உண்டு என்று தோன்றிற்று.

"ஒரு கஷ்டமும் இல்லே. பால்காரி, கூட்டுக்காரி கிட்டயும் அப்படி இருக்கலாம். மனுஷனாப் பொறந்தவன் யாரும், புத்தியிருக்கறவன் யாரும் அடியிலே நம்பிக்கை வைப்பானா?"

"எல்லாருக்கும் முடியாதுங்க!"

"என்னமோ நான் இருந்துட்டேன்" என்றார் அவர்.

"சார்!" என்று வாசற் கதவைத் தட்டுவது கேட்டது.

"யாரு?"

"நான்தான் சார்?"

மகிமை போய்த் திறந்தாள்.

"சார் இருக்காங்களா?"



"இருக்காங்க...யாரு?...ஆறுமுகமா, வா!"

ஆறுமுகம் மட்டும் வரவில்லை. இன்னொரு பையனும் வந்திருந்தான். அவர் வகுப்பில் படிக்கிற பையன்தான். கூட ஒரு அம்மாள். வயது நாற்பது நாற்பத்திரண்டு இருக்கும். நெற்றி, காது, மூக்கு, கைகளில் ஒன்றுமில்லை. அனு கூலசாமி எழுந்து நின்றார்.

"என்ன சேதி, சின்னையா?"

"சின்னையன் அம்மா சார், இது" என்றான் ஆறுமுகம்.

"வாங்க!"

ஆறுமுகம் யாரையாவது அழைத்து வருவதென்றால் சிபார்சு என்று அர்த்தம். இருபத்து மூன்றுவயதில் இன்னும் பள்ளிக்கூடத்தை முடிக்காத பையன்! நாட்டாண்மைக் காரன் மாதிரி ஒரு அந்தஸ்து உண்டு அவனுக்கு. எதற்கு வந்திருக்கிறானோ? பரீட்சைப் பேப்பர்கூட இல்லையே!

"என்ன ஆறுமுகம்?"

"சின்னையன் பார்க்கணும்னான் சார்!"

"என்ன சேதி...சின்னையா?"

சின்னையன் பதில் பேசவில்லை. தலைகுனிந்து நின்றான். கேட்டு அரை நிமிஷம் ஆயிற்று; குனிந்த தலை நிமிரவில்லை. அழுதான்.

"சொல்லுடா!" என்றாள் அந்த அம்மாள்.

உற்றுப் பார்த்தார் அனுகூலசாமி.

பையனின் முகச்சதை கோணிற்று; உதடு நடுங்கிற்று.

"சொல்லேண்டா" என்றான் ஆறுமுகம்.

"ஒரு வருஷமாத் துடிச்சுப் போயிட்டுதுங்க அது" என்றாள் அம்மா.

''ஒரு வருஷமாத் துடிச்சுப் போயிட்டுதா?''

''ஆமாம் சார்'' என்றான் ஆறுமுகம். நீங்க இனிமே பேசலாம்னு சொல்லிடுங்க சார்.''

''நல்லாச் சொல்லேண்டா. எனக்கு ஒன்றும் புரியலியே!''

''சாருக்கு மறந்து போச்சு'' என்று அந்த அம்மாளையும் மகிமையையும் பார்த்தான் ஆறுமுகம்.

'எனக்கு என்ன மறந்துபோய்விட்டது?'—அனுகூலசாமி யோசித்து யோசித்துப் பார்த்தார்; ஒன்றும் ஞாபகமில்லை.

ஆறுமுகம் சொன்னான் : சார், போன வருஷம் இவன் காயாரோகணத்தோட இங்கிலீஸ் புஸ்தகத்தைத் திருடிட்டுப் போயி, வேற பேர் ஒட்டி, கடையிலே பாதி விலைக்கு வித்துப்பிட்டான். நான்தான் அதைக் கண்டு பிடிச்சு உங்களிட்ட கொண்டு நிறுத்தினேன்—''

பையன் விசும்பி விசும்பி அழவே, ''சும்மா இருடா'' என்று தாயார் அவனைச் சமாதானம் செய்தாள்.

''அப்புறம்?''

''நீங்க அவனைச் சித்த நேரம் பாத்திங்க. 'நம்ம கிளாசிலே ஒருபய இதுவரைக்கும் இந்த மாதிரிப் பண்ணினதில்லே. இனிமே இந்தப் பயலோட ஒருத்தரும் பேசாதீங்கடா'ன்னு சொன்னீங்க.''

பையன் அழுகை நிற்கவில்லை.

''அன்னிலேந்து அவனை நாங்க ஒதுக்கிப்பிட்டோம் சார். யாரும் பேசறதில்லே. அப்புறம் இன்னைக்கிப் பார்ட்டி நடத்தினோமில்ல? அதற்கு ரண்டு, ஒண்ணுண்ணு பையன்கள் கிட்ட வசூல் பண்ணினோம். இவனும் ஒரு ரூபா கொடுக்க வந்தான். வாண்டாம்னுட்டோம். பார்ட்டிக்கும் வரக் கூடாதுன்னிட்டோம். ஒன்னும் பேசாதபோயிட்டான் நேத்து. இப்ப இங்கே வந்திட்டு வீட்டுக்குப் போனேனில்ல, அவங்க அம்மாளை அழச்சிட்டு வந்து திண்ணையிலே நின்னுக்கிட்டிருந்தான். இவங்க அம்மாவும் சொன்னாங்க. அழச்சிட்டு வந்தேன்'' என்று பயந்து, மென்று விழுங்கிக் கொண்டே சொன்னான்.



அனுகூலசாமிக்கு அந்தச் சம்பவம் ஞாபகம் வந்து விட்டது. ஆனால் இவ்வளவு கடுமையான தண்டனையா விதித்தோம்? ஏதோ சொல்லி வைத்தார். ஆனால் இவ்வளவு கண்டிப்பாகவா அதை நடத்த வேண்டும்?

''சின்னையா, அழாதடா ஏய்!'' என்றார் அவர்.

''நாங்கள்ளாம் அவனோட பேசலாம்னு சொல்லுங்க சார், நீங்க.''

''ஒரு வருஷமா அவன் சொரத்தாவே இல்லீங்க. எப்பவும் சிரிச்சுப் பேசிட்டு இருப்பான். இப்ப சரியாகப் பேசறதில்லே. ஒரு வார்த்தை பேசுவான், போயிடுவான். என்னமோ அதுங்க மனசிலே இருக்கிறது நமக்குத் தெரியுதுங்களா? தங்கச்சிகளோட சரியாப்பேசறதில்லை. இன்னிக்கிச் சாயங்காலம்தான் எல்லாத்தியும் சொன்னான். ஊட்டுலே அதெல்லாம் விளையாடப் போயிருந்திச்சு. வாத்தியாரை இன்னிக்கிப் பாத்தாத்தான் உண்டுன்னான். வந்தேன். நீங்க பெரிய மனசு பண்ணுங்க.''

அனுகூலசாமி கையும் களவுமாகப் பிடிபட்டு விழித்தார்; புழுத் துடிப்பாக அவர் உள்ளம் துடித்துக் கொண்டிருந்தது.

''பையனைச் சேத்துக்க மாட்டேன்னுட்டாங்களாம். இதை உங்க கையாலே வாங்கிங்க. எல்லோரும் செய்யறப்ப அவன் மனசு கேக்குங்களா...கொடுடா'' என்றாள் அம்மா.

பையனுக்கு அழுகை அதிகமாகிவிட்டது. கையில் வேர்த்துக் கொண்டிருந்த ரூபாயை நீட்டினான்.

''வாங்கிக்கங்க சார்'' என்று கெஞ்சினான் ஆறுமுகம்.

—பேசாமல் வாங்கிக் கொண்டார்.

''ரொம்ப நல்ல பையன் சார், அன்னிக்கி ஏதோபுத்தி பிசகாப் பண்ணிட்டான். அப்புறம் ஒரு புகார் கிடையாது சார் அவன் மேலே.''

''நீங்க சொல்லுங்க பெரிய மனசு பண்ணி. கூட இருக்கறதுங்க பேசாம இருந்தா என்ன செய்யும்? சிறுசுதாங்களே!'' என்றாள் அம்மாள்.

''இந்தப் பயலுங்க இப்படிப் பண்ணுவாங்கன்னு தெரியாமே போயிடிச்சே எனக்கு'' என்றார் அவர்.

''நீங்க சொன்னதைத்தானே செய்தாங்க'' என்றாள் மகிமை.

''அது சரி'' என்று லேசாகச் சிரித்தார் அவர். அழுகை தான் சிரிப்பாக வந்தது. மேலே படத்தில் தோன்றிய முள் முடி அவர் தலையை ஒருமுறை அழுத்திற்று.

—— 1958

# அட்சராப்பியாசம்

பெரிய உடையார் வீட்டுக் கல்யாணத்தில் கொல்லைத் தாழ்வாரத்தில் கோட்டையடுப்புப் போட்டுச் சமையல் நடந்து கொண்டிருந்தது. தவசிக்குக் கைப்பிள்ளையாக ஓடுகிற ஐயாறு, ஒரு பூசனிக்காயைக் கீழே போட்டு உடைத்து அதை அரிவாள் மணைமீது உட்கார்ந்து நறுக்கிக் கொண்டிருந்தான். உலக நடப்பெல்லாம் பேசிக்கொண்டே சமையலையும் பார்வை பார்க்கிற தவசி, ''ஏண்டா ஐயாறு, புகையிலை இருக்கா?'' என்றார்.

பொட்டணத்தை நீட்டினான் ஐயாறு.

''சை, தரித்திரியம்! இது என்னாத்துக்குடா. இந்த வாளைநாரும் கஞ்தைப்பாலும்? காம்புப் புகையிலை இருக்காடாங்கறேன்.''

''இல்லே மாமா.''

''இந்தப் பிச்சாண்டி அக்கரைக்கு ஓடினான்; வேதாரண்யம் நறுக்கு எவன் கொண்டாந்து கொடுக்கப் போறான் இனிமே, கரும சிரத்தையா?'' என்று சொல்லி விட்டுப், ''போடா ஐயாறு, நம்ம உடையாரு கார்வாரு கிட்ட போயி, நாலஞ்சு காம்பு வாங்கிட்டு வா. பூசனிக்காயை நான் பார்த்துக்கறேன்'' என்று சொல்வதற்காக வாயெடுத்தார். தவசி அதைச் சொல்வதற்குள் ஐயாறு, ''எந்தப் பிச்சாண்டி, மாமா?'' என்று சற்றுக் கலவரத்துடன்கேட்டான்.

"பிச்சாண்டின்னு எத்தினி பேருடா இருக்கான்? ஆத்திக்கொல்லைப் பிச்சாண்டிதான்,"

"சாவடியிலே வெத்திலை பாக்குக்கடை வச்சிருக்கானே!"

"அவன்தான்."

"அக்கரைக்கு எப்பப் போனான் அவன்?"

"முந்தா நாத்து."

"நான் போன சனிக்கிழமை பார்த்துப் பேசினேனே."

"போன சனிக்கிழமைக்கு அப்புறம் சூரியன் பூமியைச் சுத்திக் கோடானகோடி காதம் ஒருதடவை வந்திட்டான். இவன் முந்தாநாத்து அக்கரைக்குப் போனதுதான் பெரிய சேதியாக்கும்?"

"நெசமாப் போயிட்டானா?"

"முந்தாநாத்துக் கப்பலேறிட்டாண்டாங்கறேன்."

"நெசமாவா?"

"என்னடாது நெசமா நெசமான்னுக்கிட்டு, அமீனா மாதிரி? வியாழக்கிழமை வியாழக்கிழமை நாலு காம்பு அனுப்புவான். நேத்து வரலெ. பைத்தியம் புடிச்சாப்பல போயி, இன்னக்கிக் காலமே ரெண்டு கல்லு நடந்துபோயி, கடை பூட்டியிருக்கிறதைக் கண்ணால பார்த்து, சேதியைத் தெரிஞ்சுக்கிட்டு வந்திருக்கேன்; நெசமாநெசமாங்கிறியே!"

அவ்வளவுதான். இறப்புக்கழியில் தொங்கவிட்டிருந்த துண்டை எடுத்து மேலே போட்டுக்கொண்டு வெளியே ஓடினான் ஐயாறு. தெருவில் ஓட்டமும் நடையுமாகப் போனான். சாலையில் ஏறினான். ஓடினான். இரண்டு கல் ஓட்ட ஓட்டமாக ஓடினான். ஆத்திக்கொல்லைக் கிராமம் வரையில் ஓடினான். சாவடியைப் பார்த்தான். கடை பூட்டிக் கிடந்தது.



பக்கத்தில் இருந்த கிணற்று மேடையில் யாரோ பெண் பிள்ளை நீர் எடுத்துக் கொண்டிருந்தாள். அங்கே போய்க் கேட்டான். அந்தப் பெண்பிள்ளை சொன்னதைக் கேட்டதும் வயிற்றில் ஏதோ விழுந்தாற்போல் இருந்தது. பிச்சாண்டி சிங்கப்பூருக்குக் கப்பல் ஏறிவிட்டான், முதல் நாளைக்கு முதல்நாள். வேறு யாரோ அங்கே கடை வைக்கப்போகிறார்களாம் அமாவாசையன்று. பிச்சாண்டி எப்போது வருவான் என்று தெரியாதாம்.

"அது எப்ப வர்றாரோ? பத்து வருசமோ, இருபது வருசமோ!" என்றாள் பெண்பிள்ளை.

"அட மோசக்காரப்பாவி!" என்று அலறினான் ஐயாறு. காலெல்லாம் நுணிமாதிரித் துவண்டது. இற்று விட்டாற் போலத் தொப்பென்று துவைக்கிற கல்மீது உட்கார்ந்தான்.

"பைசா பைசாவாச் சேத்தேண்டா—அடுப்படியிலே காஞ்சு. தண்ணி தூக்கி, துக்காணி துக்காணியாச் சேத்தேண்டா பாவி? பத்து வருசமாச்சு, அந்த முந்நூறு ரூவா சேக்க..."

பிறகு பிச்சாண்டியின் அப்பன் ஆயி எல்லோரையும் இழுத்தான்; திட்டினான்; எழுந்திருந்தான்; ஓடினான்.

சாலையில் பாதி ஓடும்போதே சிரிக்க ஆரம்பித்தான். முடிகொண்டான் ஆற்றில் இறங்கினான். மணலில் விழுந்து புரண்டான். மணலை வாரித் தலை உடம்பெல்லாம் போட்டுக் கொண்டான். மறுபடியும் சிரித்தான்.

"எலே, சிங்கப்பூர்தானே போறே? நானும் வறேண்டா" என்று சிரித்தான்.

வீட்டுக்கு வந்தான். சிரித்தான். பெரிய குரல் அவ ளுக்கு. பிச்சாண்டி பிச்சாண்டி என்று எதிரே வருகிறவர் களையெல்லாம் பேயறையாக அறைந்தான். சிரித்தான். நடுநடுவே அழுதான். மயிரைப் பிய்த்துக் கொண்டான். விறகுக் கட்டை, கடப்பாரை என்று கையில் அகப்பட்ட தைத் தூக்கியெறிநதான.

நாலு பேராகச் சேர்ந்து அவனைக் கட்டிப் போட்டார்கள். முன் அறையில் போட்டுப் பூட்டினார்கள். பூட்டின அரைமணி நேரத்திற்கெல்லாம் தோரணம் தோரணமாக அரை வேட்டியைக் கிழித்துவிட்டான் ஐயாறு. சற்றுக் கழித்து ஆனந்தக் களிப்பில் ஒரு பாட்டும் கிளம்பிற்று.

ஆத்திக்கொல்லை என்னும் ஊரு - அதிலே
அங்காடிக் கடைவைச்சிச் சம்பாரிச்சாரு
வாத்தியார் மகள் அந்தப் பாரு - சாலை
வெத்திலைப் பாக்குக்கடை பிச்சாண்டியாரு
தத்திங் கிணத்தோம் தகித்தோம் - தான
திம்திம்தி திம்திம்தி திம்திம் ததித்தோம்
பிச்சாண்டி தோழர் ஐயாறு - அவர்
பத்தாறு மாசம் முந்நூறு சேத்தாரு
வச்சாண்டு பிச்சாண்டி கண்ணு - அதை
வாங்கிட்டுக் கப்பல்லே நீட்டினான் கம்பி
தத்திங்கிணத்தோம் ததித்தோம்

ஊர்க் குழந்தைகளெல்லாம் திண்ணைக்கு வெளியே நின்று தாளம் போட்டன. உடையார் வீட்டுக் கல்யாணத்துக்கு வந்திருந்த சம்பந்தி ஜனங்களின் குழந்தைகளும் சேர்ந்து கொண்டன. ஐயாறுவின் மனைவி மாத்திரம் விசும்பி விசும்பி அழுதாள். ஐயாறுவுக்குக் கல்யாணம் ஆகி இரண்டு வருஷகாலந்தான் ஆகியிருந்தது.

இராப்பகல் தெரியாமல் பாடிக்கொண்டும் சிரித்துக்கொண்டும் பிச்சாண்டியைத் திட்டிக்கொண்டும் முன் அறையில் அரசாணை செய்தான் ஐயாறு. கடைசியில் அவன் அண்ணனும் மாமனாரும் அவனை வண்டியில் போட்டுக்கொண்டு திருவிடைமருதூர் சென்று மகாலிங்கர் சந்நிதியில் ஒரு மண்டலம் வைத்திருந்து திரும்பினார்கள். பாட்டு நிற்கவில்லை. பின்பு, திருக்குடந்தையில் ஒரு சாமியார் வீட்டுக்கு அழைத்துப் போனார்கள். அந்தச் சாமியார் இல்லறத் துறவி. அழகான ஒரு பங்களாவில், குரோட்டன்ஸ¬ம் சூரியகாந்தியும் துளசியும் மாசிப்பச்சையும் வாழையும் தென்னையும் சூழ்ந்த பங்களாவில் வாழ்ந்தவண்ணம், மணிமந்திர ஔஷதாதிகளில் தமக்கு இருந்த தேர்ச்சியை உலக நன்மைக்குப் பயன்படுத்தி வந்தவர்.



"உட்காருங்கள்" என்றார் அவர்.

ஐயாறுக்கு அப்பளாக்குடுமி வைத்து, பைத்தியப் பட்டத்தை உறுதி செய்து வைத்தது போல் செய்திருந்தார்கள். குளித்துவிட்டு ஈர வேட்டியுடன் உட்கார்ந்த ஐயாறு, சாமியாரைப் பார்த்து ஆனந்தக் களிப்பைத் திருப்பித் திருப்பிப் பாடினான்.

சாமியார் யந்திரம் போட்டுப் பூஜை செய்தார். பதினைந்து நாள் ஆயின. "இங்கேயே இருக்கட்டும்" என்று சொன்னார். அவனை விட்டுவிட்டு மாமனாரும் அண்ணனும் ஊருக்குப் போனார்கள். முப்பது நாள் கழித்துத் திரும்பி வந்தார்கள். ஆனந்தக் களிப்பு நிற்கவில்லை. சாமியார் அவர்களைத் தனியாக அழைத்துப் போய்ச் சொன்னார்: "இது பணம் போன பித்து இல்லை; ஞானப் பித்து. சஞ்சிதம், பிராப்தம் ஆகிய எல்லா வினைகளும் இந்த ஆத்மாவுக்கு ஜன்மத்தோடு, அறுபட்டுப் போயிடும். அந்தப் பாச விமோசனந்தான் இப்படிக் குரல் கொடுத்திட்டேருக்குங்கறதை நாம தெரிஞ்சுக்கணும். இது இப்படியேதான் இருந்துக்கிட்டிருக்கும். தாமரை இலைத் தண்ணியா இருந்து இந்த ஜன்மத்தை வாழ்ந்து தீத்துப்பிட்டுக் கடைசிலே சுத்த சிவத்திலே கலந்துவிடப்போவுது. ஏன் கவலைப்படறீங்க? உங்க குடும்பத்திலே இந்த மாதிரி ஒரு பித்துக் கிளம்பறதுன்னா அது நீங்க சங்காத்தமா செய்த நல்வினைதான். பேசாம அழச்சிட்டுப் போங்க. இது வெறும் பித்தாயிருந்தா இந்த யந்திரத்தைப் பார்த்த ஏழா நாளே அலறிட்டு ஓடியிருக்கும். இப்படி நாப்பத்தஞ்சு நாளு, இது பாடிக்கிட்டேயிருக்குதுன்னா நான் வேற என்னத்தைச் சொல்ல? அது பேரு ஒண்ணே போதுமே—ஐயாறு—இது என்ன இது? ஐயாறப்பர், பஞ்சநதம், பஞ்சாபகேசன், ஜப்யேசன் ப்ரணதார்த்திஹரன் என்கிற மூணு நாமத்தைச் சொன்னவங்

களுக்கு மறுஜன்மம் கிடையாதுன்னு பழைய ஏடெல்லாம் கூவுது. சித்தர் முனிங்கள்ளாம் கூவியிருக்காங்க'' என்றார் சாமியார்.

ஐயாறு மீண்டும் ஊருக்கு வந்து சேர்ந்தான். இப்போது அவனைப் பூட்டி வைக்கவில்லை. யதேச்சையாகக் கொல்லைக்கும் வாசலுக்கும் நடமாடினான். எப்போதாவது பந்தயக் குதிரை மாதிரி இரண்டு கால் பாய்ச்சலில் ஊரின் கோடிக்குக் கோடி ஓடுவான். ஓடின வேகத்தில் நின்று வயல்வெளியைப் பார்த்து ஒரு ருத்திரச் சிரிப்புச் சிரித்துவிட்டுத் திரும்பி விடுவான்.

முன் அறையை அவனுக்காக ஒழித்து விட்டு விட்டார்கள். அங்கு அவன் தனியரசு நடந்து கொண்டிருந்தது. முந்நூறு வேலிப் பண்ணைக்காரராகவும், தம்பிரான் மடத்துத் தவசியாகவும், கல்யாணத்துக்கு மந்திரம் ஓதுகிற பஞ்சாங்கக்காரராகவும்—இன்னும் பற்பல நிலைகளைச் சித்தப் போக்குக்கு ஏற்றவாறு மேற்கொண்டு பேசிக் கொண்டிருப்பான்.

''நாப்பதாயிரம் மூட்டை நெல்லைக் கொண்டு சேத்தாகணுமேடா. இந்தப் பூனைக் காளையை வச்சிட்டு எத்தினி நடைடா அடிக்கப் போறே கும்மாணத்துக்கு? அன்னதானம் ஐயரு லேசுப் பட்டவரில்லை. கோபம் வந்திரிச்சோ, மண்டை செதறிடும், ஜாக்ரதை!''

''ஒரு அண்டா ரசவாங்கியைப் பிரட்டி எறக்க முடியலே; என்னாத்துக்கடா தவசின்னு பேர் சொல்லிட்டு வந்தே? அப்படியே பொடரியிலே வச்சேன்னா...''

''பாம்பபேபே பே பே'' என்று ஆனந்த பைரவியில் ஓர் இழுப்பு.

இந்த மாதிரி ஓயாத பேச்சு, ஒழியாத புலம்பல், மூடாத ராகம். இரவு கிடையாது; பகல் கிடையாது. சித்தம் கலங்கின நாளாக அவனுக்குத் தூக்கமும் போய்விட்டது. இரவு முழுவதும் முன் அறை கலகலவென்றிருக்கும். புதிதாக வருகிறவர்களுக்கு ஏதோ ஏழெட்டுப் பேர் பெரிய வழக்கில்



முனைந்திருப்பது போலத் தோன்றும். அப்படிக் குரலைக் கூட மாற்றி மாற்றி ஒரு சித்திரம் படைப்பான் ஐயாறு!

தூங்க விடாமல் புலம்பின இந்தப் புலம்பலைக் கேட்டு அவன் தாய் நடுநிசிக்கு உள்ளிருந்து வந்து, ''உன் வாயிலே நாராசம் பாய! ஏண்டா இப்படி என் வயித்திலே பொரண்டையை வச்சுக் கட்றே? இப்பப் பேசாம தூங்கறியா? கொண்டைக் கழியைக் கொண்டாரச் சொல்லட்டுமா?'' என்று அதட்டல் போடுவாள். கப்சிப் என்று மௌனம் நிலவும். அரைக்கால் நாழிகைக்கெல்லாம் மீண்டும் தொடங்கிவிடும்.

சிலநாள் நள்ளிரவில் வாசற் கதவைத் திறந்துகொண்டு வெளிப்படுவான். ஏழெட்டு வீடு தள்ளியிருக்கிற தன் மனைவி வீட்டுத் திண்ணை மீது போய்ப் படுத்துக்கொள்வான். அவனுக்கு உள்ளூரிலேயே, உறவு முறையிலேதான் கல்யாணம். ஐயாறுக்குச் சித்தம் கலங்கின ஒரு மாசத்திற்கெல்லாம், சம்பாதிக்காதவன் பெண்டாட்டியைக் காப்பாற்ற முடியாதென்று அவன் பெண்சாதியைப் பிறந்த வீட்டுக்கு அனுப்பிவிட்டாள் அவன் தாய். அந்த நினைவில்தான் ஐயாறு அந்தத் திண்ணையில் போய்ப் படுத்தது. அங்கே சற்றுப் புலம்பல் கேட்கும். பிறகு நின்றுவிடும்.

காலக்கிரமத்தில் ஐயாறுவின் மனைவி தரும நாயகி ஓர் ஆண்மகவை ஈன்றெடுத்தாள். ஆனால் குழந்தையைப் பார்க்க அவள் மாமியாரோ நாத்திமாரோ கொழுந்தன்மாரோ வரவில்லை. சில நாள் கழித்து அவள் குழந்தையுடன் மாமியார் வீட்டுக்குப் போன போது வா என்று யாரும் சொல்லவில்லை. முகம் கொடுத்துப் பேசவும் இல்லை. ஐயாறு மாத்திரம் அவள் திரும்பி முகத்தைத் தொங்க விட்டுப் போகும்போது திண்ணையில் உட்கார்ந்தபடியே குழந்தையைப் பார்த்து ஒரு புன்சிரிப்புச் சிரித்தான். அதுவும் அவனைப் பார்த்து ஈரங்கொண்ட பட்டு உதட்டால் ஒரு புன்னகை பூத்தது.

ஐந்தாறு ஆண்டுகள் சென்றதும் ஒரு தகராறுமூண்டது.

ஐயாறுவின் குழந்தை வளர்ந்துவிடவே, அதைப் பள்ளிக்கூடத்தில் போடவேண்டுமென்று ஆசைப்பட்டாள் தருமநாயகி. பையனை அப்பா மடியில் உட்கார்த்தி அரிநமோத்து சொல்லித்தானே அதைத் தொடங்கவேண்டும்? விஜயதசமி வருவதற்கு ஒரு மாசம் முன்னாலேயே இதைத் தானே மாமியாரிடம் சொல்லப் போனாள்; சொல்லவும் சொன்னாள். மாமியாருக்குக் கண் சிவந்துவிட்டது. ''என்னாடி கதைக்கிறே? யாருகிட்ட கதைக்கிறே? அவன் முளுப் பைத்தியம்னா ஒண்ணரைப் பைத்தியமா அடிச்சிரலாம்னு பாக்கிறியா? அவன் மடியிலே உக்காத்தி வச்சிக்கிடுவானா அவென்? யார், மடியிலே எந்தப் புள்ளை உட்கார்றது? ஏது ஒண்ணும் புரியலே போலிருக்கு'' என்று சீறினாள்.

''புரியத்தான் இல்லை. நீங்க என்ன சொல்றீங்க?''

''நெசமாப் புரியலே?''

''நல்லாப் புரியும்படியாச் சொன்னாத்தானே புரியும்?''

''புரியும்படியா நானா சொல்லணும்? உங்க வீட்டுக்கு எதித்த வீட்டிலே இருக்கானே, அஞ்சுவேலி பங்குக்காரரு மகன், அந்தக் கயவாளிப்பய கனகசபை; அவன் கிட்ட சொல்லு. அவன் மடியிலே உக்காத்தி வச்சு நீ பெத்த அருமைப் புள்ளைக்கு அரிநமோத்து சொல்லுவான்.''

தருமநாயகிக்குப் பகீர் என்றது. வயிறு கொதித்தது. ''இப்படிக் கல்லைத் தூக்கிப்போட்டுப்பிட்டீங்களே பாவி சனங்களா!'' என்று அலறிவிட்டு, வீட்டுக்குத் திரும்பி வந்தாள். அண்ணனிடம் சொன்னாள். அம்மாவிடம் சொன்னாள். அப்பாவிடம் சொன்னாள். மூன்று பேரும் புறப்பட்டுப் போய் ஐயாறு வீட்டில் போய்க் கத்தினார்கள். அவளும் பதிலுக்குக் கத்தினாள். முதலில் ஒருவருக்கொருவர் பேசுவதைக் கேட்டுக்கொண்டு பதில் கொடுத்தார்கள். கடைசியில் நீ அப்பேர்ப்பட்டவள், இப்பேர்ப்பட்டவள் என்று மாறிமாறித் திட்டிக் கொண்டார்கள். சந்தை இரைச்சலாக வெறும் திட்டு மட்டுந்தான் ஊராருக்குக் கேட்டது.



ஊருக்குப் பெரிய சீதாராம பிள்ளை பஞ்சாயத்துப் பண்ணை நடுவில் புகுந்தார். வெகு நேரம் கேட்டுவிட்டுக் கடைசியில் திருக்குடந்தைச் சாமியாரை அழைத்துவந்து உண்மையைக் கேட்டு விடுவது என்று இரு சாராரும் ஒப்புக் கொண்டார்கள். அவரிடம் இரண்டு கட்சிகளுக்கும் பக்தியும் மரியாதையும் உண்டு. அவர் சொன்ன தீர்ப்பை ஏற்றுக் கொள்ளும் அளவுக்கு நம்பிக்கை இருந்தது.

திருக்குடந்தைச் சாமியார் வந்தார். விசேஷப் பூஜைக்குச் சித்தம் செய்தார்கள். அதெல்லாம் தேவையில்லை என்றார் சாமி.

அவர் பூஜை செய்யவில்லை. ஆருடம் பார்க்கவில்லை. ஒன்றுமே செய்யவில்லை. ஐயாறுவைப் பார்த்துக் கொண்டே இருந்தார். கவனித்துக்கொண்டே இருந்தார். கண்காணிக்கவில்லை. சும்மா பார்த்தார். அவன் போன இடங்களுக்கெல்லாம் போனார்.

அவர் வந்த மறுநாளே ஐயாறு துவாதசிக் கட்டளை சாப்பிடுவதற்காக நாச்சியார்கோயில் போனான். கூடவே போனார் சாமி. திரும்பும்போது கூடவே திரும்பினார். வடை 'பாயாசம்' இருக்கிற சாப்பாடு எங்கே எங்கே என்று கழுகுக்கு மூக்கில் வேர்க்கிறாப்போல் கண்டு கொண்டு போய் வந்து கொண்டிருந்தான் ஐயாறு. அப்படி எத்தனை மைல் போனாலும், வெயிலோ மழையோ, சாப்பிட்ட கையோடு ஊருக்குத் திரும்பி விடுவான். கூட நடக்காமல் ஓடி வருகிற சாமியாரைப் பார்த்து இரக்கப்பட்டு, ''சாமி, கொஞ்சம் இந்த ஆல நிழல்லே குந்துங்க. சித்தெக் களிச்சுப் போவம்'' என்பான்.

வீட்டுக்கு வந்தவுடனே பசு மாட்டைப் போய்க் குளத்தில் குளிப்பாட்டி வருவான். அதை வீட்டில் கட்டி விட்டுப் புல்பிடுங்கி வருவான். அது முடிந்ததும் விர்ரென்று நடந்து பத்து வயல்கடையைத் தாண்டி ஒரு வயலில் உட்கார்ந்து களை பிடுங்குவான். ஐயாறு வீட்டுக்குப் பன்னிரண்டுமா நிலம் இருந்தது. அதற்குத்தான் இந்தப் பணி

விடை நடந்தது. வரப்பில் போகும்போது வறண்ட சாணம் ஏதாவது கண்டால் விடமாட்டான். அதை எடுத்துக் கொண்டுபோய்த் தன் வயலில் போடுவான். அப்படிக் கைகொள்ளாமல் கிடைத்துவிட்டால் அரை வேட்டித் தலைப்பில் போட்டுக் கொண்டுபோய்ப் போடுவான். அதுவும் கொள்ளாமல் போகவே நாலைந்து சாண வறளையைச் சாமியாரிடம் நீட்டி, ''சாமி, இதைக் கொஞ்சம் எடுத்துவர முடியுமா?'' என்று கேட்பான். சாமி அதை வாங்கிக் கொண்டு உதவி செய்தார்.

சிறிது நேரம் வயலைப் பார்த்து நின்றான் ஐயாறு. ''இந்த வருசம் எலிவெட்டு சாய்ஸ்தியாயிருக்கு. இந்த எலி எல்லாம் செத்தால்ல தேவலாம்? சாமி ஒரு மந்திரம் பண்ணுங்களேன். இந்த எலிங்க சாவ'' என்றான்.

சாப்பிடப் போகிற இடங்களில் லட்டு, வாழைப்பழம் என்று ஏதாவது கொடுத்தால் அதைக் கையில் வாங்கிக் கொண்டு பத்திரமாக வீட்டுக்குக் கொண்டு வருவான். நேராக மனைவி வீட்டில் நுழைந்து அவற்றை ஒரு முற்றத்தில் இருந்த பெஞ்சியின்மீது வைத்துவிட்டு வருவான்.

நவராத்திரி ஆரம்ப நாளன்று திண்ணையில் உட்கார்ந்திருந்தார்கள், ஐயாறுவும் சாமியும். குழந்தைகள் அங்கும் இங்கும் ஓடிக்கொண்டிருந்தன. ஐயாறுவின் மகன் நாலைந்து பையன்களுடன் விளையாடிக் கொண்டிருந்தான்.

''ஏலெ உண்டி'' என்று கூப்பிட்டான் ஐயாறு. அவன் ஓடி வந்தான். இறப்பில் செருகியிருந்த ஒரு பொட்டலத்தை எடுத்து அவன் கையில் கொடுத்துத் தின்னச் சொன்னான். தின்னுகிறவரையில் பார்த்துக்கொண்டே இருந்தான். அவன் தலையையும் முகத்தையும் தடவிக் கொடுத்தான்.

''உன் கையைச் சுட! உனக்கு வெக்கம், சொரணை ஏதாவது இருக்காடா நிர்மூடமே!'' என்று வயிற்றில் லேசாகப் போட்டுக்கொண்டு, ''ஏ மூதேவி, இனிமே இங்கே வந்தா உன் காலை ஒடிச்சுப் போட்டிருவேன்'' என்று குழந்தையை விரட்டினாள், ஐயாறுவின் தாய். அவன்



அவளைப் பார்த்து ஸ-ஸ- என்று வாய்க்குள் முனகியவாறு, வழக்கம்போல் புன்னகை பூத்தான். சாமிக்கு ஒன்றும் புரியவில்லை.

விஜயதசமிக்கு இன்னும் மூன்றே நாட்கள் இருந்தன. சாமி இன்னும் மத்தியஸ்தம் செய்யவில்லை.

ஊர் முழுவதும் உளவு விசாரித்தார். பையன்களைக் கண்டார். வம்பர்களைக் கண்டு பேச்சுக் கொடுத்தார். பாட்டிகளைக் கண்டார். அவர் மனம் கலக்கம் தெளியவில்லை. இரண்டு கட்சிகளுக்கும் பலம் இருந்தது.

''என்னமோ நாம கண்ணாலியா கண்டோம்? ஊரெல்லாம் சொல்லிக்குது. சும்மாவாவது சொல்லுக் கிளம்புமா? இதெல்லாம் கண்ணுக்கு முன்னாலியா நடக்கும்?'' என்று ஒரு கட்சி விஷமம் பண்ணிற்று.

''பேசப்படாது. நாக்கு அளுகிப் போயிரும்'' என்று இன்னொரு கட்சி.

பேசாமல் வந்து படுத்தார் சாமி. புரட்டாசி வெயில் வெள்ளையும் கானலுமாகக் கண்ணைக் குத்திற்று. முகத்தில் துணியைப் போட்டுக்கொண்டு தூங்கினார் சாமி.

தூங்கி எழுந்தபோது ஐயாறுவைக் காணவில்லை. முன் அறையில் இல்லை. கொல்லையில் இல்லை. குளத்திலும் இல்லை. நேராக வரப்பில் நடந்து பத்து வயல்கடையைத் தாண்டி வயலுக்குப் போனார். ஐயாறு அங்கே வயல் சேற்றில் நின்றுகொண்டிருந்தான். தன் வயலில் இல்லை; பக்கத்து வயலில். பக்கத்து வயலில் அமுங்கிக் கிடந்த பசுந்தழைகளைக் கைகையாக எடுத்துத் தன் வயலில் எறிந்து கொண்டிருந்தான்.

''என்ன ஐயாறு?'' என்றார் சாமி.

''சாமியா, வாங்க. தூக்கம் முடிஞ்சு போச்சா?''

''என்னா செஞ்சிட்டிருக்கே?''

''எருவடிக்கிறேன். தெரியலியா?''

''இப்படித்தான் எருவடிக்கிறதா? பக்கத்து வயல்லெ இருக்கிற கொளிஞ்சி, ஆத்தி எல்லாம் இந்த வயல்லெ மாத்தி!''

''மாத்தினா என்ன? உடையாருக்குத்தான் முப்பது வேலியிருக்கு. புள்ளை குட்டி கிடையாது. வெளஞ்சது போருமே. அதை வாங்கிக்கிட்டுக் கப்பல்லெ நீட்டினான் கம்பி, அநியாயக்காரப் பிச்சாண்டி என்று ஆனந்தக் களிப்பில் முடித்தான் ஐயாறு. சிரித்தான்.

''அப்பன்னா இது உன் வயல் இல்லியா?''

''அட போ சாமி. நீ போய்த் தூங்கு. இங்க வந்து வேலையிலே ஒயித்திரியம் பண்ணாதே.''

''சிவத்துக்கு இன்னும் என்னுது என்னுதுங்கற மமகாரம் விட்டு நீங்கலியா? உன் பசுமாட்டைக் கொண்டு குளிப்பாட்றே! வரப்பிலே கிடைக்கிற சாணத்தை அள்ளிக் கொண்ணாந்து உன் வயல்லெ போட்டுக்கறே?''

''நீ போறியா இல்லியா சாமி இப்ப?'' என்று சொல்லிக் கொண்டே விறுவிறுவென்று வரப்பு ஏறி எதிர்மூலையில் இறங்கி அங்கே இருக்கிற உடையார் வயல் பசுந்தாளைத் தூக்கித் தன் வயலில் எறியத் தொடங்கினான்.

சாமி சிறிது நின்று ஞானதிருட்டியால் பார்ப்பது போலப் பார்த்தார். விறுவிறுவென்று திரும்பினார். ஊருக்குள் வந்து ஐயாறுவின் அம்மா, அண்ணனையும், தருமநாயகியின் தாய் தகப்பனையும் வரச் சொன்னார்.

''ஐயாறுக்குப் பிறந்த மகன்தாம்மா அது. சந்தேகப் பேய் நரகத்திலே நம்பளைக் கொண்டுபோய் அழுத்திப் பிடும், தாயே. சொன்னதெல்லாம் பாவம்னு ஆண்டவனை வேண்டிக்குங்க. நான் போய்வரேன்'' என்றார்.

தருமநாயகி அவர் காலில் விழுந்து கும்பிட்டாள்.



திடீரென்று வந்த இந்த உண்மையை மனசிலே அப்படியே பதித்துக்கொள்ள முடியாமல், ''சாமி சொல்லிடிச்சு. அப்புறம் என்ன?'' என்று இழுத்தாற்போல ஐயாறுவின் தாயும் விழுந்து கும்பிட்டாள்.

''நல்லா ஆராயணும்னுதான் இத்தினி நாள் தங்கினேன். இன்னும் சஞ்சிதம் பாக்கியிருக்கு. உடம்பு இருக்கிற வரைக்கும் மமகாரம் இருக்கும். ஞானப்பித்து போலியா உறவு கொண்டாடாது. போங்க, படிக்க வக்கிற காரியத்தைக் கவனிங்க'' என்று சொல்லி விடைபெற்றார் சாமியார்.

மறுநாளைக்கு மறுநாள் விஜயதசமியன்று ஐயாறுவின் மடியில் உட்கார்ந்து அரிநமோத்து சொன்னான் ஐயாறுவின் மகன்.

---

தேவநேயப் பாவாணர்
மத்திய நூலகம்
735, அண்ணா சாலை,
சென்னை-600 002
CHN
CHN339066

# நாய்க்கர் திருப்பணி

ஜன்னல் வழியாக ஒரு காட்சி.

பிள்ளையார் கோயில் வாசலில் ஒரு விறகு வண்டி. வழிய வழிய விறகுக் கட்டுகள் அடுக்கிய வண்டி. வண்டிக்காரன் இடத்தில் இல்லை. மாடுகளை அவிழ்க்கவும் இல்லை. இரண்டு மூன்று விறகுக் கட்டுகள் தெருவில் கிடக்கின்றன. அவற்றின் மீது குப்புற விழுந்து அம்மி அழுத்திக் கொண்டிருக்கிறார் நாய்க்கர். சாட்டைக் குச்சியை அக்குளில் அடக்கிய வண்ணம் விறகுக் கட்டுகளை நாய்க்கர் பிடியிலிருந்து இழுக்க முக்கிக் கொண்டிருக்கிறான் வண்டிக்காரன். அவனோடு வந்திருந்த கூட்டாளியும் அவனுக்குக் கை கொடுத்து உதவுகிறான்.

"ஒரு சிரா உருவிட முடியுமா உங்களாலே?" என்றார் நாய்க்கர் சிரித்துக்கொண்டே.

"பார்த்துப்பிடறோம்."

"விடாதே நாய்க்கரே" என்று வண்டிப் பேட்டையிலிருந்து ஒரு குரல் வந்தது. பிள்ளையார் கோயிலுக்கு எதிரே, அதாவது வீதிக்கு எதிர்ப்பக்கத்தில் ஒரு சிவன் கோயில். சிவன் கோயிலுக்குப் பக்கத்தில் ஒரு வண்டிப் பேட்டை; பத்து ஒற்றை மாட்டு வாடகை வண்டிகள் நிற்கும் இடம். இரண்டு பூட்டியும் நாலு அவிழ்த்தும் போட்டுக்கிடந்தன. அவிழ்த்துப் போட்ட வண்டிக்காரன் தான் நாய்க்கரை உற்சாகப் படுத்தியவன்.



"நம்ம நாய்க்கரா விட்டுப்பிடற ஆளு?" என்று இன்னொரு வண்டிக்காரன் சிரித்தான்.

"விடாதே, நாய்க்கரே."

031,3JAN,S N7;3

"நாய்க்கரே, காவேரித் தண்ணியோட, கொள்ளிடத்துத் தண்ணி வம்புக்கு நிற்கிறதாவது! விடாதீங்க."

"நாய்க்கருக்கு உற்சாகம் தாங்கவில்லை.

"எலெ, வீணா அவிஞ்சு போகாதீங்க, இது சாமி காரியம்."

339066/4101009

"நாங்க இல்லேன்னு சொல்லலியே. ஒரு கட்டு எடுத்துக்குங்க. வேண்டாம்கலே."

"புளியஞ்சிரா, கருகஞ்சிரான்னா ஒரு கட்டு. இந்த முருங்கக் குச்சியை எட்டுக் கட்டு எடுக்காம, மூணு எடுத்தேன் பாரு, அது என் தப்புத்தாண்டா. அட! இழுத்துப் பிடுவீங்களா? பாக்கிறீங்களா இப்ப? என்று விறகை அம்மிக் கொண்டே காலால் ஓர் எம்பு எம்பி முதுகை ஒரு திருப்புத் திருப்பினார் நாய்க்கர். அவ்வளவுதான். இரண்டு பேரும் ஏழெட்டு அடி தள்ளிப்போய் விழுந்தார்கள். விழவில்லை, விழாமல் சமாளித்துக் கொண்டார்கள்.

கீழே விழுந்த சாட்டையை எடுத்துக்கொண்டு, "ம்! அவ்வளவுதான் தெரியுமா?" என்று கையாலாகாத வீறாப்புடன் கத்தினான் ஒருவன்.

"நீதான் தெரிஞ்சுக்கிட்டியே இப்ப!" என்று மூன்று கட்டுக்களையும் தூக்கிப் பிள்ளையார் கோயில் திண்ணையில் எறிந்தார் அவர்.

வண்டிக்காரர்கள் மறுபடியும் சிரித்தார்கள். பிள்ளையார் கோயிலின் மறு திண்ணையில் ஓமப்பொடி, கொத்துக் கடலைச் சுண்டல், காரா பூந்தி விற்கிற முத்துவையர்

"நாய்க்கரே, ஜாக்கிரதை. கொள்ளிடத்துத் தண்ணி முளிக்குது பாருங்க. சுபால்னு விறகு மறஞ்சாலும் மறஞ்சிப் பிடும்" என்றார்.

"ம், கையை வக்யட்டும். பார்த்துக்கலாம். எலே போங்கடா. புள்ளையாரு பத்து மடங்காக் குடுப்பாரு. மூக்காலே அளுவாம போங்க."

வண்டிக்காரர்கள் போகவில்லை. நின்று கொண்டே இருந்தார்கள்.

சிவன் கோயில் திண்ணையில் உட்கார்ந்திருந்த இரண்டு பண்டாரங்களில் ஒருவன், "ஏன்யா நிக்கிறே! போலீஸ் டேஸன்லே போய்ப் புகார் குடேன்" என்று உண்மையாகச் சொல்வது போலச் சொன்னான்.

"சும்மாப் புகார் பண்ணாதே. சாமிக்கு மூணு கட்டுக் கேட்டாங்க. ஒரு கட்டுப் புண்ணியம் எனக்குப் போதும் னேன். நாய்க்கரு அடிக்காத குறையா மூணு கட்டுப் புண்ணியத்தை என் தலைமேலே கட்டிப் பிட்டாருன்னு சொல்லு. இப்படிக் கூறுகெட்ட ஜன்மமா இருக்கலா மாய்யா? புள்ளையார் போணிக்கு ஒரு கட்டுப் போட இப்படி அளுதா, உன் வியாபாரம் உருப்பட்டாப்போலத் தான், போ" என்று கூட்டாளிப் பண்டாரம் சாபமா நையாண்டியா என்று தெரியாமல் கலந்து கட்டியாக உதிர்த்து வைத்தான்.

கொள்ளிடக் காட்டுக்காரர்கள் இப்படி நகரக்காட்டில் மாட்டிக்கொண்டு, மூக்கு விடைக்கப் பார்த்தார்கள். "நல்ல நியாயம்டா இது" என்றான் ஒருவன்.

"நாய்க்கரே, இதுதான் கடைசித் தடவை. நாளை யிலேர்ந்து இதெல்லாம் நடக்காது, சொல்லிப்பிட்டேன்" என்று சாட்டைக்காரன் வண்டியில் ஏறித் தலைக் கயிற் றைப் பிடித்தான். கூட்டாளி பின் தொடர வண்டி புறப் பட்டது.



"இந்த விறகெல்லாம் அப்படியே தங்கமா மாறிடும்யா. அப்படியே தங்கமா—தங்கமாகா—ஆம்மாம்!" என்று இத்தனை நேரமாகக் கேட்காத குரல் ஒன்று வந்தது.

"ஆமாண்டா, பாண்டிய மகாராஜாவே சொல்லிப் பிட்டாரு" என்று தேர் முட்டிக்கருகில் வைக்கோலைப் போட்டு அதன்மேல் வண்டிப் பாயைப் போட்டு படுத்தி ருந்த பாண்டியனைப் பார்த்தார்கள் எல்லோரும். பாண்டி யன் புன்சிரிப்புச் சிரித்தான். கண்ணை மூடினான்; மறு படியும் சிரித்தான். அவனுக்கு வேளைபோது கிடையாது. வார்னீஷ் பட்டை எதுவும் தள்ளுபடி இல்லை. அது இல் லாவிட்டால் கை காலெல்லாம் சுவாதீனம் இல்லாமல் நடுக்கல் எடுக்கும் நிலையை எட்டியவன்.

நாய்க்கர் பின்னால் கையைக் கட்டி, வெற்றியுடன் பார்த்தார். போலீஸ மெரட்டினா ரெண்டு ரூபாயைக் கொடுத்தாலும் கொடுப்பானுவ. இதுக்கு எவ்வளவு மாலாசு பண்றானுக பார்த்திங்களா? என்று பொதுவாக எல்லாரையும் பார்த்துச் சொன்னார். திரும்பி அருகில் நின்ற என்னையும் பார்த்தார். "பார்த்துக் கிட்டீல்ல தம்பி!" என்றார்.

நான் என்ன சொல்வது? வெறுமே புன்சிரிப்புச் சிரித் தேன்.

ஒண்டியாக நின்று நாலு ஆட்களை அடிக்கக் கூடிய அவர் தேகக்கட்டையும் துணிச்சலையும் பார்க்க எனக்கு எப்போதுமே பரவசமாக இருக்கும்; ஓர் எலும்பு, ஒரு சுருக்கம் தெரியாத மேனி. தேர்ச் சக்கரம்போல வைரம் பாய்ந்த மார்பு. காலில் ஆடுசதை தெரியும்படியாக ஒரு நாலு முழம் கட்டிக்கொண்டிருக்கிறார். அது ஆடாத சதை. கர்லாக் கட்டை மாதிரி இருக்கும். வெள்ளிப் பூண்போட்ட கைத்தடியைப் பிடிக்கிற அந்தக் கையைப் பார்க்கும் போது மணிக்கட்டில் அவ்வளவு வைரமும் ஆண்மையும் தெரியும். கிராப்பும் குடுமியும் இல்லாத தலையில் இரண்டு மாத முடிநரையும் கறுப்பும் கலந்து மண்டிக் கிடந் தன. முன் தலையில் மட்டும் 'ப'வைக் கவிழ்த்தாற்

போல அழகு க்ஷவரம் செய்து தென்கலை நாமம் போட்டிருந்தார் அவர்.

நாய்க்கர் சொந்தமாகவே விறகுக் கடை வைத்திருந்த காலம் உண்டு. நான் ஏழெட்டு வயசுப் பையனாக, தலையில் பின்னலும் வாயில் விரலும் கையில் தங்கக் காப்பும் காதில் பொன் தட்டையும் இடையில் மூலக்கச்சமுமாகப் பார்க்கப் போவேன். வியாபாரத்தைத அல்ல; கெரடிக் கூடத்தை. விறகுவாடியில் ஒரு சிற்றுச் சார்பில் விறகுகள் அடுக்கியிருக்கும். மிச்சம் இருந்த திறந்த வெளி முழுவதும் நாய்க்கர் இரண்டு 'ஹரிஸாண்டல் பாரு'ம் 'வர்ட்டிகல் பாரு'ம் நட்டிருந்தார். அவர் பையன் தாமு பாரில் வேர்க்க வேர்க்கச் சுற்றிக் கொண்டிருப்பான். திடீரென்று நாலு சுற்றுச் சுற்றிப் பத்தடி தூரத்தில் இருந்த பார் கம்பி மேலே நிற்பான். அவன் தவறிவிட்டால் பிடித்துக்கொள்வதற்காகத் தயாராக நிற்பார் நாய்க்கர். ஆனால் அவன் தவறி நான் பார்த்ததில்லை. நாய்க்கரையே உரித்து வைத்தாற் போலிருப்பான் அந்தப் பையன். நிறம் மட்டும் எண்ணெய் தடவின உளுந்து. அவன், அவன் தகப்பனார் இரண்டு பேரிடத்திலுமே எல்லையில்லாத பிரமை உண்டு எனக்கு. கிராப்புத் தலையே மருந்துக்குக்கூட இல்லாத அந்தக் காலத்தில் அவர்கள் இருவரும் கிராப்பு வைத்துக்கொண்டிருந்தார்கள். அது ஒரு காரணம். கம்பி மேல் நடப்பது, 'பார்' விட்டுப் 'பார்' தாண்டுவது, ஊஞ்சல் சங்கிலியை அறுப்பது இந்த அசகாய வேலையெல்லாம் அவர்கள் செய்தது இன்னொரு காரணம்.

விறகுவாடிச் சார்ப்பின்மீது ஓர் அதிசயமான கொடியை வளர்த்துப் படரவிட்டிருந்தார் நாய்க்கர். அதன் பூ நீலமாக ஒரு கிளியை அப்படியே அச்செடுத்தாற்போல் இருக்கும். நான் இன்னும் அந்தமாதிரிப் பூவைப் பார்க்கவில்லை. தாவர உலகத்தில் கிளி பூக்கிற கொடியை எங்கேயோ தேடிப் பிடித்துப் பயிர் செய்ய இவர்கள் எப்பேர்ப்பட்ட அதிசயப் பிறவிகளாக இருக்க வேண்டும்! இந்தப் பிரமிப்பில்தான் அவர் இட்ட வேலைகளையெல்லாம் நான்



செய்துகொண்டிருந்தேன். வாடிக்கைக்காரர்களுக்கு விறகெடுத்துத் தராசில் போடுவது, அவருக்கு வெற்றிலை பாக்கு வாங்கி வருகிறது, சில்லறை வாங்கிவருகிறது—எல்லாப் பணிவிடைகளும் செய்து கொண்டிருந்தேன். கடைசியில் ஒரு நாள் வாயைத் திறந்து வெட்கத்தைவிட்டு கேட்டும் விட்டேன்.

''நாய்க்கர் மாமா, எனக்கு 'பார்' விளையாடக் கத்துத் தரீங்களா?''

நாய்க்கருக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. புருவம் தலைமயிரைத் தொட்டுவிடுகிறாற்போல வியந்துகொண்டே, ''ஏண்டா தம்பி, உனக்கென்னாத்துக்குடா? உங்கப்பாரு தான் இந்த ஜில்லாவிலேயே பெரிய வக்கீலு. நீயும் கோட்டுப் போட்டுக்கிட்டு நாளைக்குப் பெரிய வக்கீலாயிடுவே. ஜோராக் குருதை வண்டியிலே கோர்ட்டுக்குப் போவே!'' என்றார்.

''இல்லே மாமா, நானும் பார் ஆடுவேன்.''

''இப்ப என்னமாடா முடியும்? அதுக்கு இன்னும் பெரிய புள்ளையாகணும். இப்ப என்ன வயசு உனக்கு?''

''ஏழு.''

''பின்னே! இன்னும் அஞ்சு வருசம் போகணும்.''

ஐந்து வருடம் நான் காத்திருக்கத் தயார். ஆனால் அதே வருடம் கிறிஸ்துமஸ் லீவுக்குப் பட்டணம் போய்விட்டு வந்து உடனே விறகு வாடிக்கு ஓடினேன். பூட்டிக் கிடந்தது. மூங்கில் கதவிடுக்கில் பார்த்தபோது, விறகு, பார் ஒன்றையும் காணவில்லை. யாரைக் கேட்பது என்று தெரியாமல் நாலைந்து நாள் விழித்துவிட்டு, கடைசியில் அவர் வீட்டைக் கண்டு பிடித்து அவர் மனைவியைக் கேட்டேன்.

''அவங்க ரெண்டு பேரும் கல்கத்தாவுக்குப் போயிட்டாங்க'' என்றாள் அவள்.

''கல்கத்தாவுக்கா? எதுக்கு?''

''சர்க்கேஸிலே சேந்துப்பிட்டாங்க.''

''சர்க்கேஸிலேயா?'' — பறிகொடுத்த ஏக்கத்தில், ''எப்ப வருவாங்க?'' என்று கேட்டேன்.

''எங்க வரது? ஸர்க்கேஸ் கம்பெனியோட ஊர் ஊராப் போவாங்க.''

நான் சமைந்துபோய் நின்றேன்.

விறகுக் கடைக்கு வேறு யாரோ முதலாளி வந்துவிட்டார். கிளிக்கொடி, பார்க்கம்பி இருந்த இடம் எல்லாம் விறகாக அடுக்கிக் கிடந்தது. நாய்க்கரும் தாமுவும் திரும்பியே வரமாட்டார்களா?

ஐந்தாறு வருடம் கழித்து ஒருநாள் மார்க்கெட்டுக்குள் நுழைந்ததும் நாய்க்கர் ஒரு சார்ப்பின் கீழ் ஸ்டூலைப் போட்டு உட்கார்ந்திருந்ததைக் கண்டு எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. அவருக்கு முன்னால் ஒரு மேஜை. மேஜைமீது காலணா, ஓர் அணா, இரண்டணா இப்படிச் சில்லறையாக அடுக்கியிருந்தது. ''இங்கே சில்லறை தரப்படும். ரூபாய்க்கு அரையணா வட்டம்'' என்று மேஜையின் பக்கவாட்டில் எழுதியிருந்தது.

''நமோ கணபதி எட்டணா...'' நாய்க்கர் ஏற்றிக் கொண்டே இருந்தார்.

''என்ன நாய்க்கரே, என்னைத் தெரியுதா?''

''அட! வா, தம்பி, அப்பா சௌக்யமா?''

''சௌக்யம், எப்ப வந்தீங்க?''

''நாலு நாளாச்சு. ஸர்க்கேஸ் விளையாட முடியலே. திரும்பிட்டேன், சில்லறைக் கடை வச்சுப்பிட்டேன்.''

''தாமு?''

''தாமு வரமாட்டான். அவன் ஸர்க்கேஸ்லியே ஒரு பொம்புளையைக் கண்ணாலம் பண்ணிக்கிட்டான்'' என்று



எங்கேயோ முகத்தைத் திருப்பிக்கொண்டார் நாய்க்கர். அவர் கண்களில் நீர் கட்டிவிட்டது.

''ஸர்க்கஸ் பொம்பிளையா?''

''ஆமாம் தம்பி, வெள்ளக்காரச்சி, அவன் இனிமே வரமாட்டான். அவன் அம்மா, தங்கச்சி எல்லாம் கறுப்பு. அவங்களைப் பார்க்கவே பிடிக்காது.''

''அவன் மட்டும் ரொம்பச் சேப்போ?''

''என்னை ஒன்னும் கேக்காதே தம்பி'' என்று குரல் உடைந்து அழுகையை அடக்கி மூக்கைச் சிந்திக் கொண்டார்.

ஆளே உடைந்து விட்டார். என்ன செய்வதென்று நிலைகொள்ளாமல் தொழிலை மாற்றிக் கொண்டே வந்தார். மாட்டுத் தரகு, கறிகாய்த் தரகு, இப்படி இரண்டு, மூன்று வருடகாலம் போயிற்று. நானும் படிப்பதற்காகப் பட்டணம் வந்துவிட்டேன். படிப்பு முடிந்து மீண்டும் ஊருக்கு வக்கீல் என்று போர்டைத் தொங்கவிட்ட பொழுது நாய்க்கர் இந்தத் திருப்பணியில் ஈடுபட்டிருந்தார்.

திருப்பணி நடந்த விதம் இதுதான். ஊருக்குள் வருகிற விறகு வண்டிகளிலிருந்து ஒன்றிரண்டாகக் கட்டைகளை உருவுவார். ஒரு சுமை சேர்ந்தவுடன் ஏலம் விட்டு விடுவார். அப்பை சப்பையான விலைக்கு விட்டு விடுகிறதுமில்லை. திருப்பணி திருப்பணி என்று கொத்திக் கொத்தி மார்க்கெட்டு விலைக்கு ஓர் அணா இரண்டு அணாத் தூக்கலாகத்தான் ஏலம் போகும். விறகு கொடுக்க, உடையவன் தகராறு செய்தால் இரைச்சல், அடிதடி, சாபம்.

''எலே, புள்ளையாருக்கா மாட்டேனு சொன்னே? பார்த்துகிட்டே இரு; பதினஞ்சு நாள்ளே கண்ணெல்லாம் பஞ்சடைஞ்சுப்பிடும்; புடலம்பூவாக் கொதறிப்பிடும்'' என்று கடைசியாக ஒரு பாணத்தைப் போட்டுக் கக்க

வைத்து விடுவார்; ஒன்றுக்கும் மசியாத ஆட்களோடு தெருவில் கட்டிப் புரள்வார். பொழுது விடிந்தால் நாலு சண்டையில்லாமல் அவர் திரும்புகிறதில்லை. உச்சி வேளையோடு இந்தத் திருப்பணி வேலை முடிந்துவிடும். சேர்ந்த விறகையெல்லாம் ஏலம் போட்டுக் காசை எடுத்துத் தபாலாபீஸ் சேமிப்பு நிதியில் போட்டு விட்டுப் போய் விடுவார். அப்புறம் மறுநாள் ஆளைக் காணமுடியாது.

மணி பதினொன்று இருக்கும். ஏலம் மும்முரமாகக் கேட்டது. கொள்ளிடத்துக் கட்டுகளோடு அப்புறம் சேர்ந்த பத்துப் பதினைந்து சிராயும் விலையாகிற புண்ணியத்தைப் பெற்றுவிட்டன. பிள்ளையார் கோயில் வாசலில் ஒரு சிறு கும்பல்.

''நமோ கணபதி எட்டணா. நமோ கணபதி பத்தணா'' என்று நாய்க்கர் ஏற்றிக்கொண்டேயிருந்தார்.

''ஒன்னேகால் ரூபாய். ஒரு தரம், ரெண்டு தரம்—"

''ஒரு ரூபா ஆறணா'' என்று ஒரு குரல்.

''உன் கிட்டக் காசு இருக்காடா'' என்றார் நாய்க்கர்; ''காசு இல்லாட்டி கேக்கப்படாது.''

''ஏன்...நான்...நான் வந்து...நான் வந்து பாருய்யா, என்னா நாயம் இரு? நாய்க்கர் பேசறதைக் கேட்டீங்களா?'' என்று ஆறணாவுக்கு உயர்த்தின பாண்டியன் கண் சிவக்க, தலை தொங்கவிட ஆட்சேபித்துக் கொண்டிருந்தான்.

''ஒன்னேகால் ரூபா'' என்றார் நாய்க்கர்.

''நான் ஆரணாக் கேட்டேனே.''

''நீ தரையிலே நின்னு கேட்டா ஒத்துப்பேன். வெள்ளைக் குதிரையிலல்ல ஏறிட்டிருக்கே! இரண்டு தரம் —மூணாம் தரம்—ஒன்னேகால் ரூபா.''

ஏலம் முடிந்துவிட்டது. நாய்க்கர் காசை வாங்கி மடியில் செருகினார். கட்டுகளை ஏற்றிவிட்டார்.



பாண்டியன் இடத்தைவிட்டு அசையவில்லை. வெறித்து அவரைப் பார்த்துக் கொண்டே நின்றான். கட்டுக்களை ஆள் தலையில் ஏற்றிவிட்டுக் கையைக் வீழே போட்டார் நாய்க்கர். ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து பாண்டியன் மடியைத் தட்டிவிட்டான். காசு உருண்டு தெருவில் ஓடிற்று. அவர் சிரித்துக் கொண்டே குனிந்து பொறுக்கப் போனார். ஓர் எம்பு எம்பி அவர் கழுத்தில் ஏறி உட்கார்ந்து விட்டான் பாண்டியன். இருவரும் கட்டிப் புரண்டார்கள்! சாக்கடை ஓரமாக உருண்டார்கள். வீதியோரம் ஓடுகிற சாக்கடை பெரிய சாக்கடை, அதற்குள் விழுந்து விட்டார் நாய்க்கர். விழுந்தவர் எழுந்து பாண்டியனையும் பிடித்து இழுத்தார். மறுகணம் அவனும் உள்ளே போய் விட்டான். மேலே கூட்டம் கூடிவிட்டது. வாயால் விலக்கினார்கள்.

சண்டை முடிந்து நாய்க்கர் மேலே ஏறும்போது அவருக்கு இன்னொரு கஷ்டம் காத்திருந்தது. மூன்று கட்டுக்களைப் பறிகொடுத்த கொள்ளிடக்காரர்கள் போலீஸ் ஸப்-இன்ஸ்பெக்டரையே அழைத்து வந்து விட்டார்கள். நாய்க்கரும் பாண்டியனும் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போக வேண்டியிருந்தது. நாலைந்து வண்டிக்காரர்களும் கூடப் போனார்கள்.

கேஸ் விபரீதமாக வளரும் போலிருந்தது. கலவரம் செய்வது, அமைதியைக் குலைப்பது, வழிப்பறி—இப்படி பல ஷராக்களில் அவர்மீது குற்றம் ஜோடனையாகிக் கொண்டிருந்ததாம். விழுந்தடித்து ஸ்டேஷனுக்கு ஓடினேன். ஸப்-இன்ஸ்பெக்டரோடு இங்கிலீஷில் பேசினேன். அப்பா ஐயா என்று மோவாய் கட்டையைப் பிடிக்காத குறையாகக் கெஞ்சினேன்.

''அது என்னாங்க, ஐயா சொல்றதும், சரிதானுங்களே. இஷ்டப்பட்டுக் கொடுத்தா வாங்கிக்கிறதா? ஆளை மறிச்சு அடிச்சு மெரட்டி வாங்கவாவது?'' என்று வண்டிக்காரர்கள் எல்லாருமே இடம் மாறிப் பேசினார்கள். வெப்புக் கட்டிடத்தின் ராசி!

''அவர் நன்னடத்தைக்கு நான் உத்தரவாதம்'' என்று சொல்றவரையில் இன்ஸ்பெக்டர் இரங்கவில்லை.

''சரி, இவ்வளவு தூரம் நீங்க கேட்கறதுக்கு நான் மரியாதை செய்யணும். ஒண்ணே ஒண்ணு சொல்லிப் பிடறேன். இந்த நாய்க்கர் இன்னமே இந்தப் பிள்ளையார் கோவில் பக்கமே, இந்த வீதிப் பக்கமே வரப்படாது. அவரு இருக்கிறது வடக்கு வீதி. மேல வீதி முச்சந்திப் பிள்ளையாருக்கும் அவருக்கும் என்ன?''

''அவர் இனிமே அந்தப் பக்கமே வராம நான் பாத்துக்கறேன்.''

''மேல வீதியிலே மறுபடியும் அவரைப் பார்த்தேனோ, கட்டாயமா அவரு பள்ளிக்கூடத்துக்குத்தான் போகணும்.''

''நான்தான் வரமாட்டார்ங்கறேனே.''

''கொளந்தே, உங்க வார்த்தை மூளியாயிரப்படாதுன்னுதான் நான் அந்தப் பக்கம் வரலே. ஆனா நீங்க செஞ்சிருக்கிற காரியம் என்னை மட்டும் தடுக்கலே. தெய்வக் காரியத்தையே தடுத்திருக்கு. திருப்பணியை யார் நடத்துவாங்க இனிமே?'' என்று நாலைந்து நாள் கழித்துக் கீழ வீதி பஸ் ஸ்டாண்டில் என்னைக் கண்ட நாய்க்கர் புகைவாய்ப் புகைந்தார். போலீஸ் பிடியிலிருந்து தப்புவித்ததற்கு நான் அவருக்குச் சமாதானம் சொல்ல வேண்டியிருந்தது. அவர் அதை ஏற்கவில்லை. விருவிருவென்று போய் விட்டார்.

வீதியில் உண்மையாகவே இப்போது அமைதி நிலவிற்று. விறகு வண்டிகள் பிள்ளையாரைக் கண்டு பயப்படவில்லை. கூச்சல் இல்லை. கை கலப்பு இல்லை. பத்து நாள் ஆயின. பதினைந்து நாளாயின. நாயக்கரை அந்தப் பக்கம் காணவில்லை.

இருபது நாளாயின. இருபத்தைந்து...ஒரு மாதம், அதுவும் தாண்டி எட்டு நாளாயின.

''ஐயா, கொளந்தையைத்தானே! எழுந்திருங்க. இங்கே வந்து பாருங்க இந்த அக்குறும்பை'' என்று அரைத்



தூக்கம் கால் தூக்கம் என்று படிப்படியாக விழிப்பை நோக்கித் தடுமாறிக் கொண்டிருந்த என்னை உலுப்பி விட்டது குரல்.

எதிரே பாண்டியன் நின்றான்.

''என்ன பாண்டி?''

''புள்ளையாரைக் காணும்.''

''என்னது?''

''ஆமாம். ஓடியாந்து பாருங்க.''

எழுந்து ஓடினேன். பிள்ளையாரையே காணவில்லை. அவர் இருந்த இடத்தில் பள்ளந்தான் இருந்தது. கதவு திறந்து கிடந்தது. வாசலில் ஒரே கூட்டம். ''பாவிப்பய திருப்பணி திருப்பணின்னு திருட்டுப் பணியாவே பண்ணிப் பிட்டானே?'' என்று பாண்டியன் அழுதான்.

நகையா, பணமா தேட? சாய வேட்டியை உடுத்திக் கொண்டு குந்திக்கிடந்த பிள்ளையார்! போலீஸும் மும்முரமாகக் கொஞ்சம் முண்டிப் பார்த்தது—அதாவது நாய்க்கர் வீடு பூட்டிக் கிடந்ததைப் பார்த்து. ஆனால் ஏழாம் நாள் வேறு பிள்ளையாரைச் சுதையில் செய்து வைத்துவிட்டார்கள். கல்லுப்பிள்ளையார் வரும் வரையில் இருக்கட்டும் என்று. மேளதாளமெல்லாம் கொட்டினார்கள். கொழுக்கட்டை செய்து வழங்கினார்கள்.

''வக்கீல் குழந்தைக்கு நமோ கணபதி கோபால நாய்க்கன் எழுதிக்கொண்டது. அபகாரம் பண்ணுகிற ஆத்மாக்களுக்கு உபகாரம் பண்ணினால்தான் புத்தி வரும். இது பெரியவர்கள் சொல்கிற நியாயமான சேதி. தாழுவுக்கு நம்ம வரகுண விநாயகரிடம் பக்தி ரொம்ப உண்டு. அவரைக் கும்பிட்டுத்தான் ஸர்க்கேஸில் சேர யோக்யதை அடைந்தான் அவன். எனக்கும் அவரிடம் அந்தப் பக்தி உண்டு. ஆகையினால்தான் அவன் வெள்ளைக்காரச்சியைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளக் கூடாது என்று நூறு

தேங்காய் சிதறுவதாக நேர்ந்து கொண்டேன். எப்போது அதை அவர் கேட்கவில்லையோ, அப்போது அவருக்குத் திருப்பணி செய்ய நாம் அப்படியாப்பட்ட சின்ன மனுஷன் இல்லை என்கிற உண்மையை ருசுப்படுத்த நினைத்தேன். அது நடைபெறவில்லை. தபாலாபீஸில் ஆயிரத்துச் சொச்ச ரூபாய் சேர்ந்திருந்தது. நான் பிள்ளையாரிடம் வருவதைப் போலீசு எப்படித் தடுக்க முடியும்? அதனால்தான் பிள்ளையாரையே தூக்கி வந்துவிட்டோம். இதை எப்படியடா கொண்டு போனாய் என்று குழந்தைக்கு மலைப்புத்தட்டும். அப்புறம் கோபாலநாய்க்கன் என்ற பேரில் ஒருத்தன் இருந்தால் என்ன? இல்லாவிட்டால் என்ன? ஒன்றரை முழுப் பிள்ளையாராக இருந்ததால் கள்ளிப்பெட்டியில் போட்டுக் கொண்டு வந்துவிட்டோம். மலாய் நாட்டு ஜனங்கள் ரொம்பவும் பிரியமா இருக்கிறார்கள். நம்மவங்கள் தானே?

''தாமு ஸர்க்கேஸ் கம்பெனியோடு எப்பவாவது நம்ம ஊர்க்கு வந்தாலும் வருவான். அவன் தகப்பனாருக்கு அப்படி ஒன்றும் வருத்தமில்லை என்று குழந்தை அவனைப் பார்த்தால் கட்டாயம் சொல்ல வேண்டும்.

''திருப்பணி அடுத்த வருடம் நடக்கும். நான் இப்போது பண்டாரவாடை இஸ்மாயில் ராவுத்தர் கம்பெனியில் வேலை பார்க்கின்றேன்—இப்படிக்கு, பிரிய மூன்ள, நமோ கணபதி கோபாலநாய்க்கன்.''

இந்தக் கடிதம் இரண்டு மாதம் கழித்து மலாயாவிலிருந்து வந்தது.

நாய்க்கரே, நான் ஆச்சரியமேபடவில்லை. மூன்று முழப் பிள்ளையாராக இருந்தாலும் நீர் கொண்டு போயிருப்பீரே!

---

# கோதாவரிக் குண்டு

பழைய பேப்பர்க்காரன் தராசு தெய்வீகக் கொல்லன் கைவேலை. ஆனையை வைத்தால் ஆறு பலம் காட்டும். ஆறுமாசத் தினசரிக் காகிதம் எந்த மூலை? கண்ணில் விளக்கெண்ணெய் போட்டுக் கொண்டு இப்பால் அப்பால் திரும்பாமல் தவம் புரிந்து முள்ளைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

''அம்மா இருக்காளோ?'' என்று அந்தச் சமயம் பார்த்துக் குரல் கேட்டது. நிமிர்ந்தேன். காதுக்குக் காது புன்னகை நீள அந்த அம்மாள் நின்று கொண்டிருந்தாள். பெயர் கங்காவோ, கோதாவரியோ—சரியாக ஞாபகம் இல்லை. ஏதோ நதியின் பெயர்தான். இடுப்பில் எதையோ இடுக்கி, அதை முந்தானையால் மறைத்துக் கொண்டிருந்தாள்.

''உள்ளே இருக்கா—போங்கோ'' என்றேன். கச்சம் ஆட, கூடத்தைக் கடந்து உள்ளே போனாள் அம்மாள்.

தராசு முள்ளைப் பார்த்தேன். தெய்வீக முள்ளாயிற்றே அது! அறுபது காகிதமானால் என்ன? அரைக் காகிதமானால் என்ன? நடுநிலை பிசகுமோ!—ஹூம் நமக்கென்று சொந்தமாகத் தராசு வைத்துக்கொள்ள எப்போது காலம் வரப்போகிறதோ, கை வரப்போகிறதோ, ஈசுவரா!

கடைசி வாக்கியத்தை வாயைவிட்டே சொல்லி விட்டேன். இப்படி ஏமாறுவதை எந்தப் புழுதான் சகிக்கும்?

''சாமி! இந்தத் தராசைப் பார்த்து இப்படிச் சொல்றீங்களே. எழுதின கார்டுக்கும் எழுதாத கார்டுக்கும் வித்தியாசம் காட்டும் சாமி. உங்களுக்குச் சந்தேகமா இருந்தால் கடையிலே போய் ஒரு தராசை வாங்கிட்டு வாங்க...என்னாத்துக்குப் பொல்லாப்பு?''

கடைக்குப் போக ஏது நேரம்? அதுவும் காலையில் ஒன்பதரை மணிக்கு வியாபாரத்தைக் கவனிப்பானா, தராசைக் கடன் கொடுப்பானா கடைக்காரன்? இன்னும் அரைமணிகூட இல்லை, ஆபீசுக்குக் கிளம்ப. குளித்துச் சாப்பிட்டாக வேண்டும்! ஏதாவது காசைக் கண்ணால் பார்த்தால் போதும் போலிருக்கிறது. இல்லாவிட்டால் ஞாயிற்றுக்கிழமையை விட்டு 'வீடு போ போ, ஆபீஸ் வா வா' என்கிற வியாழக்கிழமையாகப் பார்த்துப் பழைய காகிதம் விற்க உட்காருவானேன்! இருள் இரண்டு மூன்று உருவத்தில் பயமுறுத்துகிறது. மின்சாரப் பில் கட்டும் கடைசித் தேதி கடந்து இரண்டு மாதங்களாகிவிட்டன. இன்று கட்டாவிட்டால் இருள் கவிந்துவிடும். 'தக் தக் தக்' கென்று குதித்து, ஏற்றின ஒரு நிமிஷத்தில் அணைந்து விடுகிற அரிக்கேன் விளக்கோடு போராட முடியாது. பெண் முகத்தைத் தூக்கிக்கொண்டு உள்ளே உட்கார்ந்திருக்கிறாள். பள்ளிக்கூடம் போக மாட்டாளாம். ஏதோ சாமியாருக்கு எட்டணாக் கொடுக்கவேண்டுமாம். இது வாரப் பிடுங்கல், கொடுக்கிற சம்பளம் பற்றாதென்று, போன மகான்களின் பேரையெல்லாம் சொல்லிக்கொண்டு வரி வைக்கிற கான்வென்ட் பள்ளிக் கூடத்துப் பிடுங்கல். எட்டணா இல்லாமல் இன்று அவள் அமைதியைக் காண முடியாது.

ஆறு மாசத் தினசரி தாள்கள், வாரப் பத்திரிகைகள் எல்லாமாகப்போட்டு ஆறரை ரூபாய் வந்தது.

''எத்தனை கொடுத்தான்?'' என்று பேப்பர்க்காரன் போன கையோடு வந்தாள் கௌரி.

''ஆறரை ரூபாய்.''



''ஆறுமாசப் பேப்பருக்கா?''

''இப்ப ஏன் பதர்றே! அவன் இருக்கிற போதுன்னா பதறியிருக்கணும்.''

''நான் உள்ளே பேசிண்டிருந்தேன்!''

''அப்ப இங்கே வந்து பேசாதே.''

''பேசலெ, எனக்கு இரண்டு ரூபாய் வேணும்.''

''இரண்டு ரூபாயா! என்னத்துக்கு?''

''வேணும்.''

''எலெக்ட்ரிக் பில் மூணே கால் ரூபாய்; உன் பொண்ணுக்கு எட்டணா. உனக்கு இரண்டு ருவா. மீதி முக்கால் ரூபா வச்சிண்டு நான் என்ன பண்ணுவேன்? டிபன், வெத்திலை, சீவல், பஸ்ஸு!''

''டிபன் கட்டிவைச்சிருக்கேன்—மிளகு அவல் பண்ணி.''

''காப்பி?''

''தர்மாஸ் பிளாஸ்கிலே போட்டு வைச்சிருக்கேன்.''

''வெத்திலை பாக்கு?''

''அதுவும் மடிச்சு வைச்சிருக்கேன்.''

''சரி, வியாழன், வெள்ளி, சனி, மூன்று நாட்கள் பஸ்ஸுக்கு ஆச்சு.. திங்கட்கிழமை என்ன பண்றது?''

''அதுக்கு இப்ப என்ன? அப்புறம் பார்த்துக்கலாம்.''

''எப்படி பார்த்துக்கிறது?''

''பாட்டுக்கார சுப்பிரமண்யய்யரைப் போய்க் கேட்கிறது.''

ஸப்த நாடியும் ஒடுங்கிவிட்டது எனக்கு. என் வாயை மூடி முத்திரையிடப் பாட்டுக்கார சுப்பிரமண்யய்யரின் பெயரை கௌரி உபயோகிக்கிற வழக்கம் இரண்டு வருஷங்களாக வலுத்து வருகிறது. பாட்டுக்கார சுப்பிரமண்யய்யர் தொள்ளாயிரத்து ஐம்பத்தாறாம் வருஷம் பத்து ரூபாய்

நாளைக்குக் கொடுப்பதாக வாங்கிப்போனார். நாளைக்கு என்று மனச்சுவரில் செதுக்கிவிட்டுப் போய்விட்டார். கடன் கேட்காது போச்சு என்பார்களே என்று தொள்ளாயிரத்து ஐம்பத்தொன்பதாம் வருஷத்திலிருந்து அவரைக் கேட்கத் தொடங்கினேன். ஓடி ஒளிந்தார், குழைந்தார், கெஞ்சினார். காசை மட்டும் இளக்கின பாடில்லை.

கடைசியில் ஒருநாள் வந்தார். ''தலை வாசல்'' ஆபிஸில் மானேஜர் உங்களுக்கு வேண்டியவாளாமே. என் பையன் படிப்பை முடிச்சுட்டான். ஒரு வருஷமாச்சு. நூறு மனுப் போட்டாச்சு. வேலை கிடைக்கலே...நீங்க அவர்களை பார்த்து...'' என்று கெஞ்சினார். 'சரி' என்றேன். இப்போது நான் அவரைக் கண்டு ஓடி ஒளிந்து கொண்டிருக்கிறேன். ''அந்தத் தலைவாசல் மானேஜரை...'' என்று என் தலையைக் கண்டதுமே ஆரம்பித்துவிடுகிறார். அவருடைய குடுமியையும், பச்சை சைக்கிளையும் ஒரு மைலுக்கு அப்பாலே அடையாளம் கண்டு என் கால் மிக அருகேயுள்ள சந்தில் பதுங்கிவிடுகிறது. ''அந்த...தலை வாசல் மானேஜரை'' என்று மனசில் குரல் எழுந்து விரட்டுகிறது.

''எதுக்கு இரண்டு ரூபாய் உனக்கு?''

''கங்காபாய் கேட்கிறா...இப்படி வாங்கோ'' என்று குரலை உயர்த்தினாள் கௌரி.

கங்காபாய் வந்தாள். இரட்டை நாடி சரீரம். தலையில் பாதி நரை. இடையில் கச்சம்போட்ட புடவை. கழுத்தில் கருக மணி. தலையை வாரிப் பின்னிப் பின்னால் சக்கரக் கட்டு கட்டியிருந்தது. வயது ஐம்பது இருக்கும். முந்தானையிலிருந்து ஒரு வெண்கலப் பானையை எடுத்து முன்னால் வைத்தாள்.

''இந்தக் கோதாவரிக் குண்டை வச்சிண்டு இரண்டு ரூபாய் கொடுக்கச் சொல்றா'' என்றாள் கௌரி.

கோதாவரிக் குண்டு பெரிய குண்டு. பட்டணம் படியால் இரண்டு படி அரிசி வடிக்கலாம். புளி போட்டுத் தேய்த்துப் பளபளத்தது.



''நீங்கதானே இரண்டு மாசம் முன்னால் ஒரு ரூபாய் வாங்கிண்டு போனது ஒரு வெங்கலப் பானையை வச்சு?''

''ஆமா. அது நாச்சார் கோயில் போனி. ஒரு படி பானை!''

''அதையே இன்னும் மீட்டுக்கலையே!''

''ஒரு மாசத்திலே இது, அது இரண்டையும் மீட்டுக்கறேன். இப்ப எனக்கு ரொம்ப முடை.''

நான் அரைமணி முன்னால்தான் அந்த நாச்சியார் கோயில் பானையைப் பார்த்தேன். சமையல் உள் அலமாரிக்கு மேல் மாம்பலகைப் பரண்மீது அது கவிழ்த்து வைக்கப்பட்டிருந்தது. இரண்டு மாசமாகத் தினமும் அதைப் பார்த்து வருகிறேன். பிள்ளையார் சதுர்த்தியன்று இரண்டு மூன்று விருந்தினர்கள் வந்தபோது கௌரி அதை எடுத்து உலைவைத்த ஞாபகம்கூட வருகிறது.

''இரண்டு மாசமாச்சு. ஒரு ரூபாயைக் கொடுத்துச் சின்னப் பானையை மீட்க முடியலே. இது வேறேயா?''

''நீங்க ஒன்றும் வித்தியாசமாக நெனச்சுக்கப்படாது' இன்னும் பதினைஞ்சு நாளிலே நான் வந்து இரண்டையும் மீட்டுண்டு போகலேன்னா, ஏன்னு கேளுங்கோ.''

''வாண்டாம்மா...நீங்க பேசாமல் எடுத்துண்டு போங்கோ...இங்கேயே முடை கழுத்தைப் பிடிக்கிறது; ஒண்ணும் சௌகரியப்படாது.''

''நீங்க அப்படிச் சொல்லப்படாது.''

''சொல்லப்படாதுன்னா! நீங்களே தானே பார்த்துண்டிருந்தேள், பேப்பர்க்காரன் கிட்ட போட்டுட்டு வாங்கினதை'' என்று குளிப்பதற்காகக் கொல்லைப் பக்கம் நடையைக் கட்டிவிட்டேன். ஒரு நிமிஷத்துக்குள் அங்கே வந்து சேர்ந்துவிட்டாள் கௌரி.

''இரண்டு ரூபாய் இல்லேன்னா ஒரு ரூபாயாவது கொடுங்கோங்கறா...'' என்று இழுத்தாள்.

''ரூபாயும் கிடையாது; பீப்பாவும் கிடையாது.''

''ரொம்பக் கெஞ்சறான்னா.''

''நான் யார்கிட்டே கெஞ்சறதுன்னேன்...'' என்று உருட்டி விழித்தேன். ''நாலு மணிக்கு ஒரு டீ சாப்பிடு வோம்னா வெறும் பையிலே கையைவிட்டு ஆட்டவேண்டியிருக்கு. ஒரு ரூபாய் கடன் கொடுக்கிறாளாம். இப்ப ஒன்றும் கேட்காதே. நாழியாச்சி குளிக்கணும்.''

குளித்துவிட்டு வந்த பிறகும் கங்காபாய் கூடத்திலேயே நின்று கொண்டிருந்ததைப் பார்த்தேன்.

முகத்தைச் சிணுங்கிக்கொண்டே அடுக்களைக்குள் திரும்பி விட்டேன்.

''என்ன?''

''ஏன் இப்படி எரிஞ்சு விழறும்? இல்லாமதானே வந்து கேக்கறா.''

''இங்கேயே இல்லே.''

''ம்க்கும், இல்லே. அவ என்ன வெறுமே கேட்கிறாளா? ஈடு வச்சுத்தானே கேக்கறா. இன்னிக்குக் கடைத்தெருவுக்கு எடுத்திண்டுபோய்க் கேட்டால் முப்பது ரூபா விலை சொல்லுவான் அந்தக் கோதாவரிக் குண்டுக்கு. அதை வைச்சு ஒரு ரூபா கேக்கறான்னா ஒருத்திக்குத் தலை போகிற முடையாகத்தானே இருக்கும்.''

''ஆமாமா.''

''உங்களுக்கு இரக்கமே கிடையாதுன்னா பாட்டுக்கார சுப்ரமண்யய்யர்னா பத்தும் இருபதுமாகத் தூக்கிக் கொடுத்துட்டு அலையலாம். தேமேன்னு பாவம், ஏழை மூணு வீசை வெங்கலத்தை வச்சு ஒரு ரூபாய் கேக்கறது...அதுக்கு இவ்வளவு மாலாசு பண்ணத் தெரியறது.''

பளிச்சென்று முடிவுக்கு வந்துவிட்டேன். ''இத பாரு, வேணும்னா ஒரு ரூபா வாங்கிண்டு போகச் சொல்லு. அதையும் பத்து நாளிலே திருப்பிக் கொடுத்திடணும்'' என்று ரூபாயைக் கொடுத்தேன்.



கூடத்துக்குப் போனவள் இரண்டு நிமிஷங்கள் கழித்துத் திரும்பி வந்தாள். கையில் பளபளவென்று கோதாவரிக் குண்டு மிளிர்ந்தது.

''சேட்டுக் கடையிலே வச்சா பத்து ரூபாய் கொடுப்பான் இதுக்கு. தெரியுமோல்லியோ?'' என்று அதைக் கீழே வைத்துத் தூக்கியும் சுற்றியும் குழந்தையைக் கொஞ்சுறாப்போல் பார்த்தாள் கௌரி.

''ம்...ம். பத்து ரூபா கொடுப்பான். வட்டியும் பதினைஞ்சு ரூபா வாங்குவான்.''

''பாவம். என்ன கஷ்டமோ தெரியலை. இதை வச்சு ஒரு ரூபாய் வாங்கிண்டு போறதே. அகமுடையான் வழியாயிருந்தான்னா இப்படிக் கஷ்டப்படுமோ பாவம்...''

''தத்தோஜி ராவ் அப்படி ஒன்றும் வழியில்லாத ஆளில்லை. அவரும் ஏதோ சம்பாதிக்கத்தானே செய்யறார்.''

''இதென்ன சம்பாத்தியம் சாதகபட்சி மாதிரி! போய், ஓடியாடி முண்டியடிச்சுச் சம்பாதிக்கணும். இவாளுக்குத் துவரம் பருப்பே ஒரு மூட்டை வேணுமே மூணு மாசத்துக்கு.''

''அவர் புத்தி, படிப்புக்கு அவ்வளவுதான் முடியும்.''

எனக்குப் பரிமாறும்போது கோதாவரிக் குண்டைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டிருந்தாள் கௌரி. நவராத்திரி வருகிறது. ஒன்பது நாட்களில் ஒரு நாளாவது அதை அடுப்பில் வைக்காவிட்டால் அவளுக்கு அமைதி வராது.

ஆபீஸ் போகும்போது கொங்கனேசுவரன் கோவில் வாசலைப் பார்த்துக்கொண்டே போனேன். வழக்கம்போல் தத்து அங்கே உட்கார்ந்திருந்தார். முகத்தில் என்றும் மாறாத புன்சிரிப்பு. தத்துவைப் படத்தில் எழுதிப் பார்க்க வேண்டும். முகமும் உடலும் அவ்வளவு அமைப்பு. இரண்டு

பகுதியாக விரிந்து தெரியும் மார்பு. குழந்தை வயிறு. அகன்ற தோள். நடுத்தர உயரம் முகத்திலும் பழைய பீஷ்வாக்களைப்போல ராஜகளை. தொங்கு மீசை. ஐம்பத்தைந்து வயதிருக்கும். ஆனால் நாற்பது வயதுதான் மதிக்கலாம். ஒரு நரை காண முடியாது. கங்காவுக்கு ஐம்பது வயது என்பது பார்த்த மாத்திரத்தில் தெரியும். அவள் கணவர் என்ற உறவினால்தான் அவருக்கு வயது ஐம்பதுக்கு மேல் என்று ஊகம் செய்ய முடிகிறது. இல்லாவிட்டால் நாற்பது தான் மதிப்பு.

கொங்கணேசுவரர் கோயில் திண்ணையைவிட்டு அசைய மாட்டார் தத்து. அங்கே வந்துதான் அவரை அழைத்துப் போவார்கள், அவர் இனத்தைச் சேர்ந்த புரோகிதர் யாராவது. புரோகிதத் தொழிலுக்கான படிப்போ, நெட்டுருவோ தத்துவுக்குத் தெரியாது...சும்மா எடுப்பாளா சுத்தான் போவார். ஓர் அணா இரண்டு அணா தட்சிணைக்குக் கை நீட்டுவார். சாப்பிடச் சொன்னால் சாப்பிடுவார். கோயில் திண்ணைக்கு வந்து கால்மேல் கால் போட்டுத் தொங்கு மீசையைப் பாம்பு விரலால் கோதிக் கொண்டே உட்கார்ந்து விடுவார்.

இரவு வேளைகளில் எங்காவது மடத்தில் பஜனை நடந்தால் ஒரு மிருதங்கத்தை வலது கையால் அணைத்துக் கொண்டு போவார். 'திம் திம் தரு திம் திம் தரு' என்று ஒரு சொல்லை வைத்துக்கொண்டே எல்லாத் தாளங்களும் வாசித்து விடுவார்...அதைத்தவிர 'தகஜுஃணு தொம்' என்று மூன்றுமுறை திருப்பி மோரா வைப்பார். மற்றபடி தாளத்தைப் பற்றி ஒரு பாவமும் தெரியாது. ஆனால் நாதத்தில் மட்டும் ஒரு சுகம் இருக்கும்—அவருடைய புன் சிரிப்பைப்போல.

மனுஷனுக்குக் கோபமே வராது. திட்டினாலும் புன் சிரிப்புத்தான், வேகமாக நடக்கமாட்டார். ;விலக்கமாட்டார். அதிர்ந்து பேசமாட்டார்.



கோவிலுக்குப் பத்து வீடுதாண்டி அவர் வீடு. சொந்த வீடுதான். வாடகை கொடுத்து எப்படிக் கட்டுப்படி யாகும் அவருக்கு? தலைமுறை தலைமுறையாக வந்த வீடு. ஆனால் வீடு என்று கண்டுபிடிக்க ஓர் அளவாவது ஆராய்ச்சி ஞானம் வேண்டும். தெருவைவிட நாலு அடி உயர்ந்திருந்த ஒரு பெரிய மேடை. பெரிய வீட்டின் அடித்தளமாக ஒரு காலத்தில் இருந்திருக்க வேண்டும் அது. அந்த மேடையின் பின்கோடியில் கறுப்பும் நரையும் ஓடிய ஒரு சுவர் தெரியும். வீடு இருந்ததன் கடைசிச் சின்னமும் அத்தாட்சியுமாக இருந்த ஒரே அறையின் சுவர் அது. அதில்தான் கங்காபாய் சமையல், தூக்கம் முதலிய காரியங்களைச் செய்துகொண்டு மற்றப் பொழுதுகளில் அந்த பெரிய மேடையைக் கடந்து வந்து தெருவில் இறங்கும் படியில் உட்கார்ந்திருப்பாள். நான் அந்த வீட்டைக் கடக்கும்பொழுது அவள் கையில் ஏதோ பொட்டணத்துடன் அறைக் கதவைத் திறந்து கொண்டிருந்தாள்...நாம் கொடுத்த ஒரு ரூபாய் வீண் போகவில்லை. ஏன் இவ்வளவு அற்பத்தனமாக மல்லுக்கு நின்றோம், கேவலம் இந்த ஒரு ரூபாயைக் கொடுக்க! எனக்கே ஏன் என்று புரியவில்லை. மனிதனுக்கு அற்பத் தனம் வர நேரம் போது ஏது?

கங்காபாயின் புடவையில் கண்ணுக்குத் தெரிந்து பதினைந்து ஒட்டுக்களாவது இருக்கும். தத்தோஜியின் பஞ்ச கச்சத்தில் அதற்குக் கூடுதலாக நாலு இருக்குமே தவிரக் குறைவாக இராது. நல்ல வேளையாகத் தத்து சாப்பாடே வேலையாக இருக்கிற ஒரு தொழிலைச் செய்ய ஆரம்பித்தாரே—அதுவரையில் அதிர்ஷ்டம். அந்த வேலைக்குக் கூலிகூட உண்டு. ஆனால் அதுகூட இப்போது நலிந்துவிட்டது. புரோகிதர்களுக்கு முன்மாதிரியெல்லாம் சாப்பாடு யார் போடுகிறார்கள்? ஒரு சடங்கு என்றால் வேட்டி துண்டு வாங்குவதும் மலையேறிப் போய்விட்டது. இல்லாவிட்டால் தத்துவின் வேட்டி வேட்டியாயில்லாமல் சல்லடையாக இருப்பானேன்? மந்திரம் தந்திரம் தெரிந்த புரோகிதராக இருந்தாலாவது ஏதோ காலத்தை ஓட்ட

ளாம் என்ற நம்பிக்கைக்கு இடமிருக்கும். வெற்று ஆளுக்கு என்ன பயன்?

படைத்தவன் வயிற்றுக்குப் படைக்காமலா இருப்பான் என்று ஏன் வேதாந்தம் பேசுகிறார்களோ, தெரியவில்லை வயிற்றுக்குப் படைக்கிற வெண்கலப் பானையே அடகுக்குப் பெயர்ந்துவிட்டது.

ஒரு ரூபாய் கொடுக்க ஏன் இவ்வளவு தகராறு செய்தோம்? கோதாவரிக்குண்டே இல்லாமல், ஒரு ரூபாய் ஏன் கொடுத்திருக்கக்கூடாது?......எப்பொழுதும்போல் என் பின் புத்தி இந்தக் கேள்விகளைக் கேட்டுக்கொண்டேயிருந்தது.

கங்காபாயைப் பார்த்த இடங்களெல்லாம் ஞாபகத்துக்கு வருகின்றன. எங்கே கலியாணம், எங்கே அன்னதானம், எங்கே சமாராதனை என்று போய்விடுவாள். சின்னதோ பெரியதோ எந்தக் கலியாணமாயிருந்தாலும், சம்பந்திகள், பிரமுகர்கள், நண்பர்கள் இந்தக் கூட்டமெல்லாம் சாப்பிடட்டும் என்று அடிவண்டல் பந்திக்காகத் திண்ணையில் காத்துக்கொண்டிருக்கிற கும்பலில் கங்காபாய் ஒரு பூனா டம்ளரோடு உட்கார்ந்திருப்பாள். கோவிலில் நவராத்திரி சமாராதனை என்றால் அங்கே அவளை முன் பந்தியில் பார்க்கலாம். ஒன்றும் கிடைக்காவிட்டால் ஏதோ அவலோ, பொரியோ இடித்துக் கறுப்புத் தகர டப்பாவில்போட்டு விற்க வந்துவிடுவாள். இன்று அதற்குக் கூட வழியில்லை போலிருக்கிறது.

தத்துவின் முப்பாட்டன்மார்கள் அரண்மனையில் புரோகிதம் செய்தவர்களாம். இந்த நாச்சியார் கோவில், கோதாவரிக் குண்டுகளெல்லாம் அந்தக் காலத்தில் சேர்த்த சொத்தாகத்தானிருக்க வேண்டும். தத்துவின் படிப்புக்கு இருப்புச் சட்டிகூட தானம் கொடுக்கமாட்டார்கள். அவ்வளவு மட்டமாகக் கொடுக்கவும் தோன்றாது, அவரைப் பார்த்தால். ஆள்தான் மீசையும் பளபளப்புமாக ராஜ கம்பீரமாக இருக்கிறாரே. அப்பனே! ஏழையாகத் தான் படைத்தாயோ சச்சலாக, கருவலாக, நாய் பிடுங்கி



னாற் போல் படைக்கப்படாதோ! இப்படியா வாட்ட சாட்டமாக, மீசையும், வடிவுமாகப் படைக்கவேண்டும்! தானம் கொடுக்கிறவனுக்குக் கொஞ்சமாவது இரக்கம், அனுதாபம் வர வேண்டாம்! அச்சாரம் கொடுத்துப் பண்ணினாற்போலப் படைத்துவிட்டு, அதிர்ஷ்டத்தையும் புத்தியையும் கழித்துவிட்டு...சை! கடவுள் இவ்வளவு சராசரிக்குக் குறைவான படைப்பாளியா?

''என்னய்யா! பிரமாத யோசனையா இருக்கு இன்னிக்கு! என்னமோ சுவரைப் பார்க்கிறீர்! தரையைப் பார்க்கிறீர்! கொஞ்சம் எழுதறீம்! நிற்கிறீம்!'' என்று கத்தினான் சிரஸ்தார் பக்கிரிசாமி.

''ஒன்றுமில்லை. நீ உன்னுடைய வேலையைப் பாரு!''

''என்ன சொல்லேன்! நானும் தெரிஞ்சுக்கறேன்!''

''தெரிஞ்சு என்ன பண்ணப் போறே? இந்தாடாப்பா கஷ்டப்படாதேன்னு பத்து ரூபாயைத் தூக்கிக் கொடுத்திடப் போறியா?''

''ஓகோ—அப்படியா சமாசாரம்! என்னா இப்படி? தேதி பத்துதானே ஆச்சு! அதுக்குள்ளியும் அள ஆரம்பிச்சிட்டியே. ஏனப்பா! எனக்குப் பத்தும் அஞ்சும் கொடுக்க இயலாது. இரண்டு நாள் பொறுத்துக்க! நானும் அப்ப உன்னோட சேர்ந்து அளுவறேன்!''

''ஏன்! நீ நியூஸ் பேப்பர் எல்லாம் மாசா மாசம் போட்டுடறியோ?''

''ஓகோ அதுவும் ஆயிடிச்சா? பலே ஆளுடாய்யா!'

மத்தியான மிளகு அவல் சாப்பிடுகிறாற்போல் கூட இல்லை.

வழக்கம்போல் ஆபீஸ் கடையைக் கட்ட ஆறு மணியாயிற்று. மத்தியான டிபனை ஜடாராக்னி துரும்பை எரிக்கிறாற்போல் எரிந்துவிட்டு வயிற்றில் குமைந்தது.

மணிக்கூண்டு ஹோட்டலை நினைத்துக் கொண்டு நடந்து வந்தேன். ஹோட்டலுக்குள் நுழையப் போகிற சமயம், ஹோட்டல் வாசலிலிருந்து வெற்றிலை பாக்குக் கடைக்கு முன்னால் நின்று மேல்நோக்கி மணிக்கூண்டின் முள்ளைப் பார்த்துக் கொண்டிருந்தார் தத்தோஜி—மீசையும் ஒட்டுப் போட்ட பஞ்ச கச்சமுமாக. காரும், பஸ்ஸும் நடையுமாக உலகம் தெற்கேயும் வடக்கேயும் விரைந்து கொண்டிருந்தது. தத்து சாவகாசமாக நின்று மணி பார்த்துக் கொண்டிருக்கிறார். மணி பார்க்கும்படியாக என்ன அவசரம் அவருக்கு? இல்லை மணிக்கூண்டு என்ற அதிசயத்தைத் தான் வியந்து கொண்டிருக்கிறாரா?

''என்ன ராயர்வாள்!'' என்று கூப்பிட்டேன். ஏதோ சிறு கருணை வெள்ளம் என் மனதில் ஊற்றெடுத்த சமயம் அது.

தத்து திரும்பினார். என்னைப் பார்த்தார். புன்சிரிப்பைப் பெரிது பண்ணினார். ''கோடி வீட்டு சாரா! நமஸ்காரம் சார். பேட்டியே கிடைக்கமாட்டேங்கிறதே'' என்று அருகே வந்தார்.

''எங்கே இவ்வளவு தூரம்! மணி வேறு பார்க்கிறீர்! என்ன சேதி?''

''சும்மாத்தான் வந்தேன். வீட்டிலே வரச்சொன்னாள்.''

''யாரு?''

''என் சம்சாரம். பயாஸ்கோபுக்குப் போயிருக்கா—மூணு மணி ஆட்டத்துக்கு. ஆறேகால் மணிக்கு வருவாளாம். முடிஞ்சா வந்து அழச்சிண்டு போங்களேன்னாள். அதுதான் இப்படி வந்தேன்.''

''சினிமாவுக்கா போயிருக்கா?"

''ஆமா—இந்தக் கொட்டகையிலேதான்...''

''நீங்க போகலியா?''

''ஒரு டிக்கட்டுக்குத்தான் காசு இருந்தது. அதுவே சான்ஸாகத்தான் அவளுக்குக் கிடைச்சுதாம்.''



''அதுக்காக நீர் கூடப்போக வேண்டாமோ...?''

''இல்லே சார். சொல்றேன், கேளுங்களேன். காலமே ரெட்டிப்பாளையத்திலேந்து மல்லிகைப்பூ கொண்ணாந்தா ஒரு பொம்பிளை. பெரட்டாசி மாசம் மல்லிகைப்பூ வர்றது ரொம்ப அபூர்வம் இல்லியா? என் சம்சாரம் சடக்குனு ஒரு சேர் வாங்கிப்பிட்டா, தலைப்பிலே பூவைக் கொட்டிக் கிட்டு உள்ளே போய்ப் பாத்திருக்கா. சில்லறையில்லை. காலமே பூவை வாங்கிப்பிட்டுத் திருப்பிக் கொடுப்பாங்களோ? பக்கத்து வீடுங்கள்ள கேட்டிருக்கா. கிடைக்கல்லெ. அப்புறம் ஏதோ பாத்திரத்தை எடுத்துக்கிட்டு ஒரு வேண்டியவா வீட்டிலே வச்சு, ஒரு ரூபா வாங்கிண்டு வந்தா: மல்லிப்பூ பத்தணாத்தான், மீதி ஆறணா இருந்தது. என்ன செய்யலாம்னு கேட்டா, புதுப்படம் இன்னிக்கு வருதாமே. பார்த்திட்டு வாயேன்னேன். சரின்னு புறப்பட்டு வந்தா, அழைச்சிண்டு போகணும்!''

'அட துடகாலிகளா!' என்று கத்த வாயெடுத்தேன்.

'வாயை மூடு—அரஸிக குடுக்கை' என்று யாரோ பல்லைக் கடிக்கும் குரல் கேட்டது. யார் என்று திரும்பிப் பார்க்கவில்லை. குரல் என் உள்ளேயிருந்து கேட்ட குரல் தான்.

'புத்தி புத்தி' என்று மனசு கன்னத்தில் போட்டுக் கொண்டது.

''காப்பி சாப்பிடலாம், வரீறா?'' என்றேன். தத்தோஜி மறுக்காமல் வந்தார்.

வீட்டுக்குப் போனபோது, கௌரியின் தலையில் மல்லிகைச்சரம் மோகன வேடு கட்டியிருந்தது. 'உங்களுக்குன்னு கொண்டு வந்தேன் மாமி' என்று கங்காபாய் கொடுத்துவிட்டுப் போனாளாம்.

ரெட்டிப்பாளையம் மல்லிகைப் பூவின் வாசனை உலகத்தில் வேறு எந்த மல்லிகைக்கும் கிடையாதே, அப்பா! என்ன மணம்!

1961

—

# வெங்கிடி சார் ஏன் ஓடினார்?

வெங்கிடி சார் இடைகழி மாடத்தில் செருப்பை உதறி விட்டு உள்ளே வந்தார்; கூடத்து ஊஞ்சலில் உட்கார்ந்தார். ''மாலி, கொஞ்சம் மோர்த் தண்ணி கொண்டாடா கண்ணூ, நீர்க்க இருந்தால் போதும். ரொம்ப நீர்க்க இருக் கணும், நீராரத் தண்ணிவிட்டாலும் சரி'' என்று அடுக் களையைப் பார்த்துக் கத்தினார்.

''எப்பப்பா வந்தீங்க?'' என்று கத்திக்கொண்டே ஓடி வந்தது மாலி. ஊஞ்சல் சங்கிலியைப் பிடித்துக்கொண்டு நின்றது.

''இப்பதான் வரேன்.''

''வண்டி கிடைச்சுதா?''

''வண்டி வந்த்து, ஏத்திட்டுத்தான் வர்றேன்.''

''அப்பா...டி'' என்றது மாலு. ஏதோ பெரிய பாரம் குறைந்தாற்போல் வந்த அந்தக் குரலைக் கேட்டார் அவர். ஆனால் அதன் அர்த்தத்தைக் கவனிக்காதது போலிருந்து விட்டார்.

''மோர் கொண்டாரலே?''

''அம்மா கரைச்சிட்டு வருது.''

''நீர்க்க கரைக்கச் சொன்னியா?''

''கெட்டி மோரே கிடையாது.''



''ம். என்ன பண்ணிக்கிட்டிருக்கே உள்ளே? நீ படிக் கிறியா?''

''இல்லேப்பா, பலகையிலே உளுந்தை ஓட்டிக்கிட்டிருக் கேன்.''

''நல்லா இருக்கா?''

''ம்க்கும்''

''பள்ளிக்கூடம் இல்லே?''

''இன்னிக்கித்தான் சனிக்கிழமை யாச்சேப்பா.''

''அரைப் பள்ளிக்கூடம்!''

''இல்லே!''

வெங்கிடிசாரின் மனைவி மோரை எடுத்து வந்தாள்.

''வண்டி கிடைச்சுதா?''

''கிடைச்சுது.''

''எல்லாரும் ஒருவளியா தொலைஞ்சாங்கடாப்பா. இப்பதான் அக்கடான்னு இருக்கு வூடு'' என்றது மாலி. வெங்கிடிசார் சிரிப்பை சிரமப்பட்டு அடக்கிக்கொண்டார். மனைவி, வந்த சிரிப்பைப் புன்சிரிப்பாக அழுத்திக் கொண் டாள். அதையும் பார்த்து விடாமலிருக்க முகத்தைத் திருப் பாமல் அவரையே பார்த்துக்கொண்டு நின்றாள்.

இனிமேல் சிரிப்பு தன்னை மீறி வராது என்று தெரிந்த வுடன் ''அப்படியெல்லாம் சொல்லப்படாது மாலி'' என்று குழைவாக உபதேசம் செய்தார் வெங்கிடிசார்.

''சொன்னா என்னவாம்?''

''என்னவா! நீயே பாரு! வீடு இதுவரைக்கும் எவ்வளவு கலகலன்னு இருந்திச்சு. இப்ப பாத்தியா—எப்படி வெறிச் சினு இருக்கு!''

''ஆமாமா!''

''என்ன ஆமாமா! விருந்து வந்தா சந்தோசப்படறதா! விருந்து வரதுக்குக் கொடுத்து வக்கணுமே!''

''நீங்க சொல்லுவீங்க. ஒரு மாசமா எனக்குத் தலாணியே கிடைக்கலே, தெரியுமா!'' என்று உதட்டைப் பிதுக்கினது மாலி.

''அது கிடக்குபோ. நீ எனக்கு ஒரு காரியம் செய்வியா?''

''என்ன?''

''விறுவிறுன்னு போறது. நம்ப ஆராமுது சார் வீட்டுக்குப்போயி, அப்பாக்கு லேசா கொண கொணங்குதாம். ஒரு பட்டையிலே ரண்டு தரத்திற்குப் பொடி போட்டுத் தரச் சொன்னாங்கன்னு வாங்கிட்டு வருவியா?''

''சளி பிடிக்கும் போலிருக்கா?''

''ம்க்கும்.''

''ரண்டு தரத்துக்குன்னு சொல்லணுமா?''

''ஆமா''

''இதோ வாங்கியரேன்'' என்று வாசலில் ஓடிற்று மாலி.

''இப்ப என்னாத்துக்கு அதை அய்யங்காரி வூட்டுக்கு விரட்டணும் வெயில்லெ?''

''எதுக்கு விரட்டினேன்னு தெரிஞ்சுகிட்டே கேக்கறப்ப நான் என்ன பதில் சொல்றது?''

''ஆமாம்—ஏழு வயசுக் குழந்தைக்கே தாள முடியலெ. போதும்டாப்பா விருந்துன்னு அனுப்புப் பிடுங்கு. நாம் சொல்லிக்கூடா . . . அது சொல்லுது, சொல்லிட்டுப் போகட்டுமே!''



''அதான் சொன்னப்பறம் போச்சொன்னேன்' பர்வதம் சிரித்தாள்.

''எனக்கென்ன தெரியாமலா இருக்கு? வந்த விருந்தை விரட்டிட முடியுமா அதுக்காக?'' என்றார் வெங்கிடி சார்.

''வெரட்டணும்னு சொல்லலே...இருந்தாலும் மட்டுப் படுத்திக்கிட்டாத்தான் தேவலாம். அவங்க வரதுக்கு மேலே நீங்க கொந்திக் கொந்தி உபசாரம் பண்றதும், சொட்றதும் கொண்டாடறதும்...! என்னமோ மாசம் ஐந்நூறு ஆயிரம் நமக்கு வராப்பல அவங்க நெனச்சுட்டு 'டேராப்' போடறதும்.''

''இது என்னத்துக்குக் கவைக்குதவாத பேச்சு? வர விருந்தை இங்கே யாரும் உள்ற வரப்படாதுன்னு சொல்றதுக்கு தைரியமிருக்கா உனக்கு?''

ஒளுங்கா கட்சி பேசறதாக நினைப்பா?''

''உனக்கு வெரட்ட தைரியமிருக்கா?—இல்லையா? பேசாம இரு.''

''குழந்தைக்குத் தலகாணி இல்லாம ஒரு மாசம் கையைத் தலைக்கு வச்சுப்படுத்த ஆத்தாமை—இப்ப என்ன?

''பொறந்த நாள்ளேர்ந்து மாசத்துக்கு இருபது நாளு தலைக்கு அண்டை இல்லாமத்தான் படுத்திருக்கு—''

வெங்கிடி சார் கண்ணை மூடிக்கொண்டுவிட்டார். காதுக்கு இமையில்லாததனால்தான் அப்படிச் செய்தார்.

என்னென்னமோ சொல்லிக்கொண்டிருந்தாள் அவள். அவருக்கு மூடின கண் திறக்கவில்லை. விருந்தாக வந்து தங்குகிற உறவு ஜனங்கள் ஏன் இப்படி இன்று திடீரென்று இவளுக்குப் பிரசனையாகிவிட்டார்கள்?—நாக்கில் பல்லை போட்டுப் பேசவே கூசுகிற விஷயமாச்சே!

னொண னொணவென்று அவள் குறைபாடு இன்னும் கேட்கிறது.

அவள்தான் என்ன செய்வாள்! இப்படி ஊர் உறவுக்குச் செய்துபோட்டு அவள் உடம்பு தேய்ந்துதான் விட்டது. உடம்பைவிட மனசுதான் தேய்ந்துவிட்டிருக்கவேண்டும். ஒரு நாள், கிழமை என்று வந்தால் பார்க்கும்படியாகக் கட்டிக் கொண்டோம் என்பதற்கு இரண்டு நல்ல மாற்றுப் புடவைக்கு வழியில்லை...

அழுகிறதை அழுது தீர்க்கட்டும் என்று கண்ணை மூடி, ஊஞ்சல் கம்பியை பிடித்துக்கொண்டே உட்கார்ந்திருந்தார்.

அந்தக் கொடிக்கால் தெரு எண்பது வீடுகளுமே அவர் எப்படி இவ்வளவு சமாளிக்கிறார் என்று ஆச்சரியப்படுவதுண்டு. தினம் பொழுது விடிந்தால் நாலு இலைக்கு ஆள் வந்த மணியாகத்தானிருக்கும் வெங்கிடி சாருக்கு. பாண்டு சோகைக்கு வைத்தியம் பார்க்க வருகிற அவருடைய அத்தைமார்கள், வயிற்றுக்கட்டி ஆபரேஷன், பக்கவாதம், உள் நாக்கு வீக்கம், இப்படி பலவகை மருத்துவங்களுக்காக வந்து தங்குகிறவர்கள். மாஜிஸ்ரேட் கோர்ட்டில் ஈரங்கிக்கு வருகிற சுற்று வட்ட கிராமங்களில் உள்ள பந்துக்கள்—சாசனம், பரிவர்த்தனை பதிவு செய்ய வருகிறவர்கள்—ரிஷப வாகனம், வெண்ணெய்த்தாழி, புன்னை வாகனம், தேர் என்று வருகிற திருவிழா, நவராத்திரி வேடிக்கைப் பார்க்க வருகிறவர்கள்—

ஒன்றிரண்டு பேர் ஒருவீசை சேப்பங்கிழங்கையும் நாலு மரக்கால் அரிசியையும் கொண்டு போட்டுவிட்டு, இரண்டு மாசம் இருந்துவிட்டுப் போகிற சாமர்த்தியசாலிகள்—

ஒரு தடவை இந்த அரிசி கொண்டு போகிற சேதி அவர் வரையில் எட்டி அவர் மனைவியைக் கண்ணில் விரலைக் கொடுத்து ஆட்டின ஆட்டலில் பர்வதத்துக்கு, யாராவது விருந்தினர்கள் பெரிய மூட்டையோடு வந்தாலே சிம்ம சொப்பனமாக ஆகிவிட்டது.



இதெல்லாம் சரி, இல்லாதவர்கள். கொஞ்சமாக இருக்கிறவர்கள், போனால் போகிறது. இருக்கிறவர்கள் கூடவா? திலக்குப் பிள்ளைக்கு எழுபது வேலி சொத்து வட்டாறு குடமுருட்டி பாசனங்களில். மனைவிக்குக் கிறுகிறுப்பு என்று வந்து சேர்ந்தார். இந்த ஊரில் அரண்மனை மாதிரி வீடு கிடைக்கும், இருபது ரூபாய் வாடகைக்கு. ஆனால் வெங்கிடி சார் கொடுத்து வைத்திருக்கிற பொழுது அவருக்கு எப்படி வீடு வாடகைக்கு எடுத்துக்கொண்டு வைத்தியம் பண்ணத் தோன்றும்? எண்ணி நாலு மாசம் இருந்தார். கடைசியில் தங்களை ஆதரவாகக் கவனிக்கவில்லை என்று அவர் மனைவி பட்டம்மாள் பெரியதாகக் குற்றம் சாட்டினதற்கு, மௌனமாக ஆமாம் போட்டுக் கொண்டே போய்ச் சேர்ந்தார்.

“அம்பாரம் அம்பாரமாய் விளையுதே, இந்தக் குழந்தை கையிலே ஒரு பப்புருமுட்டு வாங்கிக் கொடுத்தாளா?” என்று பர்வதம் குமைந்தாள். “ராமா” என்று வெங்கிடி சார் தலையில் கையை வைத்து கண்ணை நாலு விநாடி மூடித்திறந்து அப்பால் போனார்.

“இந்தப் பொம்பிளை ஜன்மத்துக்குப் பெரும்போக்கு எப்படா வரும்?” என்று வார்த்தையில்லாமல் தலையில் வைத்த கை சொல்லிற்று.

“இதென்னய்யா வெங்கிடீ! இது என்ன சத்திரமா, வீடா? அவதான் என்ன மனுஷியா, பூதமா—செஞ்சு போடறதுன்னா அவளுக்கு உடம்பிலே திராணி வாண்டாமாங்காணும்?” என்று ஆராமுதுசாரின் தாயார்கூட கேட்டு விட்டாள். “ரண்டு மாசம் பிறந்த வீட்டுக்கு அனுப்பி வையுமேங்கணும்” என்று வழி சொல்லிக் கொடுத்துவிட்டுப் போனாள். அவரும் அப்படியே செய்தார்.

ஆனால் அந்த இரண்டு மாதமும் போதும் போதுமென்றாகி விட்டது. ஹோட்டலுக்கு அவர் கூடவே வந்தது அவருடைய விருந்துபசாரம். பர்வதம் இருந்திருந்தால் முக்கால் செலவுதான் ஆகியிருக்கும்!

வெங்கிடி சாருக்கு வீடுமட்டும் இல்லை. வெளியேயும் இந்த மாதிரிதான். ஏதாவது கும்பாபிஷேகம், அன்னதானம், ஆஸ்பத்திரி கட்டுகிறது, பெரியவர்களுக்குப் பணமுடிப்பு அளிப்பது—என்றால் அவரையும் அந்தப் 'பிச்சை'க் கூட்டத்தில் சேர்த்துக்கொண்டேதான் போவார்கள். மூன்றோ, ஐந்தோ தன் பங்குக்குக் கையெழுத்தைப் போட்டுவிட்டு, அவரும் கை ஏந்திக்கொண்டே தெருத்தெருவாய் ஊர் ஊராய் நடந்து வசூல் பண்ணிக் கொடுத்துவிட்டுத்தான் வருவார்.

இதனால் அவரிடம் 'பிரைவேட் ட்யூஷன்' வைத்துக் கொண்ட பையன்கள் பாதிநாள் காத்துக் காத்துவிட்டு வெறுமே திரும்பிப் போவார்கள். கடைசியில் காட்டான் சாரிடம் ட்யூஷனை மாற்றிக்கொண்டு விடுவார்கள். காட்டான் சார் காட்டில்தான் இப்பொழுது மழை பெய்கிறது. காலையில் ஆறுமணிக்குப் பிடித்தால் பள்ளிக்கூட நேரம்போக, இரவு பத்து மணிவரை ட்யூஷன் பையன்கள் மணிக்கு ஐந்து, ஆறு பேர் என்று வந்து வந்து நகர்ந்து கொண்டேயிருப்பார்கள். காட்டான் சாருக்கு வெளியே மட்டும் இரண்டு சம்பளம் கிடைத்து விடுகிறது.

வெங்கிடி சாருக்குப் 'பொது மனிதர்' என்ற ஒரு கௌரவம்தான் மிச்சம். அதில்கூட மூளியிருந்தது. பணமுடிப்பு வசூல் செய்வதற்கு அவர் ஊர் ஊராக அலைந்தாலும் கடைசியில், அதைக் கூட்டத்தில் அளிக்கிற பெருமை பஞ்சாயத்து பிரசிடெண்ட் ஒல்லி ராமையாவுக்குத்தான் போகும். பணமுடிப்பு கொடுக்கிறபோது கண்ணைப் பறிக்கும்படியாக மின்னல் போட்டு எடுக்கிற புகைப்படத்தில் ஒல்லி ராமையாவும் பெரிய மனிதரும்தான் விழுந்திருப்பார்கள். பஞ்சாயத்து டவுனில் கூட வாத்தியாருக்கு அவ்வளவுதான் செல்லுபடி!

இத்தனையையும் ஊஞ்சல் சங்கிலியைப் பற்றி நின்றவாறு விட்டுவிட்டுப் புலம்பிக் கொண்டிருந்தாள் பார்வதம். அவரும் கண்ணை மூடியும் திறந்தும், இரு கைகளையும்



தூக்கிப் பிடரிமீது சேர்த்தும் மூக்கு மலரப் பெருமூச்சு விடுவதுமாகக் கேட்டுக் கொண்டேயிருந்தார். பதிலே பேசவில்லை.

பார்வதம் நிறுத்தவில்லை, அடுத்த மூச்சைத் தொடங்கினாள். அப்பொழுது இடைக்கழிக்கப்பால் வாசல் தாழ்வாரத்தில் ஒரு குரல் கேட்டது.

"ஐய்யா... ஐ...யா."

அதைக் கேட்டதுமே வெங்கிடி சாருக்கு உடல் பதறிற்று. பார்வதத்துக்கும்தான்.

"ஐ...யா..."

இவ்வளவு ஈனமான குரலை அவர் கேட்டதேயில்லை. அந்த ஒரு வார்த்தையை வெளிப்படுத்த அந்த உடல் எவ்வளவு வேதனைப்பட்டிருக்க வேண்டும்!

பார்வதம் சங்கிலியைவிட்டு இரண்டு எட்டு நடந்து எட்டிப் பார்த்தாள். வெங்கிடிசாரும் சரேலென்று ஊஞ்சலிலிருந்து எழுந்துபோய்ப் பார்த்தார்.

"ஐ...யா!"

ஒரு பையன். பேசமுடியாமல் பேசினான். தலைமுடி அழகாகக் கத்திரித்திருந்தது. கட்டை குட்டையான உடல். பதினான்கு பதினைந்து வயதிருக்கும். இடையில் ஒரு பழைய பழுப்புநிற டிராயர். உடல் திறந்து கிடந்தது. குழைத்த கறுப்பில்லாமல், துருப்பிடித்த தகரக் கறுப்பு.

"யாருப்பா!" என்று பதறினார் வெங்கிடி.

"பசி ஐ...யா, நாலு நாளா பருக்கைசோறு கிடைக்கலெ..."

நிமிர்ந்து நிற்க முடியவில்லை பையனால்; குரலும் எழும்பவில்லை. கம்மித் தொய்ந்தது. அந்த வார்த்தைகளை நெஞ்சிலிருந்து வெளியே கொண்டுவரக்கூட அவனுக்குத் தெம்பில்லை. பசியின் இவ்வளவு கோர சொரூபத்தைக் கண்டதும், வெங்கிடி சாருக்குக் கைகால் எல்லாம் ஒரு தடவை நடுங்கிற்று.

பையன் கண் செருகிக்கொண்டு நின்றது. புருவத்தைச் சுருக்கி முகம் முழுவதையும் வாட்டியிருந்த பசி நிமிர முடியாமல் உடலைக் கூனாக்கிவிட்டது.

வெங்கிடி சாருக்குக் கண்ணில் தெப்பம் கட்டிற்று. எப்படியோ சமாளித்துக்கொண்டு பர்வதத்தைப் பார்த்தார்.

''இன்னும் சமையலே தொடங்கலியே!'' என்றாள் பர்வதம், அவரைப் பார்த்துத் தாழ்ந்த குரலில்.

''இட்லி சுட்டிருந்தியே காலமே!''

''தோட்டி ஒரு நாளாவது இட்லி, ஆப்பம் ஏதாச்சும் தரப்படாதாம்மான்னு கேட்டுக்கிட்டேயிருந்தான். அவனுக்கு நாலைக் கொடுத்து பாத்திரத்தை ஒழிச்சேன், நீங்க வரதுக்கு முன்னாலே. அப்புறம் அம்மங்கா மகன் பழையது சாப்பிட்டுப் போச்சு.''

''என்ன இப்படி எல்லாத்தையும் துடைச்சு வச்சிட்டே?' என்று சிணுங்கினார். அலமாரியிலிருந்த வெற்று சாக்கலேட் டப்பாவைத் திறந்து பார்த்தார். சில்லறையாகப் பதினாலணா இருந்தது. எட்டணாவை எடுத்து, ''கடைத்தெரு மூணு பர்லாங் இருக்கு. ஓட்டல்லே சாப்பிட இது பத்தாது. ரொம்ப தூரம் நடக்கணும். வெயில் வேற. உனக்கு ஏதாவது...ம்...ம்?'' என்று பையனிடம் கொடுத்தார்.

வாங்கிக்கொண்ட பையன் குனியமுடியாமல் தரை மட்டம் குனிந்து கும்பிடு போட்டான். இது வேறா? வெங்கிடி அதைப் பார்க்க முடியாமல் முகத்தைத் திருப்பிக் கொண்டார். உள்ளே வந்து திரும்பிப் பார்த்தார். பையன் கூனிக்கொண்டே மெள்ளப் படியில் நடக்கலானான்.

சத்து மாவையாவது கரைத்துக் கொடுத்திருக்கலாம். காசை மட்டும் கொடுத்தனுப்பிய வேதனையில் இருப்புக் கொள்ளாமல் வாசலைப் பார்க்க நடந்தார். படியில் நின்று



பார்த்தார். அவனா அது? வேறு யாருமில்லை. மேற்கே போகிறவன்தான்.

என்ன இது? அவனா இவன்!

பையன் முதுகு விறைக்க விடுவிடுவென்று நடந்து கொண்டிருந்தான். நல்ல பலசாலிகள், முண்டர்களுக் கிருக்குமே அந்த மாதிரி முதுகு. இவனா பசியில் உயிர் போகத் துடித்தவன்! அட களவாணித் தறிதலை!

''தம்பி!'' என்று உரக்கக் கூப்பிட்டார்.

பையன் சடக்கென்று திரும்பினான். திரும்புவதில் தான் என்ன சறுக்கு! குதிரை திரும்புகிற மாதிரி இருந்தது.

''இங்க வாடா?''

''ய் யான்?''

''இங்க வாடான்னா?''

''எதுக்கு?''

''இங்க வாடா சொல்றேன்.''

பேசாமல் நின்றான் பயல்.

''என்னடா நிக்கிறியே. இப்படி வாடாங்கறேன்.''

பையன் வரவில்லை. வெங்கிடி சாருக்கு கை, காலெல்லாம் ஆவேசம் பரந்தது. ரத்தம் முகத்திற்கு ஏறி கண்கள் ஜொலித்தன.

''தடித் திருட்டுப்பயலே. இங்கே வாடாங்கறேன், ஏன் என்று கேட்டுகிட்டா நிக்கிறே?'' என்று ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தார்.

பையன் எடுத்தான் ஓட்டம். வெங்கிடி சார் துரத்திக் கொண்டு ஓடினார். பையன் பறக்கிற மாதிரி ஓடினான். என்ன வேகம்! நல்ல முண்டன்.

''பிடிங்க அந்தப் பயலை'' என்று தெருக்கோடியில் நின்ற ஒரு ஆளைப் பார்த்து ஜாடை காட்டிக் கத்தினார் வெங்கிடி சார். அவன பயலைப் பிடிக்கப் போனான். பையன் நழுவிவிட்டு சாலியத் தெருவில் புகுந்துவிட்டான்,

"விசுவம், சித்தே ஓடேன். அந்தப் பயலைப் பிடி சொல்றேன். இதோ சாலியத் தெருவிலே ஓடறான்" என்று கோடி வீட்டில் திண்ணையில் உட்கார்ந்து வாசித்துக் கொண்டிருந்த ஒரு பையனைக் கூப்பிட்டார் அவர்.

உடனே புஸ்தகத்தை அப்படியே ஜன்னல் வழியாக உள்ளே எறிந்துவிட்டு ஓடினான் விச்வம்.

சாலியத் தெருவுக்குள் இருவரும் ஓடினார்கள். சற்று நின்று திரும்பிப் பார்த்த பையன், மறுபடியும் ஓட ஆரம்பித்தான். தைக்கால் தெரு, வாணக்காரத் தெரு, குயத்தெரு என்று இப்படி ஓடினான். வெங்கிடி சாரால் ஓடமுடியவில்லை. சிறு ஓட்டமாக ஓடி பெருநடையாக நடந்து ஒரு வீட்டு வாசலில பந்தல் நிழலில் நின்றார். மேல்மூச்சு வாங்கிற்று. பத்து நிமிஷம் கழித்து விச்வம் வெறும் கையோடு திரும்பி வருவதைப் பார்த்தார்.

"அந்தப் பயலைப் பிடிக்க முடியலெ சார். என்ன ஓட்டம் ஓடறான்! வாய்க்கால் தெருவுக்குள்ளாக ஓடினான். ரெட்டியார் ரைஸ்மில் வழியாக ஓடினான். அப்படியே ஓடி மறைஞ்சிட்டான், பஸ் ரோடு திருப்பத்திலே. சிட்டாப் பறக்கறான் சார்! என்னாலெ முடியலெ. என்ன சார்—எத்தையாவது திருடிட்டானா சார்?" என்று நிதானமாகக் கேட்டான் விச்வம்.

வெங்கிடி சார் விவரமாக விஷயங்களைச் சொன்னார்.

"எட்டணாத்தானே சார். தொலைந்தது சார். தலை முழுகி விடுங்க" என்றான் பையன்.

"அது தெரியும்டா எனக்கு. அந்தப் பய என்னை அழ வச்சிட்டான். அப்படி ஏமாத்துறான். உசிரு போயிடறாப் பலல்ல பசி பசின்னு வேஷம் போட்டான். அப்புறம் வெளியிலே வந்து பார்க்கறப்ப, சும்மா நாற்காலி முதுகு மாதிரி முதுகை வளைச்சு வெறச்சிட்டுல்ல போறான்."

விச்வம் சிரித்தான்.

எதற்காகச் சிரிக்கிறான் இங்கிதம் தெரியாமல்? ஆறாவது பாரம் படிக்கிறானாம்! போத்து மாதிரி வளர்ந்திருக்



கிறான். மண்டைக்குள் ஏதாவது இருந்தால் இப்படிச் சிரிப்பானா? இந்தக் காலத்துப் பிள்ளைகளே இப்படித்தான் இருக்கிறதுகள்.

"சரி, நீ போய்ட்டு வா. நான் இப்படிக் கடைத் தெருவுக்குப் போய்ட்டு வரேன்" என்று அவனை அனுப்பி விட்டு நடந்தார் அவர்.

அவருக்கு இன்னும் ஆத்திரம் அடங்கவில்லை. வாய்க்கால் கரைத் தெரு வழியாக நடந்து ரெட்டியாரின் நெல்லு மிஷின் பக்கம்போய் சற்று ஒதுக்கமாக நின்றார். விச்வம் ஓட்டத்தைக் கைவிட்டுவிட்டுத் திரும்பின இடம் இதுதான். ரெட்டியார் மில்லுக்குப் பக்கத்தில் ஒரு பெட்டிக் கடை—சற்று உள்ளடங்கினார் போல இருக்கும். அதன் சார்ப்பில் இருந்து ஒரு விசுப்பலகையில் உட்கார்ந்து, கடன் சொல்லி இரண்டு பூவன் பழமும், லைம் ஜூஸும் வாங்கி சாப்பிட்டார் உட்கார்ந்திருந்தார்.

இவருக்கு லேசாக ஒரு நம்பிக்கை, பயல் இப்படிப் போனாலும் போகலாம் என்று. கடைத் தெருவுக்கு இப்படித்தான் நடந்து போகவேண்டும். எட்டணாவை வேறு எங்கே செலவழிப்பது?

பெட்டிக்கடை ஒரு நிமிஷம் சும்மா இல்லை. உப்பு, மண்ணெண்ணெய், வெற்றிலை பாக்கு, மிளகாய், பீடி, கத்தைப் புகையிலை, கடலை, எள்ளுருண்டை, ஸ்லேட் குச்சி—இப்படி ஏதாவது வியாபாரம் நடந்துகொண்டேதானிருந்தது. பார்க்கப் பார்க்க விநோதமாயிருந்தது. 'நாம்கூட இந்தமாதிரி ஒரு இடத்தில், மூன்று சாலைகள் கூடுகிற இடத்திற்கருகில் பெட்டிக்கடை வைத்தால், எதிரே கண்ணுக்கெட்டின வரை பசபசவென்று பரந்து கிடந்த வயல் காட்சியையும், தென்னந்தோப்புகளையும், மேகங்களையும், இளங்காற்றையும் ரசித்தாற்போலிருக்கும்; தொழிலுக்குத் தொழிலுமாச்சு, என்று அவருக்குத் தோன்றிற்று.

"ஒரு கலர் சோடா கொடுங்கய்யா—கோலி பாட்டில்" என்று ஒருவன் வந்தான். கடைக்காரர் கலரை எடுத்தார்,

வெங்கிடி கவனித்துப் பார்த்தார். அதே பயல்தான்! கண்டு கண்டாக சதை. நெருங்கிக் கத்தரிக்கப்பட்ட தலை மூடி. அவன் இந்த வழியாகப் போகலாம் என்றுதான் அவர் நினைத்தார். ஆனால் இந்தக் கடைக்கே வந்து சிங்கத்தின் வாயிலே நேராக விழுவான் என்று அவர் எதிர்பார்க்கவில்லை.

''ஆம்பிட்டுக்கிட்டியா?'' என்றார். அவன் திரும்பினான், அவரைப் பார்த்தான், உடனே ஒரே பாய்ச்சலாக வெளியே பாய்ந்து ஓடினான்

பயல், ஸ்டேஷன் சாலையில் திரும்பி ஓடினான் நல்ல தடிப்பயல். பதினைந்து வயதாயிருந்ததால் மார்பின் இருபாரிசமும் எஃகுப் பட்டம் தைத்தாற் போலிருந்தது.

திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே ஓடினான். அவன் எத்தனை தூரம் ஓடினாலும் சரி இன்றைக்குப் பிடித்து விடுவது என்று ஓடினார் வெங்கிடி சார் தலை தெறிக்க ஓடினார். அவனைப்பிடி என்று சொல்ல அங்கு ஆள் இல்லை மூச்சைக் கையில் பிடித்துக் கொண்டு ஓடினார். ஏதோ கல் இடறவே, மடேர் என்று விழுந்தார். நாலு தடவை உருண்ட பிறகுதான் அவர் உடம்பு நின்றது

முழங்கால், தோளெல்லாம் சிறாய்த்துவிட்டது. அடியில்லை வலியில் முழங்கை துடித்தது, தரை தாக்கிய அதிர்ச்சியில் கண்ணில் பொறி பறந்தது.

அந்தப் பயல் தூர நின்று சிரித்தான். கவனித்தான். பேசாமல் நின்றான். பின்பு என்ன நினைத்துக் கொண்டானோ, திரும்பி வந்தான். வீசி அந்த எட்டணாவை அவர் முகத்தைப் பார்க்க எறிந்தான். ஓடியே போய் விட்டான்.

வெங்கிடி சார் காசை எடுத்தார். பரதைப் பயலே என்று கத்தினார். எழுந்தார். சுற்றும் முற்றும் பார்த்தார். சாலையிலே அந்தக் காசை வீசி எறிந்தார். விந்தி விந்திக் கொண்டே ஜில்லா போர்டு ஆஸ்பத்திரியை நோக்கி நடந்தார்.

1961

# சக்தி வைத்தியம்

குழந்தை வாசலிலிருந்து ஓடிவந்தான். தலை தெறிக்கிற ஓட்டம், வழக்கம்போல். ஆனால் வழக்கம்போலக் கத்தவில்லை: காதைக் கிழிக்கவில்லை. வீட்டுக்குள் வரும்பொழுது எப்படிச் சத்தம் போடாமல் வரமுடிந்தது! அவன் வாய் திறந்தால் நம் காதுகிழியும், ஏதோ மரியாதையாக மிகையாகச் சொல்லவில்லை. நூறு சில்வண்டுகள், நூறு அணில்கள், நம் தோளில் வந்து உட்கார்ந்து கத்துகிற தொண்டை அது. இந்த ஐந்து வயதில், மூன்று அடி உயரத்தில், இந்த ஒல்லியில் எங்கிருந்து இந்தக் குரல் வருகிறதோ!

''வந்துட்டானா ராக்ஷசன்?'' என்று பள்ளிக்கூடத் தீட்டு, தெருத் தீட்டுக்கு அரண்டு முகத்தில் கடுகு பொரிய, திகில் சுளிக்க மூலையை நோக்கி ஒடுங்கி நகர்வான் மாமியார்.

''பாபா ப்ளாக் ஷீப்,'' இல்லாவிட்டால் ''ஹிக்கோரி டிக்கோரி டாக்'' என்று ஒரு பாட்டைப் பாடிக்கொண்டு, அவன் ஓடிவரும்போது பீங்கானில் ஆணியை அழுத்தி உராய்கிற இனிமை, எனக்கு, மாமியாருக்கு, கைக்குழந்தைக்கு எல்லாருக்குமே பாயும்.

''ப்லாக்காயுமாச்சு. சீப்புமாச்சு, இதபாரு, அப்படியே கொல்லையிலே ஓடு. காலைக் கையை அலம்பிண்டு, பேசாம புஸ்தகத்தை எடுத்து வச்சுக்கோ, என்மேலே வந்து பட்டியோ. உன் காலை ஒடிச்சு வச்சுப்பிடுவேன். ப்லாக்கா

யாம் சிப்பாம்! நல்ல பாட்டுடீ இது. நாங்களெல்லாம் படிக்கிறச்சே ஆடுமயிலேறி விளையாடுன்னு சொல்லிக்கொடுப்பா. தொரை பொண்ணு மங்களம் பாடித்துன்னா, ஒரு நாள் முழுக்கக் கேட்டுண்டிருக்கலாம். என்னமோ ப்லாக்காயாம் சிப்பாம், டாக்காம், கரியாம்—என்ன பாட்டுடீ இது!'' என்று கடுகுப் பொரியிலில் ஒரு சிரிப்பு வேறு வரும் மாமியாருக்கு.

''எங்க டீச்சர் சொல்லிக் குடுத்தா'' என்று முதுகு விரைக்க அவள் முன்னால்நின்று விழியை உருட்டி ஒரு கத்துக் கத்துவான் அவன்.

''வாழ்ந்தா அவ! சரி போ, என் மேலே படாதே. இன்னும் பலகாரம் பண்ணலே. மேலே பட்டியோ, முழுகறத்துக்கும் த்ராணியில்லே.''

''வெந்நீர் போட்டுக் குளியேன். வெவ்வவ்வே!''

''ச்சீ போ, அழகு. வேற. மகாலட்சணமாயிருக்கே, பாரு, ரெட்டை மண்டையும் குச்சிக் காலுமா—''

''பாபா ப்ளாக் ஷீப்'' என்று அவள் காதில் (மேலே படாமல்) கத்திவிட்டு, கொல்லைப் பக்கமாக ஓடுவான்.

அவன் உள்ளே வந்தால் அப்படிக் குலை நடுங்கத்தான் நடுங்கும். எதை உடைக்கிறானோ, எதை மேலே வீசுகிறானோ சொல்லமுடியாது. அப்படி உடைந்த கண்ணாடிகள், சீப்புகள், பொம்மைகள், ஸ்லேட்டுகள், பேனாக்கள், பாத்திரங்கள், பாட்டில்கள்—எல்லாம் ஒரு குழந்தைப் பண்ட எக்ஸிபிஷனில் வைக்கக் காணும். டமார் என்று கதவைச் சாத்துதல், கருங்கல்லால் அண்டாவில் கோவில் மணி அடிக்கிற ஓசை, அவர் செருப்பு ஜோடியில் ஒன்று அடுக்களையிலும் ஒன்று வாசல் நாரத்த மரத்தடியிலும் கிடப்பது. இரவு முழுவதும் பகல் பஞ்சத்தைப் போராடத் தொட்டி நிறைய நிரப்பியிருக்கும் தண்ணீரை அடைத்திருக்கும் துணிக்கிழிசலைப் பிடுங்கிவிடுவது—இதெல்லாம் யார்



செய்யப்போகிறார்கள், அவனைத் தவிர? போன மாதம் அவருடைய சிநேகிதர் தம் மூன்று வயசுப் புதல்வியை முதல் முதலாக அழைத்துவந்தார். அவளைச் சற்று நேரம் நின்று பார்த்தவன், என்ன தோன்றிற்றோ, அவள் காதாண்டைபோய், ''பாபா ப்ளாக் ஷீப்'' என்று கத்தினான். அவ்வளவுதான், அது அரண்டு போய் வீல் என்று ஒரு சத்தம்போட்டு, அழத் தொடங்கிற்று. அதைச் சமாதானப்படுத்த வாசலில்போன நண்பர், வாசலிலேயே அவரோடு பேசிவிட்டுப் போய்விட்டார். தனக்கு இருக்கிற குரல் போதாதென்று, ஊதல்கள், கிலுகிலுப்பைகள் வேறு கொண்டு வருகிறான்.

இவன் எப்படிச் சத்தம் போடாமல் ஓடி வருகின்றான்? கவனித்தேன்.

''என்னடா!''

''எங்க டீச்சர் வராம்மா'' என்று ஒடுங்கி நின்றான். வெறும் ஒடுக்கமில்லை. உடல் கொள்ளாத ஒரு பூரிப்பு. ஓர் அச்சம். ஒரு மரியாதை.

வாசலைப் பார்த்தேன். உயரமாக அந்த உருவம் செருப்பைக் கழற்றாமலே கூடத்தை நோக்கி வந்தது.

''வாங்கோ!''

''நமஸ்காரம்'' என்று சொல்லிக்கொண்டே வந்தாள் 'டீச்சர்'. சொல் என்னவோ நமஸ்காரந்தான். ஆனால் இங்கிலீஷ்காரி சொல்லுகிறமாதிரி இருந்தது. வந்தாள். நல்ல உயரம். அதனால் சிறிது வளைவுகூட. இங்கிலீஷில் இஜட் எழுத்தைச் சற்று உயரமாகப் போட்டாற்போல அல்லது தமிழ்க் கேள்விக்குறிபோல கவிகள் பார்த்தால் கொடி என்று சொல்வார்கள்.

''உட்காருங்கள். சௌக்கியமா?''

''ஓ! சும்மாத்தான் வந்தேன். குழந்தைகளின் பெற்றோர்களை அடிக்கடி பார்க்கிற வழக்கம். அதுதான் சும்மா பொதுவாகப் பார்த்துவிட்டுப் போகலாம் என்று

வந்தேன்.'' (அந்த அம்மாள் இங்கிலீஷில் பேசுகிறாள். அதனால்தான் கொஞ்சம் இலக்கண சுத்தமாக மொழி பெயர்த்து எழுத முயலுகிறேன். தவறு இருந்தால் என் குற்றம்.)

''கொஞ்சம் காபி சாப்பிடறேளா?''

''பரவாயில்லை. நன்றி.''

''ஸ்க்வாஷ்?''

''ஓ நோ. தாங்க் யூ.''

''கொஞ்சூண்டு?''

''டோண் பாதர்—பரவாயில்லை.'' (மொழி பெயர்க்க மறந்துவிட்டது. போனால் போகிறது. இது உங்களுக்குப் புரியும்.)

''என்ன ராமன்? எப்படி இருக்கிறாய்? என்ன செய்து கொண்டிருக்கிறாய்?''

''ஒன்றுமில்லை டீச்சர்'' என்று இங்கிலீஷிலேயே பதில் சொல்லிவிட்டு நின்றான் அவன்.

''குழந்தை எப்படி இருக்கான்? நன்னா வாசிக்கிறானா?''

''அதைப் பற்றித்தான் உங்களிடம் பேசவேண்டும் என்று வந்தேன்.''

''தாராளமாகச் சொல்லுங்கள் சரியா இருக்கானோ இல்லையோ கிளாஸிலே?''

''ம்......!'' என்று இழுத்தாள் டீச்சர்.

''உங்கள் அபிப்பிராயம் என்ன அவனைப் பத்தி?''

''அவனைப்பற்றிய அபிப்பிராயத்தை விட உங்களைப் பற்றிய அபிப்ராயம் என்ன என்று கேட்கவேண்டும், நீங்கள்!'' என்று புன்முறுவலித்தாள் டீச்சர்.

எனக்குத் திக்கென்றது.



''என்ன?''

''குழந்தைகளை இன்னும் நன்றாக வளர்க்கக் கற்றுக் கொள்ளவேண்டும் நீங்கள்.''

''என்னது?''

''ஆமாம்.''

''என்னையா சொல்கிறீர்கள்?''

''உங்களையேதான் சொல்கிறேன்...... ஏன் இப்படி ஆச்சரியத்தில் ஆழ்ந்துவிட்டீர்கள்?''

அவள் சொன்னதுபோல், நான் ஆச்சரியத்தில் தொப் பென்று விழுந்துதான் கிடந்தேன். திடீரென்று அவள் என்னை அதில் தள்ளிவிட்டு விட்டதால் எழுந்து கொள்ள முடியவில்லை. முயன்று கொண்டிருந்தேன். அதனால் தான் என் வாயிலிருந்து பதிலும் வரவில்லை.

சற்று நேரம் சூனியத்தைப் பார்த்துக்கொண்டிருந்தேன். நான் முன்னால் ஆச்சரியப்பட்டது வேறு எதையோ பற்றி. அவளைக் கண்டுதான் முதல் ஆச்சரியம் தோன்றிற்று. டீச்சர் இங்கிலீஷை இங்கிலீஷ்காரி மாதிரியே பேச முயன்று அதில் வெற்றியும் அடைந்திருப்பதைக் கண்டு தான் எனக்கு முதல் வியப்பு. இங்கிலீஷ் பாஷையைப் பேசும் மரியாதைகள் ஒன்றைக்கூட அந்த அம்மாளின் சற்று உலர்ந்து வரி விழுந்த, ஆனால் சிவப்பேறிய உதடுகள் விட்டு வைக்கவில்லை. டபிள்யூ முதலில் வரும் வார்த்தைகளுக்கு உதட்டைக் குவித்தும், 'வி'க்கு விரித்தும், 'அ'வுக்கும், 'ஓ'வுக்கும் இடையான விசித்திர ஒலிகளுக்கும் 'அ'வுக்கும் 'ஏ'க்கும் இடையான இன்னும் விசித்திர ஒலிகளுக்கும் ஈடு கொடுத்தும் அவள் பேசின திறமையைக் கண்டுதான் முதலில் வியந்தேன். இவள் எங்கே இந்த நாகரிக பாஷையை இந்த நாகரிக அசைவுகளுடன் பேசக் கற்றாள்! நான் படித்தது குளத்தங்கரை உயர்தரப் பள்ளியில். என் வாத்தியாரம்மாக்களுக்கு இதெல்லாம் தெரியாது. பணக்கார வீட்டுக் குழந்தைகளுக்குக் கொஞ்சம் அதிகச் செல்லம் சலுகை கொடுப்பார்கள், நாடகம் போட்டால்

அந்தக் குழந்தைகளைத்தான் சேர்த்துக் கொள்வார்கள். பெரிய இடம் என்று நாலு மார்க்குக் கூடப் போட்டு முதலிடத்துக்குத் தள்ளி பரிசுகளைத் தலையில் கட்டுவார்கள். ஆனால் இப்படியெல்லாம் பேசி அவர்கள் ஆச்சரியப் படுத்தினதே இல்லை.

டீச்சரம்மா பேசின முறை போக, இப்பொழுது பேசின விஷயம் என்னைத் திகைக்க வைத்துவிட்டது. அந்த அம்மாள் சொன்னதைக் கேட்டு மண்ணை உண்ட ரவிவர்மா கண்ணனைக் கண்ட யசோதை மாதிரி நான் வாயகல உட்கார்ந்திருந்தேன்.

ஆச்சரியத்திலிருந்து சற்றுத் தள்ளாடி எழுந்து சொன்னேன்: ''எனக்கா குழந்தை வளர்ப்புத் தெரியாது என்று சொன்னீர்கள்?''

''ஆமாம். அப்படிச் சொல்ல எனக்கு வருத்தமாகத் தான் இருக்கிறது.''

''எனக்குக் கல்யாணம் 1948 இல் நடந்தது. அப்பவே பிடிச்சுக் குழந்தை வளர்ப்புத்தானே தொழிலா வச்சுண்டிருக்கேன்? ஆறாவது பாரம் பாஸ் பண்ணின அடுத்த வருஷம் கல்யாணம் ஆச்சு. அதிலேருந்து இதே தொழில் தான். இதிலே மூணு அதிலே மூணு உண்டாகி வளத்துண்டு வரேன். பெரியவன் அடுத்த வருஷம் எஸ். எஸ். எல். ஸி. எழுதப் போறான்; புல்லாங்குழல் சொல்லிக்கிறான். ரெண்டாவது பொண்ணு, எட்டாங்கிளாஸ் படிக்கிறா தியாகராஜ கீர்த்தனை அறுபதும் தீக்ஷிதர் கீர்த்தனை பத்தும் பாடம் அவளுக்கு. மூணாவது பையன் அவன் ஆறாம் கிளாசு; கடம் சொல்லிக்கிறான்; அடதாளத்திலே திம்ரம் பண்ணி வாசிக்கிறான். நாலாவது பொண்ணு, நாலாம் கிளாசு. நாலு வர்ணம் பாடம் பண்ணிவிட்டா. அஞ்சாவது இந்தப்பய; உங்க சிஷ்யன். அரைக் கிளாசுதான். மாடு வாலை உசத்திண்டு ஓடறாப்பல நேத்திக்கு ஒரு படம் போட்டான். நெஜமா ஓடறாப்பலவே இருந்தது. ஆறாவது இதோ இந்தப் பொண்ணு. இதுவும் நன்னாத்தான்



இருக்கும்னு நெனக்கிறேன். நீங்கதான் சொல்லுங்களேன், இந்தக் குழந்தை அழகா, கழுக்கு முழுக்குன்னு இருக்கால்லியான்னு'' என்று கைக்குழந்தையைப் பார்த்தேன். பார்த்துக்கொண்டே மேலும் சொன்னேன்: ''எங்க புவனேச்வரி திருக்களப் பதிகம் சொன்னான்னா மனசெல்லாம் உருகும். நீங்க கேட்டிருக்கேளோ!''

''என்னது!''

''திருக்களப்பதிகம் சம்பந்தர் பாடினது.''

''யாரு சம்பந்தர்?''

''திருஞானசம்பந்தர் தெரியாது? நாயன்மார்—''

''கேள்விப்பட்டிருக்கிறேன். பன்னிரண்டு பக்தர்கள் என்பார்களே.''

''அவர்கள் ஆழ்வார்கள். இவர் அறுபத்து மூவரிலே ஒருத்தர். அவர் பாடினது திருக்களப்பதிகம். அதைப் படிச்சா மனசு சிதறாமல் ஒரு இடத்திலே நன்னாக் குவியும்னு வடிவேலுன்னு ஒருத்தர் சொன்னார். அதை நானும் படிச்சு, புவனாவுக்கும் சொல்லிவச்சேன். அவ சொல்லிக் கேட்கணும் அதை. சொல்லச் சொல்லட்டுமா?...புவனா!''

''ஒநோ—டோண்ட் பாதர், எனக்கு நேரமாகிவிட்டது. குழந்தையைச் சிரமப்படுத்த வேண்டாம்.''

''புவனா பாட்டுக் கிளாசுக்குப் போயிருக்காம்மா'' என்றான் பையன்.

''நீங்க அவ பாடறதைக் கேட்டேள்னா என்னைப் பத்திய உங்க அபிப்பிராயத்தை மாத்திக்குவேள்.''

''எங்களுக்கும் குழந்தை வளர்ப்பைப் பற்றித் தெரியும்மா'' என்றாள் டீச்சர். அவள் முகம் லேசாகச் சிவந்தது. ரோஷச் சிவப்போ என்னவோ, அவள் பயிற்சிக் கல்லூரியில் படித்த படிப்பு, பயிற்சியெல்லாம் அந்தச் சிவப்புக்குள் நீரோட்டமாகத் துடிப்பது போலிருந்தது.

''உங்களுக்குத் தெரியாதென்று சொல்லவில்லையே நான். தெரியும்னுதானே இந்த உத்தியோகம் உங்களுக்குக் கொடுத்திருக்கா?''

''நீங்கள் அதையாவது ஒப்புக் கொண்டீர்களே; ரொம்ப நன்றி.''

''ஆனா, எங்களுக்கு இருக்குன்னாத்தான் நீங்க ஒப்புக்க மாட்டேளாக்கும்?'' என் குரல் சூடேறித்தான் கிடந்தது. ஆறு குழந்தைகளை ஆளாக்க அல்லில்லை, பகலில்லை. அப்படி ஒடித்திருக்கிறேன். விசுக்கென்று இவள் எதையோ சொல்லிவிட்டால், சூடேறாமல் என்ன செய்யும்?

ஆனால் அவள் விருந்தினள் என்ற ஞாபகம் திடீரென்று வந்தது. வந்த ஒரு நிமிஷத்துக்குள் நாம் சண்டையை வளர்ப்பானேன்? ஏன் பொம்மனாட்டி ஜன்மங்களுக்கு இந்த முயலுக்கு மூணுகால் வைக்கிற பிடிவாதம் போக மாட்டேனென்கிறது...? பாவம்! ஏதோ, குழந்தை திருந்த வேண்டும் என்று சொல்லத்தானே வந்திருக்கிறாள்?

குரலை மாற்றிக்கொண்டேன்.

''நான் என்னமோ சொல்கிறேன்னு நெனச்சுக்க வேண்டாம். உங்க மாதிரி நாங்கள்ளாம் விசேஷமா இதுக்குன்னு படிச்சதில்லே. அதனாலே பலவிஷயம் தெரியாமல் இருக்கலாம். குழந்தை எப்படி இருக்கான்? நன்னாப் படிக்கிறனா?''

''படிப்பெல்லாம் பரவாயில்லை. படிப்பைப்பற்றி நாங்கள் அவ்வளவாகக் கவலைப்படுவதில்லை. பையனுடைய நடத்தை, குணம், ஒழுங்கு—இவைதான் முக்கியம் எங்களுக்கு.''

''ஏன், அதெல்லாம் சரியாயில்லையா?'' என்று திரும்பிப் பார்த்தேன். பையனைக் காணவில்லை. புரிந்து கொண்டானோ, இல்லை, என்ன நினைத்துக் கொண்டானோ, எங்கேயோ நழுவிவிட்டான். கொல்லைப் பக்கமா வாசல் பக்கமா என்றுகூடத் தெரியவில்லை.



''சரியாயில்லை என்றும் சொல்லமுடியாது. நன்றாகப் படிக்கிறான்; எழுதுகிறான். ஆனால் குழந்தைகளெல்லாம் அவனைக் கண்டால் அப்படியே சப்தநாடியும் ஒடுங்கிப்போய் விடுகின்றன. போனவாரம் ஒரு குழந்தையினிடம் விடுவிடுவென்று ஓடிவந்தான்; மார்பில் குத்திவிட்டான். இன்றைக்குக் காலையில் மோட்டார் கம்பெனி மானேஜிங் டைரக்டர் சோப்ராவின் குழந்தை மாடிப்படியில் நின்றுகொண்டிருந்தது. அப்படியே பின்னாலிருந்து தள்ளிவிட்டான். நல்ல வேளையாக மாடிப்படி ஏறிவந்து கொண்டிருந்த பியூன் சட்டென்று குழந்தையைத் தாங்கிக் கொண்டான்.''

எனக்குத் தலை சுற்றியது. நெற்றி புடைத்துக் கொள்கிற மாதிரி இருந்தது. அந்தப் பயல் சமயம் பார்த்து ஓடிவிட்டானே. பிடித்தாவது இழுத்து வந்து வெந்நீர் அடுப்பு விசிறிக் காம்பை அவன் முதுகில் ஒடிக்க வேண்டும்!

''அட ராட்சசா!'' என்றேன், என்னை அறியாமல்.

''உங்களுக்கே தாங்கவில்லை, பார்த்தீர்களா?''

''சில சமயம் தாங்கத்தான் முடியவில்லை.''

''நான் சொல்கிறபடி செய்கிறீர்களா?''

''செய்யறேன்.''

''மாசம் முப்பது ரூபாய்க்கு மேல் செலவாகாது.''

''ஹாங்! மாசம் முப்பது ரூபாயா!''

''முப்பது ரூபாய் என்று மலைக்க வேண்டாம். அதற்குத் தகுந்த பலன் கிடைக்கும்.''

கோவில் மணி அடிக்கிற ஓசை...

''மாசம் முப்பது ரூபாய் செலவழிச்சு என்ன பண்ணணும்?''

''நிறையக் காகிதம் வாங்கிக் கொடுக்க வேண்டும். சாதாரணக் காகிதம், ட்ராயிங் காகிதம், முரட்டுக் காகிதம், வழவழக் காகிதம், மஞ்சள் காகிதம், நீலக் காகிதம்,

சிவப்புக் காகிதம், பச்சைக் காகிதம், ஊதா காகிதம், ஆரஞ்சுக் காகிதம், வெள்ளைக் காகிதம், கறுப்புக் காகிதம், கால் பவுண்டு அட்டை, அரைப் பவுண்டு அட்டை, ஒரு பவுண்டு அட்டை—இதெல்லாம் நிறைய நிறைய நிறைய வாங்கிக் கொடுக்க வேண்டும்'' என்று டீச்சர் கையை ஆட்டியும், முகத்தில் வகைக்கு ஒரு பாவத்துடன் ஆர்வமாக, உற்சாகமாகச் சொல்லிக் கொண்டிருந்தாள். அவள் சொல்லும் பொழுதே அத்தனை காகிதங்களையும் கூடம் முழுவதிலும் அடுக்கி விட்டாற்போல இருந்தது எனக்கு. ஆகா! எத்தனை வர்ணங்கள்! எத்தனை வகைகள்! என்ன வழுவழுப்பு? எத்தனை அளவுகள்!

''இத்தனைக்கும் மாசம் முப்பது ரூபாய் போதுமா?''

''போதாவிட்டால் அப்புறம் பார்த்துக் கொள்கிறது!''

''சரி இத்தனை காகிதமும் எதற்கு?''

''புரியவில்லையா? இப்பொழுதுதானே நீங்களே சொன்னீர்கள். உங்கள் பையன் மாடு ஓடுகிறாப் போலவே நேற்று ஒரு சித்திரம் போட்டானென்று? சித்திரம் அவனுக்கு இயற்கையாக வருகிறது. அதைப் போட்டுக்கொண்டே இருக்கவேண்டும்.''

''எதுக்கு?''

''இனர்ஜி, இனர்ஜி—சக்தி, சக்தி—உங்கள் குழந்தை உடம்பில் அவ்வளவு சக்தி இருக்கிறது. அதெல்லாம் செலவழிய வேண்டும். இல்லாவிட்டால் உங்களையே பிடித்து வாசற்படியிலிருந்து தள்ளிவிடுவான்; அல்லது கிணற்றில் நீர் மொள்ளும்போது இழுத்து தள்ளிவிடுவான்..'

''நல்ல வேளையாக இங்கே கிணறில்லை.''

''இத்தனை காகிதமும் அவன் கவனத்தை இழுத்துக் கொண்டிருக்கும்.''

''நாலு நாளில் அவனுக்கு இந்த வேலை அலுத்து விட்டால்?''

''விறகு கிறகு உடைக்கச் சொல்லுகிறது,''



''இங்கே கரியடுப்புத்தானே எல்லாத்துக்கும்? விறகைப் பார்த்தா வீட்டுக்காரன் விரலை ஒடிச்சுப்பிடுவனே?''

''அது சரி. ஆனால் குழந்தைக்குச் சித்திரம் அலுக்காது. அப்படி வேறு செயல் வேண்டுமென்றால் ஒரு மணிக்கு ஒரு தடவை, அவனைக் கூப்பிட்டு உன் பலம் கொண்ட மட்டும் இரைந்து கத்துடா என்று கத்தச் சொல்லவேண்டும். சேர்ந்து கிடக்கிற சக்தியெல்லாம் செலவாகிவிடும்.''

''டீச்சரம்மாவைக் கண்டதுந்தான் இப்படி நின்றான். இல்லாவிட்டால் இரும்புக்காது இருந்தால்தான் இந்த வீட்டில் உயிரோடு இருக்கலாம்.''

''நான் எது சொன்னாலும் ஆட்சேபம் சொல்கிறீர்களே!''

''நான் முப்பது ரூபாய்க்கு எங்கே போவேன்? இந்த அரைக்கிளாசுக்கு மாசம் இருபது ரூபா சம்பளம் நீங்க நடத்தற பள்ளிக்கூடத்துலேதான் வாங்கறேன். ஏதோ பெரிய மனுஷாள்ளாம் நடத்தறேளே, நன்னாகத்தான் இருக்கும்னு அதைத் தூக்கி இதிலே போட்டு இதைத் தூக்கி அதிலே போட்டு, எப்படியோ சம்பளத்தைக் கட்டிண்டு வரேன்.''

''அவ்வளவு சிரமமாயிருந்தால் வேறு முனிசிபாலிட்டிப் பள்ளிக்கூடம், இல்லை, அந்த மாதிரி சாதாரணப் பள்ளிக் கூடத்திலே சேர்த்திருக்க வேண்டும் நீங்கள்.''

''அதுதான் நியாயம். ஆனால் மனசு கேட்கிறதா? பணக்காரர்கள் மாதிரி இருக்கணும்னு ஆசை சித்தைக்கொரு தடவை மனசிலே பூந்து ஆட்டி வக்யறதே. அவா மாதிரி நாமதான் இல்லே. நம்ம குழந்தைகளாவும் அவா மாதிரி நாமதான் இல்லே... குழந்தைகள் படிக்கிற இடத்திலே படிச்சா, பிற்காலத்திலேயாவது அப்படி ஆகலாம்னு ஒரு நப்பாசை, சொப்பனம். அதனாலே செஞ்சுப்ட்டேன். இந்த அரைக் கிளாசுக்கு இனாமாச் சொல்லி வைக்கிற பள்ளிக்கூடம் இருக்கு. ஒரு ரூபா இரண்டு ரூபா வாங்கிண்டு சொல்லிக் கொடுக்கிற

பள்ளிக்கூடம் இருக்கு. இருபது ரூபா பள்ளிக்கூடத்திலே சேர்த்துடறதுன்னு சேர்த்து, பல்லைக் கடிச்சுண்டு இருக்கேன். இந்த ஊரிலே ஒரு ஆபரேஷனுக்கு ஆயிரம் ரெண்டாயிரம், கண்ணாலெ பார்க்கறதுக்கு இருபத்தஞ்சு அம்பதுன்னு வாங்கற டாக்டர்லாம் இருக்காளாமே, அந்த மாதிரின்னா இருக்கு நீங்க சொல்ற வைத்தியம்! நியாயமா சம்பாதிச்சு, கேட்ட வரியை ஒழுங்காக் கொடுத்திண்டிருக்கிறவாளுக்கு இப்படியெல்லாம் பணத்தைக் கொட்ட முடியுமோ?''—என் குரலில் முன்னே இருந்த கோபம் இல்லை. விஷயத்தில்தான் கோபம். குரல் காக்காய்கள் கொத்தின கழுகு மாதிரி துவண்டு கிடந்தது.

''உங்களைப் பார்த்தால் ரொம்பப் பரிதாபமாயிருக்கு.''

''எனக்கே என்னைப் பார்த்தா அப்படித்தான் இருக்கு. இந்த அஞ்சு வயசு குழந்தை பிறகாவது உடைக்கட்டும், வாங்கிக் கொடுக்கலாம்னா அதுக்கும் இல்லாம இப்படியா வீடு வாய்க்கணும்?''

''நான் வறேம்மா. ரொம்ப நன்றி.''

''எதுக்கு?''

''நான் சொல்ற யோசனைகளைக் கேட்கவாவது கேட்டீர்களே. நான் வருகிறேன்'' என்று புன்முறுவலுடன் விடைபெற்று வெளியேறினாள் டீச்சர் அம்மா.

விசிறிக்காம்போடு காத்திருந்தேன். ஆனால் அந்தப் பயலை அடிக்க முடியவில்லை. எங்கிருந்தோ ஒரு பெரிய அட்டைப்பெட்டியை இருகைகளாலும் அணைத்துக் கொண்டு வந்தான். நாலு வீடு தள்ளி நந்தியாவட்டை மரம் மூன்றை வெட்டி விட்டார்களாம். கட்டிடம் கட்டுவதற்காக எதிரே இருந்த ஓர் அட்டைப் பெட்டியை இரவல் வாங்கி அந்தப் பூக்கள் அத்தனையையும் பறித்து வந்து விட்டானாம். ''நிறைய இருக்கும்மா. மாலை கட்டிச் சாமிக்குப் போடலாம். அப்புறம் நீ புவனா, பவானி எல்லாரும் வச்சிக்கலாம்மா'' என்றான். சிரிப்புத்தான் வந்தது எனக்கு.


339066/4101009


ஒரு வாரம் கழித்து, கடுதாசி ஒன்றைக் கொண்டு வந்து. ''கையெழுத்துப் போட்டுக் கொடம்மா'' என்றான் அவன். உற்றுப் பார்த்தேன்.

''ஏண்டா, போன பரீட்சையிலே கிளாசிலே மூன்றாவது ராங்க்; இப்ப ஏன் முப்பத்திரண்டிலே சரிஞ்சிருக்கே?''

''நான் நன்றாகத்தான் எழுதினேன். உங்கிட்டக் கூடச் சொன்னேனே, பகலெல்லாம்...'' அவன் கண்ணைப் பார்க்க முடியவில்லை. அழத் தயாராக இருந்தான் போலிருந்தது.

031, 3JAN, S N7;3

எனக்கு இருப்பாக இருக்கவில்லை. காரணமும் தெரியவில்லை. ஒரு வேளை அவன் சொன்னது சரிதானோ என்னவோ? படிப்பிலும் இப்படி ஆகிவிட்டானோ?

''டீச்சர் வீடு தெரியுமாடா உனக்கு?''

''எனக்குத் தெரியும்மா'' என்றாள் புவனா. அவளை அழைத்துக்கொண்டேன்; போனேன். டீச்சரைக் கண்டு கேட்கா விட்டால் எனக்கு நிலை கொள்ளாது போலிருந்தது.

பெரியவீடு, காம்பவுண்டு, தோட்டம், கேட்டிலிருந்து வீட்டுக்குள் போகிற வரையில் முல்லைக் கொடி வளைவு

வாசலில் பெரிய வராந்தா. வயசான அம்மாள் ஒருத்தி உட்கார்ந்திருந்தாள்.

''டீச்சர் அன்னபூர்ணி இங்கேதானே இருக்கிறார்?''

''ஆமாம்மா, அவ இல்லையே! பள்ளிக்கூடத்திலிருந்து வந்தா; உடனே வெளியிலே போயிட்டாளே!''

''எப்ப வருவர்?''

''அது என்னமோம்மா! நான் என்னத்தைக் கண்டேன்? எங்கிட்ட சொல்றாளா கொள்றாளா? என்னமோ ட்ராமா ஒத்திகையாம்; பொம்மனாட்டிப் பசங்கள்ளாம் அடுத்த வாரம் ட்ராமா போடறதாம், கொட்டகையிலேயே ஒத்திகை பார்க்கறாளாம். வர ஒன்பது மணியாறதோ,

தேவநேயப் பாவாணர் மாவட்ட
மத்திய நூலகம்,
735 அண்ணா சாலை,

பத்து மணியாறதோ? என்ன விசேஷம்? வாம்மா, உட்காரு. நின்னுண்டே பேசறியே!'' கிழவியின் பரிவை எதிர்த்து நிற்க முடியவில்லை. உட்கார்ந்தேன்.

''நீயும் உட்காரு குழந்தை! உன் பெண்ணா?''

ஆமாம்.''

''உன் மாதிரியே லட்சணமாயிருக்காடியம்மா. ஆசியும் அதிருஷ்டமுமா, குஞ்சும் குழந்தையுமா நன்னா இருக்கணும்.''

''குஞ்சும் குழந்தையுமா இருந்தாப் போருமா? வளக்கத் தெரிய வேண்டாமா அதுகளை?''

''பார்த்தா பளிச்சுன்னு, சமத்தா இருக்கு குழந்தே. எல்லாம் நன்னாருக்கும்...ம்...உன்னை எங்கியோ பார்த்தாப்பல இருக்கே.''

''போன வருஷம் டிசம்பர் மாசம் சபாவிலே ஹரிகதை நடந்ததே. அப்ப என் பக்கத்திலே உட்கார்ந்துண்டு கேக்கலியா நீங்க?'' என்றேன்.

''பாத்தியா? ஆமாம்மா! சட்டுன்னு சொல்லிட்டியே; இத்தனை கூட்டத்திலே என்னை ஞாபகம் வச்சிண்டிருக்கியே! ம்!''

அந்த அம்மாள் குலம் கோத்திரம் குழந்தைகள், என் கணவர், மாமியார்—எல்லாரையும் பற்றி விசாரித்தாள். அவள் டீச்சர் அம்மாவின் தாயாம். நாலு வருஷம் முன்னால் குறைப்பட்டு, பெண் வீட்டோடு வந்து விட்டாளாம். இரண்டு பையன்கள் அஸ்ஸாமிலும் ஏடனிலும் வேலையாக இருக்கிறார்களாம்.

நடுநடுவே உள்ளே உள்ளே எட்டிப் பார்த்தாள் கிழவி. ஏதோ சிணுக்கு அழுகையாகக் கேட்டது. உள்ளே எழுந்து போனாள். புவனாவும் எட்டிப் பார்த்துவிட்டு, ''அம்மா, குழந்தைம்மா; தொட்டில்லே போட்டிருக்கு'' என்றாள்.

''வாடா கண்ணு. உள்ளே வா, அம்மாவையும் கூட்டிண்டு வா'' என்று புவனா பார்ப்பதைப் பார்த்து கூப்பிட்டாள் கிழவி.



போனோம்.

தொட்டிலில் குழந்தைதான். சுற்றிலும் பஞ்சு. மீன் எண்ணெய் வாடை?

''பேத்தி, ஏழு மாசத்துக்கு மேலே வயத்திலே இருக்க மாட்டேன்னு வெளியிலே வந்துட்டுது. வெந்நீர்ப் பாடம், காட்லிவர் ஆயில்—இப்படி உபசாரம் பண்ணி இப்பத்தான் மனுஷக் குழந்தை மாதிரி ஆயிருக்கு''

சேப்பங்கிழங்கு உரித்தாற்போலக் கிடந்த அந்தக் கிடையைப் பார்த்துப் புவனாவின் புருவம் சுளித்தது. கை பட்டால் சொத சொதவென்று விண்டு விழுந்துவிடும் போல எனக்கு ஒரு நடுக்கம், சந்தேகம்.

''இருபது வயசிலேர்ந்து கல்யாணம் பண்ணிக்கோ பண்ணிக்கோன்னு நான் கிடந்து கத்தினேன். என் பிள்ளைகளும் கத்தித்துகள். கேக்கலெ. முப்பத்தோரு வயசுக்கப்புறம், இவர் என் மேலே ரொம்ப ஆசைப்படறார்னு சொல்ணா பண்ணிண்டா யாருக்குப் பிரீதி? யௌவனம் எல்லாம் போனப்புறம் என்ன கல்யாணம் வேண்டிக் கிடக்கு? முதல் பிள்ளையை வயத்தைக் கீறி எடுக்க வேண்டியிருந்தது. அதுவும் தங்கலே, இது ஏழு மாசத்துக்கு மேலே இருக்கமாட்டேன்னு இப்படிப் படுத்துண்டு தவிக்கிறது. அது என்ன உடம்போ, என்ன பலமோ! இத்தனை நாள் கழிச்சுப் பண்ணிக்கத்தான் பண்ணிண்டியே உத்தியோகத்துக்கு ஒரு முழுக்குப் போட்டுப்ட்டு பேசாம வீட்டோட கடக்கப்படாதோ? அவர் ஆயிரம் ரூபா சம்பாதிக்கிறார். நீ என்ன பண்ணப்போறே சம்பாதிச்சு? அம்மான்னு ஒருத்தி போக்கத்தல இருக்கிற தைரியம் தானேங்கறேன். ம்! சமையக்காரியை வச்சா. அவ என்னமோ அரண் மனைச் சமையல் மாதிரி சாமானை வாரி இறைக்கறா. என்னடீம்மான்னு கேட்டேன். அவ்வளவுதான், இந்தப் பக்கம் தலைகாட்டலெ. முந்தா நா உங்க டீச்சரம்மா ஒரு ரசம் வச்சாளே பாரு! மூணுநாழி வேர்க்க விறுவிறுக்கது விரலாலே கொஞ்சம் எடுத்து நாக்கிலே வச்சிண்டேன்

சமுத்ர ராஜாவே வந்து வச்சாப்பல இருந்தது. அப்புறம் இத்தனை புளியைக் கரைச்சுக் கொட்டி, பொடியைப் போட்டுப் பெருக்கி ஒப்பேத்தினேன். இப்ப நீ இல்லையோ? என்னடிம்மா குறைஞ்சு போயிட்டே நீ? ஏன் இப்படிக் கிடந்து அலையறதுகள் இதுகள்? எதுக்காக ஜன்மா எடுத்திருக்கோம். கல்யாணம் பண்ணிக்குறோம்? ஏதாவது யோசிக்கிறதுகளோ? அவன் கிளப்புக்குப் போறான். சீட்டாடறான்னு மாத்திரம் அழத் தெரியறதே! பின்னே வேற எங்க போவார் அவர்னேன்!'' என்று சொல்லும் பொழுது அம்மாளின் மூக்கு மலர்ந்தது. பிறகு அவளுக்கே அதிகமாகப் பேசினாற்போலத் தோன்றிற்றோ என்னவோ.

''நான் பாட்டுக்குப் பேசி உன்னை மெனக்கெடுத்துப் பிட்டேன். என்ன விஷயம்னு சொல்லு. அவ வந்தவுடனே சொல்றேன்'' என்றாள்.

''பரவாயில்லை, நான் பள்ளிக்கூடத்திலேயே பார்த்துக்கறேன்.''

''சித்தெ இரு. குங்குமம் எடுத்துண்டு போ'' என்று உள்ளே போய், குங்குமமும் தேங்காய் இரண்டும் கொண்டு வந்தாள். ''வெத்திலை போட்டுக்க ஆள் இல்லை. குங்குமந்தான் இருக்கு.''

''பரவாயில்லெ வரட்டுமா!''

''வாடிம்மா. நன்னாயிருக்கணும், தாயே பராசக்தி,'' என்று பெருமூச்சுடன் விடைகொடுத்தாள் அம்மாள்.

எல்லாம் பராசக்தி மயந்தான். உபரி சக்தியை நாடக ஒத்திகையில் செலவழிக்கக்கூட, பராசக்தியின் கிருபையில்லாமல் முடியுமோ!

—

1962

# வீடு

''யாரது? யாரது''ன்னேன். ''கேட்டை அப்புறம் திறக்கலாம். யாருன்னு சொல்லுங்க.''

''இங்கேதானே சந்தானம்னு—''

''ஆமாம். நான்தான் சந்தானம். என்ன வேணும் உங்களுக்கு?''

''குட்மானிங்.''

''குட்மானிங், என்ன வேணும்?''

''இந்த வீடு...?''

''வீடு கீடெல்லாம் விக்கிறது கிடையாது.''

''விக்கப் போறதாகக் கேள்விப்பட்டேன்...''

''அதெல்லாம் கிடையாது கிடையாது, சார். வீடு விக்கிறதில்லை...அப்புறம் ஏன் நிக்கிறீங்க?''

அப்புறம் ஏன் நிற்கிறான்? 'கேட்டை'த் திறப்பேனா? வீடு வாங்கு முகம் கொடுத்துத்தான் பதில் சொல்வேனா? வீடு வாங்க வந்திருக்கிற மூஞ்சியைப் பாரு!

வீடு வாங்குகிறான்களாம் வீடு! ஏன், சொந்த வீடு இல்லாவிட்டால் உடம்பு கேட்காதோ, சாப்பிடாதோ, படுக்காதோ, நடக்காதோ? எதற்காக வீடு வீடு என்று அலையறான்கள்? வீடு இல்லாவிட்டால், செத்துப் போனதும் அங்கே வீடு கொடுக்க மாட்டேன் என்று சொல்லி இடுப்பில் கட்டிக்கொண்டு விடுவாரோ சாமி? என்னமோ

போகப்போகிறது மாதிரியல்லவா பறக்கிறான்கள். சொந்த வீடு இல்லாமல் குடியா முழுகிப் போய்விடும்? சொந்த வீடு வைத்துக் கொண்டு நான் என்ன வாழ்ந்துவிட்டேன்? என்னைப் பார்த்தால் தெரியவில்லையா?

''இது ரொம்ப டேஞ்சரஸ் வீடு வாங்காதே...'' என்று சொன்னால் தெரியுமா? வாங்கிப் பார்த்து அனுபவிக்கிற போதல்லவா தெரியும்? வேண்டாம். பேசாமல் போங்கள். போய்விடுங்கள் பணம் இருந்தால் பாங்கில் போட்டு வையுங்கள். இப்பொழுதெல்லாம் பாங்குக்காரர்கள் பணம் பணம் என்று பறக்கிறார்கள். அரை வட்டி, முக்கால் வட்டி கூடக் கொடுக்கத் தயாராயிருக்கிறார்கள். கறுப்புப் பணமோ? பயமாயிருக்கிறதோ?—அப்படியானால் கறுப்பு விலைக்கே நகையாக வாங்கி வைத்துக்கொள்ளுங்கள்......ஓகோகோ! நகையாக வாங்கினால் அதைப் பெண்டாட்டி மீது போட வேண்டும்—அதற்கு மனசு இடம் கொடுக்கவில்லையாக்கும்? ஏதாவது ஹோட்டல், கிட்டல், கடைகிடை என்று வைத்துத் தொழில் பண்ணுங்கள். ஹோட்டல் வைத்து மக்களுக்குத் தொண்டு செய்யுங்கள். குருக்ஷேத்திரத்துக்குச் சோறு போட்ட நாடு ஒரு படி அரிசிக்கு லபோ லபோ என்று பறக்கிறது. ஹோட்டல் வைத்தால் உங்களிடம் வந்து சாப்பிட்டுவிட்டுப் போய்விடுவார்கள். பாரத மாதா சுபிட்சமாக வளர்ந்து கொண்டிருக்கிறாள்—என் பெண்டாட்டி மாதிரி. ஏகப் பருமனும் உயரமுமாக வளர்ந்து விட்டாள். அவளுக்குக் கூடை கூடையாக முகப் பவுடர், உதட்டுச் சாயம் எல்லாம் வேண்டியிருக்கிறது. நைலான் கைலான் புடவையெல்லாம் வேண்டியிருக்கிறது. தினம் ஒரு சினிமா பார்க்க வேண்டியிருக்கிறது. பழைய பாரத மாதா இல்லை அவள்; சுதந்தரப் பெண்டு. பழைய கட்டுப் பெட்டி இல்லை; புதுப் பெண்டு. அவளுக்குக் கார் வேண்டும், ஸ்கூட்டர் வேண்டும்; அறுநூறு மைல் வேகத்தில் பறக்கிற விமானம் வேண்டும். தாயார் இப்படிக் கிடந்து பறக்கும்போது, ஏன் இப்படி சொந்த வீடு சொந்த வீடு என்று அலைகிறீர்கள்?



சோறு சோறு என்று சாரி சாரியாகத் தெருவிலும் சந்திலும் நின்று ஏன் இப்படிப் பறக்கிறீர்கள்? உங்களுக்கு வெட்கமா இல்லை? பரதேசி மாதிரி, பிச்சைக்காரர்கள் மாதிரி அரிசிக்கு நிற்க உங்களுக்கு வெட்கமாக இல்லை? தாயாரின் நல்ல பேரைக் கெடுக்காதீர்கள். அவளை நடக்க விடாதீர்கள். காரும் ஸ்கூட்டரும் வாங்கிக் கொடுங்கள். போங்கள்—போங்கள்.

வீடு விலைக்கு வேணுமாம்! கிடைக்காது, கிடைக்காது. போங்கள். தலை கீழாக நின்றாலும் கிடைக்காது. இவளே தலை கீழாக நின்றாலும் கொடுக்க மாட்டேன். எத்தனை நாளாக இவள் பூச்சாண்டி காட்டுகிறாள்! நான் அதற்கு மசியவில்லை. தெருவோடு போகிற நீங்கள் கேட்டா கொடுக்கப் போகிறேன்? அதெல்லாம் முடியாது போங்கள்.

என்னை யார் என்று உங்களுக்குத் தெரியாது. குருசாமி என்று ஒருத்தர் இருந்தாரே, கேள்விப்பட்டிருக்கிறீர்களா?.. உங்களுக்கு என்ன வயது? இருபதா?—போதாது...... முப்பதா? இதுவும் போதாது—நாற்பதா? பாதகமில்லை. ஆனால், அதுகூடப்போதாது என்றுதான் சொல்லுவேன். உங்களுக்கு ஐம்பது வயதாக இருந்தால், குருசாமியைப் பார்த்திருப்பீர்கள், அல்லது விபரம் தெரிந்த, பக்குவமான இருபதுவயதில் அவரைப்பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள்.

குருசாமி எங்கள் தாத்தா. இந்தியாவில் பஞ்சாப் என்ன, பாட்னா, பம்பாய் என்ன, இன்னும் எத்தனையோ ஊர்க் கோர்ட்டுகளில் நடந்த கேஸ் எல்லாம் அவருக்குத் தலை கீழ்ப் பாடம். அவர் எந்தக் கோர்ட்டில் ஆஜரானாலும் சங்கீதக் கச்சேரியைக் கேட்கிற மாதிரி கூட்டம் கூடும். அவர் பேச்சைக் கேட்க அத்தனை ஆசை ஜனங்களுக்கு. கோர்ட்டா, பொதுக்கூட்டமா என்று சந்தேகம் வந்துவிடும். ஜிலுஜிலு வென்று, ஒரு தட்டின்றி ஒரு தடங்கலின்றிப் பேசுவாராம். ஜட்ஜ், எதிர்க்கட்சி வக்கீல், இன்னும் பரம விரோதிகள் கூட வாயைப் பிளந்து கேட்டுக் கொண்டிருப்

பார்களாம். எந்தப் புத்தகத்தை எடுத்தாலும்—அது எத்தனை பெரிய புத்தகமாயிருந்தாலும்—ஒரு தடவை வாசிப்பாராம். அப்புறம் அதை மூடிவைத்தால், அப்படியே பாராமல் வரிவரியாக, வார்த்தை வார்த்தையாகச் சொல்லுவாராம்—இதையெல்லாம் அம்மா சொல்லிக் கேட்டிருக்கிறேன்—குருசாமி எனக்கு அம்மாத் தாத்தா.

நான் பள்ளிக்கூடம் போக ஆரம்பித்தபோது குருசாமித் தாத்தா கோட்டுப் போட்டுக்கொள்ளவில்லை. கோர்ட்டுக்குப் போகவுமில்லை. திண்ணையில் முழு வழுக்கையும், காலர் இல்லாத கிழச்சட்டையுமாக நாற்காலியில் உட்கார்ந்துவிட்டார். வெள்ளை வெளேர் என்று சட்டை போட்டிருப்பார்—பத்திரிகை வாசிப்பார்.

வாசலோடு கலியாண ஊர்வலம் போகும். கோயில் உற்சவத்தின்போது சாமி பவனி போகும். வீட்டுவாசல் முன் நிற்காமல் போகாது. தாத்தாவைக் கண்டால் நின்று ஒரு ராகம் வாசித்து, ஒரு கீர்த்தனம் வாசித்துவிட்டுத்தான் நாதஸ்வரக்காரர் அப்பால் நகர்வார். அந்தக் காலத்தில் கோவிலுக்குப் பொட்டுக்கட்டுகிற வழக்கம் உண்டு. தாசிகள் என்று தனியாகச் சிலபேர் இருந்த காலம். ஸ்வாமி புறப்பட்டு வரும்போது, பூதம், பாண்டு, நாதசுரம், பொய்க்கால் குதிரை இவற்றோடு பொட்டுக் கட்டின புவனேச்வரியும் தன் அம்மாவோடு சிலுக்சிலுக்கென்று நடந்து வருவாள். ஐயோ, ஐயோ! அவளைப் பார்க்கிறபோது எனக்கு உடம்பெல்லாம் சுடும். ஆண்டாள் மாதிரி கொண்டைப் பின்னல் போட்டிருக்கும். தலைக்கு நடுவில் வகிட்டிலிருந்து சுட்டிப்பதக்கம் தொங்கும் உச்சந்தலைக்கு இருபக்கமும் சந்திரப் பிரபை, சூர்யப் பிரபை. காலில் சிகப்பு நிஜார். அதற்குமேல் வரிந்து கட்டின புடவை. மூக்கில் புல்லாக்கு. நெற்றியில் சாந்துப் பொட்டு, வாய் நிறைய வெற்றிலை.

ஐயோ! எத்தனை பெரிய கண்: கன்றுக்குட்டிக் கண் மாதிரி. இடது கைச் சுண்டுவிரல் நகத்தால் அவள் வெற்றிலைக் கசிவை உதட்டிலிருந்து வழித்துவிடுவாள். வேர்



வையை உதறுவாள். ஐயோ! இப்போது நினைத்தாலே உடம்பெல்லாம் சுடுகிறது. ஒரு கன்னத்தில் எப்போதும் வெற்றிலை உப்பல். அவள் நடக்கிறபோதே, 'க்ணிக் க்ணிக்' என்று மெட்டி ஒலிக்கும். சதங்கை குலுங்கும், வீட்டுக்கு முன்னால் ஸ்வாமி வரும். நாதஸ்வரம், தவுல் எல்லாம் சட்டென்று ஓய்ந்துவிடும். அந்த நிசப்தத்தில் கொடிமாதிரி புல்லாங்குழல் எழும். சுருதிப் பெட்டி ரீங்கரிக்கத் தொடங்கும். கிழவி பாடுவாள், ஒரு ஒன்றரைக் கண்ணனும் பாடுவான். கன்றுக் குட்டிக் கண்ணைச் செருகியும் சுழற்றியும் அந்தப் பெண் ஆடுவாள்.

மற்ற இடங்களில் மூன்று நிமிஷம் நடக்கிற சதிர், எங்கள் வீட்டெதிரே ஐந்தாறு நிமிஷம் நடக்கும் கிழவி காவிப்பல்லைத் திறந்து பாடுவாள். என்னைக் கேட்டால் கிழவிதான் அழகு என்று சொல்லுவேன். அவளுக்கு உடம்பு நல்ல தாட்டியாக இருக்கும். சிரித்தால் கண்ணிடுங்கி அசாத்தியமான களையாக மலரும். பெண்ணின் முகத்தில் வழவழப்பையும் கண்ணையும் தவிர வேறு ஒன்றும் பார்க்க முடியாது. பெண்ணைப் பார்த்தால் என் உடம்பு குப்பென்று சூடு பறக்கும் என்றேனே, அவள், அம்மாவைப் பார்த்தால் என் காலெல்லாம் நடுங்கும். ஓடிவிட்டால் தேவலை போலிருக்கும். உடம்பே நிலை கொள்ளாது. அவ்வளவு மோகனம். சதிர் முடிந்த பிறகு மறுபடியும் 'பீப்பி பீப்பி' என்று சிவாளி தட்டிவிட்டு நாதஸ்வரம் பழையபடி கிளம்பும். காஸ் விளக்கு நகரும், சாமி நகரும். கிழவி திண்ணைப் பக்கம் வந்து ''நமஸ்காரங்க'' என்று தாத்தாவைக் கும்பிடுவாள்.

''யாரு! முத்துவா? சௌக்யமா இருக்கியா?'' என்று இடுப்பில் கையை வைத்து மேலேயிருந்தவாறு, பார்த்துக் கொண்டே கேட்பார் தாத்தா.

''இருக்கிறேங்க'' என்பாள் கிழவி. சற்று கம்மல் குரல்—நிறைய வெற்றிலை போடுவதாலோ என்னமோ தெரியவில்லை—குடிக்கிறார்களே அவர்கள் குரல்கூட இப்படிக்

கம்பி விடுமாம்; எப்படியாவது இருக்கட்டும்—அந்தக் கம்மல் கொஞ்சம் ஆண்குரல் மாதிரி கேட்கும். ஆனால், அந்தக் கம்மல் என் உடம்பில் புகுந்து என்னை என்னமோ பண்ணும். நான் அப்போது நாலாவது பாரம் வாசித்துக் கொண்டிருந்தேன். கிழவியின் குரலும் நாணிய சிரிப்பும் என் முதுகில் நடுக்கமாக ஓடும் மாட்டின் முதுகில் கை வைத்தாற்போல என்தோல் சிலிர்க்கும். நெஞ்சு உதறும்.

பெரிய நாகஸ்வரமாக இருந்தால் ஒரு அரைமணி தாத்தாவுக்கு முன் கச்சேரி—கடைசியில் கும்பிடு—தாத்தா விசாரணை—எல்லாம் நடக்கிற வழக்கம். நாகஸ்வரக் காரர்கள் மட்டும் இல்லை. வாசலோடு யார் போனாலும் தாத்தாவுக்கு ஒரு கும்பிடு உண்டு. கடைக்காரர்கள், புரோகிதர்கள், ராமாயண சாஸ்திரியார்கள், ஓதுவார்கள், சங்கீதக்காரர்கள், நாட்டு வைத்தியர், யாராயிருந்தாலும் எதிரே நாலு வீடு தள்ளியிருக்கிற கோயில் திண்ணைப் பிள்ளையார்க்குப் போடுவது போல தாத்தாவுக்கும் ஒரு கும்பிடு போடாமல் நகரமாட்டார்கள். தாத்தா பார்த்துப் பதில் கொடுத்தாலும் கொடுப்பார்; பேசாமலும் இருப்பார்.

அப்பேர்ப்பட்ட தாத்தா அவர். அரண்மனைக் கேஸெல்லாம் ஜயித்துக் கொடுத்தார் தாத்தா. நாட்டுக் கோட்டை நகரத்தார் வழக்கெல்லாம் தீர்த்துவைத்த தாத்தா. சென்னையிலிருந்து மதுரை வரைக்கும் வழக்காடி வந்த தாத்தா. அரண்மனை மாதிரி தனக்கு மட்டுமின்றி, தன் மூன்று பிள்ளைகளுக்கும் ஒவ்வொன்று, மூன்று பெண்களுக்கும் ஒவ்வொன்று என்று வீடு கட்டிக் கொடுத்த தாத்தா. சுயார்ஜிதச் சொத்து அதனால்தான் பிள்ளைகளுக்குக் கொடுத்ததுபோல மூன்று பெண்களுக்கும் இருபது இருபது காணியும், ஒவ்வொரு அரண்மனையையும் எழுதி வைத்து விட்டுப் போனார். தாத்தா வீடென்றால் இந்த வீடு மாதிரியா? ஒவ்வொரு வீடும் கொல்லைக்கும் வாசலுக்கும் காசி—ராமேச்சரமாக இருக்கும். மேலும் கீழுமாக இரட்டைத் திண்ணைகள், ஆளுயரத்துக்கு



ஜன்னல்கள். போனதும் பெரிய ஹால். அதைக் கடந்தால் பெரிய கலியாணக் கூடம்—படுக்கை அறைகள்—அப்புறம் சாமான் அறைகள்—அப்புறம் சாப்பாட்டு அறை—அப்புறம் சமையலறை—கிணறு—மாட்டுக் கொட்டில்—கொல்லை—முகத்தைச் சுளிக்காதீர்கள், அந்தக் கொல்லையில் இருபது தென்னை மரங்கள், பவழமல்லி, பன்னீர் மரங்கள். இப்படி வீடு கட்டிக் கொடுத்த தாத்தா அவர்.

எதற்காக நான் இத்தனையும் சொல்கிறேன்? உங்கள் எரிச்சலைக் கிளப்புவதற்காகவோ? இல்லவே இல்லை. எனக்கு இந்த வீட்டை—நான் இப்பொழுது இருக்கிறேனே இந்த வீட்டை—விலைக்கு விற்று ஆகவேண்டியது ஒன்றுமில்லை. ஊரில் இருக்கிற அரண்மனை அப்படியேதான் இருக்கிறது! இருபது காணியும் அப்படியேதான் இருக்கிறது. குத்தகை வருகிறது, சாப்பாட்டுக்கு நெல் வருகிறது. நெல் விற்ற பணமும் வருகிறது. இரவோடு இரவாக அரிசிக் கடை வாசலில் சாரி வைக்கிறவர்களோடு படுத்து பாரத மாதாவின் மானத்தை வாங்கும் மாத்ருத் துரோகி இல்லை நான்.

புத்தியிலும் அப்படி மட்டமான ஆளில்லை. ஏதோ எல். ஐ. எம். படித்த சின்ன வைத்தியன் என்று நினைக்க வேண்டாம். தாத்தா பெரிய மேதையாக இருந்ததுதான் எல்லாருக்கும் தெரிந்த கதையாச்சே? ஆனால், தாத்தாவை என்னமோ நடுவில் வந்த மின்னல் என்று நினைத்துவிட வேண்டாம். புத்திசாலித்தனம் நம் குலத்திற்கு சர விளக்கு. மின்னி மறைந்து மறுபடியும் அதிக இருளைக் கொட்டிவிட்டுப் போகிற பேச்சில்லை. ஒரு உதாரணம்: தாத்தாவுக்குத் தகப்பனார் இருந்தாரே, அவரும் அப்பை சப்பை இல்லை; அமீனா அப்பாசாமி என்றால் சிரிக்கிற பிள்ளை அழும். பெரிய பெரிய புள்ளிகளின் வீடுகளில் எல்லாம் அந்த ஆமை புகுந்து, உள் வண்டவாளங்களை உலகத்திற்கு எடுத்துக் காட்டியிருக்கிறது. வாழைப் பழத்தை உரித்துச் சாப்பிட்டுவிட்டுத் தோலை முழுப்பழம் போல் காட்டிக் குழந்தைகளை ஏமாற்றுகிறதுபோல,

எத்தனை பெரிய மனுஷன்கள் ஊரை ஏமாற்றுகிறான்கள்! கொள்ளுத் தாத்தா தோலை அமுக்கி, வெறும் தோலி அல்லது அழுகல் பழம் என்று அம்பலமாக்கியிருக்கிறார், எவ்வளவோ தடவை.

புத்திசாலித்தனத்திற்கு எத்தனையோ உதாரணம் சொல்லலாம். அப்படியே முரட்டுத்தனத்துக்கும் எங்கள் குடும்பத்தில் பஞ்சமில்லை என்பதைக் காட்டக் கதை கதையாக அடுக்கலாம். ஆனால், உங்கள் பொறுமையைச் சோதிக்க பயமாக இருக்கிறது. இது ஜெட் யுகம்—சிறுகதை யுகம், கட்டை வண்டிக் காலம் இல்லை. வளவளவென்று பேசிக் காலம் கழிக்கிற காலம் இல்லை—அதனால் என் பரம்பரைப் பிரபாவத்தை இதோடு நிறுத்திவிட்டு என் விஷயத்துக்கு வருகிறேன்.

''இவ்வளவு புத்திசாலிகள் நிறைந்த குலத்தில் பிறந்த நீ வெறும் நேடிவ் வைத்தியன்தானா? வெறும் எல். ஐ.எம். தானா? உன் அப்பா பள்ளிக்கூடத்து தலைமை ஆசிரியர் தானா? நீ ஒரு பெரிய சர்ஜனாயிருக்கக் கூடாதோ? உன் அப்பா ஒரு கல்லூரிப் பிரின்ஸிபாலாகவாவது இருக்கக் கூடாதோ? என்றுதானே கேட்கிறீர்கள்? அதற்குள் உங்களுக்கு மறந்து போய்விட்டது. நான் சொன்னது. தாத்தாவின் பிள்ளை வயிற்றுப் பிள்ளை இல்லை, நான் பெண் வயிற்றுப் பிள்ளை. என் அம்மாவை எம். ஏ. எல். டி. படித்து ஒரு பெரிய பள்ளிக்கூடத்தின் தலைமை ஆசிரியருக்கு அடுத்த ஆசிரியராக இருந்த ஒரு பிள்ளைக்குக் கலியாணம் பண்ணிக்கொடுத்தார். ''நீ பானை பிடித்த பிறகு நான் சும்மா இருப்பேனா?'' என்று தலைமை ஆசிரியர் அப்பாவுக்கு இடத்தைக் காலி பண்ணிவிட்டுச் சிவலோகம் போய்ச் சேர்ந்தார். அப்பா வெகுகாலம் வரையில் அங்கே தலைமை ஆசிரியராக இருந்தார்.

இன்று இந்தியாவிலேயே பெயர் சொல்லிக் கொண்டிருக்கும் நாலு ஐ. ஸி எஸ். அதிகாரிகள், நாலைந்து ஹை கோர்ட் நீதிபதிகள், இன்னும் பல பிரமுகர்கள் எல்லோரும்



அப்பாவிடம் வாசித்தவர்கள். அந்தக் காலத்தில் இப்போது மாதிரி தெருவுக்கு ஒரு பள்ளிக்கூடம் என்றா நினைத்தீர்கள்? நாலு மைல், ஐந்து மைல் நடை. இருபது மைலிலிருந்து ரயில் பிரயாணம்—இப்படியெல்லாம் அந்தப் பள்ளிக்கூடத்திற்குப் பையன்கள் வந்து படிப்பார்கள்.

பள்ளிக்கூட ஆசிரியரை அரிசி க்யூவில் நிற்கவிடாத காலம் சார், அது. பார்த்தாலும் அப்படித்தான் இருக்கும். அப்பா ஆறடி உயரம்; அதற்குத் தகுந்த பருமன். தோளில் ஒரு ஆள் வசதியாக உட்காரலாம். மூக்கும் முழியும் தோளும் காதுமாக கொம்படேச்வரர் மாதிரி இருப்பார். க்ளாஸ்கோ மல்லில் ஒரு பஞ்சகச்சம். பனிக்கட்டி மாதிரி கண்ணைப் பறிக்கும். மேலே வெளிர் சந்தன வர்ணத்தில் ஒரு மூடு கோட்டு, முழங்கால் வரை வரும். தலையில் எடுப்பாகக் கட்டிய தலைப்பாகை. அதற்கு நடுவில் பிடிப்புக்காக, தெரிந்தும் தெரியாதநுமாக ஒரு தங்கக் குண்டூசி. கடுகைவிடச் சின்னத்தலை அதற்கு. கவனித்துப் பார்த்தால், அப்பா தலையை அசைக்கும்போது அந்தக் குண்டூசி பிரம்மம் மாதிரி எப்போதாவது தெரியும். காலில் பளபளவென்று மொராக்கோ தோலில் மெல்லிய கறுப்புச் செருப்பு—எப்படி இருக்கும்? மனசால் நினைத்துப் பாருங்கள்.

ஆக, நான் எதிலே குறைந்துவிட்டேன்? குலத்தில் குறைச்சலா? சொத்தில் குறைச்சலா? புத்தியில் குறைச்சலா? இல்லை, அங்கத்தில்தான் குறைச்சலா? நான் அப்பா மாதிரி ஆறடி உயரம் இல்லை. நாலு விரல் குறைவாக இருக்கலாம். ஆனால், பாரத மாதாவின் பிள்ளைகளின் சராசரி உயரத்தை விட நாலு ஐந்து அங்குலம் கூடத்தான் இருப்பேன். பலத்திற்குத்தான் குறைவா? நான் யாரையும் அடிக்கிறதில்லை—பெண்டாட்டியைக்கூட. ஆனால், நான், உங்களை ஒரு அறை அறைந்தால் சுருண்டு விழுந்துவிடுவீர்கள். மயக்கம் தெளியப் பத்து நிமிஷம் ஆகும்.

புத்தியிலும் நான் குறைச்சலில்லை. எனக்கு வைத்தியனாகப் போக வேண்டும் என்று ஆசை. அப்பாவுக்கு நாட்டு

வைத்தியம் என்றால் உயிர். இங்கிலீஷ் வைத்தியம், நாட்டு வைத்தியம் இரண்டும் கலந்த படிப்பாகப் படிக்கவைத்தார். எனக்கும் தொழில் நன்றாகத்தான் நடக்கிறது. இருபத்தைந்து ஐம்பது என்று முதல் பார்வைக்கே பணம் கேட்க மாட்டேன். காசுக்காக ஊசி ஊசி என்று போட்டு ஏமாற்ற மாட்டேன். நம்மைத் தொந்தரவு செய்யாமலிருக்கட்டும் என்று தூக்க மருந்து, வலிமருந்து என்று நோயாளி வயிற்றில் கொட்டமாட்டேன். ஜலதோஷ இருமலை, காசம் என்று சொல்லி, பயத்தை ஓசைப்படாமல் ஊன்ற மாட்டேன். ''ஒண்ணுமில்லெ—பயப்படாதீங்க'' என்று நான் சொல்றதைக் கேட்காத ஒரு நோயாளி உண்டா? நீங்களே விசாரித்துப் பாருங்கள்.

எதற்காக இத்தனை சொல்கிறேன்? நான் சுயசரிதம் எழுத வரவில்லை. பெருமையைப் பீற்றிக் கொள்ள வரவில்லை. என்னை உங்களுக்குப் பிடித்திருக்கிறதா என்று தெரிந்து கொள்ளத்தான் இத்தனையும் சொன்னேன். உங்களுக்குப் பிடித்தாலும் பிடிக்கா விட்டாலும் உங்கள் மனைவிக்கு ஒரு பெண்ணை (குதிர் மாதிரி வளர்த்த உங்கள் பெண்ணைச் சொல்கிறேன்?) வைத்துக் கொண்டு, எப்போது கலியாணம் ஆகும் என்று புருவத்தைத் தூக்கிக் கவலைப்பட்டுக் கொண்டே இருக்கும் உங்கள் மனைவிக்கு, பெண்ணுக்குக் கணவனைத் தேடிக் கொடுப்பதைவிட மற்றக் காரியங்களே பெரியவை என்று பொறுப்பில்லாமல் நீங்கள் அலைவதைக் கண்டு பெருமூச்செறிந்து கொண்டிருக்கும் உங்கள் மனைவிக்கு என்னைக் கண்டால் பிடிக்கும். அந்த மாதிரி பிடித்துத்தான் என்னை மாப்பிள்ளையாகப் பிடித்துப் போடப் பலபேர் கங்கணம் கட்டிக் கொண்டார்கள். ஆனால், தாலி முடிச்சு நாமா போடுகிறோம்? பிரம்மா வல்லவா போட்டு வைக்கிறான்? உள்ளூர்க்காரி, அடுத்த வீட்டுக்காரி ஒருத்தியோடேயே இந்த முடிச்சு பலசமயம் போட்டிருக்கும். அது தெரியாமல் 'இதோ எனக்குப் பெண் இருக்கு. எனக்குப் பெண் இருக்கு' என்று பெண்ணைப் பெற்றவர்கள் அலைந்து என்ன பயன்?



அப்படித்தான் எங்கள் தெருவிலேயே குடியிருந்த திருமலைசாமியின் மகள் அன்பு என்ற அம்பிகாவுக்கும் எனக்கும் கலியாணம் நடந்துவிட்டது. இது என்னமோ பெற்றோர்கள் தீர்மானம் செய்யும் திருமணம் என்று சொல்வதற்கில்லை. ஆனால், ஒருவிதத்தில் காதல் மணம் என்று நிச்சயமாகச் சொல்லலாம். கலியாணம் ஆனபிறகு தான் எனக்கு இது தெரிந்தது. எங்கள் மாமியார் என் அம்மாவிடம் சொன்னாளாம் : ''அம்பு சின்னக் குட்டியாய் இருக்கிறதிலேர்ந்து சொல்லிண்டிருந்தா. 'நான் எட்மாஸ்டர் மாமா பிள்ளை சந்தானத்தைத்தான் கலியாணம் பண்ணிக்கப் போறே'ன்னு சொல்லிண்டிருந்தது. அஞ்சு வயசிலேர்ந்து சொல்லிண்டிருந்தது. அது எப்படித்தான் சொல்லித்தோ, எந்த அம்பாளைத்தான் வேண்டிண்டுதோ —நினைச்சுண்டு வந்துடுத்து. அம்பாள் மக அம்பு சொல்றதைக் கேட்டுக் கடைக்கண் பாத்துப்பட்டா'' என்று தேம்பித் தேம்பிக் கொண்டு (ஆனந்தத்தால்) சொன்னாளாம். எனக்கே ஆச்சரியமாயிருந்தது. நமக்கே தெரியாமல் நம்மேல் ஒரு பெண் ஆசைப்படுவதாயிருந்தால்? அதுவும் ஐந்து வயதிலிருந்து?

''நிஜம்தானா'' என்று சாந்திக் கல்யாணத்தன்றுஇரவு கேட்டேன். எங்கள் இரண்டு பேரையும் கட்டிலில் உட்கார வைத்துப் பூட்டிவிட்டு ''இன்று பொறுக்கமாட்டா சாமி'' என்றெல்லாம் பாடிவிட்டுப் பெண்கள் போய் நிசப்தமாக ஆனபிறகு கேட்டேன். ''உங்களை முதமுதல்லெ பார்த்தேன். கிராப் வெச்சுண்டு அரைக்கால் நிஜார் போட்டுண்டு, ஸ்டாக்கிங்ஸ், பூட்ஸ் எல்லாம் போட்டுண்டு பள்ளிக்கூடம் போனபோது...அப்ப...அப்ப'' என்று கண்ணை மூடிக் கொண்டு விட்டாள் அம்பு. எனக்கே கண்ணாடியில் பார்த்துக் கொள்கிறாப்போலிருந்தது. அந்தக் காலத்தில் பையன்கள் வேட்டி—தலைப்பின்னல்—முன்னால் க்ஷவரம் செய்து 'அரை'க் கிராப்பு—செருப்பில்லாத கால்—இப்படித் தான பள்ளிக்கூடம் போவார்கள். அப்பா எனக்கு இரண்டு வயதிலேயே கிராப்பு வைத்துவிட்டார்—நிஜார் போட்டு

விட்டார். பூட்ஸ் போட்டு விட்டார்—முப்பத்தைந்து வருஷம் முன்னால் இது சாதாரணக் காட்சி இல்லை.

அம்பு மட்டும் என்ன சாதாரணமா? சாதாரண அழகா? அழகு இருக்கும்; எடுப்பாக இருக்காது. எடுப்பு இருக்கும். அழகு இருக்காது. அம்பு இரண்டையும் பாதிப் பாதி கலந்து ஒரு அமளியாக இருப்பாள், அதுபோதும். பெண்டாட்டியை அதற்குமேல் யாராவது வர்ணிப்பார்களோ! அதுவும் முகந் தெரியாத உங்கள் முன்பு? நீங்கள் என்ன விதூஷகனா? அந்தரங்க சிநேகிதனா? அப்படியிருந்தால்கூட சொல்லுவது தப்பு. கலியாணம் ஆவதற்கு முன்னாலாவது சொல்லலாம், கண் இப்படி, முகம் அப்படி, கை இப்படி, கால் இப்படி, என்று. அப்போது பெண்டாட்டியில்லையே, வெறும் பெண்தானே? இப்போது சொல்லலாமோ? உயரமாக, எடுப்பாக, அழகாக இருப்பாள்—அது போதும்.

கலியாணம் ஆனதும் அம்புவின் தகப்பனாருக்கு மாற்றலாகிவிட்டது. மாமியாரோடு கிளம்பிவிட்டார். ஆறு மாதம் கழித்து 'உடம்பு கவலைக்கிடம்' என்று தந்தி வந்தது. அம்புவும் நானும் ஓடினோம், அந்தக் கிடைக்குப் பிழைத்து விட்டார். மாப்பிள்ளைதான் டாக்டராக இருக்கிறாரே என்று அங்கேயே இருந்து வைத்தியம் பண்ணச் சொன்னார். இருந்து கவனித்தேன். ஒரு மாதம் இரண்டு மாதமாயிற்று. நோயாளிகள் இன்னும் பலபேர் சேர்ந்தார்கள். சரி என்று ஒரு வீட்டையே வாங்கினேன். 'டாக்டர் சந்தான கோபால கிருஷ்ணன் எல்.ஐ.எம். ரிஜிட்., மெடிக்கல் ப்ராக்டிஷனர்' என்று பலகை ஒன்று மாட்டிவிட்டேன். அதோ தெரிகிறதே, அதே பலகைதான். இதே வீடுதான். விலைக்கு விலைக்கு என்று பறக்கிறார்களே—இந்த வீடுதான் அது. பலகை எழுத்து மங்கி இருக்கிறது. வேறு எழுதச் சொல்லவேண்டும். வீடுகூட வெறிச் சென்று இருக்கிறது.

அப்போதெல்லாம் மாமனார், மாமியார் இருப்பார்கள். இல்லாவிட்டால் ஊரிலிருந்து என் அப்பா அம்மா வரு



வார்கள். கலகலவென்று இருக்கும். இப்போது அவர்கள் யாருமே இல்லை. எல்லார் மேலும் கடவுளுக்குத் திடீரென்று அபிமானம் வந்துவிட்டது. இரண்டு வருஷ காலத்திற்குள் நாலு பேரையும் அழைத்துக்கொண்டு விட்டார். குழந்தைகள் இருக்கின்றன. மோகன், லதா இரண்டு பேரும் பள்ளிக்கூடம் போயிருக்கிறார்கள். சேகர் அம்மாவோடு எங்காவது போயிருப்பான். சேகருக்கு இரண்டரை வயசுதான். அம்மாவைவிட்டு எத்தனை நேரம் பிரிந்திருப்பான்? அவளே அவனை அழைத்துக்கொண்டு போயிருப்பாள்.

'இந்தப் பதைபதைக்கிற வெயிலில் குழந்தையை எடுத்துக்கொண்டு...' என்று நீங்கள் ஆரம்பித்துவிடுவீர்கள். ''வீடு குளுகுளு வென்று தூங்கு தூங்கு' என்று உபசாரம் செய்கிறது. அதை, 'விட்டு இந்த வெயிலில் எங்கே போயிருக்கிறாள்!' என்று நீங்கள் கேட்பீர்கள். எங்கேயும் போயிருக்கமாட்டாள். மாட்டினிக்குப் போயிருப்பாள். அம்புவுக்கு சினிமா, டிராமா, நாடகம் என்றால் உயிர். எந்த சினிமா வந்தாலும் சரி, தமிழோ, தெலுங்கோ, இங்கிலீஷோ, ஜப்பான் படமோ, எது வந்தாலும் முதல் காட்சிக்கே ஜாக்கிரதையாக மிக உயர்ந்த வகுப்பில் ஒரு டிக்கெட்டை ரிசர்வ் செய்துவிடுவாள். நல்ல படம் என்று தோன்றினால் நாலு தடவை பார்ப்பாள். நல்ல படம் இல்லை. நல்ல நாடகம் இல்லை. நல்ல பாட்டு இல்லை என்று நீங்களும் நானும் பத்திரிகைகளும் சொன்னால் போதாது. அவளுக்காத் தோன்றினால்தான் மூன்றாவது தடவை பார்க்காமல் இருப்பாள். ஆனால் நல்லதா, கெட்டதா என்று முதலில் தீர்மானம் செய்கிற உரிமை அம்புவின் தனி உரிமை. ஆகவே, டாக்டர் சந்தான கோபால கிருஷ்ணன் வீட்டிலிருந்து ஒரு ஐந்து ரூபாய் எதற்கும் உண்டு.

அது நாடகமோ, நடனமோ, சினிமாவோ, கெட்டதோ—நல்லதோ...செலவுதான். என்ன செய்கிறது? காசு கொடுக்காமல் இத்தனையும் பார்க்கும் அதிருஷ்ட

சாலிகள் இந்த நகரத்தில் சிலர் இருக்கிறார்கள். நாடகமா?—தலைமை வகிக்கிறார்கள்; இல்லாவிட்டால் அபிப்பிராயம் சொல்வதற்காக அழைக்கப்படுகிறார்கள். சினிமாவா?—தணிக்கைக் குழுவில் இருப்பார்கள். நடனமா?—போங்கள், அபிப்ராயம் சொல்லுங்கள். சங்கீதக் கச்சேரியா—நீங்கள்தான் பரம ரசிகராச்சே, கூப்பிடுகிறார்கள். பண்டிதர்கள் கூட்டமா, கலைக் கூட்டமா, சிற்பிகள் சம்மேளனமா, விமர்சகர்கள் கூட்டமா, வெளிநாட்டுக் கலை விருந்தா, கலைப் போட்டியா? நீங்கள்தான் தீர்ப்பாளர்களாச்சே, புலவர்களாச்சே? கூப்பிடுகிறார்கள்—மாலையோடு கூப்பிடுகிறார்கள். போங்கள். இந்த மாதிரி 'ஷோல்டால்' பெரியவர்கள் மாதிரியே அம்புவும் போகிறாள். ஒன்றையும் விடுவதில்லை.

ஆனால், அவர்களைப் போல இலவசமாகப்போகும் பெரிய அந்தஸ்து இல்லையே இவளுக்கு. டாக்டர் சந்தான கோபாலகிருஷ்ணனின் காசை எடுத்துக் கரைக்க வேண்டியிருக்கிறதே? எனக்கு அந்தஸ்து இருந்தாலாவது ஸ்ரீமதி நான் என்று சொல்லிக்கொண்டு போகலாம். அதற்கு நான் இந்த நேடிவ் வைத்தியராக இருந்தால் போதுமோ? ஒரு சர்ஜனாகவோ, அல்லது சினிமாக்காரனாகவோ இருக்கவேண்டும். அப்படியெல்லாம் இல்லாவிட்டாலும் ஏட்டிலாவது சொல்லுகிற எழுத்தாள டாக்டராகவாவது இருக்கவேண்டும். சிலசமயம் நினைத்தால் ஒரு ஆடிட்டராகவாவது ஆகியிருக்கக் கூடாதோ என்று தோன்றுகிறது; பணக்காரர்களையும், பணக்காரர்கள் என்று சர்க்கார் நினைத்துக்கொண்டு பயமுறுத்துகிற அப்பாவிகளையும், விரலைக் கடிக்கவரும் குழந்தையின் வாயில் அதன் விரலையே கொடுத்துக் கடிக்கவிடுகிற மாதிரி, சர்க்கார் போட்ட சட்டத்தைக் கொண்டே அதை மடக்கிக் காப்பாற்றுகிற ஆடிட்டராக நான் ஆகியிருந்தால், அம்புவுக்கு இலவச டிக்கெட்டுகளைக் கொடுத்து வருந்தி அழைத்திருப்பார்கள்.



போனால் போகிறது! குருசாமித் தாத்தா விட்டுப் போயிருக்கிற சொத்தை வைத்துக்கொண்டு அம்பு அறுபது தலைமுறைக்கு சினிமா, கச்சேரி, நாடகம் எல்லாவற்றையும் "போஷகர்" ஆசனங்களில் வீற்றிருந்தே பார்க்கலாம்.

அம்புவை நான் குறை சொல்லவில்லை. அவள் வீட்டில் உட்கார்ந்துகொண்டு என்ன செய்வாள்? வேலை?—சமையல்கார அம்மாள் சமைக்கிறாள். காபி போடுகிறாள். வேலைக்காரி வீடுகூட்டி, பாத்திரம் தேய்த்து, கடைக்குப் போய்வந்து விடுகிறாள். குழந்தைகள் பள்ளிக்கூடம் போய்விடுகின்றன. நான் நோயாளிகளைப் பார்க்கிறேன். நோயாளி இல்லாவிட்டால், வருகிறார்களா என்று முன் கதவைத் திறந்து வைத்துக் காத்திருக்கிறேன். எனக்குப் பேசப் பொழுது இல்லை. அம்புதான் என்னோடு என்ன பேச இருக்கிறது?

"உன் பெண்டாட்டியோடு நீ என்ன பேசுவே, சந்தானம்?" என்று அடிக்கடி ஒரு கிழ எழுத்தாளர் என்னைக் கேட்டார். அவர் என் அப்பாவோடு படித்தவராம். ரொம்பப் பெரியவராம். ஓயாமல் பேசுவார். ஒரு மாசம், இரண்டு மாசத்திற்கொரு தடவை அவரைப் போய்ப் பார்ப்பேன். ஒவ்வொரு தடவையும் "நீ பெண்டாட்டியோடு என்ன பேசுவே?" என்று என்னைக் கேட்காமல் இருந்ததில்லை.

"என்னத்தைப் பேசுகிறது?" என்பேன். அதைக் கேட்டு, ஏற்கனவே பெரிதாக இருக்கிற கண்ணை இன்னும் கிணறு மாதிரிப் பெரிது பண்ணி ஆச்சரியப்படுவார் அவர்.

"பேச என்ன இருக்கா? அப்பளாம் இல்லையா? அமெரிக்கத் தேர்தல் இல்லையா? அத்வைதம் இல்லையா? அரிஜனப் பிரச்னை இல்லையா? எதைப் பற்றித்தான் அவளோடு பேசப்படாது?" என்று கோபம் வந்து விட்டாற் போல் கத்துவார். பெண்கள் படும் கஷ்டங்களைப் பற்றி ஒரு மணி நேரம் கத்துவார். "எல்லாம் பேசலாம். அவளோடுதான் நீ எதையும் பேசணும். அவளோட பேசாம

நீ யாரோடு பேசப்போற?—ஹஹ!'' என்று கடைசியில் பனை ஓலை விசிறியைத் தரையில் இழுக்கிற ஒரு சிரிப்புச் சத்தத்துடன் நிறுத்துவார். அந்த சிரிப்பு கோபமும் பரிகாசமுமாக இருக்கும். ''அட, அம்மாஞ்சி!'' என்று அது என்னைச் சொல்வதுபோல் இருக்கும். ''கொடுங்கோலா'' என்று கத்துவது போலவும் இருக்கும்.

''பெண்டாட்டியோடு என்னத்தைப் பேசுகிறதாமே!'' என்று கடைசியில் ஒரு பல்லவியோடு முடியும். இத்தனை பேச்சுப் பேசினவர்—என்னோடு பேசினவர், தன் பெண்டாட்டியோடு பேசினவர்—மருந்துக்குக்கூட ஒரு குழந்தை பெறாமல்—அந்தப் பெண்டாட்டியும் தனியாக விட்டுக் கண்ணை மூடிவிட்டாள். அதிகம் பேசாத எனக்கும் அம்புவுக்கும் மூன்று குழந்தைகள் பிறந்திருப்பதை அவரிடம் ஞாபகப்படுத்தியிருந்தால்—சிரித்திருப்பாரோ, அடித்திருப்பாரோ!

சரி, அம்பு என்னோடு பேச ஆரம்பித்துவிட்டால், அவன் மாட்டினிக்கு ரிஸர்வ் செய்த டிக்கெட்டை என்ன பண்ணுகிறது? இருந்தாலும், வீட்டில் இருக்கும்போதுகூட அம்பு அதிகமாகப் பேசுவதில்லை. எங்கேயோ பார்த்துக் கொண்டிருக்கிறாள். என்னைப் பார்ப்பது போலிருக்கும்; ஆனால் அந்தப் பார்வை என்னைப் பார்க்கவில்லை என்று நிச்சயமாகத் தெரியும் எனக்கு. அவள் பார்வையின் பாதையில் நான் என்னமோ தடைமாதிரி இருக்கும். குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருப்பாள். ஆனால், அப்போதும் அதே பார்க்காத பார்வைதான். கண் குழந்தையின் உடம்பில் இருக்குமே ஒழிய கண்ணை உபயோகப்படுத்துகிற சக்தி வேறு எங்கோ திரும்பியிருக்கும். அவள் சில சமயம் கேட்டண்டை நின்று தெருவைப் பார்ப்பாள். ஆனால், அவள இந்த உலகத்தில் இல்லை என்று சற்று நின்று பார்த்தால் தெரியும். சிரிக்கக்கூடச் சிரிப்பதில்லை. குழந்தை வேடிக்கை பண்ணினால்கூடச் சிரிக்கமாட்டாள். குழந்தை தகதகதகதகவென்று மல்லாந்து படுத்து ஏதோ மிஷின் மாதிரி காலைத் தரையில் அடிக்கும்போது எனக்குச்



சிரிப்பு வந்துவிடும். கை மேலே படாமல் விறைக்க வைத்துக் கொண்டு, கால் அப்படி வேகமாகப் பறக்கும்போது யாருக்குத்தான் சிரிப்பு வராது? நாமும் குழந்தைமாதிரி ஒருகணம் ஆகிச் சிரிக்கமாட்டோமா! ஆனால், அம்புவின் உதட்டில் ஒரு ஏளனச் சிரிப்புதான் வரும். ''ஹ்ம்... பிரமாதம்'' என்று அலட்சியப் புன்னகைத்தான் வரும். குழந்தை என்னமோ தான் பெரிய காரியம் செய்வதாகப் பீற்றிக்கொண்டாள் போலவும், அதைக்கண்டு இவளுக்குக் கோபம் வருவது போலவும் எனக்குத் தோன்றும். வாய் விட்டோ மனதாரவோ, தன்னறியாமலோ சிரிக்கத் தோன்றாதோ?

பேசுவதும் இல்லை; சிரிப்பதுமில்லை—நான் என்ன செய்ய? சம்பவுண்டராவது அகப்பட்டானே என்று அவனோடு பேசிப் பொழுதைப் போக்குவேன். பொழுதைப் போக்க வேண்டியதில்லை; அவனோடு பேசத் தொடங்கி விட்டால், பொழுது விழுந்தடித்துக்கொண்டு ஓடும். சிரிக்கச் சிரிக்கப் பேசுவான். எப்போது பார்த்தாலும் முகத்தில் ஒரு சிரிப்பு. அவன் தூங்கி விழிக்கும்போது பாருங்கள். இப்போதுதான் ஜில்லென்று குளிர்ந்த நீரில் குளித்துவிட்டு மொர மொரவென்று வருகிறாற்போல் இருக்கும். குட்டையாக இருப்பான். உடம்பு ஒரு மஞ்சள் சிவப்பு. தலையில் கரு கருவென்று கட்டை மயிர். அதை இழுத்துப்போட்டு வாரிப் படிய வைத்திருப்பான். உடம்பைத் திறந்தால் மார்பு பளபளவென்று சந்தனக் கட்டை மாதிரி மின்னும்.

''சார்!'' என்று சொல்லி ஒரு புன்முறுவலோடு அவன் வந்த முதல் நாளை என்னால் மறக்க முடியாது.

''என்னப்பா! என்ன உடம்பு?'' என்றேன்.

''உடம்பு ஒண்ணுமில்லே, சார். உங்களைத்தான் பார்க்க வந்தேன்.''

''உடம்பு ஒண்ணுமில்லாமல் எதுக்காகப் பாக்க வரது?''

"அப்படிச் சொல்லலாமா சார் நீங்க? மனுஷா உடம்பை நல்லபடியாப் பண்றதும், தேத்திப் பாக்கறதும் தானே உங்களுக்கு சந்தோஷம்?"

"நல்லபடியாப் பண்ணி, தேத்தலாம். அப்புறம்தான் என்னால் பார்க்க முடியலியே? உடம்பைத் தேத்தின்டவன் ஓடியே போயிடறானே?"

"காசு கொடுக்காமலா?"

"பலே! எப்படிக் கண்டுபிடிச்சே?"

"இது தெரியாதாண்ணா? உடம்பையும் தேத்தணும். காசை வாங்கணும். வியாதி பாதி, காசு பாதி—வியாதி கால், காசு முக்கால்—வியாதி பூஜ்யம், காசு பூர்ணம்."

"என்ன என்ன?"

"வியாதி பாதி—காசு பாதி. அதாவது வியாதியைப் பாதி குணம் பண்றபோதே, காசைப் பாதி வாங்கிப்படணும். வியாதி பாதியாகி, காலாகக் குறையறபோது காசு முக்கால்வாசி வாங்கிப்படணும். வியாதி பூர்ண குணமாறபோது, காசும் பூரணமா வாங்கியிருக்கணும். பில் அனுப்பறது மேலே ஏதாவது வராதான்னு பாக்கறதுக்குத் தானே ஒழிய, வியாதியஸ்தனுக்கு நம்ம பேர்லெ ஒரு நம்பிக்கை ஏற்படறதுக்குத்தானே ஒழிய, அந்தக் காசு வராட்டாலும் பாதகமில்லை. வராம இருந்தா மறுபடியும் நம்மகிட்டவே வருவான்."

"நீ என்ன பெரிய டாக்டர் மாதிரிப் பேசறே?"

"பெரிய டாக்டர்கிட்டல்லாம் பழகினது தாண்ணா"

சார் அண்ணாவாகி விட்டேன் என்பதை மனசில் குறித்துக்கொண்டேன்.

"எப்படி?"

"கம்பவுண்டருக்குப் பாஸ் பண்ணியிருக்கேண்ணா. இப்பவும் கம்பவுண்டராகத்தான் இருக்கேன். ஆஸ்பத்திரி



யிலே இருக்கேன். பகல் டூட்டி, ராத்திரி டூட்டின்னு மாற்றி மாற்றி இழுத்தடிக்கிறான். என் உடம்புக்குச் சரிபட்டு வரமாட்டேங்கிறது. அதுதான் உங்ககிட்ட வந்தேன். நீங்க பெரிய மனசு பண்ணினா என்னைக் காப்பாத்தலாம்."

"என்ன பண்ணணும்?"

"ஒண்ணும் வாண்டாம், அண்ணா. நான் இப்ப வாங்கற சம்பளத்தை மட்டும் கொடுத்தால் போதும். நான் அண்ணாகிட்டே கம்பவுண்டராக இருக்கேன். நீங்க என்னை வச்சுண்டு பாருங்கோ, வரவேண்டிய ருபாயை காலணா பாக்கியில்லாம வாங்கித்தரேன். ஆஸ்பத்திரியிலே இருந்து வேறே பழக்கம். புதுசா எத்தனையோ பேர் வருவா. எனக்காகவும் வருவா. நான் என்னமோ பெருமையடிச்சுக்கறேன்னு நினைக்கப்படாது. எனக்கும் தெரிஞ்சவா பத்து பேர் உண்டுங்கறதைச் சொல்றேன், வேறே ஒண்ணுமில்லெ. உங்களுக்கு ஒரு கவலை இல்லாம நான் பார்த்துக்கறேன். நீங்க பேஷண்டுகளைக் கவனிச்சு மருந்தை எழுதிக் கொடுத்தால் போதும். மீதியெல்லாம் நான் பார்த்துக்கறேன்" என்று மன்றாடினான்.

உண்மைதான். எனக்கு உதவி செய்ய யாருமே இல்லை என்பது அப்போதுதான் தெரிந்தது. எனக்கு ஒரு க்ஷவரப் பிளேட் முதற்கொண்டு நானேதான் வாங்கிக்கொள்கிறேன். காய்கறி வாங்க நான்தான் போகிறேன்—ஆனால் காய்கறி மட்டும் நான்தான் வாங்கவேண்டும். காலையில் மார்க்கெட்டில் போய் இளஇளவென்று இருக்கும் புதிய காய்கறிகள் முகத்தில் விழிப்பதே ஒரு உற்சாகம்; ஒரு அலாதி அனுபவம். பிஞ்சுகளைத் தொட்டுப் பார்க்கிறது ஒரு புல்லரிப்பு. குருசாமித் தாத்தா லட்ச லட்சமாய்ச் சம்பாதித்தாரே—மார்க்கெட்டுக்குப் போகிறதை மாத்திரம் சமையல் காரரிடமோ, வேலைக்காரியிடமோ விடவில்லை. தானேபோய் ஒவ்வொரு கூடைக்காரனிடமும் உட்கார்ந்து பிஞ்சாகப் பார்த்து வாங்கி—வந்த பிறகு எதை எதை எப்படிச் செய்ய வேண்டும் என்று சொல்லிவிட்டுத்தான் குளிக்கப் போவார்.

பாகற்காயை வாங்கி வந்தாரானால், உடனே பிட்ளை பண்ணிவிட முடியாது. அவர் அதை அன்று வாங்கும்போதே வெல்லம் போட்ட கறியாகக் கற்பனையில் சாப்பிட்டிருப்பார்; அதைதான் செய்யவேண்டும். கத்தரிக்காயை ரஸவாங்கியாக மனசிலே ருசிபார்த்திருப்பார். நளபாகமாக எண்ணெய்த் துவட்டல் பண்ணினாலும் அன்று அவருக்குப் பிடிக்காது. ‘பயலே வறியாடா மார்க்கெட்டுக்கு?’ என்று என்னைக் கூப்பிடாமல் போகமாட்டார். நானும் நிஜாரைப் போட்டுக்கொண்டு, அவர் கையைப் பிடித்துக்கொண்டு ஓடுவேன். அந்தப் பழக்கம்தான். கறிகாய் முகத்தில் விழிக்காமல் என்னால் இருக்கவே முடியாது.

அது சொந்தப் பழக்கம். ஆனால் கணக்கு நான்தான் எழுதுகிறேன். மருந்து நான்தான் கலந்து கொடுக்கிறேன். நான்தான் எழுதுகிறேன். ஊசி நான்தான் போடுகிறேன். காயம் கீயம், சின்ன அறுவை கிறுவை என்றால் நான்தான் அறுத்துக் கட்டுப் போடுகிறேன். நான்தான் தர்மாமீட்டரை வாயில் வைக்கிறேன், பார்க்கிறேன், ரத்த அழுக்கம் நான்தான் பார்க்கிறேன். மருந்துகளை நான்தான் வாங்கி வருகிறேன். பள்ளிக் கூடத்தில் குழந்தைகளைச் சேர்க்க நான்தான் போகிறேன்—யோசித்துப் பார்த்தபொழுது எல்லாக் காரியங்களையும் நானேதான் செய்துகொண்டிருக்கிறேன் என்று தெரிந்தது. அம்புவுக்குச் சமையல்காரி இருக்கிறாள். வேலைக்காரி இருக்கிறாள். எனக்கு?

"ஒரு ரெண்டு மாசம் என்னை வச்சிண்டு பாருங்கோண்ணா" என்று உந்தினான் மகாதேவன்.

"சரி—என்னிக்கி வேலைக்கி வரமுடியும்?" என்று பனிச்சென்று கேட்டேன்.

"ஒண்ணாம் தேதி."

காலண்டரைப் பார்த்தேன். இன்னும் பன்னிரண்டு தேதி மீதியிருந்தது.

"சரி."



மகாதேவனைப்போல் ஒரு மலை விழுங்கியைப் பார்க்க முடியாது. புலிப்பால் கொண்டு தருவதைப் பற்றி நீங்கள் பிரமாதமாகப் பேசுவீர்கள். வண்டி புறப்பட சரியாக அரைமணி நேரம் முன்னால் ஒரு ‘ஸ்லீப்பர் டிக்கெட்’ வாங்கித்தர மகாதேவனால் முடியும். எப்பேர்ப்பட்ட வேளாங்கண்ணித் திருவிழாவாகத்தான் இருக்கட்டும், ப்ராட்மனே வரட்டும், இந்த பாரத தேசத்து இளைஞர்களுக்கும் இளைஞிகளுக்கும் ஒரே முகூர்த்தத்தில் கலியாணம் நடக்கிறதாகவே இருக்கட்டும், எனக்கு ரயிலில் ஒரு தூங்குமூஞ்சி டிக்கெட் வாங்கித் தந்து ஹாயாகப் படுத்துக்கொண்டு பிரயாணம் பண்ணுமாறு செய்யக் கூடிய அசகாய சூரத்தனம் மகாதேவனுக்கு உண்டு. என்னமோ ‘பால் வாங்கி மோர் வாங்கி’ என்று ஒரு வேலைக்காரன் செய்து விட்டானாம், பாரதியார் பிரமாதமாக எழுதிவிட்டார். மகாதேவனைப் பார்த்திருந்தால் "பாஞ்சாலி சபதம்" மாதிரி "மகாதேவன் பிள்ளைத் தமிழ்" என்று ஒரு காவியமே எழுதியிருப்பார்.

மகாதேவனுக்கு நான் இருக்க வேண்டும் என்ற அவசியமே இல்லை. அவனே நாடி பார்ப்பான்; ரத்த அழுக்கம் பார்ப்பான்; ஊசி போடுவான்; மருந்து எழுதிக் கொடுப்பான்; டாக்டர் சர்ட்பிகேட் கூட எழுதிக் கொடுப்பான்; நான் கையெழுத்துப் போட்டால் போதும். வக்கீல் குமாஸ்தாக்களுக்கு முக்கால் சட்டம் தெரிவது போல மகாதேவனுக்கு முழு வைத்தியமும் தெரியும். நோயாளிகளுக்கு முன்னால் என்னோடு இரைந்து பேசமாட்டான். அவர்களிலும் யாராவது சற்று உரக்கப் பேசினால், "ஸ்" என்று ஒற்றை விரலை உதட்டில் வைத்து எச்சரிப்பான். அதுவும் புரியா விட்டால், "டாக்டர் நான்—ரெண்டு பேருக்கும் காது நன்றாகக் கேக்குமே" என்பான்.

வந்த ஒரு வாரத்திற்கெல்லாம் வீட்டைச் சுற்றியிருந்த இடம் எல்லாம் ஒரு ஆளைக் கூப்பிட்டுக் கொத்திவிட்டு ஒரு பெரிய தோட்டத்திற்கு முளை போட்டு விட்டான் மகாதேவன். இரண்டு வாரம் கழித்துப் பார்த்தால்

தோட்டம் முழுவதும் முளையாக விட்டிருந்தது. நாற்றாக விட்டிருந்தது, ஏதோ பூச்செடியும் காய்கறிச் செடியுமாக வீடு வளர்ந்து கொண்டிருந்தது. வேலைக்காரி ஒரு நாள் வரவில்லையே என்று சும்மா இருப்பானா மகாதேவன்? வரிந்து கட்டிக் கொண்டு கிணற்றிலிருந்து இழுத்து இழுத்து ஊற்றுவான். வேலை செய்கிறவனைப் பார்த்தால் யாருக்குத்தான் சும்மா இருக்கத் தோன்றும்? கலை நிகழ்ச்சிகளுக்குப் போகும் நேரம் தவிர மீதிப் போதெல்லாம் படிப்பு நிகழ்ச்சிகளில் ஈடுபட்டிருக்கும் அம்புக்குக் கூட அப்போது உடம்பு அசைந்து கொடுக்கத் தொடங்கி விட்டது. அவளே தோட்டத்தில் நின்று பார்க்க ஆரம்பித்து விட்டாள். குப்பை மேனிச் செடிகளைப் பிடுங்கி எறிவாள். கொடியை எடுத்துக் கொழுவில் விடுவாள். குப்பை சத்தைகளைக் காலால் அகற்றுவாள். ஓரிரண்டு முறை ஏதோ புதிய படங்கள் இரண்டு மூன்றின் முதல் காட்சிகளைக் கூடத் தவற விட்டுத் தோட்டத்தையே பார்த்துக் கொண்டிருந்து விட்டாள். வாழைக்கன்று ஏழெட்டு வைத்திருந்தான் மகாதேவன். எல்லாம் சரியாகத்தான் குருத்து விட்டன. ஒரு இரண்டு மூன்று சுருட்டிச் சுருட்டிச் சிறுக்கத் தொடங்கவே, ‘‘இன்னிக்குச் சாயங்காலம் அல்லது நாளைக்கு சாயங்காலம் பாருங்கள். வியாதி பிடிச்ச கன்னு மாதிரி இருக்கு. இந்தக் குருத்தும் சோகை பிடிச்சிருக்கிற மாதிரி தோணித்துன்னா, அடியோடு பிடுங்கி எறிஞ்சிடணும். இல்லேன்னா, மத்ததுகளுக்கும் நோய் தொத்திக்கும்’’ என்று எச்சரித்து விட்டுப் போய் விட்டான். அம்பு மணிக்கு ஒரு தடவை வாழைக் குருத்தைப் போய் பார்த்துக் கொண்டேயிருந்தாள். இரண்டு மூன்று தினங்கள் இப்படிச் சோதிக்கவே மூன்று படங்களில் திறப்பு விழாவில் கலந்து கொள்ள முடியாமல் போய் விட்டது அவளுக்கு. எனக்கே பரிதாபமாயிருந்தது. ‘‘அம்பு! நான் வேணும்னா பார்த்துக்கறேனே! நீ எங்காவது போறதுன்னா போயிட்டு வா?’’ என்றேன். அம்பு பதில் பேசவில்லை, எப்போதும் போலவே, வாழைக்கன்றைப் பார்த்துக் கொண்டே நின்றாள். ‘‘எனக்குப் போவதா வேண்டாமா என்ற தீர்ப்பை செய்து



கொள்ளத் தெரியும். நீ ஒண்ணும் சொல்ல வேண்டாம்’’ என்று அர்த்தம். நான் பார்த்துக் கொண்டே நின்றேன். ஐயோ ஐயோ! என்ன அழகு! ஐயோ! எனக்கு உடம்பெல்லாம் கூட்டது. ஓடிப்போய் அவளைக் கட்டி உடம்போடு உடம்பாக நொறுக்கி விடவேண்டும் போலிருந்தது. ஐயோ! அந்த வாடாமல்லிப் புடவையும், பவுடர் போட்ட ரோஜாக் கன்னமும், சுரைக்காய் மாதிரி அழுத்தமும் சரிவுமாகத் தெறிக்கும் அந்த உடம்பும்!

‘‘அம்பு’’ என்று ஆசை தாங்காமல் கூப்பிட்டு விட்டேன்.

‘‘——’’

‘‘அம்பு’’

‘‘ம்’’

‘‘கொஞ்சம் குடிக்க ஜலம் வேணும்.’’

அம்பு திரும்பிப் பார்த்தாள். ஏன் அப்படிப் பார்த்தாள் என்று தெரியவில்லை. ‘‘தானாகத் தண்ணீர் எடுத்துக்கூடக் குடிக்க முடியவில்லையோ? அதுக்கு ஒரு ஆளா?’’ என்று ஒரு பார்வை. ஆனால் மூன்று குழந்தைகளுக்கும் பிறகு இவள் வாயைத் திறந்து சொல்லலாமே! ஏன் சொல்லவில்லை என்றுதான் எனக்கு வருத்தம். உள்ளே வந்தாள். தண்ணீரை மொள்ளப் போனாள். அவளைப் போய் கட்டிக்கொள்ளப் போனேன். ‘‘மகாதேவன் பார்த்துடுவான்’’ என்று முகத்தில் ஒரு கோணல், சுளிப்பு இல்லாமல் ஒரு எச்சரிக்கை வந்தது.

‘‘மகாதேவன் இருக்கானா?’’

‘‘தோட்டத்திலே இருக்கானே!’’

‘‘அவன் வீட்டுக்குப் போகலியா இன்னும்?’’

இன்னொருவராக இருந்தால் ‘‘இல்லை’’ என்ற பதில் சொல்லுவார்கள், இயந்திரம் மாதிரி. அம்பு சொல்ல மாட்டாள். ஒரு தடவை சொன்னால் சொன்னது. வார்த்தைகளை வீணாக அடிக்கக்கூடாது.

சுவரில் பொட்டு அழுக்கிருந்தால் மகாதேவன் வெள்ளை அடிக்கிறவனைக் கூப்பிட்டு வந்துவிடுவான். குளிக்கும் அறைக் கதவு தண்ணீர் பட்டுப் பட்டு அடிநாதாங்கி துருபிடித்து விண்டுபோய் நொண்டியாகி விட்டது; மகாதேவன் வந்ததும் வேறு பட்டம் வாங்கி வந்து தன் கையாலேயே அடித்து விட்டான்.

அன்று யாரோ கிழவி வந்தாள். "டாக்டர் இருக்காங்களோ, தம்பி?" என்று கேட்டாள் என்னிடம். எனக்கு முதலில் புரியவில்லை. "என்ன வேணும்?" என்றேன். "வெளியே போயிருக்காங்களா?" என்றாள். மறுபடியும் அவளோடு என்ன விளையாட்டு என்று நினைத்துகொண்டு "இதோ நான் இருக்கேனே? என்ன வேணும்னு சொல்லேன்" என்று சற்று உரக்கச் சொன்னேன். 'இல்லே, தம்பி. பெரிய டாக்டரு இருக்காங்களோன்னு கேட்டேன்" என்று—என் குரலின் சிடுசிடுப்பைக் கண்டு மன்னிப்புக் கேட்கிற பதிலாக வந்தது. பெரிய டாக்டர், அப்போது வாழைக்கன்னுக்குத் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தார். "சார் சார், யாரோ உங்களைப் பார்க்கணும்னு வந்திருக்கா" என்று கொல்லைத் தாழ்வாரத்தண்டை போய்க் கூப்பிட்டேன். மகாதேவன் ஓடி வந்தான். கிழவியை என்னமோ விசாரித்தான். மருந்தைக் கொடுத்தனுப்பினான். அவள் வெளியே போகும்போதாவது "'நான் பெரிய டாக்டர் இல்லை—சின்ன டாக்டர்தான்" என்றாவது சொல்லியனுப்பக் கூடாதா? (கம்பவுண்டர் என்று சொல்ல வேண்டாம்)...ஓகோ! அவனுக்குத் தெரியாதோ, பெரிய டாக்டர் என்று அவள் குறிப்பிட்டது? அவன் அப்போது கொல்லையிலல்லவா இருந்தான்? எனக்குச் சிரிப்பு வந்தது.

மகாதேவனிடம் ஒரே ஒரு குறைதான். காலை எட்டு மணிக்கு வருபவன், பன்னிரண்டு மணிக்கு வீட்டுக்குப் போய், மறுபடியும் நாலு மணிக்கு வருபவன், ஏழு மணிக்கு மேல் தங்கமாட்டான். லக்ஷ ரூபாய் சம்பளம் கொடுத்தாலும் ஏழு மணிக்குமேல் அவனை நிறுத்தமுடியாது. அது



வரையில் என்ன வேண்டுமானாலும் செய்யத்தயார். அது தான் சொன்னேனே? கம்பவுண்டர் வேலை மட்டுமில்லை, டாக்டர் வேலை மட்டுமில்லை, தோட்டக்காரன் வேலை முடிந்தால் குழந்தைக்கு பாடம் சொல்லிக் கொடுக்கிறது, அம்புவுக்கு சினிமா போன்ற கலை நிகழ்ச்சி டிக்கட்டுகள் ரிசர்வ் செய்வது, எதுவும் செய்ய அவன் தயார். ஆனால் ஏழு மணிக்கு எதைச் சொன்னாலும் கேட்கமாட்டான்.

"குட்டிகள்ளாம் தனியாயிருக்கும், அண்ணா. ஏழு மணிக்கு மேலே என்னை விட்டுடுங்கோ...அண்ணா வல்லியே வல்லையேன்னு எல்லாம் வாசலைப் பார்த்துண்டு நிக்கும். வயசான குழந்தைகள். அம்மா வேற கடைப்படாமல் போயிட்டா. எட்டு மணிக்குள்ளே எல்லாரும் சாப்பிட்டு விடணும்னு அம்மாவுக்கு ஆசை—ஆர்டர்னு சொல்ல மாட்டேன். ஆனா எனக்கு என்னமோ அதை ஆர்டர் மாதிரி நிறைவேத்திப்பிடணும்னுதான் தோணறது. நம்ப ஊரா இது? பொம்மனாட்டிகள் காலமே மூணுமணி நாலு மணிக்கு எழுந்திருக்க வேண்டியிருக்கு. பால்காரனுக்கு அதுதான் சௌகரியமான நேரம், 'அம்மா, பால்'னு நாலு தடவைக் கத்துவன். கதவைத் தட்டுவன். இல்லாட்டா வாசல் ஜன்னலாலே எட்டிப் பார்ப்பன்—எல்லாரும் தூங்கறதை. எப்படித் தூங்கறான்னு பார்க்கறாப் போல. அன்னிக்கு அப்படித்தான் எனக்கு நல்ல அசந்த தூக்கம். பால்காரப் பையன் வந்து கூப்பிட்டிருக்கான். அம்மாவுக்கு ஜுரம், அடிச்சுப் போட்டாப்பல தூங்கறா. என் தங்கையும் ரண்டு மணிவரை முழிச்சிண்டிருந்து, அவளைக் கவனிச்சுப்பட்டு அசந்து தூங்கியிருக்கா. அவன் கூப்பிட்டது காதிலே விழலே. விழுந்துதான் சொப்பனம் மாதிரி இருந்திருக்கோ என்னமோ? கொஞ்ச நாழியாச்சு, விழிப்புக் கொடுத்துக் கண்ணைத் திறந்திருக்கா. அந்தப் பயல் ஜன்னலுக்கு அந்தண்டே நின்று அவளைப் பார்த்துண்டே இருந்திருக்கான். அவளுக்குச் சடேர்னு தூக்கி வாரிப் போட்டிருக்கு. 'யாரு?'ன்னு மெரண்டு போய்க்

கேட்டிருக்கா. 'நான்தாம்மா பால். எத்தினித் தடவையம்மா கூப்பிடறது'ன்னிருக்கான். அவன் கூப்பிட்டது ஒரு தடவைதான். கூப்பிட்டுத் திறக்கலேன்னா கதவை இடிக்கப்படாதோ? அதுவும் செய்யாம, ஜன்னல்லெ வந்து தூங்கறவாளைப் பார்த்துண்டே நின்னா? சரி, அப்ப நாம அவனைக் கோவிச்சுக்க முடியுமோ? 'ஏன் நிக்கறேன்'னு கோவிச்சுண்டா அவன் என்ன நினைச்சுப்பான்? தப்புப் பண்றவாளைத் தப்பு பண்ணினேன்னு சொல்றதுன்னா ரொம்பக் கஷ்டம்? அவா தப்பு பண்றதெல்லாம் ரொம்ப சாது மாதிரி நடந்துக்கற மாதிரிதான் இருக்கும். நாம ஒண்ணும் சொல்லவும் முடியாது—மெல்லவும் முடியாது. ஜன்னலிலே ஏன் வந்து நிக்கறேன்னு கேட்க முடியுமா? சில பேர் கேப்பா. ஆனா அவன் என்ன பதில சொல்லுவனோ! அதை வாங்கிக்கத் தயாராயிருந்தா கேட்கலாம். நாம ஜாக்கிரதையா இருந்துட்டா இந்தத் தண்டாவே கிடையாது. என்னமோ சொல்ல வந்தேன். எங்கேயோ போய்ட்டேன். நாலுமணிக்கு எழுந்து பால் வாங்கினா அப்புறம் தூக்கம் ஏது? வீடு பெருக்கணும். சாணி தெளிக்கணும். கோலம் போடணும். காபி போடணும். சமைக்கணும். மத்தியானம் பத்துப் பாத்திரத்தைத் தேய்க்கணும். இப்படி நீங்க பார்த்துண்டே போனா நம்ம பொம்மனாட்டிகளுக்கு ராத்திரி பதினோரு மணிவரையில், சமையல் உள்ளெ அலம்பிவிட்டு, பாத்திரங்களை எடுத்து வைச்சு பாலுக்கு உறை குத்திப் படுத்துக்கற வரைக்கும் சரியாயிருக்கும். நாம் லேட்டா போய்ச் சாப்பிட்டா, அது இன்னும் தள்ளிப் போகும். அதுக்காகத்தான் ஏழு மணிக்கு வீட்டுக்குப் போகணும்னு சொல்றேன். என்னை ஒண்ணும் வித்யாசமா நினைச்சுக்கப்படாது, அண்ணா'' என்று மகாதேவன் சொல்லி முடிப்பதற்குள் ஏழு பத்தாகி விட்டது. 'நீ போயிட்டு வாப்பா. இனிமே நான் இப்படிச் சொல்லலே' என்றேன். 'பார்த்தேளா, பார்த்தேளா! அண்ணா கோவிச்சனூட்டாப் போலன்னா இருக்கு?' என்று வாய் அகல மலர்ந்தான்.



இந்தப் பயல் மூஞ்சி எப்படித்தான் இப்படி மலர்கிறதோ தெரியவில்லை. எப்போது பார்த்தாலும் கல கலவென்று, என்னமோ இப்பொழுதுதான் காபி சாப்பிட்டு வெற்றிலை போட்டுக் கொண்டாற்போல ஒரு உற்சாகம்! ஒரு அமனி!

## 2

நாலைந்து நாள் கழித்து ஒரு மாலை ஆறரை மணிக்கு ஒரு தந்தி வந்தது. அவசரத் தந்தி. சித்தப்பாவுக்கு உடல் நெருக்கடியான நிலையாம். உடனே புறப்பட்டு வர வேண்டுமாம். போட் மெயில் புறப்பட இன்னும் முக்கால் மணி கூட இராது. அதற்குள் நாலு மைலில் உள்ள ரயிலடிக்குப் போய், டிக்கெட் வாங்கி...எனக்கு சித்தப்பாவின் மீது கோபம் கோபமாக வந்தது. முகத்தைச் சிணுக்கினேன்.

''கவலைப்படாதிங்கோ, அண்ணா'' என்றான் மகாதேவன். நாலு நிமிஷத்தில் டாக்ஸி வந்தது. அம்பு வேட்டி சட்டைகளில் நாலைந்தை எடுத்து வைத்தான். பணத்தை எடுத்துக் கொடுத்தான். டாக்ஸியில் ஏறிக்கொண்டேன். மகாதேவனும் நானும் ஸ்டேஷனுக்குப் பறந்தோம். வண்டியில் கூட்டம் பிதுங்கிற்று. மனிதர்கள், படியிலும் ஜன்னல்களிலும் பிதுங்கி வழிந்து கொண்டிருந்தார்கள். வேளாங்கண்ணித் திருவிழாவாம். பிரத்யேக வண்டி விடுவார்களாம். மதச் சார்பற்ற ராஜ்யத்தில் ஏதோ போனால் போச்சு என்று ஒரு ஸ்பெஷல் வேண்டுமானால் விடலாம். இரண்டு, மூன்று என்று கேட்டால் அரசாங்க தத்துவத்தையே அல்லவா மாற்றவேண்டும்? என்ன செய்கிறது? நான் பல்லைக் கடித்துக் கொண்டேன். 'சித்தப்பா, இந்தச் சமயம் பார்த்து என்னைக் கழுத்தை அறுக்கிறாயே! நியாயமா?' பகவானைப் பார்த்து இரண்டு முறையாகத்தான் வேண்டிக்கொள்ள வேண்டும். சித்தப்பாவுக்கு இந்தச் சமயமே குணமாகி எழுந்து நடமாட வேண்டும்.

இல்லை, செத்துத்தான் போகவேண்டும் என்றால் நான் இடம் கிடைத்து நாளை அல்லது மறுநாள் புறப் பட்டுப் போய், என் முகத்தைப் பார்த்தபிறகு கண்ணை மூடவேண்டும்.

மகாதேவன் ஒரு தடவை பெருமூச்சுவிட்டான். ''சித்தெ இருங்கோண்ணா'' என்று மணிபர்ஸை வாங்கிக் கொண்டான்; போய்விட்டான். இன்னும் ஐந்து நிமிஷம் தான் இருக்கிறது, வண்டி புறப்பட. அங்குமிங்கும் கால் தரிக்காமல் உலாத்தினேன். ஓங்கித் தரையைக் காலால் அடிக்கவேண்டும் போலிருந்தது. கூட்டத்தைப் பார்த் தேன். கடிகாரத்தைப் பார்த்தேன். டிக்கெட்டை வாங்கி விட்டுக் கீழே நிற்கிற நூற்றுக்கணக்கான ஜனங்களைப் பார்த்தேன். எண்ணூறு பேர் கொள்ளுகிற வண்டிக்கு இரண்டாயிரம் டிக்கெட் எப்படிக் கொடுத்தார்கள் என்று என்னையே கேட்டுக் கொண்டேன். பாரத மாதாவின் புத்திரர்களையும் புத்திரிகளையும் சில சமயம் நெல்லிக் காய்களாகவும், சில சமயம் புளியாகவும் பெரியவர்கள் நினைக்கும் வித்தையைப் பார்த்தேன்

''அண்ணா வாங்கோ! வாங்கோண்ணா!'' என்று குரல் கேட்டது. என் பையை வாங்கிக்கொண்டு ஓடினான் மகா தேவன். நானும் பின்னால் ஓடினேன். ஒரு முதல் வகுப்பு வண்டியில் ஏற்றிவிட்டான். அங்கே இருந்த பிரயாணி ஒருவ ரிடம் அறிமுகப்படுத்தினான். ''உங்களுக்காக இவா பெரிய தியாகம் பண்ணியிருக்கா, அண்ணா! சாதாரண 'ஸாக்ரி பைஸ்' இல்லே. இவர் பெர்த்திலே உங்களுக்கும் ஒரு இடம் தரேன்னு சொல்லிவிட்டார். நான் வந்து கேட்டுண் டேன், இந்த மாதிரி. 'இவரை உசிரா மதிக்கிற உசிரு ஒன்று துடிச்சுண்டு கிடக்கு. நீங்க எப்படியாவது சம்மதிச்சுத் தான் ஆகணும். ஒரு ஆத்மாவைக் கரையேத்தினா புண்ய முண்டு'ன்னு சொன்னேன். 'சரி வரச் சொல்லுங்கோ'ன்னு சொல்லிட்டா. அண்ணா, செங்கல்பட்டுக்குப் போனப்புறம் இவாளுக்குச் சிரமமாயிருந்து படுத்துக்கணும்னா நீங்க



கீழே துண்டை விரிச்சு பையைத் தலைக்கு உசரம் வெச்சுப் படுத்துடணும்' என்றான் மகாதேவன். அவன் நெற்றி யெல்லாம் வியர்த்து ஊற்றிற்று. ''இடம் கொடுத்தாரே அது போறாதா? செங்கல்பட்டு என்ன? தாம்பரம் போன வுடனேயே படுத்துக்கணும்னு சார் சொன்னாரானா, நான் கீழே இறங்கிப் படுத்துக்கறேன்.''

''வாண்டாம் சார். நான் ராத்திரி பன்னிரண்டு மணிக்குத்தான் தூங்குகிற பழக்கம். விழுப்புரத்துக்கு அப்புறம் கொஞ்சம் அமட்டும். அப்பகூட என்ன? இப்படியே சித்தெ சாஞ்சிக்கிட்டாப் போவுது'' என்றார் இடம் கொடுத்தவர்.

''மகாதேவா, உனக்குத்தான் சிரமம். நீ ஏழு மணிக்கே வீட்டிலே இருக்கணும்னு துடிப்பே. என்னை மன்னிச்சுக்கணும். உங்கம்மா கிட்டவும் தங்கை கிட்டவும் சொல்லு, இப்படி அவசரமா நேர்ந்ததுன்னு.''

''ரொம்ப நன்னாருக்குண்ணா. ஏழுமணின்னா, எக்ரி மெண்டா? ரொம்ப அழகாயிருக்கு நீங்க பேசறது!''

கார்டின் ஊதல் கேட்டது. மகாதேவன் கீழே இறங்கி னான். வண்டி ஊதிவிட்டுக் கிளம்பிற்று.

வழக்கம்போல விசாரணை எல்லாம் ஆரம்பமாயிற்று. பெயர், தொழில் எல்லாம் சொன்னேன்.

''உங்க கம்பவுண்டரா அவர்? அப்படியே வந்து அழு துப்ட்டார். சார்! என் காலைத்தான் கட்டிக்கலெ. கண்ணுலெ ஜலம் தளும்புது. 'நீங்க எப்படியாவது ஒரு இடம் கொடுத்துத்தான் ஆகணும்'ங்கறாரு. தொண்டை நடுங்குது. தழுதழுக்குது. 'இவங்களை அப்படியே கண்ணுக் குக் கண்ணா வளர்த்த உசிரு இவரைப் பார்க்காம போயிடுமோன்னு அடிச்சுக்குது எனக்கு'ன்னாரு. 'சரி, அழச்சிட்டு வாங்கன்னுப்ட்டேன். இந்த மாதிரி சமயத்திலே ஒத்தாசை பண்ணாமெ எப்பத்தான் பண்ணப் போறோம்? ஆனா, அவரும் அப்படியே ஆடிப்போயிட்டார் சார். இந்த மாதிரி ஒரு அஸிஸ்டெண்ட் இருந்தா, எனக்கு இப்ப

ப்ளேன்லே போற உத்யோகமா பல வருஷம் முன்னாடியே கிடைச்சிருக்கும். ஆனா நமக்குமாத்திரம் அந்த அதிர்ஷ்டம் கிடையாது. சர்க்கார்லெ எனக்கு அசிஸ்டெண்டா வரவங்கள்ளாம், கர்ணனுக்கு சல்யன் வந்தாப்பல வந்தவங்க. 'பாப்பாத்தியம்மா. மாடு வந்துது. கட்டினாக் கட்டிக்கோ, கட்டாட்டாப் போ'ன்னு சொல்ற ஆளாயிருந்தாக்கூட பரவாயில்லெ. அந்த மாட்டைக் குத்தியடிச்சு, வேறு யார் வீட்டிலாவது கொண்டு கட்டிப்ட்டுப் போயிட ஆளுங்களாத்தான் நமக்கு வாச்சிட்டு வருது. நானும் ஸர்வீஸுக்கு வந்த நாள்ளேர்ந்து பாக்கிறேன். மருந்துக்கு பளிச்சுனு ஒரு மூஞ்சி? கிடையாது! எண்ணெய்னா எள்ளு கொண்டுவர ஆளாகத்தான் கிடைக்குது. அது ஜாதகம் சார். சில பேருக்கு வாகன அதிர்ஷ்டம், வீடு அதிர்ஷ்டம் எல்லாம் இருக்காதுன்னு சொல்ற வழக்கம். அந்த மாதிரி வேலைக்கார அதிர்ஷ்டம் நமக்குக் கிடையாது. சர்க்கார் வேலை சார். உங்க மாதிரி தனி ஆளா இருந்தா, ஒரு சப்பையை வச்சுப்பீங்களா? இந்த மாதிரி ணங்ணங்குன்னு சுண்டிப் பார்த்து ஒரு ஆளைப் பொறுக்கி எடுத்திருக்கீங்க! நாங்க என்ன செய்யமுடியும்? காத்தில்லாத டயரு. ப்ரேக் இல்லாத சக்கரம்—இப்படி எதையாவது கொடுத்து 'பாத்துக்குங்க' என்பாங்க'' என்று ஆரம்பித்தவர், தாம்பரம் வரும் வரையில் பேசிக் கொண்டேயிருந்தார்.

மகாதேவன் மாதிரி ஒரு ஆள் கிடைக்கிறது கடினம் தான். தனி முதலாளிக்குக்கூட இப்படிப்பட்ட ஆள் கிடைத்து விடாது. ஏனென்றால், இந்த மாதிரி ஆட்களை ஸ்வாமி அதிகமாகப் படைப்பதில்லை. எனக்கே வெட்கமாகத்தான் இருந்தது. நூற்றைம்பது ரூபாய் சம்பளம் அவனுக்கு எப்படிப் போதும்? நானே ஏன் இப்படிக் கஞ்சத்தனம் செய்யவேண்டும்? அம்பு சினிமாவுக்கும், நாடகத்திற்கும் செலவழிக்கிற காசு கூட இல்லையே அது! வந்தவுடனே செய்கிற முதல் காரியம் அவனுடைய சம்பளத்தை ஒரு இருபது சதவிதமாவது உயர்த்துவதுதான்.



ஊருக்குப்போய் வண்டியைவிட்டு இறங்கினதுமே சித்தி ''வாடா சந்தானம். சித்தப்பா உனக்குத்தான் காத்திண்டிருக்கார்டா. நீ பாரு, கூப்பிடு சித்தப்பாவை—யார் வந்திருக்கா பார்க்கட்டுமே'' என்று கத்தினாள்.

மல்லாந்து படுத்திருந்த சித்தப்பா தலையை ஆட்டினார், ''தெரிகிறது, கத்தாதே'' என்று சொல்வதுபோல. உடம்பு பனியாகக் கிடந்தது. நாடிகூட தொய்ந்து கிடந்தது.

''நீ வரணும்னுதாண்டா காத்திண்டிருக்கா சித்தப்பா. 'இனிமெ தாங்காது. சந்தானத்துக்குத் தந்தி கொடுத்துடு. நான் அவனைப் பார்க்காம போயிட்டேனோ, என் ஜீவன் ரொம்பக் கஷ்டப்படும்'னு பறவாப் பறந்தா. உடனே ஓடிப் போய் தந்தி கொடுத்துது.''

சித்தப்பா இதையெல்லாம் கேட்டுக்கொண்டுபேசாமல் மல்லாந்து படுத்திருந்தார். ''அட அசடே!'' என்று அவர் மனசுக்குள் சிரித்திருக்கவேண்டும். ஏனென்றால் அவர் செத்துப் போகவும் இல்லை; மண்ணும் இல்லை. என்னைப் பார்க்கக் காத்துக் கொண்டிருந்திருக்கலாம். ஆனால் யமன் என்ன வாசலில் வண்டி வைத்துக்கொண்டு அவசரப்படுத்துகிறானா? அவன் கூப்பிட்டால்தானே போகலாம்! என்னைப் பார்த்தால் போதுமா?

மறுநாள் சாயங்காலமே சித்தாப்பாவுக்கு வேர்த்து ஊற்றினதெல்லாம் நின்றுவிட்டது. தானே எழுந்து உட்கார்ந்து கொண்டார். உடம்பு ஜில்லிப்பு மாறி, கதகதப்பு மீண்டுவிட்டது. நாடியைப் பார்த்தேன். விண் விண் என்று விரலை உதைத்தது. இன்னும் பத்து வருஷத்திற்கு சித்தப்பாவை யாரும் அசைக்க முடியாது அந்த நாடி யமனையே உதைத்து விரட்டுவது போலிருந்தது.

ஆனால் சித்தி ஊருக்குப் போக விடவில்லை. 'ரெண்டு நாள் இருந்து சித்தாப்பாவுக்கு மருந்து கொடுத்துவிட்டுப் போயேன்' என்றாள். என் நோயாளிகள் காத்திருப்பார்களே? எத்தனை நாள் தாமதிக்கிறது? டாக்டர் எத்தனை

நான் வெளியூரில் போய்க் காலங்கழிக்க முடியும்? அவனுக்கு என்று பெண்டாட்டி குழந்தைகளைப் போல ஒரு நாறு பேரைப் பிணைத்து வைத்திருக்கிறாரே கடவுள். ஒரு சித்தப்பாவுக்காக எத்தனை பேரைக் காக்க வைக்கிறது? ஆனால் சித்தி விடுகிற வழியாக இல்லை. 'சரி மகாதேவன் இல்லாவிட்டால் கவலையாகத்தான் இருக்கும். ஆனால் அவனையே பெரிய டாக்டராக நினைக்கிற கிழவிகள் நமக்கு நோயாளிகளாக இருக்கும்போது சற்று உலு உலுப்பாக இருக்கலாம்' என்றுதான் தோன்றிற்று. மகாதேவனுக்கு எழுதிப் போட்டுவிட்டு உட்கார்ந்து விட்டேன்.

நாலாம் நாள் சித்தப்பா எழுந்து நடக்கவே ஆரம்பித்து விட்டார். நண்பர்கள் அவரைப் பார்க்க வந்து கொண்டிருந் தார்கள். நான் மாடியில் உட்கார்ந்து விட்டேன். திருப்பித் திருப்பி எத்தனை பேருக்கு சித்தாப்பாவின் உடம்பைப் பற்றிச் சொல்வது?

''சந்தானம்—சித்தப்பா கூப்பிடறார்டா'' என்று குரல் வந்தது.

போனேன்.

''இவர் தாம்பரத்துக்குப் போறார். இவர் விமானப் படையிலே ஆபிசரா இருக்கார். மத்தியானம் தாம்பரம் போறாராம் கார்லே, என்னோடவேணும்னா வரட்டுமேன் னார்.''

''ரொம்ப தாங்ஸ் ஸார். தாம்பரம் ஸ்டேஷன்லெ இறக்கி விட்டாலெ போதும். அங்கேருந்து எலெக்ட்ரிக் ட்ரெயின்லே போயிடறேன்.''

சித்தப்பா செட்டப்பா. தன் காசில் மட்டுமில்லை. பிறர் காசிலும் ஒரு பைஸா இறையப் பார்க்கமாட்டார். 'உடம்புதான் சரியாகிவிட்டது. பிள்ளையாண்டான் இருபது முப்பது என்று செலவழிப்பானேன்?' என்று அவர் நினைப்பதில் தவறில்லை. வேளாங்கண்ணி ஜனங்கள் வேறு திரும்புகிற நேரம். சரியென்று சொல்லிவிட்டேன்.



கடலூர் வந்ததும், காரை நிறுத்தி தாடையைத் திறந்து உபசாரம் எல்லாம் செய்து ஒரு மணி நேரம் கழித்துக் கிளப்பி என்னை அவர் தாம்பரம் கொண்டு விடும் போது மணி பத்தரை ஆகிவிட்டது. மின்சார ரயிலில் ஏறி, டாக்ஸிக்கு மன்றாடி, கிடைக்காமல் ஒரு சைக்கிள் ரிக்ஷாவை வைத்துக் கொண்டு வீடு வரும்போது மணி பன்னிரண்டரை. வாசலிலேயே படுத்துக் கிடக்கிற கறுப்பு நாய் என்னைக் கண்டதும் ஓடிவந்து அருகில் நின்று வாலையாட்டிற்று. வாசல்படி உள்ளே வந்ததில்லை அது. ஆனால் நான் வெளியே போகும் போதெல்லாம், ''கேட்'' டண்டை வந்து நிற்கும் போதெல்லாம் பார்வையில் எங்கு படுத்திருந்தாலும், வேகமாக ஓடிவரும். வாலைக் குழைக் கும். வாயைப் பிளந்து குரைக்கும். பல்லைக் காட்டும். ஒரு நிமிஷம் நின்றுவிட்டுப் பேசாமல் போய்ப் படுத்துவிடும். வெளியே போகும் போதும் அப்படித்தான். கூடவே நாலைந்து வீடுவரை வந்து நான் தெருமுக்கு திரும்பியதும், நின்று திரும்பிப் போகும். இப்போது எனக்காக விழித்திருப் பது போல, அது வாலாட்டிற்று. நிமிர்ந்து பார்த்தது. ''கேட்''டின் பானாக் கொக்கியைத் திறந்தேன். என்ன இது?—வாசல் கேட்டை ஒரு சங்கிலி போட்டுப் பூட்டுகிற வழக்கம். சங்கிலி பூட்டாமல் தொங்கிக் கொண்டிருந்தது. அம்பு ஏன் இவ்வளவு அஜாக்ரதையாக இருக்க வேண்டும் என்று புரியவில்லை.

திண்ணையின் மீது ஏறினேன். ஜன்னல் வழியாகப் பார்த்தேன். தெரு வெளிச்சம் நேராக உள்ளே விழுவ தில்லை. அதன் மயக்கம் மட்டும் சுவரில் படர்ந்து, உள்ளே இருக்கிற பீரோ, கட்டில், நாற்காலிகளை லேசாகக் காட் டும். அம்பு கீழே படுத்திருந்தாள். அவளுக்குப் பிடித்த தாழம்பூ நிறப் புடவைமாதிரிதான் இருந்தது. பட்டுப் புடவையை அப்படி லேசாக வீணாக்குபவள் இல்லையே? குழந்தைகள் இரண்டையும் காணவில்லை. கூடத்தில் படுத்திருக்கின்றனவோ என்னவோ?

கட்டில் மீது என் படுக்கை விரித்துக் கிடந்தது. மெத்தை—ஆனால் வெள்ளையாக அதன் மேல் ஒரு மனித உருவமும் பனியன் போட்டுப் படுத்திருந்தது. ஒரு தலையணையை அழகாகக் கட்டிக் கொண்டு அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தது. உற்றுப் பார்த்தேன். ''பெரிய டாக்டர்'' தான். தலைக்கு ஒரு தலையணை. கட்டிக் கொள்ள ஒரு தலையணை. காலுக்கு ஒரு தலையணை. நல்ல அயர்ந்த தூக்கம்.

ஹப்பாடா! சந்தன வாசனை அடிக்கிறது! நான் சந்தனம் பூசிக் கொள்வதில்லை. மாமாவுக்குக் கொடுத்த வைட்டமின் மொச்சை நாற்றம்தான் என் சட்டைப் பையில் வீசுகிறது. மறந்து போய் இரண்டு மாத்திரைகளை கடுதாசியில் மடித்துப் பைக்குள் போட்டிருந்தேன். அந்த வாசனை இப்போது குப்பென்று வீசிற்று. சந்தன வாசனை ஏது இங்கே? உற்றுப் பார்த்தேன். கட்டில் காலடியில் சின்ன மேஜைமீது ஒரு சின்ன எவர்சில்வர் கிண்ணம். ஆனால் அங்கே அந்தக் குள்ள மேஜையும் இருப்பதில்லை; கிண்ணமும் இருப்பதில்லை.

கட்டிலுக்குப் பக்கத்திலேயே, கீழேயே அம்பு தூங்குகிறாள். அம்பு அயர்ந்து தூங்கும்போது உடம்பு மல்லாந்துவிடும். முழங்கால் சில் இரண்டும் தெரியும்படியாகத்தான் தூங்குவாள். புடவையைச் சில்லிலிருந்து நான் கீழே இழுத்துவிடுகிற வழக்கம். இப்போதும் அப்படித்தான் தூங்குகிறாள். பாதி வெளிச்சமும் பாதி இருளுமாக இருந்ததால், கால் இரண்டும் வெள்ளையாகத் தெரிந்தன. சுரைக்காய் போன்ற கால். முகம் பளபளவென்றது. கை பளபளவென்றது. அம்புவின் தேகம் மொழுமொழுவென்றவாகு. நெற்றி ரொம்ப ரொம்ப அழகு. நேர் வகிட்டிலிருந்து தலைமயிர் பிரிந்து செவிளை நோக்கி இறங்குகிற அழகு—ஐயோ!—அந்த நீள முகத்திற்கும் அந்த இறக்கத்திற்கும் என்ன எடுப்பு! நீள மூக்கு, உதடு ஓரத்தில் ஒரு பள்ளக் கோடாக முடிகிற அழகு!



ஆமாம், என்ன விசேஷம்? காஞ்சிபுரம் தாழம்பூ நிறப் புடவை மாதிரி இருக்கிறதே! எங்கேயாவது கோயிலுக்கு, சினிமாவுக்குப் போய்வந்து களைப்பு தாங்காமல் அப்படியே படுத்துவிட்டாளா?

அதுசரி! இவ்வளவு பெரிய வீட்டில்—இந்த வீட்டைப் பற்றிச் சொல்லவில்லையே—கேட்டைத் தாண்டி உள்ளே நுழைந்ததும் திண்ணை—இரண்டு பக்கமும் வாசலைப் பார்த்து இரண்டு அறைகள்—ஒன்று என் வைத்திய அறை—இன்னொன்று படுக்கை அறை—நடுவில் வாசற்கதவு—கதவைத் திறந்ததும் ஒரு ஹால்—உள்ளே ஒரு பெரிய ஹால்—அதற்குப் பிறகு இடது பக்கம் சாப்பாட்டு அறை. அதைத் தாண்டிப்போனால் சமையலறை—வலது பக்கம் மூன்று அறைகள்—பிறகு கொல்லைத் தாழ்வாரம்—மூன்று மனை வீடு. சொந்த ஊர் வீடு மாதிரி இல்லாவிட்டாலும் இந்த ஊரில் நடுத்தர வீடு என்றுதான் சொல்லவேண்டும். இல்லாவிட்டால் எழுபதாயிரம் ரூபாய் சொல்லுவேனா? நான் என்ன பேராசைக்காரனா, பைத்தியமா? இப்பொழுது இந்த மாதிரி கட்டுவதாக இருந்தால் எழுபத்தையாயிரம் ஆகும்.

அதுசரி, இத்தனை பெரிய வீட்டில் மகாதேவனுக்குப் படுக்க வேறு இடமில்லையா? ஏன் நான் படுக்கிற அறையில், அதுவும் என் கட்டிலில், என் மெத்தை மீது என் தலையணைகளைக் கட்டிக்கொண்டு தூங்க வேண்டும்? அம்புவும் கட்டிலுக்கு இவ்வளவு அருகில் படுப்பானேன்? அவன் எழுந்து கொண்டு காலைத் தொங்கவிட்டால் கூட கால் விரல் இடிக்கும் போலிருக்கிறதே!

கதவை மெதுவாகத் தட்டினேன். பதில் இல்லை. கொஞ்சம் பலமாகத் தட்டினேன்.

''அம்பு! மோகன்! லதா! அம்பு!''

ஜன்னலண்டை மறுபடியும் போக வேண்டும் போலிருந்தது.

''யாரு?''

''அம்பு!''

''யாரு?''

''நான்தான்!''

அம்பு ஜன்னலண்டை வந்தாள்.

''யாரு?''

''கதவைத் திற.''

''இதோ வந்துட்டேன்.''

ஜன்னலிலிருந்து மறைந்தாள் அம்பு. ஏதோ ஜமுக்காளம் இழுக்கிற சப்தம் கேட்டது. ஜன்னல் வழியாகப் பார்த்தேன். கட்டில் இருந்தது. மெத்தை இருந்தது. பிரித்தில்லை. சுருட்டியிருந்தது. சின்ன மேஜை மேல் கிண்ணத்தைக் காணவில்லை.

டொடக்.

தாழ்ப்பாள் சத்தம்தான்.

ஹால் விளக்கு எரிந்தது. கதவு திறந்தது!

அம்பு பளீர் என்று நின்றாள். தாழம்பூ வர்ணப்புடவைதான். பட்டுப் புடவை. தூங்கின பளபளப்பு முகத்தில். தலை மயிர்க் கலைவைக் கோதி விட்டுக் கொண்டாள்.

''இப்பதான் வரேளா?''

''ம்''

''வண்டி ஏது இப்ப?''

''ஒரு சிநேகிதர் காரில் வந்தார். தாம்பரம் வரையில் ஏத்திண்டு வந்தார்'' என்று சொன்னபடியே உள்ளே போனேன். ஹாலைக் கடந்து, அறை விளக்கைப் போட்டேன்.

''யாரு படுத்திண்டிருக்கா?''

''மகாதேவன்.''



மகாதேவன் எங்கேயோ கவரோரமாக ஒரு வெள்ளைச் சீர்காழிப் பாயில் கிடந்தான்; உயரம் போதாத ஒரு தலையணையில் சுவரைப் பார்த்து ஒருக்களித்தபடி, இரண்டு கைகளையும் காலிடுக்கில் செருகி அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான்.

''வீட்டுக்குப் போகலியா?''

''போனான். சாயங்காலமே புடிச்சு லதாவுக்கு ஜுரமாயிருந்தது. மருந்து கிருந்து கொடுக்கணுமேன்னு இங்கதான் படுத்துண்டுடேன்னு சொன்னேன்.''

லதா தூங்கிக்கொண்டிருந்தது. தொட்டுப் பார்த்தேன். வெறும் ஜலதோஷக் காய்ச்சல்தான்.

''என்ன ஆகாரம் கொடுத்தே?''

''கஞ்சிதான்.''

''கஞ்சியைக் குடிச்சுட்டா இப்படித் தூங்கறான், பாவம்!''

''மகாதேவனைச் சொல்றேளா? அவனுக்கு என்னதுக்குக் கஞ்சி! அவன் வீட்டிலேயே சாப்பிட்டு வந்துட்டான்.

''லதாவுக்கு என்ன கஞ்சி கொடுத்தே?''

''பார்லிக் கஞ்சி. அதையே சரியாச் சாப்பிடலே. தூங்கியும் போயிடுத்து...ம் சித்தப்பாவுக்கு எப்படியிருக்கு உடம்பு?''

''இப்ப சரியாத்தான் இருக்கு.''

''என்ன பண்ணித்து?''

விவரமாகச் சொல்ல ஆரம்பித்தேன். பாதி சொல்லும் போதே மகாதேவன் 'ம்ஹும்' என்று முனகியவாறு திரும்பிப் படுத்தான். ஐந்து நிமிஷம் கழித்துக் கண்ணை விழித்தான். எங்கே இருக்கிறோம், எந்த இடத்தில் படுத்திருக்கிறோம் என்று புரியாததுபோல் விழித்தான். அப்படியே, புருவத்தைத் தூக்கி ஒரு தூக்கக் கலக்கப் பார்வை பார்த்துவிட்டு வாரிச் சுருட்டி எழுந்துகொண்டான்.

''எப்பண்ணா வந்தேள்?''

''நான் வந்து அரைமணியாச்சு.''

''இப்ப ஏது வண்டி? பார்சல்ல வந்தேளா?''

''இல்லை. என்னையே ஒருத்தர் பார்சல் பண்ணிண்டு வந்துவிட்டார் கார்லே.''

''மணி என்ன இப்ப?''

''ஒரு மணி.''

''கார்லெ வந்தேளா!''

''ஆமாம். தாம்பரம் வரையில் ஒரு சிநேகிதர் வந்தார். என்னை அழச்சிண்டு வந்தார். தாம்பரம் வந்ததும் எலைக்ட்ரிக் டிரெயின்லே ஏறி அப்புறம் ரிக்ஷா வச்சுண்டு வந்தேன்.''

''சித்தப்பாவுக்கு எப்படியிருக்கு?'' என்று அவன் கேட்டதற்கு ஒரு பாட்டம் பேசினேன்.

''அண்ணா போன முகூர்த்தம், பிழைச்சுட்டார். டிக்கெட் கிடைச்ச சுருக்கையும்—அதிலேயும் அன்னிக்கு, நெரிசல்லே—இடம் கிடைச்சதும், அந்த மனுஷன் சரின்னு இடம் கொடுத்ததும்—நல்ல சகுனமாத்தான் இருக்கு. 'பயப்பட ஒண்ணும் இல்லை'ன்னு மனசிலே பட்டுண்டே இருந்துது. அப்படியே பயமில்லாம பண்ணிப்ட்டார் பகவான்'' என்றான் மகாதேவன்.

''அதுசரி, ஒரு பயம் போனா—இன்னொரு பயம்.''

''அதெல்லாம் ஒண்ணுமில்லேண்ணா நாடிகீடியெல்லாம் எப்படியிருக்கு?''

நாடி செத்துப் போறவரைக்கும் அடிச்சிண்டுதானிருக்கும். பயம் இல்லாம இருக்குமா? அவர் பயப்படாட்டா சித்தி பயப்படறா. சித்தி பயப்படாட்டா நான் பயப்படறேன்.''

''ஏன் அப்படி பயமாயிருக்கா?''



''எனக்குப் பயமாகத்தானிருக்கு.''

''எனக்கு என்னமோ அப்படித் தோணலேண்ணா.''

''உனக்குத் தோணலே. அனுபவிக்கிறவாளுக்குன்னா தெரியும்?''

''சரி—நீங்க ஏதாவது சாப்பிடறேளா?''

''செங்கல்பட்டிலே சாப்பிட்டுவிட்டேன்.''

''பால் இருந்தது. உறைகுத்திப்ட்டேன். வெந்நீரைப் போட்டு மால்ட் ஏதாவது கரைச்சுத் தரட்டுமா!''

' ஒண்ணும் வாண்டாம்.''

''ஏதாவது சாப்பிடுங்கோண்ணா. நான் வரேன்.''

''எங்கே?''

''வீட்டுக்குண்ணா.''

''இத்தனை நாழிக்கு மேலயா?''

''நன்னாருக்கே! நீங்க வந்தாச்சு, அப்புறம் என்ன? குழந்தைக்கு ஜுரமாயிருக்கேன்னு சொன்னா, வந்தேன். நீங்க வந்தாச்சு. நான் வரேண்ணா'' என்று கிளம்புவதற்கு முன்னால் சீர்காழிப்பாயைச் சுருட்டி ஒரு ஓரமாக வைத்து விட்டு ''ரொம்ப நாழியாச்சு, அண்ணா படுத்துக்குங்கோ, கதவைத் தாப்பாள் போட்டுடுங்கோ'' என்று சொல்லி விட்டு நகர்ந்தான்.

மெத்தையில் படுத்தேன். லேசாகச் சந்தன மணம் வீசிற்று. பெரிய மகான்கள் செத்துப்போனால் சந்தனக் கட்டையை வைத்துக் கொளுத்துவார்களாமே?

''ஹப்பாடா—சந்தன வாசனை! அடிக்கிறதே ஏது?''

''நான்தான், வேத்துக் கசமாயிருந்தது. சாயங்காலம் வாங்கிண்டு வந்து கழுத்து மூஞ்சியெல்லாம் தடவிண்டேன்.''

''அப்பாடா! நல்ல சந்தனம்—காந்தி செத்துப் போனாப்பல வாசனை அடிக்கறது..'

''என்னது??'

"ஆமாம். காந்தி செத்துப் போனபோது சந்தனக் கட்டையெல்லாம் போட்டுத்தானே எரிச்சாளாம்?"

"ரொம்ப அழகாயிருக்கு பேசறது"

"ஏன்?"

"ஏன்னு கேக்கணுமா? தத்துப்பித்துன்னு பேசிப்ட்டு."

"சந்தனம்னா சாந்திக் கலியாண உள்வாசனை வருங்கிறியா? உனக்கு வரதோ என்னமோ—எனக்குவல்லெ. எனக்கு காந்தி போன வாசனைதான் வரது."

"திருப்பித் திருப்பிச் சொல்லிண்டேயிருக்கணுமாக்கும் அதை?"

"எனக்குச் சொல்லணும்போல் இருந்தா சொல்லப்படாதா?"

"உங்களுக்குப் பிடிக்கலேன்னா, நாளைக்கு வெயில்லே காயப்போட்டுட்டு, வாசனை போனப்பறம் படுத்துக்குங்கோ அதிலே."

"வெய்யில்லே போட்டாப் போயிடுமாக்கும்? மறுபடியும் வந்துடுத்துன்னா, நான் ஊருக்கு மறுபடியும் போயிருக்கிறபோது?"

"........."

"ஆனா நான் மறுபடியும் ஊருக்குப் போனா மறுபடியும் அந்த வாச்னை அடிக்காம பண்ணமுடியும்."

"........."

"எப்படின்னு கேக்க மாட்டேங்கிறியே?"

"........."

"கேட்க மாட்டியா?"

"அவசியமில்லே."

"நான் அவசியமாச் சொல்லித்தான் ஆகணும். அந்தப் பெரிய டாக்டருக்குச் சீட்டுக்கிழிச்சுப்பட்டா இந்த வாசனை அடிக்காது."



"என்னது?"

"ஒரு கிழவி கேட்டா அண்ணிக்கு ஒரு நாளைக்கு, 'பெரிய டாக்டர் இல்லியா, தம்பி?'ன்னு, அப்ப ஏதோ தெரியாம சொல்றான்னு நெனச்சேன். இப்ப என்னடான்னா இந்த மெத்தையும் அவன்தான் பெரிய டாக்டர்னு சொல்ல ஆரமிச்சிருக்கு, இப்படியே விட்டு விட்டா, மெத்தையைப் பிடுங்கிக்கிண்ட மாதிரி வீட்டையும் பிடுங்கிடுவான். அப்புறம்...காலமே சீட்டுக் கிழிச்சா சரியாப்போயிடறது."

"அவனுக்குச் சீட்டைக் கிழிச்சா வீட்டைக் காப்பாத்திட முடியும்னு எண்ணமோ?"

"பின்னே இந்த அயோக்யன்களை முளையிலே கிள்ளி எறியாட்டா, வேப்பம் கன்னும் ஆலங்கன்னும் சுவர்லே வளர்றதை விட்டு[illegible]க்கறாப்பலதானே?"

"ஹ்ம்."

"என்ன ஹ்ம்?"

"வீடுன்னா என்ன—மூணு கிரவுண்டு மனை, முக்கால் கிரவுண்டு சிமிண்டுக் கட்டடம் மாத்திரம் இல்லே; அதிலெ இருக்கிற பெண்டாட்டி, குழந்தைகள்தான் வீடு. ஜாக்ரதை!"

"என்ன ஜாக்ரதை சீக்ரதைன்னு பயமுறுத்தறே?"

"நான் பயமுறுத்தலெ. நீங்கதான் பயமுறுத்தறேள், சீட்டைக் கிழிச்சிப்பிடுவேன், அப்படி இப்படின்னு."

"ஏன் அவனுக்குச் சீட்டுக் கிழிக்கறேன்னவுடனே, உனக்குப் பயமா இருக்கா?"

"எனக்கென்ன பயம்? நீங்கதான் பயந்துண்டு சீட்டைக் கிழிக்கிறேன், வீட்டைக் காப்பாத்திக்கிறேன்னேள்?"

அவள் கழுத்தைப் பிடித்து நெறித்து, ஆட்டி உலுக்கி... தலை கொளகொளவென்று ஆடுகிற வரையில் உலுக்கி.....

அப்பா! என்ன பயங்கரம்! பல்லைக் கடித்துக்கொண்டு நான் குலுக்கின காட்சி என்னை என்னமோ செய்தது. பதில் சொல்லவில்லை. யாரையோ உரக்கத் திட்ட வேண்டும் போலிருந்தது. யாரை? என்னைப் படைத்தானே, அவனை. என் அம்மா அப்பா இரண்டு பேரையும் நினைத்துக்கொண்டு அழவேண்டும் போலிருந்தது.

மெத்தையில் தூங்கிவிட்டு, கதவைத் திறந்த பிறகு ஓசைப்படாமல் ஓடிப்போய், சீர்காழிப் பாயில் தூங்காமல் தூங்கின...சி வயிற்றைப் புரட்டுகிறது. அம்மா! அப்பா! நல்ல வேளையாக நீங்கள் இப்போது இல்லை. உங்கள் பிள்ளையை, தெருவோடு போகிற பயல் இப்படி உள்ளே நுழைந்து, முதுகில் குத்துகிற கண்ராவியைப் பார்க்காமல் போனீர்களே!

மூன்று மணியாகிவிட்டது. தூக்கம் வரவில்லை. விளக்கைப் போட்டேன். அம்பு மல்லாந்து, முழங்கால்கள் இரண்டும் தெரியத் தூங்குகிறாள். வாய் லேசாகத் திறந்திருக்கிறது. ஐயோ! பெரிய சுரைக்காய் போல் வழவழவென்று கால், பொட்டுக் கட்டி ஆடுவாளே தெருவாசலில், அவளைப் பார்ப்பது போல என் உடம்பு சுட்டது. அம்பு அவளைவிட அழகு! அந்தக் கிழவியைவிட அழகு! அப்படியே பிழிந்து அவளை வாயில் ஊற்றிக்கொள்ள வேண்டும் போலிருக்கிறது. ஆனால் மகாதேவன் இந்தக் கால கண்டியைப் பிழிந்து ஊற்றி நெஞ்சில் வைத்துக் கொண்டு விட்ட மாதிரி இருக்கிறதே?—என் நெஞ்சம் சுடுகிறது.

நாய் குரைக்கிறது. கறுப்பு நாய்தான். எழுந்து ஜன்னல் வழியாகப் பார்த்தேன். தலையைத் தூக்கிக் கிழக்கே பார்த்துக் குரைக்கிறது. வொவ்...வொவ்...வொவ்...ஒவ்... யாரையோ திட்டுகிறாற் போல்தான் இருக்கிறது. பேஷ்! நன்றாகக் குரை. திட்டு, அந்தத் திக்கில் சூரியன் எழுவான்...திட்டு. நன்றாகத் திட்டு. 'ஏண்டா நேற்று சாயங்காலம் அஸ்தமித்தாய்?' என்று திட்டு!

# 3

காலை எழுந்து குளித்துவிட்டு முதல் காரியமாக என்ன செய்தேன் தெரியுமா? கிழக்கே போனேன். பிள்ளையார் கோயில் வாசலில் போய் நின்றேன். காத்துக் கொண்டு நின்றேன்.

அதோ வருகிறான்...வெள்ளையாக மொருமொருவென்று குளித்துவிட்டு மகாதேவன் வருகிறான்—தலைக்கு கரு கருவென்று எண்ணெய் போட்டு வாரி—உடம்பில் ஒரு டெரிலின் சட்டை—அதே சட்டைதான். கபோதிப் பயலுக்கு—தோய்த்துத் தோய்த்து வருஷக் கணக்கில் அதையே போட்டுக் கொண்டிருக்கிறான். வெள்ளை வெளேர் என்று வேட்டி. விபூதிப்பட்டை வேறு—இது விரலால் போடுகிற பட்டை இல்லை. அச்சு வைத்துப் போடுகிற பட்டை. இத்தனை அழகாக மனுஷன் யாரும் திருநீறு இட்டுக் கொள்ள முடியாது.

''நமஸ்காரம், அண்ணா! எங்கே இப்படி?'' என்றான்.

அதே சிரிப்பு, அதே மலர்ச்சி—ஆனால் அதே மலர்ச்சி என்று எப்படிச் சொல்ல முடியும்? முகத்தில் ஒரு கேள்விக் குறி! அந்தக் குறிபட்டு, அந்த மலர்ச்சி திரிந்து போன பால் மாதிரி அவனுக்கும் உபயோகப் படாமல், எனக்கும் உபயோகப் படாமல் போன அந்தக் காட்சியை நீங்கள் பார்க்க வேண்டும்.

''உன்னைத்தான் பார்க்க வந்தேன்.''

''என்ன?''

''சித்தப்பாவுக்கு உடம்பு சரியில்லேன்னு போனே னோல்லியோ? அவருக்கு ஆறாயிரம் ரூபாயோ என்னமோ கடனாம். அதைத் தீர்க்கிறேன்னு ஒப்புக்கொண்டு வந்துட்டேன். அதனாலெ எனக்கு உன்னை வச்சுக்க முடியாது போலிருக்கு. 'நீ இன்னியோடே நின்னுக்கோ'ன்னு சொல்லத்தான் வந்தேன். மூணு மாசச் சம்பளத்தை உனக்குக் கொடுத்துடறேன். இன்னிக்கு சாயங்காலம்

உங்க வீட்டிலேயே கொண்டு வந்து கொடுத்துடறேன். நீ இல்லாம ரொம்பச் சிரமமாத்தான் இருக்கும் எனக்கு. அம்புவுக்கு இன்னும் ரொம்ப சிரமமாயிருக்கும். நீ அப்படிக் காரியங்கள்ளாம் பாத்துண்டிருந்தே. ஆனா நான் என்ன செய்யறது? என்னாலெ தாங்க முடியாது போயிருக்குப் இந்த பளுவை. நீ ஒண்ணும் தப்பா நினைச்சுக்காமெ—''

''அதனாலெ என்னண்ணா? நீங்கதான் சொல்றேளே? உங்களுக்கு நிறுத்த மனசில்லெ. ஆனா சந்தர்ப்பம் அப்படி வந்துடுத்து'' என்று இரண்டு கைவிரல்களையும் பிரித்துச் சந்தர்ப்பங்கள் நேர்ந்ததைச் சேர்த்துச் சைகையாகக் காட்டினான் மகாதேவன்.

''ஆமாம்''

''அதனாலெ என்னண்ணா?''

''நான் சாயங்காலம் வீட்டிலெ கொண்டு வந்து கொடுக்கிறேன் பணத்தை.''

''அதனாலெ என்னண்ணா? உங்க சௌகரியம். நீங்க வரணும்ங்கிற அவசியமில்லெ. நானே வந்து வாங்கிப்பேன்.''

''பரவாயில்லே, நீ எதிர்பார்க்காம நிறுத்திட்டேன். அதனாலே நான் கொண்டு வந்து கொடுக்கறதுதான் நியாயம்.''

''அப்புறம் நான் என்னத்தைச் சொல்றது?''

''ஒழிஞ்சு போறது'' என்று மனசுக்குள் சொல்லிக் கொண்டேன்.

''வரேண்ணா'' என்று பிள்ளையாரைப் பார்த்துப் பளார் பளார் என்று கன்னத்தில் அறைந்து கொண்டான். அந்த அறை மாத்திரம் பிள்ளையார் கன்னத்தில் விழுந்திருக்கட்டும். அவருக்கு இருக்கிற ஒரு தந்தமும் விண்டு விழுந்திருக்கும். திரும்பினான். பொட்டைச் சாரை மாதிரி விர்ரென்று நடந்தான்.



நான் வீடு திரும்பினேன்.

''மகாதேவன் ஏன் வரவில்லை?'' இந்தக் கேள்வி வருமோ வருமோ என்று காத்துக் கிடந்தேன்.

அம்பு வாயைத் திறக்கவில்லை.

திருடனுக்குத் தேள் கொட்டினால் மூச்சுப் பரியுமோ? நோயாளிகள் வந்தார்கள். ''பெரிய டாக்டர்'' இல்லாவிட்டால் என்ன? வைத்தியம் நடக்காதா? நோயாளிகள் வரமாட்டார்களா? இல்லை நோயே செத்துவிடுமா? அம்பு! நீ ஒன்றுமே நடக்காதது போல இருந்தால் எனக்குப் புரியாதா என்ன? தேள் கொட்டு சாதாரணமா என்ன? நெஞ்செல்லாம் கடுக்கும் என் முன்னால் நீ உஸ் உஸ் என்று தவிக்காவிட்டால் என்ன? நீ பாத்திரங்களை மொட்டு மொட்டு என்று வைக்கிறாயே! குளிக்கிற அறையில் போய் 'சோப்புத் தேய்த்துக் கொள்கிறேன்' என்று உடலெல்லாம் பிராண்டிக் கொண்டிருப்பாயே! ஒரு செப்பு ஜலம் விட்டுக் கொள்வதற்கு நடுவில, சூன்யத்தை வெறிச்சென்று பார்த்துக் கொண்டு நிற்பாயே! மோகன் மேலும் லதாவின் மேலும் எரிந்து விழுகிறாயே! எனக்கா தெரியாது? நானும் மனுஷன்தானே, உன்னைப் போல—எனக்கும் இங்கே வைத்தியம் ஓடவில்லையே. நாடியை எண்ணக்கூட முடியவில்லையே. முப்பது எண்ணின பிறகு முப்பத்தொன்று என்று சொல்ல மறந்து போய் நாற்பத்திரண்டு, நாற்பத்து நாலரை என்று சொல்லுகிறேனே... சில நாட்கள் என் காதில் கூட விழவில்லை. என் விரல் அதிரவில்லை நான்கூட நோயாளியைப்பார்க்கவில்லை. உன்னைப் போல் சூன்யத்தைத்தான் பார்த்துக் கொண்டிருந்தேன். நோயாளி ஏதோ சொல்கிறான். காதில் விழுகிறது. ஆனால் விழவில்லை.

எனக்குச் சாதம் போடவேண்டும் என்று கூடக்கவலையில்லை உனக்கு சமையல்கார அம்மாள் இருக்கிறாள் அதற்கு. குழந்தைகளுக்குச் சோற்றைப் போட்டுப் பள்ளிக்கூடம் அனுப்பிவிட்டு நீயும் வாடாமல்லி நிறப் புடவை

யைக் கட்டிக் கொண்டு கிளம்பி விடுவாய். எனக்கு நீ ஏன் சோறு போட வேண்டும்? ஒரு குழந்தை பிறந்தாலே போதாதோ, அகமுடையானை ஒதுக்கி வைக்க? இரண்டு குழந்தை இருக்கும்போது நான் சாப்பிட்டால் என்ன, சாப்பிடா விட்டால் என்ன?

"எங்கே சாமி, நாலஞ்சு நாளா செப்பையாவைக் காணும்?"—கம்பவுண்டர் சிவப்பு ஐயா—ஆமாம்—பட்டு ஐயா! வெல்வெட்டு மாதிரி இருப்பார். சிரிப்பார்.

"நிறுத்திட்டீங்களா? அதானே பார்த்தேன், இந்தப் பக்கமே காணுமேன்னு? ஐயிரே! சொல்றேன்னு நெனச்சுக்காதீங்க—உன்வீடு இனிமேத்தான் உருப்படும். புள்ளீங்களாம் பொறந்தப்பறம் சின்னப் புள்ளீங்க மாதிரியே இருக்க முடியுமா? நமக்கே வெக்கமா இருக்கும். உள்ள இருக்கிற சாமியே பாத்துச் சிரிக்கும். நீ கவனமா இரு, சாமி. நம்மைத்தான் கவனிக்கலியேன்னு யாவரும் நினைக்கப் படாது சாமி. வெவகாரம் இப்படியே போய்க்கிட்டிருந்தா. அப்பாலெ முளிச்சுப் பிரயோசனமில்லை··· வாயா வார்த்தையாப் பேசணும். நாம பிரியமா இருக்கணும். பிரியமா இருக்கிறோம்னு காமிக்கவும் வேணும். நாம பாட்டுக்கு நம்ம பாட்டுக்கு நம்ம வேலையெப் பாத்துக்கிட்டிருந்தா, அவங்க அவங்களுக்கு துணிஞ்சு போயிடும். புரிஞ்சிக்கறவங்க புரிஞ்சுக்குவாங்க, கவலையை வுடு."

இந்த வேலைக்காரி எதற்காக இவ்வளவு அந்தரங்கமாகப் பேசி, என் மேல் ஏன் இப்படி இரக்கத்தைக்கொட்டுகிறாள்? பாடம் சொல்லிக் கொடுக்கிறாள்! ஐயோ பாவம் என்று கண்ணாலேயே அழாமல் எனக்காக அழுதுதொலைக்கிறாள்! ஆனால் இந்த "ஐயோ பாவ"த்துக்கெல்லாம் நான் அசைய மாட்டேன். என்னை அழவைக்கலாம் என்று பார்க்காதே.

நான் ஏன் அழவேண்டும்? வெள்ளம் தலைக்கு மேலே போய்விட்டது. முந்தாநாள் வேண்டுமென்றே முதல்



காட்சி சினிமாவுக்குப் போனேன். சினிமாப் பார்க்க எனக்குப் பிடிச்கிறதில்லை. எந்த படே ஜாம்பவான் எடுத்த படமானாலும் எனக்குப் பிடிக்காது. ஆனால் உள்ளுக்குள்ளே இருக்கிற சந்தானம் பயல் முனகிக்கொண்டேயிருந்தான். அவனுக்கு ரூபாயை எடுத்துக்கொண்டு, பெண் வேட்டை ஆடு ஆடு என்று தூண்டத் தெரியாது. அவனுக்கு அது பிடிக்காது, பெண்ணை வேட்டையாட வேண்டியதில்லை. தூர இருந்து பார்த்தாலேபோதும், சாமி நல்ல குயவன் என்று தெரியும். அவன் பண்ணுகிற ஜாடிகள் எல்லாவற்றுக்கும் ஆசைப்பட்டு முடியாது. ஆளுக்கு ஒரு ஜாடிதான் நல்லது. வேறு ஜாடியை எடுத்துச் சாப்பிட்டால் ஒன்று எச்சிலாக இருக்கும். இல்லை இன்னொருத்தனுக்கு எச்சிலாகி விடும்.

டாக்டராக இருக்கிறவனுக்கு எச்சில் துப்பல்கூட தெரிய வேண்டாமோ! புரோகிதனுக்கும் பூசாரிக்கும் மட்டும்தான் தெரியவேண்டுமா என்ன? டாக்டருக்கல்லவா முக்கியமாகத் தெரியவேண்டும்? அதனால்தான் சந்தானம் சினிமாவுக்குப் போய்த் தொலைந்தான். அங்கே போனால் அம்பு வழக்கத்திற்கு மாறாக இரண்டாம் வகுப்பில் உட் கார்ந்திருந்தாள். பக்கத்தில் "பெரிய டாக்டர்" உட்கார்ந்திருந்தார். படம் முடிந்ததும் நான் வீட்டுக்கு வந் தேன். பதினோரு மணிக்கு ஒரு ஆட்டோ ரிக்ஷாவில் இறங் கினாள் அம்பு. படுத்திருக்கிற குழந்தைகளை மெனக்கெட்டு "சாப்பிட்டாச்சா?" என்று கேட்டுவிட்டு படுத்துவிட்டாள். குழந்தைகளுக்குச் சாப்பாடு போட்டுவிட்டு சமையல்கார அம்மாள் காத்திருந்தாள். நான் வரும் வரையில் காத்தி ருந்த பிறகு வீட்டுக்குப் போனாள்.

இப்போதெல்லாம் இலை மறைவு காய் மறைவு கூடப் போய்விட்டது. இரண்டு பேரும் சேர்ந்துதான் டாக்ஸியி லும் ரிக்ஷாவிலும் போகிறார்கள். ஆனால், வீட்டிலிருந்து கிளம்பும் போதும், வீட்டுக்கு வரும்போதும் அம்பு தனி யாகத்தான் போகிறாள், வருகிறாள். ஒருநாள் எனக்கு நேராகவே டாக்ஸி போயிற்று. அம்பு என்னைப் பார்க்காம

விருக்க முடியாது. அவ்வளவு அருகில் நின்றேன் நான். முன்னால் ஒரு வண்டி போய்க்கொண்டிருந்தது. டாக்ஸி மெதுவாகத்தான் அங்கு போகவேண்டியிருந்தது. அம்பு என்னைப் பார்க்காமலிருக்க முடியாது; ஆனால், அம்புவின் பார்வையைப்பற்றித்தான் சொல்லியிருக்கிறேனே? பாராத பார்வை. அந்த மகாதேவனைக்கூட அப்படிப் பாராத பார்வையோடுதான் பார்க்கிறாளா? அந்தப் பார்வையைப் பார்க்கும்போது எனக்கே பல சமயம் சந்தேகம் வந்ததுண்டு, 'இவள் சாதாரண மனித இன்பங்களால் சந்தோஷம் அடைகிறாளா?' என்று. அப்பொழுதுகூட அவள் எங்கேயோ உத்திரத்தைத்தான் பார்த்துக்கொண்டிருப்பாள். இவள் மரக்கட்டையா, அல்லது 'இங்கே எங்கேயடா வந்தோம்?' என்று இந்த உலகத்தையே பார்த்து, பிறந்த நாள் முதல் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கும் யட்ச, தேவ, கின்னரியா என்று சந்தேகம் ஏற்பட்டதுண்டு. அப்பேர்ப்பட்ட இவள் மகாதேவனை மட்டும் பார்க்கிற பார்வையாகப் பார்த்துவிடப் போகிறாளா என்ன?

ஏன் என்று தெரியவில்லை. இப்பொழுதெல்லாம் நோயாளி யாருமே வருவதில்லை. பலகையும் நானும்தான் உட்கார்ந்திருக்கிறோம். பலகையை நான் பார்க்கிறேன். பலகை தெருவைப் பார்க்கிறது. ஆனால் அதை யாரும் பார்க்கிறதாகத் தெரியவில்லை. அம்பு மாதிரி ஒரு உருவம் இருக்கிற வீட்டில் வைத்தியம் என்று சாக்காவது சொல்லிக்கொண்டு யாராவது வர வேண்டாமோ? அதையும் காணோம்! மகாதேவன் அவ்வளவு பொல்லாதவனா? இல்லை, அவ்வளவு மன்மதனா?

அம்புவின் முகம், உடம்பெல்லாம் இப்பொழுது ஒரே அமளியாகக் களை கட்டியிருக்கிறது. என்ன மினுமினுப்பு! என்ன வர்ணம்! காதுக்கு முன்னால் அவளுடைய கன்னப் பகுதி எப்போதுமே அழகானது. இப்போது அந்த மினுமினுப்பும் சேர்ந்துகொண்டு—என்ன கம்பீரமான முகம்! ஏதோ ராஜ்யம் ஆள்கிற பெண்மாதிரி ஒரு தோற்றம்



அவளுக்கு! எனக்கு அவளைக் கலியாணம் ஆனதிலிருந்து லேசில் அண்டுவதற்குப் பயம்தான். இந்த மாதிரி ஆசைகளை வைத்துக்கொண்டு அவளை நெருங்கலாமோ என்று பயப்படுவேன். அப்படி ஒரு கம்பீரமான, மலர்த்தன்மை இல்லாத முகம். சந்யாசினியோ, அல்லது அரசியோ—இரண்டுக்குள் இருக்கவேண்டும். வெளிச்சம் கொஞ்சம் இருந்தால்கூட எனக்கு அவளை நெருங்கக்கூசும். 'என்ன இதையெல்லாம் தத்துப்பித்து என்று சொல்லிக்கொண்டு...' என்று நினைப்பார்கள். வெளிச்சத்தில் அவளைத் தழுவிக் கொள்ளப் பயமாயிருக்கும் எனக்கு. முகத்தில் அத்தனை ராஜகளை. அவள் வேறு எதற்கோ பிறந்தவள்! அவளிடம் போய் இதெல்லாம்...நல்ல இருட்டாக இருந்தால்தான் எனக்குத் தைரியம் வருகிற வழக்கம். ஆனால், ஒன்று சொல்லவும் வேண்டும். இந்த மாதிரி அண்டமுடியாதவர் என்று நினைக்கிற பேர்வழிகளிடம்தான் நம் நெஞ்சம் மாட்டிக்கொண்டு தவிக்கிறது. அதையும் ஜயித்து விட்டோம் என்ற பெருமையல்லவா நமக்கு வேண்டியிருக்கிறது!

அம்பு! நானும் உன்னை அப்படித்தான் அணுகியிருக்கிறேன் போலிருக்கிறது! அதற்காகத்தான் இப்படி ஒரு போட்டியைக் கிளப்பிவிட்டிருக்கிறாயோ!

"ஆமாம். இங்கியே வச்சுக்கறதா! இல்லெ, ஆஸ்பத்திரியிலேயே வச்சுக்கிறதா? நான்தான் வந்திருக்கேனே, ஆஸ்பத்திரி எதுக்குன்னு நான் சொன்னேன். இங்கே யாரோ லேடி டாக்டர் சொந்தத்திலே ஆஸ்பத்திரி வச்சு நடத்தறாளாமே? 'அங்கதான் போற வழக்கம். அங்கியே போய்ட்டாப் போறது'ங்கறா அம்பு" என்றாள் அத்தை.

சொல்ல மறந்து போய்விட்டது—அம்புவின் அத்தையாம் இவள். திடீரென்று நாலைந்து நாளைக்கு முன்னால், அடியும் முடியும் சேராமல் அவள் தாடை மாதிரியே இருந்த ஒரு சின்ன கறுப்பு ட்ரங்குப் பெட்டியுடன் ஊரிலிருந்து வந்தாள். இரண்டு நாள் கழித்துத்தான் அம்புவின் மினுமினுப்புக்குப் காரணம் புரிந்தது. இத்தனை நாளாகக்

கவனிக்கவில்லையா என்று கேட்கலாம். கவனிக்காமல் என்ன? ஆனால், இரண்டு மூன்று வருஷமாகவே அம்பு கொஞ்சம் பருத்துவிட்டாள். சரிவு குழைவெல்லாம் மேடிட்டு, உலக அனுபவமே உடம்பில் ஏறிவிட்டாற்போல வரும் சதைப் பூச்சு தட்டை மனிதர்களை வட்டமாக்கு கிறதே. அந்த வயதை அடைந்து விட்டாள். பிரசவ அறைக்குள் போவதற்குப் பத்து நாள் முன்னால்வரையில் சில பேரைக் கண்டுபிடிக்க முடியாது. அம்பு அந்தச் சில பேரைச் சேர்ந்தவள்.

''அவ சௌகர்யபடி செய்யட்டும்'' என்று சொல்லி என் பொறுப்பை முடித்துக்கொண்டேன்.

வேலைக்காரி ஒரு நாள் டாக்ஸி கொண்டுவந்தாள். அம்பு ஏறிக்கொண்டாள். நானும் ரொம்பக் கவலைப்படு கிறவன் மாதிரி வாசலில் வந்து நின்றேன். அம்பு மாதிரியே இரிக்காமல் பழகியிருந்த மோகனும் லதாவும் வந்து நின் றார்கள். அம்புவின் நெற்றியில் குங்குமத்துக்கு மேல் ஒரு துளி விபூதிப் பொட்டும் தெரிந்தது.

இரண்டு வாரம் கழித்து அதே மாதிரிதான் நின்றேன். மோகனும் லதாவும் நின்றார்கள். டாக்ஸி வந்து நின்றது. மகாதேவன் இறங்கினான்! கதவைத் திறந்துவிட்டான். குழந்தையோடு அத்தை இறங்கினாள். மெதுவாக முழங் கால் சில் தெரிய அம்பு இறங்கினாள். உள்ளே போய்ப் படுத்துக்கொண்டாள்.

மகாதேவன் காபி சாப்பிட்டான். சாயங்காலம் வந்து பார்த்தான். மருந்து வாங்கிக்கொண்டு வந்தான். இரவு இங்கேயே சாப்பிட்டான். அத்தை இலைப்போட்டுச் சாப்பாடு போட்டாள்.

அத்தை இப்போதெல்லாம் என்னோடு அதிகமாகப் பேசுவதில்லை. மகாதேவனுக்குக் காபி, மகாதேவனுக்கு சாப்பாடு, மகாதேவனோடு பேச்சு, அந்தரங்கப் பேச்சு, மகாதேவனோடுதான் கடைக்குப்போய், சமான் வாங்கி வருவாள் அத்தை. மகாதேவன் அத்தைக்கு மருமகனாகி



விட்டான். கோவிலுக்கு அழைத்துப் போகிறான். நார் மடிப் புடவை வாங்க அழைத்துப் போகிறான்.

அப்படித்தான் ஒருநாள் அழைத்துப் போயிருந்தான். மோகனும் லதாவும் பள்ளிக்கூடம் போயிருந்தார்கள்.

நான் வழக்கம்போல் முன் அறையில் உட்கார்ந்திருந் தேன். அதற்குள் என்னைத் தவிர வேறு யாரும் வருவது கிடையாது என்பது எல்லோருக்கும் தெரியும். மோகனும் லதாவும் எதையாவது தேடிக்கொண்டு வரும். சில சமயம் என்னைப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருக்கும். ஏதோ பேச வரும். 'பள்ளிக்கூடம் போனியா?'' என்று கேட்பேன். இதுகளோடு நமக்கென்ன? எதையோ சொல்லிவிட்டுப் போகும். பள்ளிக்கூடம் போனியா என்று கேட்டதே நான் என்னமோ உயிரையே வாரி வீசிவிட்டதுபோல அதுகளுக்கு முகம் எல்லாம் பூரித்துப்போகும். ஏதோ சொல்லிவிட்டுப் போகும். மற்றபடி இங்கே யாரும் வருவது கிடையாது.

அம்பு வந்து அறையில் வாசற்படியண்டை நின்றாள். உள்ளே வரவில்லை.

''ஒரு சமாசாரம் பேசணும்.''

எனக்குத் தூக்கி வாரிப்போட்டது—வேறு யாரோடா வது பேசுகிறாளா?

''என்னோடவா?''

''ஆமாம்.''

''என்ன?''

''நான் தனியாப் போகப் போறேன். குழந்தைகளுக் கும் எனக்கும் எதையாவது கொடுத்து அனுப்பிச்சுடறது தான் நல்லது.''

''நான்...''

''கஷ்டப்பட வேண்டாம். சௌகர்யமா இருக்கலாம்... இஷ்டப்படி இருக்கலாம்.''

''எல்லாம் இஷ்டப்படி இருக்கணும்னு ஆசைப் படற தில்லே.''

''அதெல்லாம் இப்ப என்னத்துக்கு?...நான் சொன்னதைச் சீக்கிரம் செய்துட்டாத் தேவலை.''

''என்ன பண்ணணும்? சொத்திலே பங்கு. அதுதானே? என்ன என்ன வேணும்?''

''எனக்கு இந்த வீட்டையும் சாப்பாட்டுக்கும் கொடுத்தாப்போதும்.''

''வீடு கிடைக்காது.''

''ஏனாம்?''

''கிடைக்காது.''

''உன்னை இந்த வீட்டைவிட்டு விரட்டணும். இல்லே, உனக்கு வாண்டாம். எனக்கும் வாண்டாம்னு ஆகணும்... ரெண்டு பேரும் இதிலே இருக்கப்படாது.''

''பழகிப்போன வீடுன்னு கேக்கறேன்.''

''பழகிப்போன வீடுதானே? அப்படியே போயிடட்டும். இந்த வீட்டிலெ நான் இருக்கணும். நான் இல்லாட்டா, நீ இருக்க முடியாது.''

''சரி, ஏதாவது செய்யட்டும்—சுருக்கச் செய்யட்டும்.''

அதற்குமேல் பேச்சு நடக்கவில்லை.

மறுநாள் காலையில் நரைத்த மயிரும், முகமெல்லாம் பெருவியாதி மாதிரியுமாயிருந்த ஒருத்தர் சைக்கிளில் வந்து இறங்கினார். வைத்தியமில்லையாம்.

''என்ன சார்?''

''வீடு விக்கறதாகக் கேள்விப்பட்டேன்.''

''ஆமாம்.''

''பார்க்கலாமா?''

உள்ளே போய் பார்த்துவிட்டு வந்தார்.

''எப்படிக் கொடுக்கிறதா உத்தேசம்?''

''லட்ச ரூபாய்.''

''என்னது?''



''ஆமா, சார்! லட்ச ரூபாய்!''

''எத்தனை கிரவுண்டு!''

''மூணு கிரவுண்டு. வீடு மாத்திரம் முக்கால் கிரவுண்டு.''

''இன்னிக்கு புதுசாக் கட்டினால் அறுபதாயிரம் ரூபாய் கூட ஆகாதே.''

''கட்டிக்கிறதுதானே?''

''பார்த்துச் சொல்லுங்க சார்.''

''லட்ச ரூபாய். இஷ்டமிருந்தாப் பாருங்கோ. எனக்கு வேலை கிடக்கு.''

என்னை என்னவோபோல் பார்த்தார். முகம் சிவந்து விட்டது.

ஓயாமல் இதே வேலைதான். அரை மணிக்கு ஒரு தரகன், இரண்டு மணிக்கு ஒரு கார். ஆனால், லட்ச ரூபாய்க்குக் குறைவேனா? இந்த வீட்டைக் கொடுத்து விட்டால், இரண்டு வீடு வாங்கியாக வேண்டுமே? அம்புவுக்கு ஒன்று. எனக்கொன்று! லட்ச ரூபாய்தான்.

பதவியிலிருந்து ஓய்வெடுத்த கிழவர்கள்; பணக்காரக் கிழவிகள்; சைக்கிளில் வரும் தரகர்கள்; காரில் வரும் தரகர்கள்; நடந்து வரும் தரகர்கள்; கேட்டண்டையே நின்று உள்ளே வராமலேயே பேசும் வாடகைத் தரகர்கள்...

காவல்காரன் மாதிரி வீட்டைச் சுற்றிச் சுற்றிக் காண்பிப்பேன். லட்ச ரூபாய் என்று தலையில் அடித்து கடைசியில் விரட்டுவேன்.

சினிமாக்காரர்கள் வந்தார்கள். இந்த வீட்டுக்கு வந்த பிறகுதான் மனைவிக்கும் எனக்கும் ஒத்துக் கொள்ளவில்லை என்றேன். ஓடிப்போய் விட்டார்கள். நம் ஊர் சினிமாக்காரர்களுக்குப் பாரதப் பண்பாடு ரொம்ப அதிகம்; தும்முவதற்குக்கூட நாள் பார்ப்பார்கள். பூசை போடுவார்கள்—எனக்குத் தெரியும்.

லட்ச ரூபாய்.

ஒன்றரை வருஷம் ஓடிவிட்டது. இது என்ன மோட்டாரா? காய்கறியா? தேய்மானம் இடையாது. அழுகல் இடையாது! லட்ச ரூபாய்தான். முடிந்தால் பாருங்கள். இல்லாவிட்டால் இருபது வருஷம் வாடகை கொடுத்து சொந்தமாக்கிக் கொள்கிற வீடாகப் பாருங்கள். நீங்கள் கடைசித் தவணையைக் கட்டும்போது கடைசிச் சுவரும் விழும்படியாகக் க்ட்டியிருக்கும். இது அந்த மாதிரி வீடு இல்லை. எங்கள் ஊரிலிருந்து கொத்தனார்களை வரவழைத்து வாழ்வதற்காகக் கட்டின வீடு. சுத்தத் தேக்கு. சுண்ணாம்பை மருந்து அரைக்கிற மாதிரி படிப்படியாக வைத்து அரைத்து, கோழி முட்டைகளை உடைத்துப் போட்டுக் கலக்கி உரப்படுத்தி, சதை சதையாக வைத்துக் கட்டின வீடு. அம்புவோடு நான் வாழ்வதற்காக அவள் அப்பாவும் யோசனை பண்ணிப் பண்ணி கட்டின விடு. லட்ச ரூபாய் விலை காரைக்காக இல்லை. கல்லுக்காக இல்லை. மனத்துக்கு இல்லை—அக்கறைக்காக அத்தனை பேர் மனசு இதில் விழுந்திருக்கிறது.

அம்பு! உன்னைக் கண்டு பயந்து பயந்து, அங்குலம் அங்குலமாக அடிவைத்து, உன்னைக் கடைசியில் தழுவி இறுக்கி வென்ற வீடு இது. அரசி மாதிரி, சந்யாசினி மாதிரி என்னை நடுங்க வைக்கிற உன் முகத்தைக் கண்டு இருளிலாவது உன்னை மனிதப் பொம்மனாட்டியாகப் பார்க்கலாம் என்று தவித்து, கூசி, நடுங்கி, உன்னைத் தொட்டு வென்ற வீடு. நீயும் நானும் சேர்ந்துதான் இதில் வாழ வேண்டும்.

''இல்லை'' என்று இந்த நான்காவது குழந்தை சொல்கிறதா? ஆனால் அது சிறுபான்மை முணகல்தானே? நான் இருக்கிறேன். மோஹன் இருக்கிறான். லதா இருக்கிறாள். நானும் நீயும் சேர்ந்துதான் இதில் வாழவேண்டும். நீ மட்டும் எப்படி இங்கே இருக்க முடியும்?

தெய்வத்தைப் பார்த்து மனிதர்களுக்குப் பயம். அதனால்தான் பார்வதிக்கும், லக்ஷ்மிக்கும் கலியாணம் செய்து வைத்து, அவர்களைத் தொட்டு அனுபவிக்க ஆண்



கடவுள்களையும் படைத்து, பிள்ளை பெறவைத்து, தங்கள் ஆசையைத் தீர்த்து வெற்றி கொண்டிருக்கிறார்கள் மனிதர்கள். அந்த மாதிரிதான் உன்னைப் பயந்து தொட்டு இரண்டு குழந்தைகள் பெற்றுவிட்டேன். இந்த வீட்டில் உன்னை விட்டுப் பிரிந்து வேறு வீட்டில் நான் வாழ முடியாது. நீ வேண்டுமானால் என்னைவிட்டுப் போ. வீடு இடையாது.

லட்ச ரூபாய் சொல்லியும் மனிதர்களுக்குச் சபலம் போகவில்லை. தினம் மூன்று நாலு பேராகச் சளைக்காமல் வந்து கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

⁂ ⁂ ⁂

அம்பு ஏன் விசித்து விசித்து அழுகிறாள்? தலை கலசல். நெற்றியில் ஒன்றுமில்லை.

''என் வயிற்றெரிச்சலைக் கொட்டிண்டியே—என்னையும் இருக்க விடமாட்டேன், நீயும் இருக்க மாட்டேன்னு'' என்று கத்தினாள்.

இந்த மாதிரி அவள் அழுது பார்த்ததில்லை. விசுக்கென்று ஓடினேன்.

மகாதேவன் வீட்டில் ஒரே மௌனம். விடுதலையின் மௌனம். தரையெல்லாம் தண்ணீர்—பாவங்களை எல்லாம் கழுவி விட்டாற்போல் இருந்தது. என்னைப் பார்த்ததும் மகாதேவன் தங்கை வீல் என்று அழுதது; ''அண்ணா'' என்று கூவியது.

திரும்பி ஓடி வந்தேன். அந்தமாதிரி இடங்களில் எனக்குப் பேசத் தெரியாது. வீட்டை நோக்கி ஓடிவந்தேன். கால் தள்ளாடிற்று. வேர்த்து ஊற்றிற்று. அம்புவைப் பார்த்ததும் எனக்கும் நெஞ்சைக் கட்டிக் கொண்டது. சமையல்கார அம்மாள் ஒன்றரைக் கண்ணும் நார்மடிப் புடவையுமாக அவளுக்கு முன்னால் உட்கார்ந்திருக்கிறாள்.

உள்ளே வந்து நாற்காலியில் உட்கார்ந்தேன்—மகாதேவன் முதல் நாள் ராத்திரி வந்து படுத்தவன் எழுந்திருக்கவில்லையாம்.

அம்பு அழும்போதுகூட எத்தனை அழகாக இருக்கிறாள்! அந்தக் கண்ணும் நீள முகமும் நெற்றியின் சரிவும் எத்தனை அழகு கூடிவிட்டது! ஒரு கண்ணீர்த் துளியால் முகம்கூட அழகாகச் சிவந்திருக்கிறது.

''யார் சார், என்ன வேணும்? வீடா? வீடு விலைக்கு விற்கிறதில்லை—அப்பறம் ஏன் சார் உள்ளே வரணும்? விற்கிறது கிடையாது—அப்பறம் நிப்பானேன்? வீடு விலைக்கு விற்கிறது கிடையாது. வீடு வாங்கற மூஞ்சியைப் பாரு.''

— —

1964

# ஒரு சின்ன வாக்குவாதம்

''லே எப்படி இருந்திச்சு?''

''எது?''

''இன்னைக்கிக் காலையிலே எதைக் கேக்கப் போறேன்—ராத்திரி வேசம் கட்டுனதைக் கேக்கறேன்னு தெரியாதா?''

''அதுவா...''

''என்ன அதுவா...ன்னு இளுக்கிறே அசுவாரஸ்யமா!''

''பின்னே என்ன, ராஜபார்ட்டா? இரணியாட்சனா? இரண்யகசிபுவா? ராஜா வந்தார்னா வெள்ளித் தடி புடிச்சிட்டு வாரது. இரணிய கசிபுவோட கொலையாளி—ராவணனுக்கு சபையிலே உட்கார்ந்திருக்கிற மந்திரி பேசாத மந்திரி. என்னமோ பிரமாதமாக் கேட்டா எப்படியிருந்திச்சு எப்படியிருந்திச்சுன்னு—ஈரோ வேசம் போட்டாப்பல?''

''லேய்! நோக்காடு—என்னைக்கி ஒன் வாயிலே நல்ல சொல்லு வந்தது! வண்டத் தண்ணி குடிக்கிற பயல்லா, இந்த மாதிரி குசும்புதான்லே வரும். அதான் இப்படி வத்தக்காச்சியா, வெயில்லெ காஞ்ச வாளைப்பளத் தோலியா இருக்கு உடம்பு! வண்டத் தண்ணி!''

''ஒங்க மாத்திரம் தென்காசியிலேர்ந்து தினம் தினம் லாரியிலே அருவித் தண்ணி வரவளைச்சுக் குடிச்சாவுதாக்கும்—கண்ணாடித் தண்ணி.''

''அட சை! போ! வெளங்காத மூதி, ஒன்னைப் போய்க் கேட்டான் பாரு; கர்ப்பூரம் எப்படி மணக்கும்னு!''

''பின்னே, பொய் சொல்லச் சொல்றீங்களா?''

''லே வாயை மூடுறியா, இல்லியா இப்ப—?''

''உங்க சண்டையை அப்புறம் போடுங்களேன். எனக்குக் கா மணு வெறகு வேணும்'' என்று ஒரு பெண் பிள்ளையின் குரல் கேட்டது.

''கா மணுவா—இதோ'' என்று கல்லாவிலிருந்து எழுந்து தராசில விறகை எடுத்துப் போடுகிறான் அவன்.

வாக்குவாதம் நடந்தது டீ. வீ. ஆருக்கும், சிவநேசனுக்கும். இடம் டீ. வீ. ஆரின் விறகுக்கடை, அதை ஒட்டியிருந்த சினியண்ணாவின் வெற்றிலைப் பாக்கு கடை வாசலில் ஒரு ஸ்டூலைப் போட்டு வழக்கம்போல் உட்கார்ந்திருக்கிறேன் நான். சோடா, வெற்றிலை பாக்குக்காக சினியண்ணாவின் கடைக்குத்தான் வருகிற வழக்கம். ஆனால் சோடாவும் வெற்றிலையும் எந்தக் கடையிலும் கிடைக்கும். டீ. வீ. ஆரின் தரிசனம் கிடைக்காது. அவரைப் பார்க்கிறதும் கேட்கிறதும்தான் இங்கே வருகிற நோக்கம். சோடா வெற்றிலை வியாஜம்.

டீ. வீ. ஆர். எதற்காக விறகுக் கடை வைத்தார்? விளக்கு வார்க்கிற கை ஏன் விறகுக் கடை வைத்தது? அப்பாவோடு பதினைந்து வருஷங்களுக்கு முன்னால் பெரிய கோவிலுக்கு விளக்குகள் வார்க்க அவர் அப்பா, தென்காசியிலிருந்து அப்பா மங்கலம் வந்தார். கூடவே மகனும் வந்தான். சரவிளக்கும், குத்துவிளக்கும், அன்ன விளக்குமாக நூற்றுக் கணக்கில் வார்த்துக் கொடுத்தார். வேலை முடிந்தது. அப்பா மங்கலத்து வாசம் முடியவில்லை. இங்கேயே தங்கிவிட்டார். ஊர் பிடித்துவிட்டது. ஆறு மாசத்துக்கு ஒரு தடவை ஊருக்குப் போய் வருவார். அவர் போய் வந்தவுடன் மகன் போய்வருவான். அப்பனும் பிள்ளையும் பொங்கித் தின்றுகொண்டு கடை-



தன். சுற்றிவட்டாரக் கோவில்கள், பெரிய மனிதர்கள் எல்லோருக்கும் விளக்குகள் வார்த்துக் கொடுத்தார்கள். ஒரு தடவை ஊருக்குப் போனவர் திரும்பியே வரவில்லை. அப்படியே சிவலோகம் போய் விட்டார். கிரியைகள் பண்ணிவிட்டுத் திரும்பி வந்த மகன், தென்காசி விச்வலிங்கத்தின் மகன் ராமநாதன், டீ.வி.ஆர் விளக்கு வார்ப்பதை விட்டு, விறகுக்கடை வைத்தார். ஏன் என்று கேட்டார்கள் எனக்குத்தான் பதில் வந்தது.

''நீங்களும் கேட்டுட்டியள்! வாத்யார் சாருக்குச் சொல்லாம இருக்கலாமா? விளக்கு வார்க்கிற வேலைன்னா, சாதாரண வேலையா? புண்ணியம்தான் ஆனா வர்றவேலை முக்காலும் கோவில் வேலை. சிவன் சொத்து. நாராயணன் சொத்து. குந்துமணி எடை நம்ம கையிலே சேர்ந்தாலும் சிவன்சொத்து, நாராயணன் சொத்து எங்கப்பா துணிஞ்சு செய்வாரு வெங்கல வேலை மட்டுமா? பொன்வேலை? சூரரில்லா! பாத்துக்கிட்டேயிருப்பிய, வாருகோல் குச்சி மொத்தம், ஊசி மொத்தம் ஒரு விரக்கடை நீளத்துக்குப் பவுன் எடுத்துக் கண்ணுக்குள்ளாற செருகிக்கிடுவாரு. என்னமொ ஊதுறளிச்சலலே கண்ணைத் துடைச்சுக்கப் போறாப்பல இருக்கும். கண்ணுக்குள்ளாறப் போனது இம்புட்டுத் தங்கம்! எனக்கப்புறம் பொறந்தது ஆறும் ஏன் பொக்கு பொக்குன்னு போச்சு—ஆறு மாசத்திலேயும் ஆறு வருசத்திலேயும்? அதான். அப்புறம்தான் தங்கக் குச்சி ஒளிச்சிக்கிற கண்ணும் தொறந்தது. ஞானோதயமாச்சு அவருக்கு. அதை விட்டாரு விளக்கைப் புடிச்சாரு, சூரன்லா! கை வச்ச இடம் கொஞ்சும்! ஆனா, கோடி ருவா கூலி தாரட்டும், மனுஷன் ஒரு அரைச் சேர் வெங்கலமாவது இப்படித் தள்ளாம இருக்க மாட்டாரு. தூக்கம் வராதே! கை நீளமா வேல்லா பொறந்திரிச்சு. எத்தினி சந்ததியைக் காவு கொடுத்தா என்னா! அதுதான் நான் இத்தைப் புடிச்சுக்கிட்டேன். ரண்டும் மூட்றது தீதான். இதிலே தெய்வத்துரோகம் கிடையாது. அப்புறம் பார் விளையாட்றதுக்கு, ஹெவிவெய்ட் தூக்கற

தூக்கு, கர்லா சுத்தறதுக்கு விறகுவாடிதான் இடம் கொடுக்கும்.''

இன்னும் எவ்வளவோ சொன்னார் அவர். அது அவசியமில்லை. விறகுக் கடை வைக்கக் காரணம் கிடைத்துவிட்டது. பாபம் தொற்றிக் கொள்கிற காரணம் கூடத்தேவையில்லை. பார் விளையாடவும், கர்லா சுற்றவும் இடம் கொடுக்கிற காரணம்தான் முக்கியம்.

பள்ளிக்கூடத்துப் பையன்கள் வழக்கம்போல் அவருக்குச் செல்லப் பெயர் வைத்தார்கள். 'மௌண்ட் சார்க்கோல்' என்று இங்கிலீஷிலும், கரிமலை என்று தமிழிலும் அவர் சொருபத்தைப் பொருத்தமாகவே வர்ணித்தார்கள். மௌண்ட் சார்க்கோல் ஆறடி ஒரு அங்குல உயரம், அதற்கேற்ப பருமன். தலை யாழ்பாணத்துத் தேங்காய், கைவிரல் ஒவ்வொன்றும் நீளக்கத்தரிக்காய் பருமன், தொந்தி, புஜம், ஆடு சதை ஒவ்வொன்றும் ஒரு பீடபூமி. இந்த பீட பூமிகளும் மலைச்சிகரமும் கைக்கு முந்நூறு கர்லா, நூறு தண்டால், நூறு பஸ்கி எடுக்கும் போதும், பார் கம்பியில் தொங்கி உடம்பையே ராட்டினம் சுற்றும் போதும், இரும்புச் சக்கரங்கள் கோத்த தடியைத் தூக்கி விளையாடும் போதும், இந்த சம்பிரமங்களால் மழை பெய்து சுற்றிலும் நீரோடைகள் சரியும் மலையாக உடம்பு வேர்த்து ஓடும் போதும், ஊரெல்லாம் பார்க்கும், கை தட்டும். பிரமிக்கும், குற்றேவல் புரியும். எனக்கு ட்யூஷனுக்குப் பையன்கள் வருவதுபோல் அவருக்கும் பல சீடர்கள் வந்து குற்றேவல் புரிந்தார்கள்...அப்படி வந்தவன்தான் சிவநேசன்.

''தேறாத சரளையில்ல இது! உனக்கு என்னத்துக்கு இந்த ஆசை?''

சரளை அவரை விடவில்லை; அட்டையாக ஒட்டிக் கொண்டது. சின்ன கர்லாக்களைத் தூக்கிச் சுழற்றும். மண்டையில் போட்டுக் கொள்ளும். ஹரிசாண்டல் பாரில் எம்ப முடியாமல் எம்பி குப்புற விழும். கை மெருகிக்



கொள்ளும். ஆறுமாசம் அல்லாடி விட்டு கடைசியில் டீ. வீ. ஆருக்கு விறகுக் கடை அஸிஸ்டெண்டாகி விட்டது. டீ.வீ.ஆருக்கு லேசாகப் பாட்டு வரும். அப்பாமங்கலத்தில் அறுவடையாகிவிட்டால் அவருக்குத்தான் பூமியே கொழித்தது போல.

''சரளை! இன்னும் மூணு மாசத்துக்கு நீதான் முதலாளி—நீதான் ராசா! நான் ஒத்திகைக்குப் போறேன். வெயிட்டுக்கு மேலே ஒரு பட்டை ஒரு சுள்ளி போட்டே, முதுகுப் பட்டை உரிஞ்சுடும்'' என்று போலிக் காய்தாப் பண்ணிச் சிரித்துவிட்டு முழங்காலுக்குக் கீழே தொங்குகிற கட்டம் போட்ட ஜிப்பாவை மாட்டிக்கொண்டு ஒத்திகைக்குக் கிளம்பி விடுவார். பிடாரி கோயில், கிருஷ்ணன் கோவில் திருவிழாக்கள், சாலியத் தெரு, சாலிய மகாஜன சபை நடத்தும் வருடாந்திர நாடகம் எல்லாவற்றிலும் அவருக்கு வேஷம் உண்டு. பள்ளிக்கூடத்து நாடகங்களில் கூட, பூத வேஷம், ராட்சச வேஷத்திற்கெல்லாம் அவரிடம் வந்து சொன்னால் போதும், கட்டம் போட்ட ஜிப்பா முழங்காலின் கீழ்வரை தொங்க, முறுக்கு மீசையும், ஒட்ட வெட்டின கிராப்பும், மோட்டார் டயர் செருப்புமாக மௌண்ட் சார்க்கோல் பள்ளிக்கூடக் கேட்டைத் தாண்டி உள்ளே நுழையும் பொழுது அவரைப் பையன்கள் சூழ்ந்து கொண்டு அவரை அண்ணாந்து பார்க்கிற பிரமிப்பும் ஒட்டுறவும் பயபக்தியும்...ஒத்திகை தொடங்குகிற வரையில் புஜம் ஒவ்வொன்றிலும் ஏழெட்டுப் பையன்களைத் தொடங்கச் சொல்லி தட்டாமாலை சுற்றுவார். டீ.வீ.ஆர். ஒத்திகை தொடங்கினால் அந்தண்டை இந்தண்டை அசைய மாட்டார். வேஷம் என்னவோ போலீஸ்காரன், திருணாவர்த்தன், ராவணனுக்கு மெய்க்காவலன், கம்சனின் கையாள்—இப்படி அநேகமாகப் பேசாத வேஷமாகத்தானிருக்கும், ஊரே எதிரொலிக்கும்படி ஒரு கத்தல் போட்டுக்கொண்டு கம்சனின் மல்லனாக, கிருஷ்ணனைக் கொல்ல வருவார். இல்லாவிட்டால் ''745! இந்தப் பயலை கொட்டடியிலே'' என்று சப் இன்ஸ்பெக்டரின்

உத்தரவைக் கேட்டு ''எஸ் சார்'' என்று சலாம் செய்து விட்டு ''ம். நட'' என்பார். இவ்வளவுதான் நாடகம் முழுதும் அவர் பேச்சு. ஆனால் அதற்காக கடைசிவரை யில் ஒத்திகையை இருந்து முடித்துக் கொடுத்து விட்டுத் தான் போவார். கம்பசேவைக் கூத்துக் கடைசி நாளன்று ஆயிர விருந்துக்கு அவர் உபயம்...

சரி—கடையைப் பார்ப்போம்.

வந்த பெண் பிள்ளை கால் மணு விறகு வாங்கிப் போய் விட்டாள். கடையில் இப்போது டீ. வீ. ஆரும், சிவநேசக் கரனையும் விறகு அடுக்குகளும் தராசும்தான்.

''லே—இப்ப சொல்லு. என்ன சொன்னே?''

''எது?''

''வேசம் கட்டுனதைப் பத்தி என்னமோ சொன் னில்லா?''

''என்ன சொன்னேன்?''

''தீவட்டி புடிக்கிற வேசம், ஆன்காரம் வேசம், அப்படி இப்படின்னு......''

''ஆமாம்!—நீங்க என்னைக்கி ராஜபார்ட் போட்டிருக் கீங்க? என்னைக்கு வில்லன் வேசம் போட்டீங்க? வில்லனுக் கும் பாடிகாடாத்தான் வருவீங்க. அதான் சொன்னேன்.''

''லேய், நேத்துப் பிரகலாதன் கழுத்திலே கத்தியை ஓங்கறப்ப, கத்தி அட்டைக் கத்தின்னு நெனச்சியே? நிசக் கத்தி! ஆடு காவு கொடுக்கற அருவா. இனனொரு பய அந்த வேசத்தைப் போட்டிருந்தான், என்ன ஆயிருக்கும்? கத்தி பிடரிக்கிட்ட போகணும். அப்ப பூமாலை வந்து விழுவனும், கழுத்திலே. சும்மா உழுவாக்கு ஓங்கறாப் போலவும் இருக்கப்படாது. நெசம்மாவே உழுவறாப்பல இருக்கணும். அந்தக் கத்தியை வேற யார்லே தூக்கமுடியும்? இந்தச் சிங்கம் தூக்கிச்சு. அப்படி ஒரு போடு போட்டுது. சனங்களும் கத்தி உழுந்திடிச்சோன்னு துடிச்சுக்கிட்டிருக் கும்! கண்ணை மூடிக்கிடும். ஆனா உழுந்துதா? விழுந்தது



பூமாலையல்லா! கண்ட்ரோல் வேணும் கண்ட்ரோல், அதுக்கு! அப்ப ஒரு அப்ளாஸ் அடிச்சாங்ஹனே அத்தனை ஜனங்களும், கேட்டியா? என்னமே ரொம்பச் சுளுவாச் சொல்லிட்டியே!''

''ம்ம்......''

''ம்ம்ங்கறாண்டா. அப்ப என்னமோ தீவட்டி புடிக் கிற வேசம் அப்படி இப்படினில்ல?''

''நான் ஸ்டேஜுக்கு வந்தாலே அப்ளாஸ்தான்லே. சும்மா லட்சம் கோடி அப்பளம் படபடன்னு நொறுங்கறாப் பலல்லவா கேக்கும்!''

''உங்க மாதிரி இருந்தா யாருதான் சிரிக்கமாட்டாங்க? ஆனை போறப்ப நூறு பசங்க கூடவே ஓடும். அதிலே ஆனைக்கென்ன திறமை? அதுக்கு உடம்பு: அதே ஆத்துமா நாயாப் பொறந்திருந்தா கல்லைவிட்டு வீசுவான் அத்தினி பசங்களும். உடம்புக்கு அப்ளாசு, நீங்க என்ன நடிச்சிட் டீங்க?''

''லே, அது நடிப்பு இல்லாம என்ன? பிரகலாதனைப் பாறையிலே மோதப் போறப்ப பாத்தியா? சும்மா வெள்ளைத் துணியா அட்டையா? கோயில் செவுரு. பாறாங்கல்லுச் செவுரு. ஸ்டேஜு மதிலை ஒட்டில்லா கட்டியிருக்காஹ? பாத்தியாலே. சொல்லேன். பாய்ண்ட் டிலே மாட்டிக்கிட்டு முளிக்கிறயே என்ன, ஆடு கணக்கா? சொல்லேன்!''

''எதை?''

''அது அட்டையா, பாராங்கல் செவுறா?''

''கல்லுச் செவுருதான்.''

''பாறாங்கல்லுச் செவுரு—'கெல்லுச்' செவுருதான்!'' என்று கரனை மாதிரி நோஞ்சல் குரலில் கோணங்கி காட்டி என்று பேசறான் வண்டத் னார் டீ.வி.ஆர். ''பொடி வச்சில்லா பேசறான் வண்டத் தண்ணி குடிக்கிற பய. மண் செவுரு செங்கச் செவுருன்னு

சொல்றாப்பல! கருங்கல்லு செவுருலே, வேகமா ஸ்டேஜுக்கு முகட்டிலேந்து புள்ளையைத் தூக்கிட்டு ஓடிப்போய், மடேர்னு செவுத்திலே அறையணும் ஓய். ஒரு நூல் தப்பினாப் போச்சு புள்ளை தலை பிண்டமாக் கெடக்கும். நானும் தூக்கிலே ஆடணும். அப்பவும் சனங்க பதறிட்டு மூச்சைக் கையிலே பிடிச்சு உட்கார்ந்திருக்கும். ஒரு கையாலே குழந்தையை பாறையிலே மோதுவேன். இன்னொரு கையாலே பாறையை ஓங்கி சனங்களுக்குத் தெரியாம அறைவேன். மோதுறாப்பலவே சத்தம் கேக்கும். பிரகலாதன் சிரிச்சுக்கிட்டே நிப்பான். அப்ளாசு! இது நடிப்பு இல்லாம என்ன?''

''இதுலே என்ன நடிப்பு? கம்பம் கூத்தாடி பண்ற வித்தைதானே! குளந்தையைத் துணிக்குள்ளே மூட்டைக் கட்டி, அதுமேலே நிப்பானே ஜலஸ்தம்பம் பண்றாப்பல. மூட்டையை அவுத்துப் பாத்தா குளந்தை சிரிச்சுக்கிட்டே நின்னவாக்கிலே மூணு கரணம் அடிச்சுக்கிட்டே அம்மாட்ட ஓடிப்போகும். இது நடிப்பா?''

''நான் கம்பங் கூத்தாடியா? நானா கம்பங் கூத்தாடி? சொல்லுவே! வண்டத் தண்ணி'' என்று எழுந்து அவனை முஷ்டியால் மொத்தப் போவதுபோல் ஓடினார், டி.வி.ஆர். கரனைக்குத் தானாகக் கை முன்வந்து தடுக்கப் பார்த்தது— என்னவோ இடிச் சத்தம் கேட்டுக் கையை உயர்த்துவது போல். ஆனால் இடி விழவில்லை. மூக்குக்கு ஒரு நூலில் துதிக்கை நின்றுவிட்டது.

''பாத்தியா! இப்ப சொல்லு, நடிப்பா இல்லையான்னு. இப்ப நெசத்துக்கு ஓங்கியிருந்தேன். உம் பேரிக்கா மண்டை...அளுக வாளப்பளம் கணக்கா ஆயிருக்கும், தெரிஞ்சுதா? இப்ப சொல்லு, நடிப்பா இல்லையா?''

''இல்லே'' என்று புருவத்தைச் சுளுக்கி அவரைப் பார்க்கிறான் கரனை. கல்லாவை விட்டு மட்டும் நகரவில்லை.

''கரி நாக்கு'' என்று பல்லைக் கடிக்கிறார் டி.வி.ஆர். முகம் கோணுகிறது. திரும்பிப் பார்க்கிறார்.



என்னை ஜாடைசெய்து 'கூப்பிடுகிறார். என்னைத் தான்.

எழுந்து போனேன்.

''என்ன டி.வி.ஆர்.? கூப்பிட்டீங்களா?''

''ஆமா சார். இந்தப் பய சொல்லுறதைக் கேட்டியளோ? அப்படியே அவனைப் பிண்டம் புடிச்சிருவிய— என்னைக் கம்பம் கூத்தாடின்னு சொல்லுதான் சார், நேத்து எப்படி நடிப்புன்னு கேட்டதுக்கு. நான் நீவட்டி புடிக்கிறவனாம், வில்லனுக்குப் பாடிகாடாம், கம்பங் கூத்தாடியாம். இந்த நன்னி கெட்ட மூதி பத்து வருசம் முன்னாலே சாவறாப்பல வந்தது சார் எங்கிட்ட. நான் ஜீலா போடப் போறேன், தண்டால் எடுக்கப் போறேன்னு தெனம் ரண்டு தடவை உள்ளி மூக்கை உடைச்சுக்கும், நெத்தியிலே இடிச்சுக்கும். முட்டியைத் தெறிச்சுக்கும். சனி போவுதுன்னு கல்லாவிலே உக்காத்தி வச்சேன். அன்னையிலேந்து ஒரு நாளாவது ஒரு நல்ல வார்த்தை ஒரு பேஷ், ஒரு பேழு, ஒரு பேழு—''

''என்ன டி.வி.ஆர்!'' என்று குறுக்கிட்டேன். டி.வி. ஆர். அழுதுகொண்டிருந்தார். கண்ணில் குளம் கட்டி விட்டது.

''ஒரு நல்ல வார்த்தை! ஒரு சந்தோசப் பேச்சு. என்னைக் கண்டா மாத்திரம் சுண்டெலி சார் அந்தப் பயலுக்கு. வெளங்காத மூதிப் பய.''

''என்னடாது சிவநேசா?''

''சிவநேசனா! யமநேசஞ்சாமி, யமநேசன். எனக்கு யமனா வந்திருக்கான் இந்தப் பய. இப்பவே சொல்லிப் போடுதேன், நீங்களும் கேட்டுக்கணும். இந்தப் பய இப்படிப் பேசிட்டிருந்தான், ஒரு நாளைக்கு இந்த அரிசாண்டல் பாருக்குக் கீளேயே சமாதி வச்சிரப்போறேன். நீங்களே சொல்லிப் போடுங்க.''

''ஏண்டா இப்படி—ஏ சிவநேசா, உன்னைத் தாண்டா.''

சிவநேசக் கரனை தலையைக் குனிந்து புன்சிரிப்பு சிரித்தது—எனக்கு மட்டும் தெரியும்படியாக.

''நன்றி விச்வாசமா இர்றா'' என்றேன்.

''வுங்களே 'டிஸ்டர்ப்" பண்ணிட்டேன். மன்னிக்கணும்'' என்றார் டீ. வீ. ஆர்.

நான் வெளியே வந்து உட்கார்ந்து கொண்டேன்.

ஜிப்பாவைப் போட்டுக்கொண்டே வெளியே இறங்கிப் போகிறார் டீ. வீ. ஆர். திரும்பி உள்ளே பார்த்து ஒரு முறை முறைத்து, ''லேய், கோவத்திலே ஒரு பட்டை எடைக்கு மேலே போட்டிய, தோலு உரிஞ்சிடும்'' என்று சொல்லிவிட்டு தெருவில் நடக்கிறார். ''இந்தப் பயலுக்கு பெரிய வசிட்ட மகரிஷின்னு எண்ணம் சார். நோக்காடு!'' என்று என்னைப் பார்த்துச் சொல்லிவிட்டு நடந்தார்.

இது தினம் தினம் நடக்கிற நாடகம். நான் என்ன சொல்ல? 'ஹ்ம்' என்று அவரைப் பார்த்துப் புன்சிரிப்பு சிரித்து ஆமோதித்தேன்.

——

1966

# இசைப் பயிற்சி

மல்லிகையை எல்லோரும் பரிகாசம் செய்தார்கள். எல்லோரும் செய்தார்களோ என்னமோ, அவருக்கு அப்படித் தோன்றிற்று. முதன் முதலாக விசாரித்தவரே பரிகாசம் செய்து, சிரித்துவிட்டுப் போனார். அதனால், பிறகு கேட்ட யாருமே கேலி செய்வதுபோல மல்லிக்குப் பட்டது.

காலையில் அவர் வழக்கம்போல ஆற்றில் குளித்து விட்டு வந்து ஜபம், பூஜைகளை முடித்து, தோசையும், காப்பியும் சாப்பிட்டுவிட்டுத் திண்ணையில் வந்து உட்கார்ந்தார். எட்டரை மணியிருக்கும். ஊர்க்கோடி திரும்பியதும் கூட்டுறவு மளிகைக் கடைமீது வைத்திருக்கும் 'ரேடியோ'ப் 'போனல்' ஓய்ந்துவிட்டது. வெயில், தெரு முழுவதும் விழுந்து வெள்ளையாகவும், சற்று சூடாகவும் மாறிக் கொண்டிருந்தது. தெருக் குழந்தைகள் அடுத்த ஊர்ப் பள்ளிக் கூடத்திற்குப் போய்விட்டன. நடமாட்டம் இல்லை. திடுதிடுவென்று சுப்புக்குட்டி வீட்டு ஆள், ஒரு வண்டி நிறைய நாற்றுக் கட்டுகளை ஏற்றிக்கொண்டு போனான். அதோடு சந்தடி தீர்ந்துவிட்டது. ஏழெட்டு வீடு தள்ளி ராசு, வாசலில் ஒரு பெரிய கோரைப் பாயைப் பிரித்துச் சுருளாமல் ஓரங்களில் கல்வைத்து, உள்ளேயிருந்து காணத்திற்காகத் தேங்காய்ப் பருப்புகளை கூடை கூடையாகக் கொண்டு கொட்டித் திலாவிக் கொண்டிருந்தான்.

அப்பொழுதுதான் பாலன்—தெருவோடு போகிறவர், திண்ணையில் உட்கார்ந்திருந்த மல்லியைப் பார்த்துவிட்டு, ''என்ன மல்லி?'' என்றார்.

''என்ன மாமா?''

''என்னமோ கேள்விப்பட்டேனே!''

''என்ன?''

''குப்பாண்டிக்குப் பாட்டுச் சொல்லிக் கொடுக்கிறேன் வீராமே'' என்று கொளகொளவென்று சிரித்தார் பாலன்.

''ஆமாம்.''

''ஆமாமா!'' என்று ஒரு கிண்டல் வியப்போடு மேலும் சிரித்தார் பாலன்.

இதற்கு என்ன சிரிப்பு?

''எதுக்காக?'' என்று அடுத்தபடியாக ஒரு கேள்வி.

''அவனுக்குச் சாரம் நன்னாருக்கு. ஞானம் இருக்கு. நன்னா வரும் போலிருக்கு' என்றார் மல்லி.

''அதுக்கா[illegible]... அவனுக்குப்போய்ச் சொல்லிக் கொடுக்கவாவது?''

''ஏன், சொல்லிக்கொடுத்தா என்ன மாமா?''

பாலன் அதைக் கேட்டுத் திகைத்துப் போனாற்போல மல்லியைப் பார்த்தார். ''என்னன்னு கேட்டப்பறம் நான் என்ன சொல்றதுக்கு இருக்கு?'' என்று தெருவை மேற்கையும் கிழக்கையும் பார்த்தார். பார்த்துக்கொண்டே சிரித்தார்.

''சரி, எங்கே வச்சுச் சொல்லிக் கொடுப்பீர்?''

மல்லி இந்தக் கேள்வியை எதிர்பார்க்கவில்லை. குப்பாண்டியை எங்கே வைத்துச் சொல்லிக் கொடுப்பது? இதைப்பற்றி நாம் ஏன் யோசிக்கலே இல்லை என்று அவருக்குத் திடுக்கிட்டுவிட்டது.

''ஏன்யா?'' என்று பதிலுக்கு அவசரப்படுத்தினார் பாலன்.

''அதைப்பத்தி இன்னும் யோசிக்கலே மாமா'' என்றான் மல்லி.



''யோசிக்கலையா?'' என்று மீண்டும் சிரிப்பு.

நாம் ஏன் இவ்வளவு அசடாகி விட்டோம் என்று மல்லி ஒரு நிமிஷம் குன்றிப் போய்விட்டார். இப்படிச் சிரிக்கும் படியாக எதையோ செய்து, கடைசியில் நியாயமான ஒரு கேள்விக்குப் பதிலும் சொல்லமுடியாமல்!

''உள்ள கூடத்திலே வச்சிண்டு சொல்லிக் கொடுக்கறதாக உத்தேசமில்லையே'' என்றார் பாலன்.

''என்ன மாமா இது!' மல்லி அதிர்ந்துவிட்டார்.

''இல்லே. லோகம் பொற போக்கைப் பார்த்தா, நான் கேக்கறது ஒண்ணும் தப்பில்லையென்னு கேக்கறேன்!''

''உள்ள அழைச்சு வச்சா, சொல்லிக் கொடுப்பேன்? என்ன இப்படி கேட்டுவிட்டீர்கள்?'' என்று மனத்தாங்கலோடு மல்லி சொன்னதை முழுவதும் கேட்காமல் மீண்டும் சிரித்துக்கொண்டே எழுந்தார் பாலன், ''ஆலயப் பிரவேசம் ஆயிடுத்து; தெருப் பிரவேசம் ஆயிடுத்து; கிருகப் பிரவேசமும் நீர் மனசு வச்சா—காந்தி மாதிரி—அதுவும் நடக்க வேண்டியதுதானே. என்னமோ! யார் எதைத் தடுக்க முடியப் போறது இந்த நாளிலே! ஜமாயும்'' என்று சொல்லி எழுந்து கச்சத்தை உதறிக்கொண்டே தெருவில் இறங்கி, தனக்கு இதைவிட முக்கியமான ஏதோ வேலையிருப்பதுபோல், யாரோ எதிர்பார்த்த ஆசாமி வருகிறானா என்று பார்ப்பதுபோல், வாயிலுக்கு நேராகக் கண்ணுக்கு மேல் கையைக் கவிழ்த்துத் தெருக்கோடியைப் பார்த்துக் கொண்டே நடந்தார் பாலன். ஊரிலேயே வயதில் மூத்த மூன்று பேர்களில் பாலன் முக்கியமானவர். சொத்து சுதந்திரம் என்று அதிகமில்லாவிட்டாலும் வயதாலும் வாயாலும் ஊரில் ஒரு அந்தஸ்து வந்துவிட்டது. அவர் சொல்லி நாலுபேர் கேட்பார்கள்.

அவர் கேட்ட கேள்விகளை நினைத்துத் தான் அசட்டுத்தனம் செய்துவிட்ட திகைப்பிலிருந்து மீளாமல், நெளிந்துகொண்டேயிருந்தார் மல்லி.

ஒரு அரை நாழிகைக்கெல்லாம் கடுக்கனும் பெரிய உடம்புமாக பண்ணை சீதாராமன்—வாசலோடு போகிற வன், "என்ன மாமா, குப்பாண்டிக்குப் பாட்டுச் சொல்லிக் கொடுக்கப் போறேளாமே!" என்று கேட்டு, தெருவிலேயே நின்றான். சீக்கிரம் பதில், நான் போகவேண்டும் என்பது போலிருந்தது, அவன் நிற்பது.

"ஆமாம். ஏதோ சாரீரம் நன்னாருக்கு. ஞானமும் இருக்கு போலிருக்கு" என்றார் மல்லி.

"பேஷா—இப்பத்தான் யாருக்கு, எது இருக்கு இல்லைன்னு சொல்ல முடியலியே? யாராயிருந்தா என்ன, வித்யாதானம் பெரிய விஷயம் இல்லையோ!" என்று சொல் லிக்கொண்டே நடந்துவிட்டான் சீதாராமன் வெறுமே சொல் - வில்லை, ஒரு சிரிப்போடுதான் சொன்னான்.

அப்புறம் அதே கேள்வியை, சொல்லிவைத்தாற்போல் எத்தனை எத்தனைபேர் கேட்டார்கள்? வெங்கடராமன், ராமையா, ஆனைக்கால் தண்டபாணி, சாமி சாஸ்திரி, கணக்குப் பிள்ளை—இவர்களெல்லாம் நாற்பது ஐம்பது வயசு வரிக்கம் இருபது இருபத்தைந்து வயதைச் சேர்ந்த வாலி, கோபாலி, மாஞ்சன்—இவர்களும் விட்டு வைக்க வில்லை. வாலிக்குக் கபடு தெரியாது. ஆனால், அவன் கேட் பதிலே ஒரு ஆவல் இருந்தது. "இந்த மாதிரி தவறான காரியம் செய்யலாமோ?" என்பது போலும் இருந்தது— கோபாலி பெரிய சிரிப்பாகச் சிரித்துக்கொண்டு கேட்டது. அதற்கு வெகு காலமாக வலிப்பு. உடம்பு துரும்பு. சாப்பிடு வதையும் அடிக்கடி ஜுரம் ஜுரம் என்று படுத்துக்கொள் வதையும் தவிர வேறு ஒரு வேலையும் செய்யமுடியாது. அது என்ன பரிகாசச் சிரிப்புச் சிரித்துவிட்டுப் போயிற்று!

பட்டா மணியும் கேட்கவில்லை. பேசாமல் நடந்து போனார். அவருக்கு மட்டும் சேதி தெரியாமல் இராது. ஆனால், இந்த அசட்டுத் தனத்தைப்பற்றிப் பேசலாமோ என்று போவது போலிருந்தது.



ஆண்கள் போதாதென்று மூன்று பாட்டிகள் வேறு கேட்டுவிட்டுப் போனார்கள். அந்த வேம்புப் பாட்டிக்கு அரைச் சித்தம். சர்வ அனாதை. சோற்றுக்கே வழி இல்லை. அதுகூட சிரித்துக்கொண்டு கேட்டுவிட்டுப் போயிற்று.

இனிமேல் பொறுக்க முடியாதென்று நினைத்து எழுந்து உள்ளே வந்து ஊஞ்சலில் உட்கார்ந்து கொண்டார் மல்லி. அவர் மனைவி ஆற்றங்கரைக்குக் குளிக்கப் போயிருந்தாள். ஊஞ்சல் 'கிசுகிசு' என்று கத்திற்று.

இப்பொழுது என்ன செய்கிறது?

ஊர் முழுவதும் இந்தச் செய்தி எப்படிப் பரவிற்று? பரவினாலும், வந்து ஒவ்வொருவராக விசாரிக்கும்படி யாகவோ, கேலி செய்யும்படியாகவோ இதில் என்னதான் இருக்கிறது?

காரணம் தெரியாமல் ஓர் இரக்கமும் அச்சமும் நமக்கு வருவானேன்?

முந்தாநாள் காலை, பிள்ளையார் கோவிலை ஒட்டின சத்திரத்துக் கொல்லையில் பூப்பறித்துக் கொண்டிருந்தார் மல்லி. பவழமல்லி மரத்தை உலுக்கிவிட்டு, கீழே விழுந்த பூக்களைப் பொறுக்கிக் குடலையில் போடும்போது ஒரு ராகத்தை — தன்யாசிதானே — தன்யாசிதான் — முணு முணுத்துக் கொண்டேயிருந்தது தொண்டை. என்னமோ பவழ மல்லியின் செங்காம்பைப் பார்க்கும்போது அந்த ராகம் பாடவேண்டும் போலிருக்கும். என்ன சம்பந்தமோ!

அப்பொழுது அவர் இழுப்பதையெல்லாம் வாங்கி வேறு ஒரு குரல் எங்கோ பாடுவது கேட்டது. அவர் ஒரு பிடி பிடித் தால், அதையே இன்னும் கொஞ்சம் கூட்டிச் சேர்த்து அழ காகப் பிடித்தது அது. சற்று நிறுத்திக் கவனித்தார் அவர். என்ன குரல்! என்ன குரல்! இந்த மாதிரி ஒரே ஒரு குரலைத் தான் கேட்டிருக்கிறார் அவர்.

சென்னையில் ஜார்ஜ் டவுனில் பன்னிரண்டு குடிகளுக்கு நடுவில் ஒரு குடியாக, கீழே சமையலறையும் மாடியில் படுக்கையறையுமாகக் குடித்தனம் செய்த காலத்தில் இரவு ஒரு மணி இரண்டு மணிக்கு ஒரு பயல் பாடிக்கொண்டு போவான். அவன் ஒரு மோட்டார் கார் க்ளீனர். கிட்டப்பா, ராஜரத்னம், பாகவதர் என்று நாடக, சினிமாப் பாட்டுக்கள், ராகங்களையெல்லாம் அச்செடுத்துப் பாடுவான். குரலில் ஒரு கம்மல்—அவர் பொறாமைப் படுகிற தெளிவு, புரளல், ரவைகள், அன்றுதான் ஒன்று புலப்பட்டது—பிறவி வேறு, பயிற்சி வேறு என்று. சபைகளிலும் சங்கீத உலகிலும் முதல் பீடங்களில் உட்கார்ந்திருப்பவர்கள் எல்லாம் முக்காலே மூன்றுவீசம் பயிற்சி பயின்றவர்கள். பாடப்பிறந்தவர்கள் இல்லை என்று அப்பொழுது என்னமோ தோன்றிற்று. அப்புறம் எத்தனை சர்ச்சைகளைக் கேட்டும், கச்சேரிகள் கேட்டும், அதிர்ச்சி மாதிரி தாக்கிய அந்த எண்ணம் போகவில்லை. பிடிவாதம் ஆகிவிட்டது. அதே லாகிரி சாரீரமாக, பிறவியாக இருக்கிறது இந்தக் குரல்.

நாலைந்து வருடமாயிற்று, ஊருக்கு வந்து குடியேறி நமக்குத் தெரியாமல் இது யார் என்று குடலையை எடுத்துக் கொண்டே குரல் வந்த திசையில் நடந்தார். சத்திரத்திலிருந்து வெளியேறி வாய்க்கால் மதகைக் கடந்து, சாலையை அடைந்ததும், குரல் நெருங்கிற்று. மூங்கில் கொல்லையிலிருந்து கேட்டது. அருகே போனதும் வேலி முள்ளிடுக்கில் கேட்டது. அங்கு ஒரு முகம்—முண்டாசு.

''யார்றாது பாடறது?'' என்றார்.

சட்டென்று ஓர் உருவம் நின்றது. குப்பாண்டி!

''மைக்கேலு/மகனாடா?''

''ஆமாங்க!''

''நீயா பாடிண்டிருக்கே!''

''சும்மாதான் சாமி'' என்று முகத்தை நாணத்தில் அப்பால் திருப்பிக்கொண்டு நின்றான் அவன்.



''ஆமாங்க. சும்மாத்தாங்க. ஒண்ணும் நினைச்சிக்காதீங்க, இனிமே இல்லீங்க'' என்று அந்த முட்களுக்கிடையே முள்ளில் மேல் நிற்பதுபோலவே நின்றான் அவன்—இனிமேல் பாடமாட்டேன்; பெரிய மனது பண்ணி இங்கிருந்து போய்விடுங்கள் என்று கெஞ்சுவது போல்.

''யார்ட்டடா கத்துக்கிண்டே இதெல்லாம்?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லீங்க.''

''டேய், திவ்யமாய்ருக்குடா! நீயாவா பாடறே இப்படி? ஒருத்தருமா சொல்லிக் கொடுக்கலே!''

''அட போங்க, கெடக்கு'' என்று மறுபடியும் நாணி வளைந்தான் அவன்.

''எங்கடா கேட்டே இதெல்லாம்?''

''நாயனங்க...''

''அப்புறம்?''

''அடபோங்க, எனக்கு வேலையிருக்கு. அந்திக்குள்ளாற தலைமட்டுக்கும் கட்டியாகணும் வேலியை.''

''எலெ, சும்மா சொல்றா, கோவில் உற்சவத்திலெ கேட்டியா நாயனம்?''

''ஆமாம்''—பதில் சொல்ல ஒரு அலுப்பு.

''அப்பறம் எங்கெல்லாம் கேப்பே?''

''அட, நீங்க போங்க, கிடக்கு.''

''ஏலெ, இப்ப சொல்றியா இல்லியா?''

''சினிமா, கூத்து, போதுங்களா—நீங்க போங்க.''

''யாருட்டவும் சொல்லிக்கலெ?''

''இல்லீங்கறேன்.''

''வகையா சொல்லிக்கிட்டா எப்படியிருக்கும் தெரியுமா? எலே, நீ எப்படிப் பாடறே தெரியுமா? சொல்லிக்க வேண்டாம்?''

''ஐயய்யோ!''

''நான் சொல்லித் தரப் போறேண்டா உனக்கு.''

''எனக்கு வேலை கெடக்குங்க.''

''நான் வேலை மெனக்கட்டுத்தாண்டா இந்த மண்டுப் பய ஊர்லெ உட்கார்ந்திருக்கேன். உனக்குச் சொல்லித் தான் கொடுக்கப்போறேன். பாட்டு, தாளம் எல்லாம் சொல்லிக் கொடுக்கறேன். அப்பறம் உங்க சாமியார்ட்ட போய்ப் பாடிக் காமி. ஞாயித்துக்கிழமை கோவில்லெ உள்ளெ கூப்பிட்டு உன்னைப் பாடச் சொல்றாரா இல்லியா பாரு! அடுத்த வருஷம்...''

''என்ன சாமி இது?''

''அப்பேர்ப்பட்ட ஞானம் இருக்குடா உனக்கு! நல்லாத் தெரிஞ்சுகிட்டு பாடினா, கர்த்தருக்கு எத்தனை சந்தோஷமாயிருக்கும்? மரவேலிக்கு இந்தண்டை நிக்க வாண்டாம். கோவிலுக்கு உள்ள சாமியார் கிட்டவே போயி பாடலாம். அவரே கூப்பிட்டு கிட்ட நிக்கவச்சு, பாடச் சொல்லுவார். இதபாரு, இன்னிக்கி செவ்வாக் கிழமையா? வெள்ளிக் கிழமை காலமெ வீட்டுக்கு வந்து என்னைப் பாரு. நீ காசு, கிசு தரவேண்டாம். ஒரு தேங்கா பழம் மாத்திரம் கொண்டுவா. சாமியை வேண்டிக்கிட்டு வாத்தியாருக்கு ஒரு கும்பிடு போட்டு ஆரம்பிக்கணும். அதுக்குத்தான். நீ எங்க பசு மாட்டுக்குக்கூட புல்லறுத்துப் போடவேண்டாம். வெறுமே சொல்லித்தரேண்டா! என்ன? வரேன்னு சொல்றா. சாமி, ஞானம் கொடுத்திருக்கில்ல? அதைச் சரியா ஒரு ஒழுங்கு பண்ணி உபயோகப்படுத்தலே, ரொம்பக் கெடுதல். சாமி என்னாத்துக்குக் கொடுத்திருக்கு. இப்படி வேலி முள்ளிலே உக்காந்து வகை தெரியாமே இழுக்கறதுக்கா?''



நாலு பக்கத்திலிருந்தும் அவனைத் தாக்கினார் மல்லி. குழையடித்தார், மிரட்டினார், கெஞ்சினார்.

''நீங்க என்னதான் செய்யணுங்கிறீங்களாம்?'' என்றான் கடைசியில்.

''வெள்ளிக்கிழமை எங்க வீட்டுக்கு வரவேண்டியது. அப்பறம் தினமும் காலையிலே வந்து கத்துக்க வேண்டியது. ரண்டு வருஷத்திலே பாரு.''

''சரிங்க.''

''அப்புறம் இந்த முள்ளு குத்திண்டே நிக்கவாண்டாம். பெரிய வித்வானா, கடுக்கன் சட்டையெல்லாம் போட்டுக் கிட்டு பாகவதர் மாதிரி, அம்மாபேட்டையார் மாதிரி, கச்சேரி பண்ணப் போறடா. சத்தியமாச் சொல்றேன்...''

''சரிங்க, சாமி.''

விழுந்தாண்டா பயல்!

''வெள்ளிக்கிழமை விடிய காலமே காத்திண்டிருப்பேன் நீ வரலே—''

''அப்பறம் பாரேன். வாரேங்கறேன்''

அந்த நிமிஷம் அந்தக் கிராமத்தையே கொளுத்திவிட வேண்டும் போலிருந்தது மல்லிக்கு. அத்தனை ஞான சூன்யங்கள்! அத்தனையும் ஞானசூன்யங்கள்! மாடு, சாணி, விரை, நெல்லு, எருவடி, யூரியா, சல்பேட்டு, கவணை, மடை, வேறு ஒன்றுமே கிடையாதா?

மல்லிக்குப் பொங்கிக்கொண்டு வந்தது. எப்படிப்பட்ட சாரீரம்! எப்படிப்பட்ட ஞானம்! ஏய், நான் சொல்லிக் கொடுத்து, அத்தனையும் உன் மண்டையிலே எழுதி, நீ அதை அப்படியே ஜிலுஜிலுன்னு ஜிலுஜிலுண்ணு—

தொண்டையைக்கூட அடைத்தது அவருக்கு.

நாலைந்து வருடங்களாக, ஊருக்கு வந்து குடியேறிய நாள் முதலாக இறக்கம், ஒரு சோர்வு! பாடச் சொல்லி எவன் கேட்கிறான் இங்கே? அதற்கு முன்னால் மட்டும் என்ன வாழ்ந்தது? சென்னைக்குப் போனபோது, பெரிய வித்வானாய் கொடி கட்டிப் பறக்கவேண்டும் என்றுதான் போனது. போன வேளையோ என்னவோ, கையைக் காலைப் பிடித்து முழுசாகப் பத்து கச்சேரி தேறவில்லை. ட்யூஷன் வாத்தியாராகவே காலம் தள்ளும்படியாகி விட்டது.

பெரிய மனிதர்கள் காலைப் பிடிப்பதற்குப் பதிலாக, சின்ன மனிதர்கள் காலைப் பிடிப்பது பலித்தது. அவர்களுக்கு நம் கஷ்டங்கள் புரியும். கடைசியில் அதுவும் அவ்வளவாகப் பயனில்லை. புருஷன் பெண்டாட்டிக்குக் கூடக் காணாமல்தான் சென்னையில் சம்பாதிக்க முடிந்தது என்றால் ஒரு மனிதனுடைய அதிர்ஷ்டம் எவ்வளவு பெரியது? வாடகை தராமல், காசு கொடுத்து அரிசி, பால், மோர், கறிகாய் வாங்காமல் காலந்தள்ள கிராமம் இருக்கும் போது, பட்டணம் என்ன, பம்பாய் என்ன? சோற்றுக்குத் தானே பாடினோம் என்று ஆகிவிட்டபோது, பாடாமலேயே சோறு கொடுக்கிற பட்டிக்காட்டை விடவா சொர்க்கம்?

மல்லி ஒருநாள் நாலு சாக்கில் பாத்திரங்களையும் பழைய மெத்தைகளையும் சென்னையில் சம்பாதித்து வாங்கின ஒரு மர பீரோவையும் இரண்டு நாற்காலிகளையும் கடிகாரத்தையும் சுருதிப் பெட்டியையும் சங்கீத, சன்மார்க்க புத்தகங்களையும் கட்டிக்கொண்டு வாழாவெட்டி மாதிரி பிறந்த ஊருக்கு வந்து சேர்ந்தார். இரண்டு மூன்று வருடம் தினமும் தனியாக உட்கார்ந்து பாடினார். வர வர அதுவும் தேய்ந்துவிட்டது. ராதா கல்யாணம், ஏகாதசி பஜனையென்று பக்கத்து ஊர்களுக்குப் போய்ப் பாடுவதே போதும் என்றாகிவிட்டது. மூட மூட ரோகமாகி அந்த இடங்களில்கூட தொண்டையைப் புரட்டித்



தள்ளுகிற கதி வந்துவிட்டது. இருபது லட்சம் ஜனங்கள் வாழ்கின்ற சென்னையில் ஸுஸ்வரம், சுத்தம் என்று அவரைச் சொன்னவர்கள் மூன்றே நண்பர்கள். கணக்குப் படி பார்த்தால் இருநூறு பேர் முழுசாகத் தேறாத கிராமத்தில் எத்தனை பேர் அப்படிக் கிடைப்பார்கள்? சைபர், சைபர், சைபர்......

ஒரே ஒரு ஆள் சிஷ்யனாக வந்தான் மூன்றாம் வருஷம். ஸம்ஸ்கிருதம் படித்த பையன். நல்ல குரல். ஆனால் ஆறு மாசம் சொல்லிக்கொள்ள அவனுக்குப் பொறுமையில்லை. சம்பாதிக்க சென்னை போய்விட்டான். சென்னையில் அவர் ஆதியில் செய்ததையே அவனும் செய்து கொண்டிருக்கிறானாம். பேட்டை பேட்டையாக சபைகளின் காரியதரிசிகளிடம் பல்லை இளித்துப் புராணம், உபநியாசம் ஏற்பாடு செய்யச் சொல்லி, கதை சொல்லி, நடு நடுவே வருகிறவர்களுக்குப் புகழ் சொல்லி, தட்டெடுத்து......

குப்பாண்டி இருக்கிறான் என்று இத்தனை நாளாகத் தெரியாமல் போய்விட்டதே!

ஆனால் பாலன் சிரிக்கிறதும், மற்றவர்கள் சிரிக்கிறதும்......பாட்டிகள் 'நாப்பு' காட்டுகிறதும்......என்ன இது?

கீசுகிசென்று ஊஞ்சல் சுத்துகிறது. அதையே கேட்டுக் கொண்டிருக்கவேண்டும் போலிருக்கிறது. மனைவி வந்தாள். சமைத்துச் சாதம் போட்டாள். சாதம் போடும் போது, 'குப்பாண்டிக்குப் பாட்டுச் சொல்லிக் கொடுக்கப் போறதாமே?'' என்றாள்.

''ஆமா.''

''படித்துறையிலே வாலாம்பா பாட்டி கேட்டா.''

''எப்படிக் கேட்டா?''

''என்னடிம்மா, ஒரே பட்டணக் கோலமாயிருக்கே. உள்ளியே வச்சிண்டு சொல்லிக் கொடுக்கப் போறாராமே

உங்க ஆத்துக்காரர்ன்னு கேட்டா. எனக்கு ஒண்ணும் தெரியாது பாட்டி, அவாளைத்தான் கேக்கணும்னேன்.''

''யார் அப்படிச் சொன்னான்னு கேக்கப்படாதோ?''

''சொல்லிக் கொடுக்கப்போற சமாசாரமே அங்கேதானே தெரியும் எனக்கு'' என்று தங்களுக்கிடையே இருந்த உறவின் நெருக்கத்தை லேசாகக் 'குத்திக்காட்டினாள் மனைவி.

இரண்டு பேருக்கும் அவ்வளவுதான் சல்லாபம். அதுவும் அவருடைய இறக்கங்களில் ஒன்று. ஒரு பிள்ளை பெற முடியவில்லையே என்ற இவர் மேல் அவளுக்குக் கோபம். அவள் மீது இவருக்குக் குறை.

சாப்பிட்டுக் கையலம்பியதும் திண்ணைக்கும் போகவில்லை. உள்ளுக்குள்ளேயே அடைந்து கிடந்தார். பிள்ளையார் கோவிலுக்குப் போகிற வழக்கம். அதற்கும் பயமாக இருந்தது. ஊஞ்சலோடு கிடந்தார். இருட்டிய பிறகுதான் பிள்ளையார் கோவிலுக்கு நடந்தார். அதுவும் கொல்லை வழியாக. பிள்ளையாரின் முன்பு குட்டிக்கொண்ட பிறகு, சேரிக்குப் போய் குப்பாண்டியைக் கூப்பிட்டு நாளைக்கு வர வேண்டாம் என்று சொல்லிவிட்டால் என்ன? வயல் வரப்புகளைக் கடந்து போகவேண்டும். களத்தின் வழியாகப் போனார். பாதி தூரம் நல்ல பாதை. போனால், களத்திலே யாராவது நிற்பார்களே...மறுபடியும் அதே கேள்வி. வரப்புப் பாதையிலேயே முழுவதும் போனால்...? சீ... என்ன இது? நம்மை யார் தடுக்க? நானா கோழை?

திரும்பிவிட்டார் மல்லி.

சாப்பிட்டுவிட்டுப் படுத்தார். சற்று இறுக்கமாயிருந்தது. ஆனால், வழக்கம்போல் வெளியே போகவில்லை. பயம் வயிற்றில் நெளிகிறது. கிசுகிசென்று ஊஞ்சலிலேயே படுத்தார். காற்று வருகிறது.



ஆனால், பயம்? பயம் தீரவில்லை. மனச்சாட்சி என்கிறார்களே—இதுதானோ? மனச்சாட்சி என்ன என்று ஆராய்ந்து பார்த்தார். அந்தக் கவலை மனச்சாட்சி இல்லை என்று புரிந்துவிட்டது. ஆனால், பயம்?...ஏன் இன்னும் குடைந்துகொண்டேயிருக்கிறது? பஞ்சாயத்துக் கூடி அவர் மீது கட்டுப்பாடு செய்கிறார்கள். பாலன், சுப்புக்குட்டி, சீதாராமன், கர்ணம், பட்டாமணியம் எல்லோரும் ஊரைக் கட்டுப்படுத்தினார்கள். ''கோடாலி!'' என்று பாலன் மாமா, கையை வீசிக்கொண்டு விழியை உருட்டிக்கொண்டு அடிக்க வருகிறார்.

''என்னது!...என்னது!...என்னன்னேன்!''

தள்ளுகிறாற் போலிருந்தது. யாரும் தள்ளவில்லை. மனைவி அவரை உலுக்கினாள்.

''என்ன, இரைஞ்சு பேத்தித்தே!—ஊளையிடறாப் பல—சொப்பனம் கண்டுதா என்ன?''

அந்த ஒரு கனவோடு போயிற்று. ஒரு மணிக்குப் பிறகு தூக்கம் வந்தது.

''எழுந்துக்கலாமா?'' என்று மனைவி எழுப்பினாள். ''குப்பாண்டி கூப்பிடறான் கொல்லையிலே'' என்றாள்.

மல்லி எழுந்தார். கொல்லைப் பக்கம் வேகமாக நடந்தார். குப்பாண்டி தேங்காய் பழத்துடன் வந்து மாட்டுக் கொட்டகைக்குப் பக்கத்தில் நின்றான்.

''கும்பிடறேன், சாமி.''

''வந்துட்டியா — இரு. வந்துடறேன்'' என்று பல் தேய்த்துவிட்டு, சுருதிப் பெட்டியை எடுத்துக்கொண்டு வந்தார்.

''தேங்காய் பழத்தை வச்சுட்டு சுவாமியை வேண்டிக்கோ.''

அவனே விழுந்து கும்பிட்டான். அவர் ஜெற்றங் கரையில் தளம் போட்டிருக்கிற இடத்தில் ஈரமில்லாத இடமாக உட்கார்ந்து சுருதிப் பெட்டியை அவிழ்த்துவிட்டார்.

''அதோ அப்படி உட்காரு...அங்கேதான், கறிவேப்பிலை கன்னுகிட்ட உட்காரேன்'' என்றார்.

குப்பாண்டி சப்பணம் கொட்டி உட்கார்ந்து கொண்டான். இவருக்கும் அவனுக்கும் நாற்பதடி தூரம் இருக்கும். நடுவில் ஏழெட்டு துளசிச் செடி. ஒரு அந்தி மந்தாரைச் செடி.

''சொல்லு—நான் முன்னாலே ஸா பா ஸா சொல்றேன். முன்னாடி ஒரு தடவை கேட்டுக்கோ. அப்பறம் ஒண்ணொண்ணாச் சொல்லுவேன். நீ பாடணும்...ஸா பா ஸா... இப்ப சொல்லு, சொல்லு. ஸா—''

''ஸா''

அப்பா! என்ன குரல்! என்ன குரல்!

ஸரிகம பதநிஸா, ஸநிதப மகரிஸா

ஸரிகம ஸரிகம ஸரிகம பதநிஸா

ஸநிதப ஸநிதப ஸநிதப மகரிஸா.

முதல் காலம், இரண்டாவது காலம், மூன்றாவது காலம்... என்ன புத்தி இந்தப் பயலுக்கு! என்ன வேகம்? என்ன இனிமை! அட, கந்தர்வப் பிசாசு!

கொல்லைப் படலைச் சாத்தாமல் வந்துவிட்டான் குப்பாண்டி. குடியானத் தெரு, சேரி ஜனங்கள் ஒரு இருபது பேர். பக்கத்து வீடுகளின் வேலிகளின் ஓரமாக அக்ரகாரத்துப் பிரமுகர்கள். நடு வயதுகள், சில்லுண்டிகள்! பாலன், சுப்புக்குட்டி, கர்ணம், சீதாராமன்!—

பாலன் சிரிக்கிறார். கர்ணம் சிரிக்கிறார்—அதைப் பார்த்துக் குழந்தைகள் பாதி, ஏன் என்று தெரியாமல் விழிக்கின்றன. பாதி தெரியாமலேயே சிரிக்கிறதுகள்.



நாற்பதடி தூரத்தைப் பார்த்துக் குடியானத் தெரு ஆட்கள் சிரித்தார்கள்.

மல்லியின் வயிற்றுக்குள் ஒரு பெரிய வைக்கோல் போரே எரிந்தது. சரளி வரிசை முடிந்தது.

''ஸா பா ஸா''

''ஸா பா ஸா''

''இன்னிக்கி போரும். நாளைக்கிக் காலமே வந்துடு இதே மாதிரி.''

குப்பாண்டி எழுந்து நடந்தான். அவனோடு குடியானத் தெரு, சேரி ஆட்களின் கூட்டம் கலைந்தது.

பாலன் வேலிக்கப்பாலிருந்து சொன்னார்: ''மல்லி! ரொம்ப அழகாகப் பண்ணிப்பிட்டீர்'' என்றார்.

''மீசையிலே படாம கூழும் குடிச்சாச்சு'' என்றார் கர்ணம்.

அதைக் கேட்டு சீதாராமன் கொளகொள வென்று மார்ச்சதையும் வயிறும் குலுங்கச் சிரித்தான். அவன் பெரிய மனிதன். எனவே மற்றவர்களும் அதை வாங்கிச் சிரித்தார்கள். உடனே இந்தப் பக்கத்து வீட்டுக் கொல்லையிலிருந்த குஞ்சு, குதிர்களும் நகைத்தன.

அவர் சற்று நின்று பார்த்தார்.

''என்னடா, சிரிக்கிறேள்?''

''என்னடா சிரிக்கிறேள்?'' என்று அதையே திருப்பிச் சொன்னான் சீதாராமன். மறுபடியும் பெரிய சிரிப்பு.

''ஓங்க—'' என்று, மீதி வெசவை வெய்யாமல் ''நாளைக்கு உள்ள வச்சிண்டு பாடம் சொல்றேனா இல்லியா பாருங்கடா, ஏழிச மக்களா!'' என சுருதிப் பெட்டியை வீசி கூட்டத்தின் பக்கம் எறிந்தார் மல்லி. அது

வேலியில் விழுந்து துருத்தியில் முள் தைத்துக்கொண்டு கீழே விழுந்தது. அசடு மாதிரி நடந்தார் மல்லி. சட்டென்று அதை எடுத்து, கதவைத் தடார் என்று சாத்தித் தாழிட்டுக் கொண்டு உள்ளே வந்து முள்ளை எடுத்தார்.

“நீங்கள்ளாம் நன்னாருப்பேளா?” என்று தாழிட்ட கொல்லை கதவுக்கு இப்பால் நின்று, வானத்தைப் பார்த்து அவர் மனைவி சபித்துக் கொண்டிருந்தாள்.

“கெடக்கான், நீவா—நாய்தான் குலைக்கிறது. நீ வேற ஏன் குலைக்கணும்? கொஞ்சம் கோந்து வேணும். உள்ள வா” என்று மல்லி கத்தினார்.

இப்பொழுது பயத்தோடு ஒரு தனிமையும், அலட்சியமும் சேர்ந்து கொண்டன. காய்ச்சல் வந்தமாதிரி கை நடுங்கிற்று. ஊஞ்சல்மீது படுத்துச் சங்கிலியைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார்.

—

1967

# விளையாட்டுப் பொம்மை

அவர் விளையாட்டுப் பொம்மை. வா என்றால் வருகிறார். போ என்றால் போகிறார். எழுந்திருங்கள் என்றால் எழுந்திருக்கிறார். உட்காரு என்றால் உட்காருகிறார்—கை கொடுத்தால் போதும்.

“தாத்தா, சாப்பிடவா”—மூன்று வயதுக் குழந்தை மணிக்கட்டை பிடிக்கிறது.

“சரி”

“ஏந்துக்கோ”

எழுந்து கொள்கிறார்.

“விரலைப்புச்சுக்கோ”

பிடித்துக் கொள்கிறார்.

“தூணைப் புச்சுக்கோ—அந்தக் கையாலே. மெதுவா ஏறு.”

முற்றத்திலிருந்து தாழ்வாரத்துக்கு ஏறுகிறார்.

“குனிஞ்சு வா, மந்தையிலே இடிக்கும்.” சமையலறை நிலைப்படியில் குனிந்து ஜாக்கிரதையாக நிலைப்படியைத் தாண்டி விட்டார்.

மடத்து யானை பிரம்மாண்ட யானை. பாகன் இல்லாத பொழுது மகன் பார்த்துக் கொள்வான்—வாண்டு. ஒரு குச்சியை வைத்துக்கொண்டு துதிக்கையில் அடிப்பான்,

காலில் அடிப்பான். குளிக்க அழைத்துக்கொண்டு போவான். யாராவது காசு போட்டால் மண்ணில் விழுந்ததைக் கையில் எடுத்துக் கொடுக்கச் சொல்வான். இல்லாத பொட்டை அதிகாரம் எல்லாம் பண்ணுவான்— பிரம்மாண்டம் மூச்சுப் பேச்சு பறிகிறதில்லை. கிறிஸ கோட்டைத் தாண்டுவதில்லை.

வேணு அப்படித்தான் ஆடிக்கொண்டிருக்கிறார். மடத்து யானையை பாகனும் மகனும் ஆட்டலாம். ஆனால்— வேணுவை வீடு முழுவதும் ஆட்டுகிறது.

"வேட்டி கட்டிங்கோ"—மூத்த பெண்.

"வேட்டியா—கட்டிண்டா போச்சு."

—வேணு இரண்டு கைகளையும் மேலே தூக்கிக்கொள் கிறார்.

"இந்தாங்கோப்பா காபி."

"காபியா? சாப்பிட்டாப் போச்சு."

"இன்னிக்கு சாயங்காலம் ரண்டு தோசை தின்னாச்சே ராத்திரி சாப்பிடணுமான்னு பார்க்கிறேன்."

"வாண்டாமே, பேசாம படுத்துண்டாப் போச்சு"

"பல்லாங்குழி, வதியா? ஆதலாம்." அதே மூன்று வயதுக் கொள்ளுப் பேரன். இரண்டு கட்டைகளை தூக்க முடியாமல், ஏதோ கன்றுக்குட்டியைத் தூக்கி வருவது போல வருகிறான். தடார் என்று அந்த கணம் தானே பூமியில் வைத்துக் கொள்கிறது. மறுபடியும் ஓடிப்போய் மஞ்சள் ஓலைப்பெட்டியுடன வருகிறான்.

"வா...கியே உக்காந்துக்கோ. மெதுவா உக்காந்துக் கோ..."

வேணு நாற்காலியிலிருந்தபடியே தழுவுகிறார். காலை மடக்கி விட்டார். குழந்தை அவருடைய இடுப்புக்கும் வேட்டிக்கும் இடையே பூ விரலைக் கொடுத்து கீழே அழுத்துகிறது. உடம்பு உட்கார்ந்து விடுகிறது.



வேணுவுக்கு இரண்டுதான் முடியாது. தானே எழுந் திருக்க முடியாது. தானே உட்கார முடியாது. கையைப் பிடித்து எழுப்பி நிறுத்தி விட்டால் போதும், கால்பாவாது. குடுகுடு என்று ஒரு நடை. ஒவ்வொரு கதவாகத் திறந்து கொண்டு கிணற்று முற்றத்தில் இறங்கி, மீண்டும் ஏறிக் கொட்டில் கதவைத் திறந்து இறங்கி கொல்லையில் போய் நிற்பார். வாசல் பந்தலில் நின்று கொண்டிருந்தவன் ஒரு நாள் இதைப் பார்த்தேன். கிராமத்து வீடு. டெலஸ் கோப்பைத் திருப்பி வைத்துப் பார்க்கிற மாதிரி நீளம். சிறுகிச் சிறுகி பத்து நிலைப்படி. கொல்லைக் கோடியில் ஒரு புளியமரம். அங்கே வேணு நின்றுகொண்டிருந்தார்.

பார்க்கிறது என் கண்தானா? நம்ப முடியவில்லை. எண்ணி, பன்னிரண்டு நாட்களுக்கு முன்பு பாரத தேசம் முழுவதும் தந்திகளை வீசி குலத்தையே கூட்டிய உடம்பா இது?

"மாமா கொல்லைக் கோடியிலே நிக்கறாரே" என்று பொதுவாகச் சொல்லிக் கொண்டு, முன் முற்றம், நடை, இரண்டாங்கட்டு, கிணற்று முற்றம், கொட்டில்—எல்லா வற்றையும் கடந்து, பெருநடை நடந்து அவரிடம் போனேன்.

"தனியா இப்படி வரலாமா?"

"யாரு...?" நினைவு மூட்டங்களை விலக்க, கூசிக்கிற பார்வை.

"ராமு"

"ராமுவா...அடையாளமே புரியலியே...உன்னைத் தாண்டா பாத்துண்டிருந்தேன். புளியமரத்தைச் சுத்திச் சுத்தி ஓடினியே...பேதிக்குச் சாப்பிட மாட்டேன்னு. உன்னைத் துரத்தித் துரத்திப் பிடிச்சு, இழுத்துண்டு வந்து கையையும் காலையும் அம்மிப் பிடிச்சுண்டு, உன் வாயிலே எண்ணெயைப் போட்டி, நீ ஓக்காளிச்சு, சுத்தி இருக்கிறவா புடவை வேட்டியெல்லாம் எண்ணெயா தெறிச்சு,—என்ன முரட்டுத் தனம்! என்ன விஷமம்!" வேணு சிரிக்கிறார்.

அந்த மாதிரி சிரிப்புக்காகவே சிரிக்கிற சிரிப்பைப் பார்த்து எத்தனை காலமாயிற்று! யாருக்கும் காரியம் இல்லாமல் சிரிக்கத் தெரிகிறது.

அந்த சுத்தச் சிரிப்பில் மயங்கி ஒரு கணம் வந்த காரியம் மறந்து விட்டது.

''அது சரி மாமா—இப்படித் தனியா வரலாமா?''

''தனியா என்னடா, எனக்கென்ன பயமா?''

பிடித்து அழைத்து வரும்பொழுது, ''நீ எப்ப வந்தே?''

''எப்ப வந்தேனா? பதினைஞ்சு நாளா உங்களோட தானே இருக்கேன்?''

''பதினஞ்சு நாளாவா?''—சற்று நிற்கிறார். என்னைப் பார்க்கிறார்...

''ஆமாண்டா...இது என்ன மறதி! ஆச்சரியமாயிருக்கே... ஒண்ணு கூட நினைவிருக்க மாட்டேங்கறது. பாகவதத்தைக் கேட்ட இடத்திலே சொல்வேன். பீனல் கோடைக் கேட்ட இடத்திலே சொன்னதென்ன! சொப்பனத்திலே எழுப்பிக் கேட்டா நாற்பது வருஷ ஜட்ஜ்மெண்டெல்லாம் ஒப்பிச்சாச்சு. இப்ப எல்லாம் ஒரே வெள்ளையா இருக்கு.''

வேணுவுக்கு மறதியும் தெரிந்திருந்தது. அவரை விளையாட்டுப் பொம்மையாக்கினது இந்த மறதிதான்.

''தாத்தா, நான் யாரு சொல்லு பாப்போம்'' என்று ஒரு பேத்தி கவுன், பாதி பின்னல் அவிழ்ந்த தலை, அரிசிப் பல்—இந்தக் கோலத்துடன் சிரித்துக்கொண்டு எதிரே நிற்கும்.

''நீயா?...''—சிறிது யோசனை.

''நீ ருக்கு.''

''இல்லெ.''

''பின்னே யாரு?''

''கமலா பொண்ணுதானே?''

''அதுவும் இல்லே.''



''அது நடராஜன் பொண்ணு அண்ணா!'' என்கிறாள் கூடத்தில் கறி நறுக்கும் தங்கை.

''எந்த நடராஜன்?''

''நாசமாப்போச்சு.''—தங்கை சிரிக்கிறாள். குழந்தைகளும் சிரிக்கின்றன.

''உங்க முதல் பேரன் இல்லையா நடராஜன், ஆவடியிலே இருக்கானே. நேத்திக்குத்தானே ஊருக்குப் போனான்.''

''ஆமாண்டி ஆமா''—இது வெறும் சமாளிப்பு. அவருக்கு நடராஜன் வந்ததோ, நேற்று திரும்பிப் போனதோ நினைவிருப்பதாகத் தெரியவில்லை.

குழந்தைகள் கிசுகிசுவென்று புதிய விளையாட்டுக்குச் சூழ்ச்சி செய்கின்றன.

''தாத்தா—இது என்ன சொல்லு பார்ப்போம்?'' இன்னொரு கொள்ளுப்பேரன். ஒரு பென்சிலை அவர் கண் முன் காட்டுகிறான்.

''இதுவா? இதாலேதான் எழுதுவா?''

''அதுக்குப் பேர் என்ன?''

''பேர் எதுக்கு? அதான் செய்யற காரியத்தைச் சொல்லிவிட்டேனே.''

''ம்ம்—அதெல்லாம் முடியாது. பேர் சொன்னாத் தான்.''

''இது என்ன சொல்லு பார்ப்போம்?''—இன்னொரு பேத்தி. ஒரு புத்தானை விரலில் பிடித்துக் காட்டுகிறது.

''சட்டைக்குப் போட்டுக்கிறது.''

''பேர் என்ன?''

''பேரைத் தெரிஞ்சுண்டு என்ன ஆகணும் இப்ப?''

''ம். சொல்லு பார்ப்பம்.''

''சொல்ல மாட்டேன்.''

''உனக்குத் தெரியாது!''

''பாளையங்களா? அந்தண்டை போறேளா இல்லியா இப்ப? பாடம் சொல்லிக் கொடுக்கறேளோ தாத்தாவுக்கு. போங்கடா அந்தண்டை''—கறி நறுக்கும் தங்கையின் அரற்றல்.

''பேராவது! கிராவது! நாமரூபங்களையெல்லாம் தாண்டிப் போறதுதானே ஞானம்!'' என்று என்னைப் பார்க்கிறார் வேணு மாமா.

இப்பொழுதும் ஒரு சிரிப்பு. ஆனால், இது அந்தச் சிரிப்பில்லை. நமுட்டுச் சிரிப்பு. மறதிக்குச் சப்பை கட்டுகிற சிரிப்பு.

''நீ எப்ப வந்தே?'' என்று மறுபடியும் என்னைக் கேட்டார்.

''எத்தனை தடவை சொல்லுவேன்; நான் வந்து பதினஞ்சு நாளாச்சுன்னு!''

''நீங்கதானேண்ணா தந்தி கொடுத்து வரவழைக்கச் சொன்னேள். உடனே ஹைதராபாத்திலேர்ந்து ப்ளேன்லியும் டாக்சியிலியும் பறந்து வந்தானே'' என்று ஞாபகப் படுத்தினாள் வேணுமாமாவின் தங்கை.

பார்க்க முடியுமோ முடியாதோ என்று சங்கையோடு தான் ஓடிவந்தேன். வரும் வழியெல்லாம் பிரார்த்தனை; மாமாவை உயிரோடு பார்த்துவிட வேண்டும் என்று. அதோடு தாளமுடியாத ஒரு நன்றி. நெஞ்சுக் குழியில் உயிர் கிடந்து தவிக்கும்பொழுது என்னைப் பார்க்க வேண்டும் என்று ஆசையா! வேணு மாமா உறவுகூட இல்லை. பக்கத்து வீட்டுக்காரர். திறந்த வீட்டில் நுழைகிற குழந்தைப் பருவத்தில், பக்கத்து வீட்டுக் கூடம் வரையில் போய் பீரோ பீரோவாக தங்க எழுத்து எழுதின சட்டப் புத்தகங்களைப் பார்த்துக்கொண்டு நிற்பேன். வேணு மாமாவின் மேஜைமுன் கட்சிக்காரர்கள் கூட்டம். எப்படியோ சிநேகம் பிடித்து ஊன்றிற்று. மாமாவுக்குப் பிள்ளைகளுக்குப் பஞ்சம் இல்லை. ஒன்றிரண்டு பேரன் பேத்தியும் பிறந்துவிட்டார்களாம். நான் இன்னொரு பேரன் ஆகிவிட்டேன்.



நானில்லாத பலகாரம், பண்டிகை கிடையாது. கிராமத்துக்குக்கூட நாலைந்து தடவை அழைத்துப் போயிருக்கிறார். பேதி எண்ணெய்க்கு மிரண்டு புளிய மரத்தைச் சுற்றி விரட்ட விரட்ட ஓடியது அப்படி ஒரு சமயத்தில்தான். மாமாவுக்கு இதெல்லாம் ஞாபகம் இருக்கிறது. இப்பொழுது எல்லோரும் அவரை விரட்டிப் பிடிக்க வேண்டியிருக்கிறது.

''தாத்தா எங்கடி?'' என்று அடுக்களையிலிருந்த மூத்த பெண் ஏதோ கூடத்திற்கு வந்தவள்—கத்துகிறாள்.

''இப்ப இருந்தாளே முற்றத்திலே!'' என்று பதில் குரல் கேட்கும்.

முற்றத்தில் இருந்த தாத்தாவைக் காணோம். கூடத்தில் யாராவது உட்கார்ந்திருப்பார்கள். காவல் என்று தெரியாமல் ஒரு காவல். அடுக்களை வேலையைக்கூட தாத்தாவைக் கண்காணிப்பதற்காகக் கூடத்திற்குக் கொண்டு வந்து செய்து கொண்டிருப்பார்கள். கறி நறுக்கும் அரிவாள்மணையை உள்ளேகொண்டு வைக்கப்போவார்கள். திரும்பி வருவதற்குள் தாத்தா இடைக்கட்டுக் கதவைத் திறந்து கொண்டு நழுவியிருப்பார். வாசலில் ஓடிப்போய்ப் பார்த்தால் தெருவில் கிழக்கே பார்க்க சிறு ஓட்டமாக நடந்து கொண்டிருப்பார்.

அப்படி கையில் படாமல் நழுவி நகர்ந்து ஆற்றங்கரை கட்டுக் கரையில்போய் நின்றாராம் ஒருநாள். கட்டுக் கரையிலிருந்து பாதை இறங்கிற இறக்கத்தில் கால் தரிக்காமல் விழுந்துவிட்டார். மண்டை—மூக்கில் காயம், மயக்கம். யாரோ பாதையோடு போகிற ஆள் அவரைத் தூக்கிக் கொண்டுவந்து வீட்டுக்குள் போட்டுவிட்டுப் போனான். ஆனால் மயக்கம் தெளியவில்லை. ஒருநாள் முழுவதும் தெளியவில்லை. கண்ணைத் திறக்கிறது போலிருக்கும். மறுபடியும் மூடல். தந்திகளாகப் பறந்தது. இரண்டு டஜன் தந்திகள் — ஐந்து பிள்ளைகள்—மூன்று பெண்கள்—அவர்

களுடைய பிள்ளைகள்—மாப்பிள்ளைகள்—இப்படி...சற்று நினைவு வந்தபோது என் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டாராம்—நான் வரவில்லையா என்று கேட்டாராம்.

நான் வந்து சேர்ந்தபொழுது வீடு கொள்ளாத கூட்டம். குஞ்சு குளுவான்கள் வாசல் திண்ணையில் விளையாடிக் கொண்டிருந்தன. பட்டணத்து உடை, பட்டணத்துத் தலைவாரல், கத்தரித்த தலைகள்—இப்படி.

உள்ளே ஊஞ்சல், அரிசி மூட்டை, தாவாரம், சந்தனக் கல், ஒட்டுத்திண்ணை, தயிர் கடைகிற முக்காலி, பிரப்பம் பாய்—என்று ஆளுக்கு ஒவ்வொன்றாகப் பிடித்துக்கொண்டு பிள்ளை பெண்ணெல்லாம் உட்கார்ந்திருந்தார்கள். உள்ளே மாமாவைச் சுற்றி அவருடைய தங்கைகள், இரண்டு பெண்கள், மூன்றாவது நான்காவது பையன்கள்.

எல்லோரும் எதற்கும் தயாராக வந்திருந்தார்கள். அதனால்தான் எல்லாருக்குமே சற்று ஏமாற்றம். மாமா மூன்றாவது நாள் மாலையில் கண்ணை நன்றாகத் திறந்து விட்டார். எழுந்து உட்கார்ந்தும் விட்டார். எல்லோரும் திரும்பிப்போய் ஓரிரண்டு மாதங்களுக்கு ஏதாவது ஆயிற்றென்றால் மறுபடியும் லீவு, செலவு, பிரயாணம்—கொச்சி, பம்பாய், கல்கத்தா, மதுரை, திருநெல்வேலி, புனா எல்லாம் கிட்டவா இருக்கிறது?

மூன்றாவது பெண் தனியாக என்னிடம் சொன்னாள்: ''இந்த கிடைக்கு அப்பாவை அழச்சிண்டிருக்கப் படாதா பகவான்? எப்படிச் சோதிக்கிறார் பாரு? சண்டிகர்லேந்து என்னாலெ நினைச்சபோது வரமுடியுமா? ரயில்லெ முழுசா மூணுநாள் பிரயாணம். அங்கங்கே காத்திண்டிருக்கிறதைச் சேர்த்தா இன்னொரு ரண்டு நாள். அஞ்சுமஞ்சும் பத்து நாள்.''

அவள் வாயைத் திறந்து சொன்னாள். மற்றவர்கள் சொல்லத் தயங்கினார்கள்.



ஆறாவது நாள் மாமாவின் பாய் தலையணையெல்லாம் பரணுக்குப் போய்விட்டது. மாமா எழுந்துவிட்டார், நடக்கத் தொடங்கிவிட்டார்.

பிள்ளைகள் எல்லாரும் திரும்பிப் போனார்கள். நமஸ்காரம் செய்துவிட்டுப் போனார்கள். கை நடுங்க நடுங்க ஒவ்வொருவர் நெற்றியிலும், விரலால் விபூதியைப் பூசிவிட்டார் மாமா.

''போகணும்மா — சரி — நீயும் கிளம்பிட்டியா சரி— உனக்கும் அவசரமா? சரி.''

கடைசி இரண்டு பெண்களும், பக்கத்து கிராமத்திலிருந்து வந்திருந்த தங்கை—இவர்கள்தான் மிச்சம்.

நானும் நமஸ்காரம் செய்தேன்.

''நீயுமா போகணும்கறே?''—மாமா அழத் தொடங்கினார்.

''நான் போகலே மாமா—சும்மா நமஸ்காரம் பண்ணினேன்.'' ஒரு மாதம் லீவை நீடிக்கச் சொல்லித் தந்தி கொடுத்துவிட்டு, மாமா புத்தானுக்கும் பென்சிலுக்கும் பேர் தெரியாமல் சமாளிக்கிற விளையாட்டுகளைப் பார்க்க உட்கார்ந்துவிட்டேன்.

ஆற்றில் குளிக்கப்போன பொழுது மாமாவின் தங்கையும் படியிறங்கினாள். சொன்னாள்.

''அண்ணா உடம்பு உடம்புதான். அந்த உடம்பிலே ரத்தமா ஓடறது? கங்கா ஜலம்னா அது! நாப்பத்தஞ்சு வருஷம் எத்தனை ஆயிரம் கேஸ் ஆடியிருக்கான்! ஒரு பொய்! கட்சிக்காரன் வந்து வாயைத் திறந்த அஞ்சு நிமிஷத்துக்கெல்லாம் சொல்லிடுவானே அண்ணா! பகவான் தலையிலே எழுதிப்ட்டான் வக்கிலா வாயாடி வயித்தைக் கழுவிக்கோன்னு. அதுக்காக பஞ்சமா பாதகன் கிட்டே பொறுக்கித் தின்னுன்னு சொல்லிட்டான்னா அர்த்தம்! நீ பண்ணியிருக்கிற அட்டுழியத்துக்கும் உன்னைக்

கழு மரத்திலே ஏத்தனும். உன்னைக் காப்பாத்தினா எனக்குக் கழு மரம் காத்திண்டிருக்கும். இன்னும் பதினஞ்சு விநாடி டயம் தர்றேன். இந்தக் கடுதாசி—கட்டு—எல்லாத்தையும் தூக்கிண்டு இறங்கி வெளியிலே நடந்துடணும்—இல்லையோ''ன்னு ஒரு முழி முழிப்பன் அண்ணா. நெருப்பு.

நாலு வீடு தள்ளித்தானே இருந்தான் கிட்டுச்சாமி. நன்னாத்தான் வக்கில் பண்ணினான். ஆனா, உடம்பெல்லாம் சாக்கடை. தாணிலே புடவை சுத்தியிருந்தா போறும். அப்படிச் சிரிச்சுது ஊரு. அதுக்காக அண்ணாவை விட சங்கீதம் ஒண்ணும் தெரிஞ்சுனூடலே அவன். பாட்டுக் கச்சேரி கேக்கத் தெரிஞ்சா சாந்தும் ஜவ்வாதுமா ஈஷிண்டு ஆட்டுக் கடா மாதிரி அலையணும்னு நெனச்சுனூட்டான்... நான் என்னத்துக்கு இந்த சாக்கடையைப்பற்றிப் பேசறேன், கங்கா ஜலத்தைப்பத்திப் பேசறச்சே!...அண்ணா அதிலியும் நெருப்புன்னு சொல்றதுக்கு வந்தேன். வாலாம்பா கேஸை அண்ணாதானே நடத்தினான். மூணு குழந்தையைப் பெத்துப்புட்டு...மறந்தே போயிடுத்து அவளை நடராஜய்யருக்கு. தேவடியா கேசு போட்டா ஜயிக்கப்போறதுன்னு எத்தனை வக்கீல் கையை விரிச்சா. அண்ணா நடராஜய்யனைக் கூப்பிட்டு என்ன சொன்னானோ—மறந்து போனது அபசாரம்னு பன்னண்டு வேலியை எழுதிக் கொடுத்து நகர்ந்தான். அரை மணியிலே கேஸ் தீர்ந்தது. நான் அப்ப அண்ணா பேரனுக்கு ஆண்டு நிறைவுன்னு போயிருந்தேன். சாயங்காலம் ஏழு மணியிருக்கும். ஆபீஸ் உள்ளேருந்து ஒரு சத்தம் கேட்டது பாரு. ''நாரைக் கழுதே''ன்னு பெரிய சத்தம். வேணு அண்ணா குரல்தான். இடி இடிக்கறாப்பல இருந்துது. ஆபீஸ் உள்ளே இருந்து எத்தனையோ கேக்கும். யாரும் கேக்க மாட்டா. இது என்னடீ புதுசா இருக்கேன்னு நான்தான் ஜன்னலாலெ பார்த்தேன். வாலாம்பா விடுவிடுன்னு வாசப்படியிலே இறங்கி நடந்துண்டிருந்தா. ரண்டு மூணு தடவை பார்த்திருக்கேன், எனக்கே கட்டிக்கணும்போல இருக்கும். மொட்டச்சி—அப்படின்னா இருப்ப—மின்னல்லெ கடசல் கொடுத்து பண்ணினாப்பல. என்னண்ணான்னு கேட்டேன். கீழ நூறு ரூபா நோட்டா இறஞ்சு கிடந்தது. அண்ணா சிரிச்சான். ''ஒண்ணும் இல்லேடி, கோர்ட்டிலே சிரிக்காம காதும் காதும் வச்சாப்பல சொத்து வாங்கி கொடுத்தேனோல்லியா? வாலாம்பாளுக்கு நன்னி தாள முடியலெ. உங்க இஷ்டப்படி இருக்கேன்னா. அவ்வளவுதாண்டி''ன்னு நமுட்டுச் சிரிப்பு சிரிச்சான். அட அசடேன்னு நெனச்சுண்டு ரூபா நோட்டையெல்லாம் எடுத்து வச்சேன் மேஜை மேலே!



மாமாவின் தங்கை குடத்தை மணலைப்போட்டுத் தேய்த்துக்கொண்டிருந்தாள்.

யாரை அசடு என்று அவள் சொல்கிறாள் என்று தெரியவில்லை. குடம் பளபளவென்று வாலாம்பாளாகத் தெரிந்தது. தான் அண்ணாவாக இல்லையே என்று தங்கை கஷ்டப்படுகிறாளா? மணலும் விரலும் குடத்தை அப்படித் தேய்த்தன.

இடுப்பு மட்டுத் தண்ணீரில் நின்று கையையும் காலையும் தேய்த்துக் கொண்டிருந்தேன்.

''அப்படியெல்லாம் இருந்துட்டு, இப்ப வயத்துலெ பொறந்த பொண்ணைப் பார்த்து நீ யாருன்னு கேக்கறான். என்னையே நீ யாருன்னு கேக்கறான் சில சமயம். உடம்பிலே என்னிக்குத் தெம்பு குறஞ்சுதோ, அன்னிக்கே பகவான் அழச்சுக்கவாண்டாமோ! இடுப்பிலே துணி போனது தெரியலெ, எதிரக்க இருக்கிற முகம் யார்னு தெரியலெ.

சமுத்ரம் சமுத்ரமா படிச்ச படிப்பு, பண்ணின பூஜை, பாத்த மனுஷா—எல்லாம் இப்படியா வத்திப்போகும்? பித்து மாதிரி ஆயிட்டானே இப்படி. அவனுக்கு மட்டுமா? உடம்பாலெ பாடு சுத்தி யிருக்கிறவாளுக்குன்னா பாடு! உடம்பாலெ பாடு

படறதைச் சொல்லலே. மூணாவது மாட்டுப்பொண்ணு ஆம்படையான்கிட்ட சொல்றாளாம், சாலை முக்கிலே பஸ்ஸுக்கு நிக்கறபோது : 'உங்கப்பாவுக்கு ஒண்ணும் பித்துமில்லை. மூளைக் கலக்கமும் இல்லெ. உங்க அக்கா தங்கை அத்தைகள்ளாம் சேர்ந்து அவரை அப்படி ஜோடிச்சுக் காட்டிண்டிருக்கா'ன்னாளாம். அண்ணா ஒரு நாளைக்கு இவா இருக்கிற இடத்துக்கும் போனதில்லெ. இவ கையாலெ ஒரு பொட்டுக் காபி வாங்கி குடிச்சதில்லெ. பேசற பேச்சைப் பாத்தியோல்லியோ? அண்ணா மறதிக்கு நாங்களா பிணை. 'அவரை பித்துக்குளியாக்கி, நாங்க என்னத்தைக் காணப்போறோம். காலா காலத்திலே அழச்சிண்டு போயிருந்தா இந்த இடக்குப் பேச்செல்லாம் கேக்க வாண்டாம் பாரு. இறக்கிறவா?...''

மாமாவின் நினைவின்முன் படர்ந்த நெடும் பொட்டலை நான்கூட பார்க்க முயன்றேன். பொட்டலில் நின்றால், கால் தரை சரிந்து குழிந்து அவரும் அமுங்கிவிட வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். நீதிமன்றம் இல்லை. சங்கீதம் இல்லை. மாமா எங்கேயோ போய் நிற்கிறார். பழக இல்லை. உலகம் இல்லை. உறவு இல்லை. பெரிய கிண்ணத்தை அவர்மீது யாரோ கவிழ்த்துவிட்டது போலிருந்தது எனக்கு. அவருக்குக் கேட்கிறதெல்லாம் எங்கோ தொலைவில் கேட்கிற குரல்.

மணலில், குளித்துவிட்டுப் படியில் பளபளவென்று உட்கார்ந்திருந்தது குடம். மாமாவின் தங்கை குளிக்க இறங்கிவிட்டாள். ''நருமதே சிந்து காவேரி—'' என்று காதில் விரலை விட்டு கண்ணைப் பொத்தி முழுக்குப் போடுகிறாள். பெரிய சரீரம். ஓடுகிற . தண்ணீர்கூட மலைப்பாம்பாக அலை விம்மிப் படிகிறது.

''மறதியைப் பித்துன்னு இந்த மாட்டுப் பொண்ணு சொல்றத்துக் கேத்தாப் போல, பகவானும் அண்ணாவைப் பண்ணினான் பாரு, மன்னி உடம்பா கிடந்தாளே—அப்பு



சொல்றேன். ஒரு வருஷம்னா கிடந்தா, படுத்த படுக்கையா, தலையெல்லாம் தும்பைப் பூவா வெளுத்து, காதுத்தோடு தொளதொளன்னு ஆடும். அப்பவும் புது மாட்டுப் பொண்ணு மாதிரின்னா இருந்தா அப்படி ஒரு வெட்கம் அவபேசறது அவளுக்கே காதிலே விழாது கால் முடங்கிக் கிடந்தவள், அண்ணா வந்தா செவந்து போயிடுவ, எந்துக்கமுடியாம கிடக்கோமேன்னு. அண்ணாவும் அவளைவிட்டு நகரமாட்டான். நிமிஷத்திற்கு ஒரு புலம்பல் புலம்புவன்—சமயலுள்ளைப் பார்த்து—அம்மாவுக்கு காபி கொண்டாடி—அவளுக்கு மோர்லெ சர்க்கரை போட்டுக் கொடுத்தியோ! உடம்பைத் துடைச்சுவிடச் சொல்லட்டுமா! அந்தப் பக்கமா திருப்பி விடட்டுமா, ஒரே வாகிலே எத்தனை நேரம் படுத்துண்டிருப்பே—இப்படியே புலம்பல் இந்தண்டை அந்தண்டை நகரமாட்டான். அவ கண்ணை மூடினப்புறம்னா இப்படி—வீட்டுக்குள்ளே இருப்பா இருக்காமக் பிள்ளையார் கோயில் என்ன, பெருமாள் கோயில் என்ன, கொல்லையென்ன, வாசல் என்னன்னு அலையறான்—அப்ப அவளைவிட்டு நகரமாட்டான் இந்த மாதிரி காவலே காக்க வாண்டாம். அவளைத் தடவிக் கொடுக்கிறதும் கால் பிடிச்சுவிடறதும்-எங்களுக்கு எல்லாமே வெட்கம் புடுங்கும். ஒரு நாளைக்கு சின்னப் பேரனோட பிள்ளை வந்தது உள்ளே கத்திண்டு. 'கொள்ளுத்தாத்தா கொள்ளுப் பாட்டியை வெளபண்றா. குனிஞ்சு குனிஞ்சு முத்தம் கொடுக்கறா'ன்னு கத்திண்டே வந்தது. போது விடிஞ்சா எத்தனை சினிமா பார்க்கறது இந்த வாண்டுகள்—குழந்தை பாக்கும்படியாவா முத்தம் கொடுக்கணும்—அப்படிப்பித்தாப் போயிட்டான்பாரு...''

''பின்னே யாண்ர முத்தம் கொடுக்கறதாம்?''

சத்தம் எங்கேயிருந்து வருகிறது என்று தெரியவில்லை. திசை புரிந்தது படித்துறையின் மேலச்சுவருக்கு மேறகேயிருந்து வருகிறது. ஒரு கணம் வேணு மாமாவின் தலை தெரிகிறது

''பதினேழு வயசிலே எனக்குக் கலியாணம். சரியா அறுபத்தாறு வருஷம் என்னோடேயே இருந்திருக்கா அவ. ஒரு நாள்கூட பிரிஞ்சதில்லை. மாமனாரோட சண்டை. முதல் பிரசவத்துக்குக்கூட போகலே. யாரை முத்தம் கொடுப்பேன். உங்க ஆம்படையான் மாதிரி, குருக்கள் கோயிலுக்குப் போயிருக்கறச்சே அவன் ஆம்படையாளைப்போய் முத்தம் கொடுக்கணும்னு சொல்றியா?''

031,3JAN,S N7;3

வேணு மாமா குலுங்கிக் குலுங்கிச் சிரித்தார். சிரித்துக் கொண்டேயிருந்தார். உடம்பு குலுங்கிற்று. கவனித்த பொழுது அவர் அழுகிறார் என்று தெரிந்தது.

''ஆத்தங்கரைக்கு இப்படித் தனியா வரலாமாண்ணா—சித்தெ நீ அவரைப் பிடிச்சு அழைச்சுண்டு போயேன்!''

தலையைத் துவட்டிக்கொண்டு அவசர அவசரமாகக் கரையேறினேன்.

1970

தேவநேயப் பாவாணர் மாவட்ட
மைய நூலகம்,
735, அண்ணா சாலை,
சென்னை-600 002.

339066/4101009